# ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

# மணி விழா




மயிலம் பொம்மபுர ஆதீனம்

உ

முருகன் துணை.

மயிலம் - பொம்மபுர ஆதீனம்

பதினெட்டாவது பட்டம்

# ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

மகா சந்நிதானத்தின்

★

# மணிவிழா மலர்

★

12–8–1954

# முன்னுரை.

செந்தமிழும் சிவநெறியும் வளர்க்கும் தவச்சாலைகள் பல வற்றுள்ளும் சிறப்புற்றிலங்கும் மயிலம் – பொம்மபுர மடாலய ஆதீன கர்த்தராய எமது **அருட்டிரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய அடிகளார்க்கு** அறுபதாண்டு நிறைந்தது என்று எண்ணும் போது உள்ளம் அளவில் அடங்கா உவகை யெய்துகிறது. இவ்வறுபதாண்டுகளில் அவர்கள் செய்த செயற்கருஞ் செயல் களை எண்ணும்போது அவைகள் என்றும் குன்றாச் சிறப்பின் நற்செயல்களாம் என்பது நன்கு விளங்கும். அடிகளார் தொட்டது துலங்கும் என்பார்கள் அவர்கள் பண்புகளை அறிந்தோர்.

இறைவனது பேரருள்பெற்றுப் பிறர்க்கு வழங்கும் உரிமையும் உள்ள அடிகளார்க்கு மணிவிழாச் செய்யவேண்டும் என்றெண்ணியபோது இது சிறியேங்கள் திறத்ததோ என் றஞ்சினேம். ஆயினும் பெரியோர்களை நினைத்தாலே அவர்கள் துணை வந்துவிடும் அல்லவா? ஆகவே எவ்விதக் குறையும் இன்றி எல்லோரும் இன்புற மணிவிழா இனிது நிறைவேறிய மைக்கும் காரணம் அவர்களே. ஆடுவானும் ஆட்டுவிப்பா னும் அவனேயன்றி வேறின்றன்றே.

சிறியேமாகிய எம்மையும் ஒரு பொருளாக்கி உய்வித்த எமது பரமாசாரியனது பரங்கருணைத் தடங்கடலிற் படிந்து நுகர்ந்து வந்தித்து வாழ்த்துவதன்றி வேறென்ன கைம்மாறு செய்யவல்லோம்.

இவ்விழாவின் துவக்கமுதல் இறுதிவரை மனமொழி மெய்களால் சலியாது எமக்குத் துணையாயிருந்த உயர்திரு. **சி. துரைசாமி** (கல்லூரித் தலைவர்) அவர்களுக்கும், உயர்திரு. கு. சிவப்பிரகாசம் (இளம்புரவலர்) அவர்களுக்கும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையோம்.

அன்புகூர்ந்து அழைத்தமைக்கு வந்து அரிய பேருரை யாற்றிய உயர்திரு. **உத்தண்டராமன், I. A. S.** (கலெக்டர்) அவர்களுக்கும், சென்னை மாநில முன்னுள் முதலமைச்சர் உயர் திரு. **O. P. இராமசாமி ரெட்டியார்** அவர்களுக்கும் ஏனைய

சொற்பொழிவாளர்களுக்கும் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மணிவிழாவிற் கலந்துகொண்டதோடு பல்லாற்றுனும் பங்கெடுத்துக்கொண்டு சிறப்பித்த கொடைவள்ளல்கட்கும், சைவ மெய்யன்பர்களுக்கும், புலவர்கட்கும், ஏனைய பொது மக்களுக்கும் எமது அன்புகலந்த நன்றி யுரித்தாகுக.

மணிவிழா மலர்க்குக் கட்டுரை தருதல் வேண்டும் என வேண்டியபொழுது பலவித அலுவல்களிடையே சிரமம் பாராது அனுப்பிவைத்த தமிழ்ப் பெரியார்கட்கும், சைவப் பெரியார்களுக்கும் எங்கள் அன்பையுழ் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்த மலருக்கு வேண்டிய நிகழ்ச்சிக் குறிப்புக்களை அவ்வப்போது எழுதி, மலர் முழுமையும் புரூப் பார்த்து உதவிய உயர்திரு வித்துவான், **வே. சிவசுப்பிரமணியம்** அவர்கட்கும் நன்றி உரித்தாகுக.

இம்மணி விழாவில் பல்லாற்றுனும், உதவிசெய்த அனைவர்க்கும், எமக்கும் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பேரருள் நிறைவதாக வேண்டிக்கொண்டு விடை பெறுகின்றோம்.

இன்னணம்

மணிவிழாக் குழுவினர் சார்பாக

குழுத்தலைவர்

**கு. சிவசுப்பிரமணியம்,**

மயிலம் – மடம்.

மயிலம்

12-8-1954



மயிலம் முருகன் மாண்பமர் கோயில்

# பொருள் அடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | அருட்டிரு சிவஞான பாலய அடிகளாரின் மணிவிழா ... | அ |
| 2. | வாழ்த்துச் செய்திகள் ... | I |
| 3. | பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் வரலாறு—சி. துரைசாமி ... | 1 |
| 4. | உண்மை யுணர்தல்—ஆ. சிவலிங்கனூர் ... | 16 |
| 5. | வீரசைவம்—சு. குமாரஸ்வாமி, M. A. ... | 25 |
| 6. | கல்வெட்டில்கண்ட உழவர்களின் சிறப்பு—கோவை கிழார் ... | 29 |
| 7. | மயில மடாலயமும் பிரஞ்சு அரசியலார்களும் கோவை கிழார் ... | 33 |
| 8. | பல தாயருக்கு ஒரு பிள்ளை—வே. இராமநாதன் ... | 42 |
| 9. | புகழ் உரு—வை. இரத்தினசபாபதி ... | 45 |
| 10. | ஊழ்வினை—ஔவை சு. துரைசாமிப்பிள்ளை ... | 51 |
| 11. | வீரசைவர்களின் தமிழ்த்தொண்டு—T. V. சதாசிவ பண்டாரத்தார் ... | 60 |
| 12. | இரண்டறி கள்வி—கோ. குஞ்சிதபாதம் ... | 63 |
| 13. | ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்மீது பாடிய கீதங்கள்—S. தியாகராஜ அய்யர் ... | 69 |
| 14. | மன நலம்—இராமசாமி அடிகள் ... | 71 |
| 15. | சேக்கிழாரில் திருவள்ளுவர்—கு. நடேசக்கவுண்டர். | 76 |
| 16. | என் உளத்தை விட்டகலா—V. குமாரசாமி அய்யர் ... | 85 |

பக்க எண்

17. எனது எண்ணம்—திரு. அடிகளாசிரியன் ... 90

18. காதலும் கடமையும்—செ. வரதராசன் ... 92

19. தமிழ்ச்செல்வர் மயிலத்தவர்—
தி. செ. முருகதாசபிள்ளை ... 100

20. இலக்கணத்தோடொட்டிய இலக்கியம்—
வே. சிவசுப்பிரமணியன் ... 103

21. பரிமேலழகரும், சிவஞான முனிவரும்—
கு. மா. நாராயணசாமி ... 109

22. மாந்தம்—K. பாலசுப்பிரமணியம் ... 113

23. அறிமுகம்—S. பாலசுப்பிரமணியன் ... 116

24. பாரதியாரும் தேசியமும்—வே. பத்மதேவி ... 120

25. நூலாசிரியருக்குப் பெருமை அளிப்போர் யார்?
பூ. பர்சுராமன்... 124

26. பிறர்க்குரியாளர்—தி. மு. சங்கரலிங்கம் ... 128

27. வள்ளுவன் கூறிய வாய்மைகள்—
முருக சரவணபவன் ... 133

28. மகளிர் மாண்பு—சு. சிவகாமி ... 135

29. திரு மறுகு—க. நாகேஸ்வரன் ... 139

30. திருவினும் பெரியாள்—C. இராமலிங்கம் ... 142

# படங்கள் அட்டவணை.


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பதினெட்டாம் பட்டம் ... | |
| 2. | குடிநீர்க் குழாய்த் திறப்பு விழாப் படங்கள் ... | |
| 3. | மணிவிழா நிகழ்ச்சிப் படங்கள் ... | |
| 4. | தங்கமயில் வாகன காட்சி ... | |
| 5. | மணிவிழாக் கொண்ட அடிகள் பட்டம்பெற்ற காலத் தோற்றம் ... | |
| 6. | ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி | 10 |
| 7. | ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி உயர்நிலைத் தொடக்கப்பள்ளி | 10 |
| 8. | வெள்ளி பூசைச் சாமான்கள் ... | 14 |
| 9. | வெள்ளி மகர வட்டம் ... | 24 |
| 10. | கல் இழைத்த மகிரி & மாங்காய் மாலைகள் ... | 24 |
| 11. | வெள்ளி மூலஸ்தானப் பிரபை ... | 32 |
| 12. | வெள்ளி சுருட்டிகள் ... | 51 |
| 13. | திருப்பாவை திருவெம்பாவை மகாநாடு ... | 63 |
| 14. | மயிலம் கோயிலின் தோற்றம் ... | 63 |
| 15. | சந்நிதானம் சிவப்பிரகாச சுவாமிகளை வணங்குதல் | 71 |
| 16. | ஸ்ரீலஸ்ரீ தருமை & மயிலம் சந்நிதானங்கள் ... | 71 |
| 17. | பொம்மபுர மடாலயத் தோற்றம் ... | 89 |
| 18. | நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் கோயில் ... | 89 |
| 19. | நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ... | 102 |
| 20. | சந்நிதானம் நிறுவிய கட்டிடம் ... | 109 |
| 21. | பொம்மபுர மடாலயத் தோற்றம் ... | 109 |

உ

முருகன் துணை.

ஸ்ரீமத் ஞான ராசதானியான இனும் பொம்மயபாளையம்
திருக்கயிலாய பரம்பரை பெரியமடம்
சிவகஞ்சி மயூராசல நிவாச ஏதீஸ்வர கர்த்தரான
மயிலம் தேவஸ்தான ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்துவம் இனும்தார்
பதினெட்டாவது பட்டத்து

## ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

# அருளிய ஆசிமொழி.

உலக மக்களுக்கு விதித்த ஆயுள் நூற்றிருபது. இறைவன் திருவருளானே அதற்கு மேலும் வாழும் உயிர்கள் சில.

நம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பல்லாண்டுகள் வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. அவர்கள் தமது திருவருள் நெறியை மக்களுக்கு விளக்க இக் குருபீடத்தைத் தோற்று வித்தார்கள்.

**நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த** என்று மணிவாசகர் கூறியது போலவும், **முடங்கு சுருள்வால் நாய்க்கொரு பொன்முடி சூட்டியதுபோல், உடம்பை நான் என்றிருந்தேனை ஒழிவில் கருணைச் சிவஞானி, கடந்த பிரமம் நீயெனவே கழற்கால் என்புன் தலைவைத்தான்** என்று சிவப் பிரகாசர் தம்மைக் கூறிக்கொண்டது போலவும் அவர்கள் பெற்ற திருவருள் விளங்க, இதுவரை செய்த தீவினைகள் அகன்று சிவதன்மமாய நல்வினை சிறக்க எனக்கும் அன்பர்கள் அறுபதாண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடினார்கள். இதைப்பற்றி என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை.

இந்நாளிலேயே கீழிருந்து மலைக்கு நீரினைக் கொண்டுவந்த சிறப்பு அன்பர்களது தூய அன்பின் நீர்மையை எடுத்துக்காட்டு கிறது. இதுபோன்றே முருகன் திருப்பணிகள் அனைத்தும் முடிவுபெற்றுக் குடமுழுக்கு விழாவும் நன்கு நிறைவுறுமாறு இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

இத்தகைய தூய அன்பினராய பெருமக்கள் அனைவரும் அம்பலம் பொலியத் தாண்டவமாடும் அருள் நடராசப்பெரு மான் திருவருளாலும், மயில மாமலை மன்னிய திருமுருகப் பெருமான் திருவருளாலும், ஸ்ரீ பாலய சித்தர், ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோரது திருவருளாலும் இம்மையிலும் மறுமையிலும் பல்வகை இன்பமும் எய்திச் சிறப்பாராக.

# பதினெட்டாம் பட்டம்

# அருட்டிரு சிவஞான பாலய அடிகளாரின் மணி விழா.

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகளின் மணிவிழாத் துவக்க நிகழ்ச்சிகள்.

ஆடிமீ 1உ காலையில் ஸ்ரீ சந்நிதானம் பொம்மபுரத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆதி இரண்டாவது பட்டம் சிவஞான பாலய சுவாமிகளுக்கும், மடத்தினுட் கோயில்கொண்டெழுந்தருளிய முருகப் பெருமானுக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்தும், மற்றும் தமக்கு முந்திய பட்டத்து சுவாமிகள் அனைவர்க்கும் வழிபாடு செய்தும், பலர்க்கு அன்னமிட்டும் சிறப்பு நிகழ்த்தினுர்கள்.

பின்னர் அன்று மாலை மயிலம் வந்து முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள்செய்து லக்ஷார்ச்சனையைத் தொடங்கிவைத்தார்கள்.

அன்றிரவே நல்லாற்றூர் சென்று ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளுக்கு அபிடேக ஆராதனைகள்செய்து வழிபட்டார்கள். மறுநாள் மயிலம் வந்து அடைந்தார்கள்.

அன்றுதொட்டு மயிலம் திருமுருகப்பெருமானுக்கு லக்ஷார்ச்சனை நடைபெற்று மணிவிழா நாளன்று முற்றுப்பெற்றுப் புதிதாக வாங்கப்பட்ட இரண்டு வல்ம்புரிச் சங்குகளும் முன்பே உள்ள பழைய வலம்புரிச்சங்கு ஒன்றும்கூட மூன்றும்கொண்டு 108 சங்காபிடேகம் நடைபெற்றது.

12–8–54 காலை 3 மணிக்கு கலசஸ்தாபனம் நடைபெற்றது. 3 மணிக்குமேல் 6 மணிக்குள் கலச பூசைகளும், வைதீக காரியங்களும் நடைபெற்றன. நிகழ்ச்சிகளைத் தொடக்க முதலாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உடன் அமர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார்கள். 6 மணிக்குமேல் 7 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அபிஷேகமும் ஆராதனையும் மெய்யடியார் பலரால் நடத்தப்பட்டது. 7 மணிக்குமேல் 7-30 மணிக்குள் ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் அவர்கள் தங்களது இட்டலிங்கப்பெருமானுக்கு அபிடேக ஆராதனைகள் செய்து வழிபட்டார்கள்.

7-30 மணிக்குமேல் 9 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்குப் பாதபூசை செய்தார்கள். அவ்வமயம் சிதம்பரம் திரு. சிவராம அய்யர் அவர்களும் கல்லூரித்தலைவர் அவர்களின் புதல்வராகிய திரு. D. கார்த்திகேயன் அவர்களும் வெண்பொற்காசுகளைக் கொண்டும் காட்டாம்பாக்கம் திரு. வரதா ரெட்டியார், ஜெயலக்ஷ்மி அம்மாள் ஆகியவர்கள் பொற்காசுகளையும், வெண்பொற்காசுகளையும் கொண்டும், இராமலிங்க ரெட்டியார், கஞ்சனூர் சுப்பு நாராயண ரெட்டியார் ஆகியவர்கள் வெண்பொற்காசுகளைக் கொண்டும் பாதபூசை செய்தார்கள். 9-30 மணிக்குமேல் குடிதண்ணீர்க் குழாய்த் திறப்புவிழா துவக்கமாகியது.

செந்தமிழ்த் தெய்வத் திருநெறி புரக்கும் சிவஞான பாலய அடிகள் மணிவிழா நாள் தமிழ்த் தெய்வமாகிய முருகன் உறையும் மயிலத்தில் ஓர் பொன்னாள். பல்லாண்டுகளாக உள்ளத்தில் வேரூன்றிய ஓர் பெரும் எண்ணம் ஈடேறிய நன்னாள் அன்றோ அது? காலையிலே வீரசைவப் பெருமக்களும், தமிழ்ப்புலமைச் செல்வர்களும், வள்ளல்களும், தமிழ்ச்செல்வர்களும் வந்தவண்ணமாக இருந்தனர்.

வந்திருந்தோர் அனைவருக்கும் வேண்டிய உணவு உறையுள் வசதிகள் முன்னமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. "சாலையனம் சட்சமயத்தார்க்கும் உவந்தளிக்கும் பாலய சாமி மடம்" என்று மயிலத்துலாவில் கூறியபடியே பல்வேறு சமயத்தார்களும் பல்வேறு வகுப்பினர்களும் விரும்பியாங்கு உண்ண ஆங்காங்கு அன்னச்சாலைகளில் ஏற்பாடு செய்திருந்தமை சுவாமிகள் சைவத் தவவேந்தர் மட்டுமல்ல. ஒரு தமிழ்ப்பெரு வள்ளலும் கூட என்பதை அறிவித்தது.

காலை நிகழ்ச்சிக்குத் திருமிகு சென்னைமண்டில முன்னாள் முதலமைச்சர் O. P. இராமசாமி ரெட்டியார் அவர்கள் வைகறை ஐந்துமணிக்கே வந்து சேர்ந்தார்கள். உயர்திரு A. உத்தண்டராமன் I. A. S., (தென்னாற்காடு மாவட்டக் கலெக்டர்) அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

திருமிகு இளம்புரவலர் வித்துவான் கு. சிவசுப்பிரமணியம் அவர்கள் தமது வரவேற்புரையில் "மயிலம் என்று சொன்னவுடன் மலையின் தோற்றம் மனக்கண்முன் நிற்கின்றது. பின்பு மலைமீது அமர்ந்திருக்கும் முருகன் தோற்றம் நிற்கின்றது. இத்தகைய மாண்புடைய மலைமீது சில ஆண்டுகளாகவே ஒரு குறை இருந்துவந்தது. அதுதான் குடிதண்ணீர் இல்லாமை.

சந்நிதானத்தின் மணிவிழாவின்போது அக்குறை நீங்கி நலம் நிறைகின்றது. 99 அடி உயரமான பகுதிக்குக் கீழேயிருந்து தண்ணீர் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டு இதற்காக ஸ்பெஷல் டைப் பம்ப் செய்யப்பட்டுக் குழாய் மூலம் தண்ணீர் மேலே கொண்டுவரப்பட்டது என்று கூறினார்கள்.

பின்னர் தியர்திரு A. உத்தண்டராமன், I. A. S. அவர்கள் தமது திறப்புரையில் கடவுள் உண்டோ? இல்லையோ? என்று கூறிய பலதேசங்களும் இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின் இறைவனை அணுகின. இறைவன்பால் பற்று அவசியம் வேண்டும், இன்று சமயம் நிலைத்து நிற்கிறது. என்று சொன்னால் அதற்குக் காரணம் மடாதிபதிகள்தாம். மடங்களிலே குறைவு இருக்கலாம்; மனிதப் பிறவியே குறைவும் நிறைவும் உள்ளதாகத்தான் தெரிகிறது. எனவே குறை காரணமாக வேறு வழியில் செல்வது நல்லதன்று. "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" என்று ஆன்றோர் சொல்லிய வண்ணம் இறைவன் அருளாலேதான் நாம் அவன் தாளைத் தொழ வேணடும்.

நம்மவர்கள் அரசாங்கத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை. குடிதண்ணீர் வசதிக்காக நம் மாகாணத்தார் ரூ. 4,80,000 ஒதுக்கி இருக்கின்றனர். குடிதண்ணீர் வேண்டுங் காலத்து லாரியில் கொண்டுவந்து உதவுகின்றனர். சுமார் 24 ஆண்டுகளாக நிறைவேறுதிருந்த குடிதண்ணீர்ப்பஞ்சம் 18-ம் பட்டத்து அருள்திரு அடிகளார் அவர்களின் மணிவிழாவின் போது நீங்கி நலமுண்டாகவேண்டும் என்பது இறைவன் எண்ணம் போலும், அருள்வடிவாகிய அடிகளார் தெய்வஅருளாகிய நீரை நமக்குத் தருகின்றார்கள் என்று கூறிக் குடிதண்ணீர்க் குழாயினைத் திறந்து வைத்தார்கள்.

திருமிகு, O. P. இராமசாமி ரெட்டியார் அவர்கள் வழிமொழிந்து, நமக்கு இறைவனுக்கு அடுத்தபடியாக மிக முக்கியமான பொருள் தண்ணீர். நான் முன்பு இருந்த சந்நிதானத்திடம் இம்மலையின்மீது தண்ணீர் வேண்டிய அவசியத்தைப்பற்றிக் கூறினேன். ஆனால் அவர்கள் காலத்தில் அது நடைபெறவில்லை. இதற்காக 25 ஆண்டுகளாகத் திட்டம் தீட்டியது உண்டு. பல இஞ்சினீயர்களைத் திட்டம் வகுக்கச் சொன்னேன். மலையின் சுற்றுப்புறத்தில் தண்ணீர் இல்லாமல் செடிகள் வாடுகின்றன. வளப்பமான செடிகள் இருக்கவேண்டும். ஒரு சமயம் நான் "அமிர்தசரஸ்" என்ற இடத்திற்குச் சென்றிருந்தேன். நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை அங்குள்ள குளத்தைத்

தூர்த்து மண்ணை எடுத்துக்கொண்டுபோய் வெளியே கொட்டுவர். இதனில் பீகானீர் முதலிய பிரதேச அரசர்கள் கலந்து கொள்வார்கள். அவர்கள் தங்கள் நிலையையும் பாராது தொண்டுபுரிகின்றனர். எனவே நாமும் அதுபோலத் தொண்டு புரியவேண்டும். முன்காலத்தில் அரசர்கள் மக்கள் உதவியைக் கொண்டுதான் பல கோவில்களைக் கட்டினார்கள். சுமார் 1000 ஆண்டுகளுக்குமுன் தோன்றிய பாலய சுவாமிகள் இத் தலத்திலே வந்து முருகனைப் பூஜித்தார்கள். கடவுள் ஒருவனே எனக் கொள்ளவேண்டும் என்று கூறினார்கள்.

அருள் திரு அடிகளார் அவர்கள், துன்பமாவது தூரத்துள் நிற்க நாம் இறைவனை வணங்கவேண்டும். மக்கள் இன்னற்படுவதினின்றும் நீங்குவதற்காகத்தான் மடங்கள் ஏற்பட்டன. அடியார்கள் தொண்டு செய்வது தங்களுக்காக அல்ல. அவர்கள் பிறர் நலம் பேணுபவர்கள். இப்போது சில நாட்களுக்குமுன் பிள்ளையார் உடைப்பு என்று ஒன்று கேள்விப் பட்டோமே, அதை முன் கூட்டியே அறிந்திருந்த இராச ராச சோழன் உருவம் பெரிதாக இருக்கும்படி அமைத்தான். கோயிலை ஏன் கட்டுகிறீர்கள்? ஏன் பணத்தைச் செலவு செய்கின்றீர்கள். என்று பல வினாக்களை ஒரு சாரார் எழுப்புகின்றனர்.

ஆனால் கோவில் கட்டுவதற்காகச் செலவழிக்கப்படும் அவ்வளவு பணத்தையும் ஒருவனே சாப்பிடுவதில்லை, பல ஏழைமக்கள் பிழைக்கின்றனர். எங்கிருந்தாலும் இறைவன் எண்ணம் தோன்றவேண்டும் என்பதற்காகவே பெரிய பெரிய கோபுரங்களை வைத்துக் கோயில்களையும் கட்டுகின்றனர்.

நமக்கு நீர் மிக அவசியம் கடல் பெரிதாக இருப்பினும் அதனால் பயனில்லை. எனவே மழை பொழிதல்வேண்டும்.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத், துண்ணின்றுடற்றும் பசி" எனத் திருவள்ளுவர் மழை வேண்டியதின் அவசியத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

தண்ணீர்க்கு இயல்பான குணம் மேலிருந்து கீழ் நோக்கிச் செல்வது. ஆனால் தற்போது கீழிருந்து தண்ணீர் மேலே கொண்டுவரப்படுகிறது. இதனை முன்னமேயே சிவப்பிரகாச சுவாமிகள் கற்பனையாகக் கூறியுள்ளார். இங்கே இரும்புக் குழாய் மூலமாக மேலே வருகிறது. ஆனால் யானையின் துதிக்கை மூலமாகத் தண்ணீர் கொட்டுகிறது என்று சிவப்பிரகாசர் கூறுகிறார்.



குடிதண்ணீர்க் குழையை ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் முன்னிலையில்
உயர்திரு உத்தண்டராமன் I. A. S., அவர்கள் திறப்பது.



சந்நிதானத்தால் அமைக்கப்பெற்ற
குடிதண்ணீர்க் கிணற்றை ஓமந்தூராரும்
கலைக்டரும் பார்வையிடுதல்.

பின்னர் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரித்தலைவர் வித்துவான் உயர்திரு, சி. துரைசாமி அவர்கள் விழாக்காலத்தில எனக்குத் தெரிந்த பலர் இங்கு வருவார்கள். மலையின்மீது வந்தவுடன் எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கச்சொல்லுங்கள் என்று கேட்பார்கள். ஒருவ ராயின் சரி என்று வாங்கிக் கொடுத்துவிடலாம். வருபவர் களோ மிக அதிகம். அவர்களுக்கெல்லாம் கொடுப்பது என்றால் மிகக்கடினம். இதற்காகவே கிருத்திகை போன்ற விழாக் காலங்களில் நான் மலைமீது அதிகநேரம் தங்குவதில்லை. இவற் றிற்கெல்லாம் விடிவு காலமாகத்தான் நமது சந்நிதானத்தின் அருளாலும் இறைவன் அருளாலும் இம்மலையின்மீது தண் ணீர் வந்துள்ளது. இறைவன்மீது நாம் வைத்த அன்பின் காரணமாகவே இத்தனை காலமாக நிறைவேறாத ஒன்று இன் றைக்கு நிறைவெய்தியிருக்கிறது. சுவாமிகளின் 60-வது ஆண்டு மணிவிழாவின்போது தண்ணீர்ப்பஞ்சம் ஒருவாறு நீங்குகிறது. ஆயினும் குளத்தைச் சீர்திருத்தம் செய்யவேண் டும். இதனை என்னிடம் அடிக்கடி காட்டராம்பாக்கத்திலுள்ள ரெட்டியாரும் வெளியனூர் ரெட்டியாரும் ஞாபகப்படுத்து கின்றார்கள். இதற்காக அவர்களும் உதவுவதாக வாக்களித் துள்ளார்கள். இதற்காகத் திருப்பணிக்கமிட்டி ஒன்றும் ஏற் படுத்தி இருக்கின்றோம்.

"சிறுகோட்டுப்பெரும் பழம்தூங்கியாங்கு" என்றாற்போல இவ்வளவு சிறிய மடம் இந்தப் பெரிய காரியத்தினை ஏற்று நடத்த முன்வந்திருக்கிறது. இந்தக் குளக்கரையின் ஒரு பகு தியைச் சென்னை மக்கள் முடித்துத் தருவதாக வாக்களித்துள் ளார்கள். புதுவை மக்களும் ஒரு கரையை முடிப்பதாகக் கூறி யுள்ளனர். ஆகையால் எஞ்சியுள்ள இரு பகுதியை இவ்வூரில் உள்ளவரும் வெளியூர் அன்பர்களும் உதவிசெய்தால் விரைவில் முடித்துவைக்கலாம்.

இப்பொழுது தண்ணீரைத் தந்து உதவுவதற்குத் தக்க இயந்திரங்களைக் கொடுத்த P. S. G. கம்பெனியார் அவர்களுக் கும், P. S. G. கம்பெனியாரை அறிவதற்கு ஏதுவாக இருந்த நம் கல்லூரியில் படித்து இப்பொழுது பேரூரில் சாந்தலிங்க அடிகளாராக விளங்கும் திருமிகு இராமசாமி ஐயா அவர்களுக் கும், P. S. G. கொடுத்த இயந்திரங்களைத் தக்க முறையில் இணைத்துக்கொடுத்து தண்ணீரை மேலே கொண்டுவருவதற்கு ஆவன செய்த இஞ்ஜினீயர் திரு. இரத்தினசபாபதி, நாராயணன் அவர்களுக்கும், விழாவிற்கு வந்து குழாயைத் திறந்த A. உத்தண்டராமன் I. A. S., அவர்களுக்கும், விழாவிற்கலந்து

வழிமொழிந்து பேசிய O. P. இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கும் தெய்வத்தானச் சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இதற்கெல்லாம் காரணமாக இருந்து அருள்நீரைத் தந்து உயிர்ப்பயிரை வளர்க்கின்ற அடிகளார் அவர்களுக்கு நாம் செய்யும் கைமாறு என்னே! அவர்கள் நீடு வாழ்ந்து நமக்கெல்லாம் கல்வியும் செல்வமும் தர முருகனை இறைஞ்சுகின்றேன். என்று நன்றி கூறினார்கள். இத்துடன் காலை நிகழ்ச்சி இனிது நிறைவெய்தியது.

பிற்பகல் 3 மணியளவில் கூட்டம் கூடியது. தேவார ஆசிரியர் திரு சி. சிவகுருநாதம்பிள்ளையவர்கள் தம் குழுவினருடன் மேடையில் அமர்ந்து திருமறைகளை ஓதி, கேட்போர் உள்ளம் தெய்வமணம் கமழச் செய்துகொண்டிருந்தார்கள். பந்தல் நிறையக் கூட்டம் நிரம்பியிருந்தது. பெண்களுக்குத் தனியிடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒலிபெருக்கிகள் பொருத்தமான இடங்களில் அமைக்கப்பட்டு இருந்தன.

சிவத்திரு அடிகளார் அவர்கள் எழுந்தருளிய அடவில் கூட்டம் துவக்கமாகியது.

ஸ்ரீ சுவாமிகளின் பூர்வாசிரமத்து மூத்த புதல்வராகிய திரு வித்துவான், கு. சிவசுப்பிரமணியம் அவர்கள், மணிவிழாக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியருள திரு. O. P. இராமசாமி ரெட்டியார் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

மணிவிழாத்தலைவர் உயர்திரு, O. P. இராமசாமி ரெட்டியார் அவர்கள் ஆற்றிய பேருரையின் சாரம்:—

மணிவிழாக் கொண்டாடக் காரணம் என்ன:—இதனால் மனிதன் மனிதப்பண்பு, மாண்புபற்றியும், அவன் எதற்காக உலகில் பிறந்தான் என்பதுபற்றியும் அறிந்துகொள்கிறான். பெரியோர்கள் தூல இலிங்கத்தைப் பூசித்து ஆத்ம லிங்கத்தையும் பூசித்துத் தாமும் பயன் துய்த்து மற்றவர்களையும் அனுபவிக்கச் செய்கிறார்கள். என்பதை எல்லோரும் அறிய மணிவிழாக் கொண்டாடுகிறோம்.

தொண்டைநாட்டில் ஸ்ரீ சுவாமிகள் தலை சிறந்தவர்கள். தன்னுடைய வாழ்க்கையில் மடாதிபதி என்ற முறையில் பக்தி சிரத்தையுடன் இறைவனை வழிபட்டுத் தவநெறியில் ஒழுகுவதுமட்டுமன்றி மற்றவர்களும் நல்லவர்களாக பெருமக்களாக,

வாழவேண்டும் என்பது கருதிக் கல்லூரியையும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். மனிதன் தான் வாழ உலகில் வாழ வில்லே. மற்றவர்களின் முன்னேற்றத்துக்கு வாழ்கிறான் உதாரணமாக விளங்குபவர் நமது சுவாமிகளே.

இந்த மடம் சுமார் 1800 ஆண்டுகளுக்குமுன் பாலய சித்த ரால் ஆரம்பிக்கப்பட்டு வாழையடி வாழையாக வந்து புதிய மேன்மையும் உடையதாய் வாழ்கிறது இப்போது. பெரியோர் கள் மனதில் எண்ணிய எண்ணியவாறு நடைபெறும் என்ப தைச் சுவாமிகளின் வாழ்க்கையில் இருந்து அறியலாம்.

நம் நாட்டில் கோயில்கள் ஏன்? பெரியோர்கள் ஏன்? மடங்கள் ஏன்? ஆத்மீகம் தலையெடுக்க ஒருபக்கத்தில் ஆன் றோர்கள் சேர்ந்து மக்கள் உள்ளத்தில் கடவுள் உணர்வை எழுப்பி, அவர்களை நல்வழிக்குட்படுத்த அறவுரைகள் ஆற்றி வருகிறார்கள். இன்னொர் பக்கத்தில் கடவுளே இல்லை என்று ஒரு சிலர் சொல்லிவருகிறார்கள். ஒருபக்கத்தில் ஆரோகணம். மற்றொரு பக்கத்தில் அவரோகணம். சிருஷ்டி லீலைகளில் இது ஒன்று.

ஒரு மனிதனுக்கு மற்றொரு மனிதன் வேறுபடுகிறான். அவ் வேறுபாட்டை நீக்கி அனைவரையும் ஒரு நிலையுடையராய் ஆக்கவே அறவோர்களால் மடங்கள் ஏற்படுத்தப்பட்டன. எல் லோரும் எல்லா நிலையிலிருந்தும் கடவுளை வழிபடுதலென்பது இயலாது. அதனால் மனிதர்கள் ஏன் பிறந்தோம் என்பதையும் மறந்து கடவுள் உணர்வைக் கைவிடுகிறார்கள். அப்போது அவர்கள் உள்ளத்தில் கடவுள் உணர்ச்சியைத் தூண்டி அவர் களை அவர்களுக்குத் தக்க வழிபாட்டு நிலையில் நிறுத்த மடங் களைப் பரிபாலிக்கும் அறவோர்கள் நல்லுரையாற்றுகிறார்கள்.

நாம் இல்லறம் எய்தியுள்ளோம். நமக்காக அவர்கள் எல்லாவற்றையும் விட்டு நமது நல்வழிக்குத் தொண்டு செய்வ தில் ஈடுபட்டுள்ளனர். எல்லோருக்கும் சட்டம் வகுக்கப்பட் டுள்ளது. அதுபோல அறவோர்கும் வழிகள் வகுக்கப்பட்டுள் ளன. எல்லா ஜீவராசிகளும் கடவுளது சொரூபம் என்று கருதித் தொண்டு செய்வதே அவர்களது செயலாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் இந் நாற்படி கள் மக்கள் இறைவனை வழிபடற்குரிய நிலைகளாம். இவற்றில் அவரவர்களுக்குத் தகுந்த வழிகளை எடுத்துக்காட்டவே அற வோர்கள் உள்ளனர். கிருகஸ்தன் மூவாசையுடையவன்; அவ னைக் காப்பாற்றவே அறவோர்கள் உள்ளனர். இந்தக்காலத்

தில் பெரியோர்களிடத்தில் இகழ்ச்சி விதண்டாவாதம் எல்லாம் வளர்ந்துவருகின்றன. அதற்காகவே அறவோர்கள் அவைகளை நீக்கி நல்வழிப்படுத்தவேண்டி அறிவுரையாற்றி உள்ளிருக்கும் நல் எண்ணங்களை எழுப்புகின்றனர். பொறி, புலன்களால் இழுக்கப்படுதல் மனிதனுக்கியல்பு மனிதன் மனம் சரியான நிலையில் வைத்துக்கொள்ளப்படவேண்டும். மனம் பண்படவேண்டியே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்படிகளை நம் பெரியோர்கள் வகுத்துள்ளனர். நம் போன்றோர் பொறி வயப்பட்டுக் கீழே செல்கிறோம். அதனின்றும் நம்மை நீக்கிப் பழைய நன்னிலையில் நிறுத்திக் காப்பவர்கள் அறவோர்கள். "கூறுக வாய்மை; கோறல்கள் காமம் மாறுக ......அறிவோர் நூற்பொருள் தேறுக...முத்திநெறி சேர்க" என்ற நல்லுரைப்படியும், "சத்யம் வத தத்...சத்" (உண்மை பேசு; கடமையைச் செய்) என்றபடியும், உண்மை பேசவேண்டும், கடமையைச் செய்யவேண்டும்.

மனத்தில் பொய் வளரும்பொழுது அவர்க்குச் சிவன் புலப்படான். மனம் பல வழிகளில் இழுபடும்பொழுது சீவன் என்று பெயர். மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு அடிப்படை இயமம், நியமம், முதலியன. நாம் எல்லாம் செய்கிறோம் ஆனால் அடிப்படையை விட்டுவிட்டோம். மெய்ஞ்ஞானம் இல்லாத விஞ்ஞானத்தில் இன்று அணுகுண்டு உண்டாகி உலகத்தை அழிக்கிறது. மெய்ஞானத்தோடு கலந்த விஞ்ஞானத்தினாலேயே பயன் உண்டு.

பொறிபுலன்களை அடக்கியாளவேண்டும், மனத்தை ஒருமுகப்படுத்தவேண்டும். வாழ்க்கை நமக்கு ஒரு படிப்பினை. அதில் உயர்ந்தோர் நிலையும் தாழ்ந்தோர் நிலையும் உணரவேண்டும். "ஒன்று செய்யவேண்டும்; அதுவும் நன்று செய்யவேண்டும்" அதுவும் இன்றே செய்யவேண்டும்! இன்றும் இன்னே செய்யவேண்டும்" என்றார் ஒரு பெரியார்,

"ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர் வார்த்தை பதினாயிரத் தொருவர்" என்றார் ஒருவர்.

குன்றாப் பெருமையையுடையது கல்வி. கல்வி கற்கும் போது நன்கு கற்றல்வேண்டும். வெறும் மனப்பாடம்மட்டும் இருந்தால் போதாது. சமூக நிலையையும் உணரவேண்டும். இன்று ஜில்லா, தாலுகா எத்தனை என்று சொல்லமுடியாதவர்கள் பலர் இருக்கின்றனர். உலகியற் கல்வியோடு நூற்கல்வியும் பெற்றவராக ஆதல் வேண்டும்.



மணிவிழாவில்
திரு. கலெக்டர் அவர்கள் பேசுதல்.



மணிவிழாவிற்கு அடிகளார் முருகன் கோயில்
வழிபாடாற்றித் திரும்புதல்.

சிந்தனை, சொல், செயல் மூன்றிலும் தூயனாக இருப்பதே இம்மணிவிழாவின் நினைவாக நாம் செய்யவேண்டியதாம் என்று அரியபொருள் செறிந்த பேருரையாற்றி அவையை மகிழ்வித்தார்கள்.

தலைமையுரைக்குப் பின்னர் அடிகளார்க்கு வந்திருந்த வாழ்த்துரைகள் வாசிக்கப்பட்டன, தருமையாதீனத்தின் சார்பாக திருவையாறு வித்துவான், இராம. கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள் வாழ்த்துரை படித்தார்கள், ஆடூர் கணபதியாபிள்ளை அவர்கள் திருமுறைத்திரட்டு அளித்து மகிழ்ந்தார்கள், கஞ்சனூர் சுப்புநாராயண ரெட்டியார் அவர்களும் விழுப்புரம் இலக்குமிநாராயண ரெட்டியார் அவர்களும் வாழ்த்துரைகளும் அளித்ததோடு பரங்கணி முத்துராமபத்திர ரெட்டியார், புதுப்பட்டு வரதா ரெட்டியார் பூசைக்குறிய வெள்ளிச்சொம்பு ஒன்றும், அருண்மிகு அடிகளார் அவர்களுக்குப் பொன்னுடைகளும் அணிவித்தார்கள்.

சிதம்பரம் செ. இரத்தினசாமி செட்டியார் அவர்களும் பூசைக்குறிய சில சாமான்களை வெள்ளியில் வழங்கினார்கள்.

பின்னர் ஆதீனப் புலவர்கள் என்ற முறையில் பின்வருவோர் பொம்மபுரம் - மயிலம் ஆதீனப்புலவர்களாக அருட்டிரு-அகுகளாரின் திருவருளுக்கு இலக்கானார்கள்.

1. உயர்திரு. வித்துவான் சி. துரைசாமி அவர்கள், தலைவர்; ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்.

2. உயர்திரு வித்துவான், வீ. குமாரசாமி அய்யர் அவர்கள், தமிழாசிரியர். நாட்டாண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி, மேலூர்.

3. உயர்திரு வித்துவான், வீ. சோமசுந்தர அய்யர் அவர்கள், தமிழாசிரியர், நாட்டாண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி, முசிரி.

4. உயர்திரு வித்துவான் சி. நடனசபாபதி அய்யர் அவர்கள், தமிழாசிரியர், நாட்டாண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி, திருக்கோவலூர்.

5. உயர்திரு வித்துவான், ஆ. சிவலிங்கனார் அவர்கள், விரிவுரையாளர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்.

6. உயர்திரு வித்துவான், சு. குமாரசாமி ஆச்சாரியன், M. A., அவர்கன், விரிவுரையாளர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்.

7. உயர்திரு வித்துவான், வே. சிவசுப்பிரமணியன் அவர்கள், விரிவுரையாளர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்.

கும்பகோணம் - பெரியமடம் நிர்வாகஸ்தர் குமார வீரய்யர் அவர்கள், 'சிவப்பிரகாச சுவாமிகளும் சேக்கிழாரும்' என்ற தலைப்பில் சொற்பெருக்காற்றினார்கள்.

பின்னர் திரு மேலூர் குமாரசாமி அய்யர் அவர்கள், சிவப்பிரகாச சுவாமிகளும் திருவள்ளுவரும் என்பதுபற்றிப் பேசினார்கள்.

மயிலத்துலாவைப்பற்றிச் சோமசுந்தர அய்யர் அவர்கள் பேசினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பிறகு சிவத்திரு அடிகளார் அவர்கள் ஆசியுரை அருளினார்கள் :—

தமிழ்நாட்டில் வாழும் அனைவரும் தமிழ் உணர்ந்தோராயும் சமயநெறி உணர்ந்தோராயும் ஆதல் வேண்டும். மயிலத்தின் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமங்களில் இருக்கும் பலரும் புலவராக வர முடியாவிட்டாலும், ஒரு ஊருக்கு ஒரு புலவராவது வர இடமிருக்கிறது. மக்கள் என்ன செய்யவேண்டும்? ஒவ்வொரு கிராமத்திலும் 4, 5 மாணவர்களை நம் கல்லூரியில் சேர்ப்பது அக்கிராமங்களுக்குப் பயன் தருவதாகும். அங்ஙனம் படித்த மாணவர்கள் கிராமசேவை செய்தல்வேண்டும்.

இதுவரை அமைதியாக இருந்து இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புற நடத்திய எல்லோருக்கும் முருகப்பெருமான் திருவருள் உண்டாகிக் கல்வியும் செல்வமும் தழைக்கவேண்டும் என்று ஆசி கூறுகிறேன். நமது கூட்டத்தலைவர் அவர்கள் நல்ல முறையில் சிறப்புறக் கூட்டத்தை நடத்திக்கொடுத்தமைக்கு மகிழ்ச்சி. அவர்கள் வடலூரில் இராமலிங்க சுவாமிகளின் திருக்கோயிலைச்சார வாசகசாலை ஒன்று அமைக்க முயற்சி செய்கிறார்கள். அதற்கு அவரவர்களும் தம்மாலியன்ற அளவு ஒத்துழைப்பின் சிறப்புண்டாகும் அம்முயற்சி வெற்றி பெற்றால் தமிழ் உலகம் முழுதும் பரவ அது ஓர் வழியாகும்.

பெரியார்கள் இனிமையாகப் பேசினார்கள். அவர்களுக்கு முருகன் திருவருள் உண்டாவதாக.

10–50 மணிக்கு, மயிலம் தமிழ்க்கல்லூரித் தலைவர் வித்துவான், உயர்திரு சி. துரைசாமி அவர்கள் நன்றி கூறினார்கள்.

இரவு ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தங்கமயில் வாகனக் காட்சி நடைபெற்றது. வந்திருந்தோர் அனைவரும் சைவத் திருநெறி புரக்கும் செந்தமிழ் வாணர்களது சொற்பொழிவினைக் கேட்டும், திருமுருகனது நிறைமணி அலங்கார சேவையும், தங்க மயில் வாகனக் காட்சியும் கண்டும் ஆனந்தத்தாழ்ந்தனர் விழா இனிது நிறைவேறியது.

---



தங்கமயில் வாகன காட்சி

உ

முருகன் துணை.

தமிழ்த் தெய்வமாம் முருகப்பெருமான் இணையடி மறவாச் சிந்தையராகிய எமது ஞானவள்ளல் **ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் மணிவிழாவிற்கு** வாழ்த்துச்செய்தி யனுப்பிய மெய்யன்பர்களும் புலவர்களும் பற்பலர். அவர்கள் திருவுள்ளக் கருத்துக்களில் சிற்சில இங்கே குறிப்பிடப்படுகின்றன.

உ

குருபாதம்.

தருமபுர ஆதீனம் — தருமபுரம், மாயூரம் P. O.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் — 10—8—54.

'ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே'

பெரியவர்கள் வாழ்வு நாட்டுக்கு நலம் பயக்கும், நன்மை பெருக்கும், அருள் பரப்பும், அன்பு கொழிக்கும், அறம் விளக்கும். இதனையே வையகத்தைத் துறக்கமாக்கும் வழியெனலாம். இவ்வாறு அறவாழ்வு வாழ்ந்த ஆன்றோர்கள் தாம் நமது சமயாசாரியர் பெருந்தகையார்கள். அவர்கள் அனுபவ ஞானிகள். அனுபவமே நாட்டு நல்வாழ்வுக்கு அடிப்படை அல்லவா.

மயிலம் பொம்மபுரம் ஆதீனம் 18-வது பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் நல்ல அருளாளர். நாளும் தெய்வத் தமிழ் வளர்க்கும் ஆன்றோர். அன்னார் வாழ்வு தமிழகத்துக்கு ஒரு பொற்காலம் போல. அவர்கட்கு எடுக்கும் மணிவிழா இந்நூற்றாண்டில் தெய்வத் தமிழுக்குச் செய்யும் நல் விழாப் போன்றது. விழாவும் நல்ல அனுபவசாலியும் சென்னை மாநில முன்னாள் முதலமைச்சருமான திரு. ரெட்டியார் அவர்கள் தலைமையில் நடப்பது மிகப் பொருத்தம்.

மணிவிழா மாண்புற நிகழ எல்லாம்வல்ல சித்தரான சொக்கலிங்கப் பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம். இதற்குமேல் பொன்விழா, வைரவிழா போன்ற பல பெரு விழாக்களும் நடைபெறத் திருவருள் அருள் பாலிக்கவும் பிரார்த்திக்கிறோம்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்—வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை.

உ
ஸ்ரீ சபாநாயகர் துணை.

பொதுசமய சன்மார்க்க சங்கம் 11—8—54
கரூர்

திருமயிலம்
மகாகனம் மகாசந்நிதானம் அவர்கள்
திருமயிலம்

தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிவைத்த தங்கள் மணிவிழா அழைப்பு கிடைக்க ஆனந்தமடைந்தோம். ஈசன் திரு கருணையால் சிறப்பாக நடக்க எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ சபாநாயகர் துணை.
வணக்கம் பல.

## புலவர்கள்

டாக்டர்-மா. இராசமாணிக்கனார் மதுரை
தமிழ்ப்பேராசிரியர் 9—8—54
தியாகராசர் கல்லூரி—மதுரை

தமிழகத்தில் முதல் முதல் தமிழ்க்கல்லூரி நிறுவிய மடாதிபதி நமது சன்னிதானம் அவர்களே. அவர்களது தொண்டு தமிழ் வரலாற்றில் இடம் பெறும். தமிழையும் சைவத்தையும் தம்மிரு கண்களெனக் கருதிக் காத்துவரும் அவர்கள் விழா நன்கு நிறைவேற அம்மையப்பர் திருவருளை வேண்டுகிறேன்.

(Sd.) மா. இராசமாணிக்கம் பிள்ளை.

சென்னை—10
11—8—54

அன்புடையீர்! வணக்கம்.

முருகனடி மறவாத முற்றிய அருளுள்ளம் வாய்ந்து நம்மிடை நலம் புரிந்துவரும் அண்ணலார் இன்னும் பல்லாண்டு நல்லுரத்தோடு நம்மிடை வாழ அருளவேண்டுமென மயிலேறும் முருகனடி போற்றுகின்றேன்.

அன்பன்
(Sd.) அ. மு. பரமசிவானந்தம்.

**Vidvan N. Subbu Reddiar, M.A,, B.Sc.,L.T.,** Lecturer, Alagappa
Member, Academic Council & Senate, Training College,
University of Madras. Karaikudi.

அன்புடையீர்!

வணக்கம் பல.

விழா முருகன் திருவருளால் இனிது நடைபெற அவனை இறைஞ்சுகிறேன். வணக்கம்.

அன்பன்

(Sd.) N. SUBBU.

உ

செட்டிநாடு அச்சகம், தேவகோட்டை

ஆசிரியர்:—பாலகவி இராமநாதன் செட்டியார்

11—8—'54.

பேரன்புடையீர்!

வணக்கம். நலம்.

மக்களின் உய்வுக்கான வழிகளைச் செம்மையாகத் தருகின்ற சந்நிதானம் அவர்களின் திருமேனி பல்லாண்டு வாழ்க என இறைவனடி பணிந்து வேண்டுகிறேன்.

அன்புள்ள,

(Sd.) **இராமநாதன்.**

A. S. GNANASAMBANDAN 79, Bazzar Road
Asst. Professor of Tamil Royapettah
Pachaiyappa's College MADRAS-14
10—8—54

**அன்புடையீர்!**

**வணக்கம்**

ஆதீனங்கள் ஏற்பட்டதன் உண்மைக் கருத்தைச் செய்கையில் செய்துகாட்டும் ஒரு சில ஆதீனங்களுள் ஒன்ருய் இலங்கும் இவ்வாதீனம் வாழ்க.

அன்பன்,

(Sd.) ஞானசம்பந்தன்.

உ

ஆடி—27 முருகன் துணை.

பல்லாண்டு எனும் பதங்கடந்தானை நாளும் பரவிவரும் தாங்கள் எல்லாம் வல்ல இறைவனின் இன்னருளால் பல் லாண்டுகள் வாழ்ந்து, தமிழும், சைவமும் உய்யும் நெறி காணு வீர் என வழுத்தி, வணங்கி, வேண்டி நிற்கின்றேன்.

மெய்ப்பொருளியல் விரிவுரையாளன்
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்
அண்ணுமலை நகர்

இங்ஙனம்,
(Sd.) இராமலிங்கம்.

அண்ணுமலை யூனிவர்சிடி

சிவப்பிரகாச சுவாமிகளை ஆதரித்துப் பெரும்புகழ் பெற்ற அருள் நிலையத்தின் ஒளிவளர் விளக்காகத் திகழும் சுவாமிகள் எம்மனோரை உய்யக் கொண்டருள்க என இறைஞ்சிப் போற்றுகின்றேன்.

இங்ஙனம்,
சுவாமிகள் திருவடி மறவாத தொண்டன்
(Sd.) க. வெள்ளைவாரணன்.

Vidwan
M. ARUNACHALAM PILLAI
Lecturer in Tamil
Annamalai University

Annamalainagar
Date 11—8—54

சிவஞானப் பெருஞ்செல்வராகிய மகா சந்நிதானமவர்கள் இன்னும் பல்லாண்டுகள் திருமேனி நலத்துடனிருந்து சைவ மும் தமிழும் ஆகிய இரண்டனையும் இரு கண்கள்போற் போற்றி வளர்க்கவும், அவர்களது மணிவிழா சிறப்பாக நடை பெறவும் திருவருள் புரியும்வண்ணம் தில்லைக் கூத்தப்பெருமான் திருவடி மலரை வணங்கி வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள,
(Sd.) மு. அருணுசலம் பிள்ளை.

T. V. சதாசிவ பண்டாரத்தார்
அண்ணுமலை நகர்.

அன்புமிக்க ஐயன்மீர்! நலம்.

மணிவிழா இனிது நிறைவேறவும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்தருளிச் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் வளர்த்தருளவும் புறம்பயத்தெம்பெருமான் திருவடிகளைப் பன்முறை வேண்டி வணங்குகின்றேன். வணக்கம்.

அன்பன்,
(Sd.) T. V. சதாசிவன்.

உ

ச. தண்டபாணி தேசிகன்,
தமிழ் ஆராய்ச்சித் துறை.

அண்ணுமலை நகர்,
11—8—54.

பணிசெய்யத் தமிழ்மொழிக்கே பயில்விக்கும் கலைக்கூடம்
பண்பமைய முதனிறுவிப் பாதுகாத்து
துணிசெய்த பிறைமுடியன் திருவடியை யனுதினமும்
மறவாது துறவினர்கே வழிகாண்பித்துத்
திணிசெய்யுந் திருவுளத்திற் கணியாக முருகனையுன்
சிவஞான பாலயனும் செம்மால் நின்றன்
அணிசெய்யும் மணிவிழா அறுமுகவன் திருவருளால்
அனைத்துலகும் ஈடேற அமைக மாதோ.

(Sd.) ச. தண்டபாணி.

**K. Vajravelu Mudaliar, B.A., L.T.,**
Assistant.

Pachiyappa's High School,
Kancheepuram.
ஜய ஆடி 27 (11–8–54)

அன்புள்ள ஐயா,

வணக்கம். நலம்

ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் மணிவிழா நன்கு நடைபெறுக. மகா சந்நிதானம் அவர்கள் பல்லாண்டு வாழ்க.

இங்ஙனம்
அடியேன்
(Sd.) க. வச்சிரவேல் முதலியார்.

ச. கணபதி முதலியார், எம்.ஏ., எல்.டி.,
தமிழ் விரிவுரையாளர்
ம. தி. தா. இந்துக் கல்லூரி.

திருநெல்வேலி
10—8—54

வணக்கம் பல,

சுவாமிகள் சைவத்திற்கும் தமிழிற்கும் பல்லாண்டுகளாக ஆற்றிவரும் அரும்பணி பெரிதும் போற்றற்குரியதே. இரு பெருந்திருவிழாக்களும் சிறப்புற நிகழ மயிலவன் திருவருட் டுணையை வேண்டுகின்றனன். வணக்கம்.

இங்ஙனம்
அன்பன்
(Sd) ச. கணபதி.

உ
குருவே துணை.
மகான் வண்ணச் சரபம்
ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள் மடம்
அடிவாரம்—பழனி

அதிபர்
தி. செ. முருகதாச பிள்ளை,

ஜெய ஆடி 27.

வணக்கம். நலம்.

மயிலத்திறைவன் வளரருள்போல அடிகள் புகழ் வளர்க. தமிழ்க்கல்லூரி சால்புடன் தழைக.

அன்பும் நன்றியும் உடைய
தி. செ. முருகதாச பிள்ளை.

Kamala Vinayagar Patasala
(Estd. 1905)

Vidwan, V Ganesamoorthy,
Manager & Correspondent.

3/64, Adam Sahib Street,
Madras—13
11—8—54

அன்புருவாய பெரியீர்!

வணக்கம் பலப்பல.

சந்நிதானத்தின் பல மணி விழாவும், வெள்ளி விழாவும், பொன் விழாவும், வைர விழாவும் நடைபெற எனது உளத்தமர் இஷ்டலிங்க மூர்த்தியை சதா இறைஞ்சுகின்றேன்.

இங்ஙன்
(Sd.) வை. கணேசன்.

ஆசிரியர் புலவரேறு
அ. வரத நஞ்சைய பிள்ளை

தோரமங்கலம்
(வழி) ஜலகண்டபுரம்
சேலம், 10—8—54

உ
திருச்சிற்றம்பலம்.

வாழ்க சிவஞான பாலயர் நாண்மீன்
பல்லாண்டு மலர்த்தாள்வாழ்க
வாழ்க சமயங்களுக்கு மேலோங்குஞ்
சைவநெறி வையம்வாழ்க
வாழ்க மயிலப்பதிவாழ் குருநாதரடிபோற்று
மாண்போ ரெல்லாம்
வாழ்க சிவசத்திகட்கு நடுவிருக்கும்
ஆனந்தவடிவன் வாழ்க.

நலம்
இங்ஙனம்,
ஸ்ரீ சிவஞான பாலய குருநாதனர் திருவடிகளை
அகங்கொண்டு மகிழும்
அடிமை,
(Sd.) அ. வரத நஞ்சையன்.

## கரந்தைப் புலவர் கல்லூரி

### கரந்தை தமிழ்ச் சங்கம், தஞ்சை

வித்துவான், அடிகளாசிரியர்
விரிவுரையாளர்

இடம்; கரந்தை
நாள்: 11—8—54

அருளொழுகு திருவிழியும் அன்பொழுகு திருவாயும் அழகி தாகப்
பொருளொழுகு திருமொழியும் பொன்னொழுகு திருமேனிப் பொலிவும்
[வாய்ந்த
தெருளொழுகு சிவஞான பாலயதே சிகப்பெயர்கொள் தெய்வ வாழ்வே!
இருளொழுகும் உலகினுக்கோர் இரவியாய் நீவாழ இறைஞ்சினேமே.

இங்ஙனம்,
தங்கள் தொண்டன்
அடிகளாசிரியன்.

The Nehru High School, Puthanampatti P. O,
Via (Mamnochanallur, Tiruchirapalli Dt.

*From*
Vidvan, S. Somasundaram, M.A., L.T.,
Correspondent & Headmaster. 11—8—54

சுவாமிகள் இன்னும் நீண்ட நாட்களுக்கு இந்நிலவுலகில் நீடித்திருந்து சமூகத்திற்குத் தொண்டாற்றுவதற்கு வேண்டிய உடல் திறமும், உள்ள ஊக்கமும் சந்நிதானத்திற்கு அருளும்படி எல்லாம்வல்ல முருகனை இறைஞ்சுகின்றேன். வணக்கம்

இங்ஙனம்
அன்பன்
(Sd.) S. சோமசுந்தரம்.

Vidwan,
T. A. Srinivasachari,
(Thiruvavaduthurai Adheena Vidvan)
&
Head Tamil Pandit,
St. Joseph's High School.

Thukkaram Street,
Manjakuppam
Cuddalore N. T.
8—2—1954

உலகமெலாம் தமிழோதி உய்தல் வேண்டின்
உற்ற கலை பலவுணர்ந்திங் கொழுகல் வேண்டின்
அலகிலவும் நிகழிடமே அறிதல் வேண்டின்
அருந்தமிழின் தெய்வமதை அடைதல் வேண்டின்
நிலவுசிவப் பிரகாசத் தருளே வேண்டின்
நின்மலனே டொன்றுகி நிற்றல் வேண்டின்
சிலைமயிலச் சிவஞான தேவ னெந்தை
செம்மலர் நோன் றுளிணையே சேர்வம் யாமே.

(Sd.) தே. ஆ. ஸ்ரீநிவாஸன்.

## மெய்யன்பர்கள்

**ச. சச்சிதானந்தம் பிள்ளை**, B. A., L. T., D. E O., (Retd.)
துணைத்தலைவர், சைவசித்தாந்த மஹா சமாஜம்

175-A, லாயிட்ஸ் ரோட்
ராயப்பேட்டை
Madras—14

ஞானவள்ளலாய அடிகளார் அவர்தம் பெரியமடத்து முற்கால முதல்வர்கள்போல், பூரண ஆயுள் என்னும் 120 ஆண்டளவையும் கடந்து, பல்லாண்டு பல்லாண்டு திருமேனி நலத்தோடிருந்துகொண்டு உலகை வாழ்த்தியருள வேண்டும் என்று, பல்லாண்டென்னும் பதங்கடந்த பரமனும் முருக வேளின் பதமலர்களை இறைஞ்சுகின்றேன்.

(Sd.) ச. சச்சிதானந்நம் பிள்ளை.

உ
முருகா.

டால்மியாபுரம்
ஜய ஆனி 29

அருள் வடிவாகிய மகாசந்நிதானம் அவர்கள் அடி மலர்கட்கு வணக்கம் அநேகம். 60 நிறைவு விழாவின் அழைப்பு வந்தது. மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். முருகன் திரு அருளால் முத்துவிழாவும் நிகழும். அன்பு நெறிவளரும் பொருட்டு அடிகளார் நீடுவாழ வேண்டுகின்றேன்.

அன்பன், (Sd.) கிருபானந்தவாரி.

C. M. Ramachandra Chettiar

4/89, Tiruchi Road
COIMBATORE

அறிவுச் சுடர் கொழுந்துவிட்டு எரிந்து நாடெங்கும் ஒளி விளங்கச் செய்யும் அண்ணலே,

தாங்கள் பல்லாண்டு நலம் பெருக வாழ்ந்து நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்குமாறு மயிலம் முருகப் பெருமானுர் அருள் சுரப்பாராக.

அன்பன்,
(Sd.) ம. இராமச்சந்திரன்.

சிவக்கவிமணி,
C. K. சுப்ரமண்ய முதலியார், B.A., B.L., கோவை
வழக்கறிஞர் 10—8—54

வணக்கம். நலம்.

சுவாமிகள் பல்லாண்டு நீடூழி வாழ்ந்து இப்பொழுது செய்து வரும்படியான அரிய திருப்பணிகளையும் இனி மேன் மேலும் பெருகி நிகழ்வன ஆகிய தமிழும், சைவமும் பற்றிய பணிகளையும் சிறக்கச் செய்துகொண்டு நீடு இன்ப வாழ்வு வாழ வேண்டுமாய் எமது ஆன்மநாயகராகிய திருமுருகப் பெருமானுடைய திருவடிகளில் இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

அடியேன்,
(Sd.) C. K. Subramanian.

R. Radhakrishnan, B. A., Place: Usilampatty,
Dy. Collector. Date: 10—8—54.

வணக்கம். இதை நான் ஒரு பாக்யமாய்க் கருதுகிறேன். முருகனுடைய அருளையும் தங்களின் மேலான கருணைக்கும் அடியேன் என்றென்றும் பாத்தியப்பட்டவனாவேன்.

மிக்க வந்தனம்
இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
(Sd.) R. ராதாகிருஷ்ணன்,
10—8—54.

**ஸ்ரீ நடராஜா பிக்ச்சர்**
**&**
**கிளாஸ் ஸ்டோர்ஸ்**

T. K. முத்துகிருஷ்ணப்பிள்ளை & சன்ஸ் மேலவீதி, சிதம்பரம்
11—8—54

எல்லா நலங்களுடன் மணிவிழா சிறப்பிக்க ஸ்ரீ நடராஜப் பெருமானை வேண்டுகிறேன்.

(Sd.) T. K. முத்துகிருஷ்ணன்.

ஓம்.

# இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

## வள்ளலார் மாணவர் இல்லம்

(4—9—1916)

ஓம்.　　　　　　　　　　　வாலாஜாபாத்

எண்.................　　　　　　　　　　　11—8—54

அடிகளாரின் திருவடிகட்கு,

வணக்கம் பல. நலம்.

மணிவிழா சிறப்பாக நிறைவேறவும் அடிகளார் இன்னும் பல்லாண்டுகள் நல்வாழ்வு வாழவும் செந்தமிழும் சைவ நன்னெறியும் இனிது சிறக்கவும் திருமுருகப்பெருமான் திருவருளை வேண்டுகிறோம்.

பணிவுள்ள,

**நா. ப. தணிகை அரசு**

11—8—54

## ANNAMALAI UNIVERSITY

Department of Physical,　　　　　　　Annamalai Nagar,
Education P. E. 383/54-55.　　　　　　11th August, 1954

Sri L. K. Govindarajulu,
Professor & Director of
Physical Education

Acknowledge with grateful thanks the invitation so kindly extended to him to attend the 'Mani Vizha' of Sri-la-sri Sivagnana Balaya Swamigal on 12—8—54. He regrets his inability to attend the function owing to other duties but wishes the function every success.

Wish the function every success which I reciprocate most heartly.

CHIDAMBARAM CHETTIAR.

**Wish function all success may swamigal live long.**

Chingalput Advocate,
**GOVINDARAJULU.**

**Sixteenth year Felicitations long live swamigal.**

**SUBRAMANIAN.**
Bangalore,

**கீ. இராமலிங்கம், எம். ஏ.,**
நகராட்சி ஆணையாளர்.

திருச்சி,
11—8—54.

அன்பின் திருவுருவான அடிகளார் அவர்களது சேவடி மலர் சென்னி சூடி வரைந்துகொள்வது.

சிவப்பிரகாச சுவாமிகளது பெயர் உலகம் உள்ளளவும் நிலவுவதுபோலத் தங்கள் பெயரும் நிலவித் தமிழ் ஆர்வத்தையும், தண்ணளியையும், ஒழுக்க மேம்பாட்டையும் என்றும் நினைவுறுத்தி வருவனவாகும்.

தங்கள் திருவடிபோற்றும்
(Sd.) **கீ. இராமலிங்கம்.**

மற்றும் பலர் வாழ்த்துச் செய்திகளும் தந்திகளும் அனுப்பியுள்ளனர். நேரிலேயே வாழ்த்திதழ் படித்துக் கொடுத்தோர்கள் பலர்.

மணிவிழாவிற்குப் பல்லாற்றானும் வந்திருந்தும் கடிதம் எழுதியும் சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## மணிவிழாவில் வழங்கிய வாழ்த்துப்பாக்களில் சில

உ

முருகன் துணை

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க.

பதினெட்டாம் பட்டம்

### சிவத்திரு சிவஞான பாலய அடிகளாரது

# மணிவிழாவில்

### ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி ஆசிரியர்கள்

அளித்த

# வாழ்த்துப்பா

**எழுசீர் விருத்தம்**

1. திருவளர்ந் திலகு மயிலைமால் வரையிற் றிகழ்சிவ ஞானியென் பெயரால்
குருவெனத் தோன்றிக் குவலயம் விளக்கும் குணதிசைக் கதிரவ னனேய்!
பரசிவம் சேர்ந்த பங்கய கரத்தோய்! பத்திநல் விதையினை வித்தித்
திருவருட் சிவபோ கப்பெரும் பயிரை வளர்த்திடும் உழவ!நீ வாழ்க.

2. ஒருமையை நினைந்தே ஈரிடம் தழுவி யுள்ளமும் மலக்களை யொழித்துப்
பெரியநால் வாயன் இயைந்திடப புனத்திற் பேதையாம் குறத்தியின்
[அணைத்தோள்
மருவிடும் ஆறு முகன்தொழு தெழுந்து மணிவிழாக் கொளுந்தவ மணியே!
அறுபதாண் டுற்ற இன்றுபோல் அடியேம் எண்ணங்கள் அறம்பெற வாழ்க.

3. சிவனருள் தரவே சிவிகையூர் தவினல் சிறந்துறு கவியிலா தரங்கூர்ந்
துவமையில் ஞானப் பாலையுண் டிடலான் உண்மைசேர் நெறிவளர்த் திட
தவநெறி தனையே மணத்தொடு பெறலால் தக்கசீர்க் காழிவேந் தாகி [லால்
நவசிவ ஞான பாலயன் எனும்பேர் நற்குணக் குன்றமே! வாழ்க.

4. தொல்குறள் தன்பால் தோய்ந்திடச் செய்து தொண்டர்சீர் பரவுவார்
[தம்மைச்
சொல்லினிற் சிறக்கச் செய்சிவப் பிரகா சன்கவிப் பெருங்கடல் குளித்து
நல்மணி முத்தை நாட்டினுக் கீயும் நாவல! நற்பெருஞ் சமயக்
கல்வியில் வல்ல புலவர்தம் நண்ப! காட்சியி லினியவ! வாழ்க.

5. பத்துட னெட்டாம் விழிகளை யுடையோன் பரிந்திட உற்றநல் அருளைப்
பத்துட னெட்டாம் அளித்துறு மதனுல் பண்பிலேம் அகவிருள் அகன்று
பத்துட னெட்டாம் பான்மையை யடைந்தே உய்யநல் வழிசெயும் பதியே!
பத்துடனெட்டாம் பட்டம தடைந்தோய்! பைந்தமிழ் மொழியென வாழ்க.

மயிலம்
12-8-1954

இன்னணம்
**ஆசிரியர்கள்**
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி.

பூவிலுறை கலைமாதொடு திருமாமகள் புணர
பூவிலுறை முனிவோர்பலர் போற்றித் துதிசெய்ய
பூவிலுறை முருகோனருள் பொன்றூதொளிர் வளர
பூவிலுறை தருவானடி போற்றிப் பணிவோமே.

காவாயென மாலும்திசை முகனும் கரைந்தேங்க
ஆஆவென பல்லோரதி சயிக்க வெளிவந்து
தாவாமலர்த் தாள்தந்தனன் தண்ணூர் பொழில்மயிலம்
மேவாவமர் சிவஞானியென் றுலகோர்புகழ் மேலோன்.

கருவுற்றிடு பிறவித்திடர் கடிதேகிட வளரும்
திருவுற்றிட முருகோனருள் சித்தித்திட பாலர்
அறிவுற்றிட அணிபெற்றிட அழகார் கலைக்கூடம்
தெரிவுற்றிட அருளிச்செயும் சீர்த்தி நினைவோமே.

துப்பார்தரு நீரின்றியே சூழ்வுற்றிடு மாந்தர்
இப்பாரினில் ஏமுற்றிட இனிதே அருள்சூழ்ந்து
அப்பார்குழை மலைமீதினின் அமையும்படி செய்தோய்
ஒப்பானவர் நினையின்றியே உலகத்தினில் யாரே.

முருகார்பொழில் மலையில்உறை முருகனெனப் பகர்கோ
கருவார்துயர் அதுபோக்கிடும் கருணைச்சிவ னென்கோ
தருவார்நிழல் உறைபெற்றிடு தலைவனெனப் பகர்கோ
இருவோர்களும் அறியாநினை என்னென் றுரைப்பேனுல்.

அறுபத்தொடு ஆண்டுபல அலகில் புகழோடு
அறுபத்தொடு மூவர்தொழும் அரனைக் கரங்கொண்டு
அறுபத்தொடு நாலாங்கலை அறியும் குருஞானி
அறுபத்தொடு அறுபத்தொளிர் ஆண்டு பலவாழி.

இங்ஙனம்,

மயிலம் 12—8—54

**முருகன் செந்தமிழ்க் கழகத்தார்,**
மயிலம்.

உ
முருகன் துணை.

தமிழ்மொழி போற்றுதும், தாய்த்தமிழ் போற்றுதும்,
அம்மொழி புரக்குமெம் அடிகளார் போற்றுதும்.

**அகரம்போல் அனைத்துயிர்க்கும் அருள்தரும் அண்ணல்!**

விருப்பு வெறுப்பற்று பொறியின் குணங்கொண்டு செயற்கரிய செயல்களைச் செய்து அந்தணராகவும் நிறைமொழி மாந்தராகவும் மனத்துக்கண் மாசின்றி வாழும் பெரியோய்!!

அன்பின் உருவாக ஈரம் அளைந்த இன்சொல்லுடன் உலகத்தோடு ஒட்டவொழுகி உற்றநோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாது ஒழுகும் இறைவ!!!

நகை, ஈகை, இன்சொல், ஒழுக்கம், வாய்மை, நாணம், செப்பம் முதலியன ஒருங்கே அமையப்பெற்ற குடியிற் பிறந்து கொல்லாமை மேற்கொண்டு சால்புடன் பண்புடையராய் விளங்கும் திண்மை யுடையோய்!

மக்கள் அறிவு விளக்கம் பெற கல்லூரியை நிறுவியதால் ஆண்டுதோறும் இருபத்தைந்து புலவர்களுக்குக் குறைவின்றி வெளியேறுகிறார்கள். எளிய வாழ்க்கையை யுடைய வறுமையாளர்களின் குழந்தைகளும், "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற பழமொழிக்கேற்ப இரண்டு புண்ணிய கண்களைப் பெற்றுச் செல்ல உயர்நிலைத் தொடக்கப்பள்ளியை நடத்துகின்றீர்கள்.

அரும் செயல்கள் பல செய்யவும் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் தமிழ்க் கல்லூரியைச் சர்வகலாசாலையாகவும் மாற்றி மக்கள் உள்ளத்தைப் பண்படுத்தி அறிவு நீரைப் பாய்ச்சவும் சுவாமிகள் இன்றுபோல் என்றும் இருந்து எக்கரிடும் காவிரி மணலினும் பன்னாள் வாழ்க! வாழ்க சிவத்திரு சிவஞான பாலய தேசிகன் திருவடி!!

இன்னணம்,

மயிலம்
12—8—1954

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி
உயர்நிலைத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்.

உ

முருகன் துணை

உலகம் உவக்க உதித்தருள் முனிவ!

*    *    *    *

பவத்திற நீங்கப் பல்வழி காட்டும்
சிவத்திரு சிவஞான பாலயச் செல்வ!
பைந்தமிழ் கற்கும் பால்மொழிச் சிறுர்க்குச்
செந்தமிழ் நயத்தைச் சிறக்க வூட்டி
உண்டியு முறையுளு முவந்து வழங்கிய
வண்மையிற் சிறந்த வளமார் வள்ளால்!
நில்லா வுலகில் ஒல்லா நாத்திகப்
பொல்லாக் களையை வேருடன் களைந்து
பல்லோர் போற்றும் பண்பா ராத்திகச்
செல்வப் பயிரைச் சிறக்க வளர்க்கும்
அருளின் வடிவே! அருந்தமிழ்க் குரிசில்!

*    *    *    *

திருவார் முருகன் திருப்பே ரருளால்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போல
வாழிய வாழிய வாழிய நெடிதே.

இங்ஙனம்

மயிலம் }
12—8—54 }

வித்வான், ப, அப்பாவு,
வித்வான், ப. சோமசேகரன்,
ஸ்ரீ பச்சைக்கந்த சுவாமிகள் மடம், பேளூர்.

உ

## அறுசீர் விருத்தம்

சிவநெறி யோங்க வந்து திசழ் **பொம்மபுரத்திற்** றோன்றி
தவநெறி தழைக்க **வீர சைவமாம் சமயம்** வெல்ல
பவநெறி நீங்கி யாங்கள் பக்திநல் வாழ்க்கை யெய்த
நவநெறி வகுக்கும் **ஞான பாலய !** வாழ்க வாழ்க. 1.

அமிழ்தென உடலைப் பேணி ஆருயிர்க் கறம்வ ளர்க்கும்
தமிழ்மொழி வாழ வேண்டித் தகுந்த **கல்லூரி** செய்தாய் !
இமிழ்கடல் ஞாலந் தன்னுள் இயம்பிடற்குரிய சான்றோர்க்
கமைபுகழ் எல்லாம் உன்றன் அரும்புகழ் ஆக்கிக் கொண்டாய். 2.

கல்வியும் திருவும் ஓங்கக் கவின்பெரு கலைகள் ஓங்க
வல்வினை நீங்கி ஞான அருள் ஒளி வளர்ந்து வாழ
தொல்பெருந் தமிழே போலத் தோற்றல்தால் உயர்ந்து யாங்கள்
எல்லுற வேண்டி என்றும் இன்றுபோல் வாழ்க வாழ்க. 3.

திருவருள் நெறியே யாங்கள் சேர்ந்துய வேண்டி ஞான
குருவுருக் கொண்டு தோன்றிக் குவலயம் விளக்கும் வள்ளால் !
பெருமையார் தமிழே போலப் பெருங்கடல் போலப் பன்னுள்
**அறுபதாண் டடைந்த எங்கள் அருந்தவ மணியே** வாழ்க. 4.

இங்ஙனம்

**உ. கருணைச் சிவப்பிரகாசம்,**
தமிழாசிரியர்,
கழக உயர்நிலைப்பள்ளி,
தாத்தையங்கார்பேட்டை.

மயிலம்
12–8–1954.

உ

முருகன் துணை

நிலத்தவர் போற்றும் கலியுக வரதன்
புலத்தவர் நெஞ்சமர் பொற்புடை முருகன்
அயிற்கிலக் காகிய வவுணர் பெருமான்
மயில்வடி வாகி மாண்புற நின்ற

மயிலா சலத்துக் கயிலாய வழிவரும்
சிவஞான பாலைய தேசிகர் முதலாத்
தவப்பெருஞ் செல்வர் தகுதிசா லறிஞர்
வீற்றிருந் தருளிய வேற்றமார் பொம்மைப்
புரத்தா தீனப் புரவல னுகினை !

*　　*　　*　　*

அறுபா னகவை யணியுற நிரம்பினை
மறுவில் புகழுநின் மணிவிழாக் கண்டு
பெறற்கரு மின்பம் பெற்றனம் குரவ !

பவநெறி மாற்றிச் சிவநெறி தெரிக்கும்
சிவஞா னபாலய தேசிகத்
தவப்பெருஞ் செல்வநின் தாளேத் துதுமே.

இன்னணம்
மகா சந்நிதானத்தின் வழிவழி அடிமை,
**சி, பா. சிவஞானம்.**

சிதம்பரம்
*12—8—1954.*

உ

முருகன் துணை

திங்கள் கங்கை சூடுமீசன் திகழுருக் கரந்துவந்
தங்கன் மேனி கொண்டுலத் தடியவர் துதிக்கவே
பொங்கு சோலை சூழ்ந்திடு பொற்பு மிக்க மயிலமேல்
தங்கிநின் றெங்க ளுக்கு சால்பு மிக்க நல்குவாய்.

நல்கு ஞானி உன்றன் பாதம் நாடிநின்று போற்றினோம்
மல்கு வேதம் காணொணு மலர்ப்பதங்கள் சூழ்ந்துமே
அல்கு துன்பம் வீட்டியே ஆறிரண்டு காவலை
பல்கஓதி எங்களின் பவப்பிணி அகற்றுதி.

அகற்ற என்று வறுமைநோயை அண்மிவந்த எங்களுக்
ககற்றி ஈடிலாத வின்பம் அருளுமாறு வேண்டினன்
அகற்றகற்றி ஆசைநோயை அகற்றி உன்தன் தாளிணை
அகத்துள் பற்றி வைக்குமாறு ஆணைசெய்தி ஞானியே.

காட்ராம்பாக்கம்
12—8—1954

இங்ஙனம்
இராமமூர்த்தி ரெட்டியார்.

உ
முருகன் துணை.

மலர்தலை யுலகின் மாண்புமிக் குடையன
பலவுள எனினும் சமயமு மொழியும்
நாடொன் றுநன்னிலை நண்ணிட வழியாம்
தமிழும் சைவமும் தலைநிமிர் நீர்மைய;
தொன்மைசால் புடையன; தூய்மை சான்றன;
நாடரு வீடுறும் வழியும் வகுப்பன.

ஈரதும் நிலத்தில் நிலவிட என்றும்
சீரது பெருத்திப் பாரது கொள்ள
வழியது நாளும் வகுத்திடும் முனிவ!
....     ....     ....     ....     ....

காட்ராம்பாக்கம்
*12—8—54*

இங்ஙனம்,
**இராமலிங்க ரெட்டியார்.**

உ

முருகன் துணை

கனிமரமாய் இருந்தருளும் மயிலமலை வேலன்
காட்சிபெறு மாட்சியுளாய்! தமிழ்த்தொண்டுசெய்யும்
அணிஉடையாய் ஆண்டுதொறும் தமிழ்ப்புலவர் பலரை
அளித்தருளும் தாயனையாய்! அறஞ்செய்து பவமாம்

பிணிபோக்கும் நன்மருந்தே! கல்லாடை புனையும்
பேரருள! கனிவுடைய இனியதவ மாரும்
மணியே! நீ இன்றுமணி விழாக்கொண்டாய் மேலும்
மருவிமிகப் பல்லாண்டு இறையருளால் வாழி.

மீளா அடிமை

திருவாமாத்தூர்
விழுப்புரம் P. O.
*12—8—54*

**வித்துவான்-தி. மு. சங்கரலிங்கம்,**
தமிழாசிரியன், கௌமார மடாலயம்.

அன்பும் நிறையருளும் ஆற்றலும் மிக்குநல
இன்பத் தவம்புரியும் என்குருவே—நின்பெருமை
சொல்லத் திறமுடைத்தோ தொல்சீர்த் தவமணியே
பல்குணம் நின்றும்நின் சீர்.

ஆழ்கடல்சூ ழிவ்வுலகில் அந்தமிழால் நன்சைவம்
வாழ்விக்க வந்த வளமையோய்—ஏழ்பிறப்பும்
போற்றிப் புகழும் புலமணியே நின்னடியை
ஏற்றித் துதிப்பாம் இனிது.

இங்ஙனம்,

மயிலம் 12—8—54

**சுப்புநாராயண ரெட்டியார்,**
கஞ்சனூர்.

உலகினி லொழுக்க மோங்க உயர்பெரும் தமிழை யாய்ந்து
இல்கொளி பரப்பி யெங்கும் இருளிறும் வெய்யோன் போல
அலகிலாச் சைவம் தாங்கி ஆத்திக மார்க்கஞ் சார்ந்து
நலம்பல தொண்டு செய்யும் நற்றவம் புரிவோய் வாழ்க!

அகந்தையாங் கிழங்குதன்னை அஞ்சாத வுள்ளத் தோடு
அகழ்ந்தெடுத் தழித்துப் பின்னை ஆறாத செருக்கைத் தீர்க்கும்
இகத்தினில் என்றும் மாறா இளமையாம் என்றே ஏத்திப்
புகல்சிவ ஞான பால! புண்ணிய வெந்தாய் வாழ்க!

அருந்தமிழ் இன்பத் தேனை அள்ளியே மாணவர்க் கீய
பெருமனம் வைத்து நீங்காச் செருக்குறு சூரன் மாய்த்த
முருகனின் பதியாம் மயிலம் முத்தமிழ்க் கூடங்கொண்ட
அருமறை யோதி யாய்ந்த பெருந்தகை! வாழ்க! வாழ்க!

இங்ஙனம்

மயிலம் }
12—8—54 }

**லக்ஷிமிநாராயண ரெட்டியார்,**
விழுப்புரம்.

**அமிழ்தினு மினிய தமிழ்ப் புலவ!**

செந்தமிழ் போற்றும் சீரிய செம்மால்! நாடு முன்னேற மொழி முன்னேற வேண்டும். மொழியின் பண்பு உயர்வடைதல் வேண்டுமென்பதை மனதில் உன்னி தனித் தமிழ்க் கல்லூரியினை யமைத்து மொழிக்கும் நாட்டிற்கும் சமயத்திற்கும் புரியும் சேவை எம்மால் என்றென்றும் போற்றற்குரியது.

**கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையோய்!**

இளஞ்சேயின் திருவழகைக்கண்டு களித்து மும்மலமும் இருவினையும் அகற்றிக்கொள்ளும், அடியவர்களின் நலங்கருதி நீர்க்குழாயினை அமைத்து, உதவி செய்யும் நின் பண்பினை என்னென்போம்! இத்துணை நன்மையும் இருந்தே யாற்றும் எந்தமிழ் வள்ளால்! "தண்ணான் பொருநை மணலினும் சிறக்க வாழ்க நீவிர் வழி வழி சிறந்தே" என்று வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்

மயிலம் }
12—8—54 }

**மயிலம் கிராமவாசிகள்.**

1. சிவம் பெருக்கும் மயிலமலைத் திருமடத்தே
இனிதிருந்து சீர்சால் மக்கள்
பவம் அறுப்பான் விளங்கியருள் பாலசித்த
சிவஞானப் பண்பார் செம்மால்
நவம் பழுத்த சொற்சுவையும் பொருட்சுவையும்
நனிகலந்து நாட்டில் உள்ளோர்
அவம் படுத்து வாழாமல் அருந்தமிழைச்
சைவமொடு அறிவித் தோயே!

2. மஞ்சாரும் பொழிற் றுறைமங் கலவாச
முனிவனொடு மாண்பு மிக்க
செஞ்சாலி விளை ஆரூர் தேசிகனும்
வயித்தியனும் தெரித்த பாடல்
எஞ்சாது உண்மைபெற செந்தமிழ்க்கல்
லூரிதனை இயற்றுவித்து
அஞ்சாது வருஞ்சிறுவர் அனைவருக்கும்
தமிழமுதம் அளிக்கின்றாயால்

3. நச்சினார்க் கினியவனே நாட்டில்
பல்புலவர் நயந்து போற்றும்
மெச்சு இளம் பூரணனே மேதையர்சூழ்
அவைக்கெல்லாம் விரும்பச் சென்று
இச்சகத்தோர் வாழ்வுபெற ஏத்தரிய
வாழ்த்துரைகள் இனிது கூறி
விச்சைவடி வாயிருப்போய் உனதடிகள்
என்னாளும் விளங்கி வாழ்க!

4. ஆறுதாரம் முதலாம் அருநெறிகள்
தனை அறிந்து அணைந்தோர்கட்கு
ஆறுதாரம் முதலாம் அங்கலிங்கத்தல
மதனை அருளிச் செய்து
ஆறுதாரங் கடந்து அப்பாலும் ஒளி
விளங்கும் அருளார் தாள்கள்
ஆறுதாரம்மாக அணைத்திடுவாய் என்றலைமேல்
அண்ணல் வாழ்க.

காட்ராம்பாக்கம் }
12—8—54 }

இங்ஙனம்,
**வரதா ரெட்டியார்.**



மணிவிழாக் கொண்ட அடிகள்
பட்டம் பெற்ற காலத்திய கோலம்

## பதினெட்டாம் பட்டம்

# ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

# வரலாறு

**உயர்திரு வித்துவான் - சி. துரைசாமி அய்யர் அவர்கள்**
தலைவர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்.

கடவுள், ஆன்மா, உலகம் என்னும் முப்பொருள்களும் என்றும் உள்ளவை என்பது ஆன்றோர்கள் முடிபு. அவற்றைப் பதி, பசு, பாசம் என்றும் கூறுவர் அறிஞர். பாசமானது பசுவைப் பிணித்து பதியை அடையவொட்டாது தடுத்து நிற்கிறது. கருணையே மேனியாகக்கொண்ட பதி ஆன்மாவிற்கு தனு கரண புவன போகங்களைத் தந்து பிறப்பிறப்பு என்னும் பெரும்பிணியால் இளைப்பாற்றி பல பிறவிகள் எடுத்ததின் பயனாக ஆராவின்பத்தை அடையும்படிச் செய்கின்றார். இவ்வுண்மைகளை உணர்த்த உணர்கின்ற சிற்றறிவுடையனவாக ஆன்மாக்கள் இருத்தலினால் முற்றறிவுடைய முதல்வன் குரு மூர்த்தமாக வந்து உண்மை விளக்கங்களை அருள் செய்வது மரபு. அன்றியும் உண்மை உணர்ந்த பெருஞானிகள் தாங்கள் கண்ட செம்பொருளை மக்கள் யாவர்க்கும் உணர்த்துவதையும் கடமையாகக்கொண்டு வாழ்ந்திருந்தார்கள். அத்தகைய உண்மைப்பொருளை உணர்த்துகின்ற முனிவர்களை அறவோர் எனவும், அவர்கள் இருந்த இடங்கள் அறச்சாலை என்னும் பொருள் பொதிந்த மடம் என்னும் பெயரால் வழங்கப்பட்டன. அவ்வகையான மடங்கள் தென் தமிழ்நாட்டில் பல பல்லாண்டுகளுக்கு முன்னமே இருந்தன. அவற்றுள் பொம்மபுரம் மடாலயமும் ஒன்று.

திருக்கயிலாயத்தில் சங்குகன்னராக இருந்த கணத்தலைவர் உமாதேவி நீராடுமிடத்துச் சென்ற சிவபெருமானைத் தெரிந்தும் தடுக்காமலிருந்த காரணத்திற்காக பூமியின்மேல் மானிட வடிவங்கொள்ளும்படி ஏவ, அவர் பணிந்து மன்னிப்பு வேண்டினார். அதன் காரணமாக முருகனோடு போர் புரியுங்கால் சாபம் நீங்கி அநுக்கிரகம்பெற்று மீண்டருள்வாயாக என்றனர். அவ்வண்ணமே சங்குகன்னர் ஏனைய மக்களைப்போல் பிறவாது

கீழ் கடற்கரையில் பால வடிவமோடு வீபூதி, உருத்திராக்கம், இட்டலிங்கம் முதலியன தாங்கி தோன்றி அருளினர். அவரைக் கண்ட மக்கள் இறைவனே என்று வழிபாடு செய்து போற்றி னார்கள். அவர் தோன்றிய இடம் மக்கள் பலருக்கும் பிரமநிலை இனனவென உணர்த்தினமையின் பிரமபுரம் என்கின்ற பொம்மபுரம் என்று வழங்கலாயிற்று. பிறகு பாலசித்தர் முருகனை நோக்கித் தவம்புரிய, சூரன் வரம் வேண்டி மயிலுரு வங்கொண்ட மயில மலையில் எய்தி, கள்ளிப்பாலை உணவாகக் கொண்டு தவஞ்செய்தனர். அக்காலத்து அவர் செய்த சித்து கள் பல. அவற்றுள் ஒன்று அம்மவை என்னும் பெண் மணிக்கு தான் உண்ட கள்ளிப்பாலின் சேடததை உண்ணச் செய்து அதன் மூலமாக சிவஞானி என்னும் தனக்குப்பின் ஞான உபதேசம் செய்தற்குரிய பிள்ளையைத் தோன்றச் செய் தது. இவ்வாறு பல்லாற்றானும் அரிய செய்த பால சித்தர் 1000 வருடங்களுக்குமேல் தவஞ்செய்து முருகனை முருகனென அறியாது போர்புரிந்து அருள்பெற்று முருகன் ஆலயம் பிர திட்டை செய்து அவர் பக்கத்துள் இருந்த குகையில் மறைந்த னர். பின்னர் அவர் கட்டளைப்படி சிவஞான சுவாமிகள் அவ் விடத்திலும் பொம்மபுரத்திலும் இருந்ததோடல்லாமல் காஞ்சி, சேயூர், தில்லை, திருமுதுகுன்றம், பழநி, மதுரை தலங்கல் எல் லாம் மடங்களை ஏற்படுத்தி, பல செயற்கருஞ் செயல்களைச் செய்து சிவப்பிரகாச சுவாமிகள், சாந்தலிங்க சுவாமிகள், சிதம் பர சுவாமிகள போன்ற ஞானிகளுக்கு குருவாக விளங்கி 500 ஆண்டுகள் வாழ்ந்து பொம்மபுரத்தில் உள்ள முருகன் ஆலயத் துள் இருக்கும் குகைக்குள் நிஷ்டைகூடி விபூதி மயமாகினர். பின்னர் முறையே வந்த குருமூர்த்திகள் 15 பேர்கள் ஆவார் கள். இவர்களில் பலர் சிறந்த மெய்ஞ்ஞான போதகாசிரியர்க ளாகத் திகழ்ந்து வந்தமை அறிதற்பாலது. அப்படி வழி வழியே வந்த சந்நிதானங்களில் இப்போது விளங்கி அருள்பவர் 18-வது குருமூர்த்திகள் ஆவார்கள்.

ஆதியும் முடிவும் இல்லா அற்புத தனிக்கூத்தாடும் நாதனுர் பொருந்தி வாழும் நற்றலம் பலவற்றுள்ளும் வாதவூ ரடிகள் போன்ற வள்ளல்கள் களித்து வாழ கோயில் என்று அழைக்கப்பெற்ற கோதிலா தில்லை மூதூரின்கண் வீபூதி, உருத்திராக்கம், பஞ்சாக்கரம், குரு, லிங்கம், சங்கமம், தீர்த்தம், பிரசாதம் என்னும் அட்டாவரண சகிதராய், பொம்மபுரம் மடத்துத் தொடர்பு உடையவராய், பால சித்தரோடு தொடர் புடைய பாலைய மடத்து வாழ்பவராய் அண்ணுசாமி அய்யர் என்னும் வீரசைவ குலதிலகரின் இரண்டாம் புதல்வராய் விளங்கியவர்கள் கந்தசாமி அய்யர் என்பவர்கள். இவர்கள்

தமிழ், தெலுங்கு, கிரந்தம் என்னும் மும்மொழிப் புலமையோடு ஆறு சாத்திரங்களுள் ஒன்ருகிய சோதிட நூலில் மிகவும் வல்லமை யுடையவர்களாய் விளங்கினர்கள். தில்லையிலும், சார்ந்துள்ள பல ஊர்களிலும் அக்காலத்து வாழ்ந்த அனே வரும் அவர்களை நன்கு அறிவார்கள். சோதிட வல்லமையோடு சிறந்த போதகாசிரியராகவும் இருந்தமையால் வித்யாரம்பம் அவர்களிடத்திலேயே செய்துகொள்ளவேண்டும் என்று பலரும் விரும்பிக் கற்றுவந்தார்கள். அவர்களிடம் கல்வி கற்று பெருமையுடன் விளங்கியவர்கள் பலர்.

அவர்கள் அன்னம்பாலிக்கும் தில்லைக்கேற்ப, “செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்” என்னும் குறளுக்கு இலக்கியமாக விளங்கிய சென்னவீரம்மாள் என்னும் அம்மையை மணந்து, இல்லறத்தில் இருந்து, செய்த தவத்தின் பயனுக ஜய வருஷம் ஆடிமீ 3உ உத்திராடம் கூடிய நல்லோ ரையில் செந்தமிழின் சிறப்பெல்லாம் தேசமெங்கும் கொண் டாட, பந்தமகல் சைவமதம் பாரெல்லாம் பரவிட, முந்தை யோர் புகழனைத்தினும் தம்புகழே வீறுபெற, நாத்திகத்தைச் சிதைவித்து ஆத்திகமே மேன்மைபெற ஒப்பற்ற ஆண்மகவைத் தந்தார்கள். தந்தையவர்கள் தவஞ்செய்து பெற்ற தம் புதல் வர்க்குக் குமாரசாமி என்னும் பெயரிட்டு,

“மிடியன் ஒரு செய்யாள னச்செய்
வளையக்காக் கும் செயல்போல
படியில் கல்வி விரும்பினேன்
பாடம் போற்றும் அதுபோல
ஓடிவில் செங்கோல் மனுவேந்தன்
உலகம் விரக்கும் முறைபோல”ப்

போற்றி வளர்த்தார்கள். கல்வி கற்கும் பருவத்தில் கல்வி கற்பித்தார்கள்.

கற்கும்பொழுதே முன்செய்த தவத்தின் பயனுல் தமிழ், தெலுங்கு, வடமொழி மூன்றையும், ‘மகனறிவு தந்தையறிவு’ என்ருற்போல, மும்மொழியும் பயின்றதோடு, பின்னுல் வேண்டிய ஆங்கிலப் பயிற்சியும் பெற்ருர்கள். 20 வயது வந்ததும் தந்தையாகிய கந்தசாமி என்பவர்கள் முன்னும் தொடர் புடைய மயிலம் மடத்துத் தொடர்பிலேயே 16-வது பட்டமாக இருந்த சுவாமிகளின் பூர்வாசிரம புதல்வர் பொன்னுசாமி அய்யர் என்பவர்களின் மகளாராகிய சகல சற்குணவதியாகிய அகிலாண்டம்மை என்னும் கன்னிகையை இராக்ஷஸ வருஷம்

ஆவணிமீ 15உ மணம் புரிவித்தார்கள். பின்னர் நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியோடு அன்பும் அறனும் தாங்கி, விருந்து புறந்தருதல் முதலிய இல்வாழ்க்கையின் பயனை நுகர்ந்து, தந்தைக்குரிய கடன்களைச்செய்து வாழ்ந்துவந்தார்கள். அக்காலத்து பங்கஜம் என்னும் பெண் மகவும், சிவசுப்பிரமணியம், சிவப்பிரகாசம் என்னும் இரண்டு சிறந்த புதல்வர்களையும் ஈன்று மகிழ்ந்தார்கள். பின்னர் 16-வது பட்டம் சுவாமிகள் பரிபூரணமடைய, அவர்கள் மூத்த புதல்வராகிய இவர்களின் மாமனர் பொன்னுசாமி அய்யர் 17-வது குருமூர்த்தியாகப் பட்டமேற்றுர்கள். பின்னர் இவர்கள் மடத்துக் காரியங்களை மயிலத்திருந்து மேற்பார்வை செய்துகொண்டு அனுபவம் பெற்றதோடு, சிறந்த ஆசிரியர்களிடத்து தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் நல்ல பயிற்சிபெற்று வந்தார்கள். அப்படி அனுபவ முதிர்ச்சி பெற்றதின்பின் 17-வது பட்டம் குருமூர்த்திகளுக்குப் பரிபூர்ணக் காலம் வந்தடைய 1928-ம் வருடம் பிப்ரவரிக்குச் சமானமான பிரபவ வருடம் மாசிமீ 13உ காலை உதயத்தில் நல்லோரையில் "அருந்தமிழ் நாடு ஒரு கோடி செய்த தவப்பயன்" என்ற சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கும், "தமிழ் தேர் மயிலைமால் வரை" என்ற இலக்கண விளக்க ஆசிரியர் வாக்கும் வாய்மையாம்படி, தமிழ்மக்கள் செய்த தவத்தின் பயனாக, 18-வது குருமூர்த்தியாக பொம்மபுரத்தில் பட்டம் ஏற்றுர்கள். பட்டம் ஏற்ற காலத்து பலர் மேற்பார்வை பார்த்தும் பூசல் விளைவித்துக்கொண்டே இருந்த ஊர் மக்கள் அனைவரையும் குண அலங்காரத்தினுல் ஒற்றுமைப்படுத்தி ஈடில்லா வண்ணம் 17வது குருமூர்த்தியின் குருபூஜை விழாவைப் பல புலவர் வாழ்த்த, பலதிறப்பட்ட மக்கள் போற்ற சிறப்பாகச் செய்தருளினுர்கள்.

பின்னர் மயிலம் மடத்திற்கு விஜயம்செய்த காலத்து தண்ணளிபெற்ற செங்நெற் பயிரென வரவேற்ற ஊர்மக்களும், ஏனையவரும் மகிழ அழகுற சொற்றொடர்களால் நல்லாசி கூறினுர்கள்.

அதனோடு தாங்கள் தோன்றிய வீரசைவ-சமயம் முன் ஒரு காலத்து வீறு பெற்றிருப்பினும் இப்போதுள்ளோர் பெரும்பாலும் பிற்போக்கில் உள்ளவர்களாக இருப்பதால் அவர்கள் முன்னேற்றத்துக்காகவே தம் வாழ்நாளைக் கழிப்பதாகவும், கல்வியில் முன்னேறச் செய்தால் அதனுல் பிறவகையிலும் முன்னேறக்கூடும் என்று கருதி ஒரு பாடசாலையை நிறுவுவதாகவும் உறுதிமொழி யளித்தார்கள்.

நிற்க அவர்கள் ஆதீனத்தில் இருந்துவருகின்ற ஆலயத்திற்குப் போதுமான நெல் விளையக்கூடிய நிலம் இல்லாமையைப் போக்கக் கருதி பல கிராமங்களில் நிலங்களை வாங்கினுர்கள். அதன் விபரம் பிற்சேர்க்கையிற் காண்க.

கோயில், மடம் நிர்வாகம் பார்த்து எஞ்சிய நேரமெல்லாம் புலவர் ஒருசிலரை அண்மையில் அமர்த்தி சதா அருங்கலை விநோதராகவே விளங்கினுர்கள். வளவனூர்-திரு. சடகோபப் பிள்ளை, மதுராந்தகம்-திரு. சுப்பிரமண்ய குருக்கள், குகையூர்-திரு. சின்னசாமி அய்யர், திரு. குமார வீரய்யர் போன்ற புலவர்களில் யாராவது ஒரு சிலர் சதா பக்கத்தில் இருந்து கலையைப் பற்றி ஆராய்வதே தங்கள் கடமையாகக் கொண்டிருந்தார்கள். 17-வது குருமூர்த்திகளால் ஏற்பட்ட பல வழக்குகள் இவர்கள் காலத்தில் பெரும்பாலும் இல்லாமற் போம்படி வகை தேடினுர்கள். கருங்கழி, காஞ்சிபுரம், அச்சிறுபாக்கம் முதலிய இடங்களில் சிலர் வார பாத்யதை அனுபவித்து ஏமாற்றிக்கொண்டு வந்த நிலங்களைக் கைப்பற்றுவதற்காக வேண்டி சில வழக்குகள் தொடுத்தார்களாயினும் அதனுல் சிறு செலவில் பெரு நன்மை விளையக்கூடிய வகையில் இருந்தது.

வைகாசிமீ பௌர்ணமி கூடிய நன்னுளில் இரண்டாவது பட்டம் சுமாமிகளுக்கு குருபூஜை சிறப்பாக நடந்தேறுவது எப்போதும் உண்டு. ஆயினும் புலவர் பெருமக்கள் சிலரே வந்து பாமாலை இரவு 10 மணிக்குப் பாடிச் சன்மானம் பெற்றுப் போவது வழக்கம். ஆனுல் இந்த சுவாமிகள் காலத்தில், ஆசிரியர் திரு. வரதநஞ்சைய பிள்ளை, அ. கந்தசாமிப் பிள்ளை, மதுராந்தகம்-திரு. சுப்ரமண்ய குருக்கள், திருத்துறையூர்-திரு. மாணிக்கம் பிள்ளை, குகையூர்-திரு. சின்னசாமி அய்யர், திரு. குமாரவீரய்யர், மேலூர்-திரு. குமாரசாமி அய்யர், முசிரி-திரு. சோமசுந்திரய்யர், திருவெண்ணைநல்லூர்-திரு. நடனசபாபதி அய்யர், திரு. அடிகளாசிரியர், திரு. ஆ. ஸ்ரீநிவாஸாச்சாரியார் போன்ற சிறந்த பல புலவர்கள் குருபூஜை முதல் நான்கு நாள் வரை நூல்நயங்களைப் பாராட்டிப் பேசுவது போன்ற செயல்களால் சுவாமிகள் புலவர் மாட்டுக் கொண்டுள்ள பேரன்பு வெளிவரும்.

அன்றியும் வீர சைவ சித்தாந்த சங்கத்தைப் பலவாண்டு மடத்தில் நடத்தியதோடு, திரு. குமார வீரய்யரால் நடத்தப் பெற்ற 'வீர சைவம்' என்னும் தமிழ் இதழுக்கு வேண்டிய ஆதரவு தந்தார்கள்.

முக்காட்டுச் சுவாமிகள் என்பார் பல இடங்களில் அன்னம் போடவேண்டும் என்ற குறிக்கோளுடன் சொற்பொழிவு மூலம் மக்களைப் பண்படுத்தவேண்டும் என்ற நோக்கம் உடையர். அவர் இந்த சுவாமிகளிடத்து வந்து பெரிய கூட்டம் நடத்த வேண்டும் என்றும் பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்ன தானம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அதன் பயனாக, பிரமாதி வைகாசிமீ குருபூஜையை மயிலத்திலேயே நடத்தி 4 நாள் தொடர்ச்சியாக பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கியதோடு தமிழ்நாட்டிலுள்ள சிறந்த செந்தமிழ்ப் புலவர்கள் பலரையும் அழைத்து சொற்பொழிவாற்றும்படி செய்வித்தார்கள்.

இங்ஙிலையில் தமிழும் சமயமும் தழைத்தோங்க பல தொண்டுகள் புரிந்து வருங்காலத்து 1937-ம் வருடம் திரு. இராஜா முதலியார் மயிலம் ஆவணக்களரித் தலைவராய் வந்தார். அவர்கள் சுவாமிகளுடைய தமிழ் சமயப்பற்றைக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, "முருகன் செந்தமிழ்க் கழகம்" என்ற பெயரோடு ஒரு கழகத்தை ஆரம்பித்து வைத்தார், அவ்வாண்டின் இறுதியில் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள், B. A., L. T., தென்னாற்காடு ஜில்லா கல்வித்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர்கள் சுவாமிகளின் பண்பைக் கேள்வியுற்று மயிலம் வந்து முருகனையும் சுவாமிகளையும் தெரிசித்து சுவாமிகளின் அன்பைப் பெற்றார்கள். சுவாமிகள் மயில மடத்திற்கு முதல் தடவையாக வந்தபோது சொன்ன வார்த்தையை பிள்ளையவர்களிடம் சொல்லி, 'கல்விச்சாலை ஒன்று அமைக்க எண்ணியுள்ளோம் ஆவன செய்யுங்கள்' என்றார்கள். அதன்படி திரு. பிள்ளையவர்கள் மேலுள்ள கல்வியதிகாரிகளோடு நன்கு ஆராய்ந்து வெளியிட்டதன் பேரில் 14—7—1938 அன்று ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி ஒன்றைத் தமிழும் சைவமும் தழைத்தோங்குக என்னும குறிக்கோளுடன் தோற்றுவித்தார்கள். இதைக் கேள்வியுற்ற பெருந்தமிழ் மக்கள் பலரும் மலரைச் சுற்றும் வண்டென சுவாமிகளின் புகழில் ஈடுபடுவாராயினர். அதன் பயனால் சைவ சித்தாந்த சமாஜம் 35-வது ஆண்டு விழாவை 20—12—40 முதல் நாட்கள் மயிலத்தில் பெரும்புலவர் கூட்டத்தோடு நடத்திவைத்தார்கள். அவ்வாண்டே கல்லூரியும் அரிய முயற்சி பலவற்றால் சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் ஒப்புதலைப் பெற்றது. 9 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்க்கல்லூரி இன்று 152 மாணவர்களோடு விளங்குகிறது. இதுவரை இங்கு பட்டம் பெற்று வெளியேறியவர்கள் ..........பேர்கள். இவர்கள்

தமிழ்நாடெங்கும் உள்ள பலதிறப்பட்ட பள்ளிக்கூடங்களில் திறம்பட பணியாற்றி வருவது போற்றத்தக்கதாகும்.

அதுவன்றி ஸ்ரீ சுவாமிகள் ஆலயத்திலுள்ள முருகப்பெருமானுக்கு வேண்டிய ஆபரணங்கள், எடுபிடி சாமான்களாகிய வெள்ளி சுருட்டி முதலியவைகள், பூஜைக்குரிய வெள்ளி சாமான்கள் இவைகள் எல்லாம் பூரணமாகச் செய்துள்ளார்கள். (மற்றொரு பக்கம் அட்டவணை பார்க்க).

அன்றியும் பட்டத்திற்கு வந்த ஆண்டே இரதம் ஒன்றையும் செய்திருக்கிறார்கள். எனவே கோயிலுக்கும், மடத்துக்கும் சிறந்த ஊக்கமோடு வருவாயைப் பெருக்கியதோடு, தமிழ், சைவசமயம் இரண்டிற்கும் செய்துவருகிற தொண்டு மிகமிகப் பாராட்டப்படுவதாகும்.

மேலும் ஸ்ரீ சுவாமிகள் இருந்த இடத்திலிருந்து தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டு செய்வதோடு அல்லாமல் சந்தர்ப்பம் வாய்ந்தபோதெல்லாம் வெளியூர்களுக்குப் பல அரிய புலவர்களோடு சென்று அரிய கருத்துக்களை எளிய முறையில் உபதேசம் செய்துவரலானார்கள்.

அப்படிச் சுவாமிகள் சென்ற இடங்களாவன:—

30—5—1938ல் திரு. அரசிலி என்று வழங்கப்பட்டுவரும் ஒழிந்தியாப்பட்டிற்குச் சென்று 10 நாட்கள் தங்கி பல புலவர்கள் சொற்பொழிவாற்ற சுவாமிகள் தலைமை தாங்கி சிறந்த உபதேச உரை பகர்ந்தார்கள்.

11—6—1938ல் சுவாமிகள் காட்டராம்பாக்கம் அன்பர்களாகிய திரு. இராமலிங்க ரெட்டியார், திரு. சாம்பசிவ ரெட்டியார், திரு. வரதா ரெட்டியார் ஆகியோர்களின் வரவேற்பிக்கிணங்கிச் சென்று ஆசியுரை பகர்ந்தார்கள்.

1940ல் கும்பகோணத்தில் நடந்த அகில இந்திய வீரசைவ சங்கத்தில் சென்று கொடியேற்றி அரிய சொற்பொழிவு ஆற்றினார்கள்.

16—9—1942ல் கஞ்சனூர் திரு. புருடோத்தம ரெட்டியார், இலக்ஷிமிநாராயண ரெட்டியார், திரு. சுப்புநாராயண ரெட்டியார் முதலியோர் வேண்டுகோட்கிணங்க ஸ்ரீ சுவாமிகள் சென்று ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் குருபூஜையை

நடத்துவித்து பல புலவர் நல்லுரை பகர அரிய பொன்னுரை பகர்ந்தார்கள்.

1945ல் மே மாதம் சின்னசேலம் வீரசைவ இளைஞர் மஹாநாட்டுக்குத் தலைமை தாங்கி நல்லுரை பகர்ந்தார்கள்.

23—5—1945ல் மீண்டு ஒரு தடவை அரசலி அன்பர்கள் வேண்டுகோட்கு இணங்கிச் சென்று உபதேச மொழிகள் பகர்ந்தார்கள்.

1—11—48ல் நல்லாற்றூர் அன்பர்கள் வேண்டுகோட்கிணங்கி சூர்தடி விழாவில் கலந்து முருகன் பெருமையைப்பற்றி ஆறு நாள் வரை சொற்பெருக்காற்றி அருள் செய்தார்கள்.

49ல் திருவண்ணுமலை கார்த்திகை விழாவின்போது சத்தி விலாஸ் சபையில் ஒரு நாள் தலைமை தாங்கி அருளுரை வழங்கியதோடு மறுநாள் நடந்த துறவிகள் மகாநாட்டில் நல்லுரை பகர்ந்தார்கள்.

3—3—50ல் கோயம்புத்தூருக்கு அடுத்த பேரூர் சென்று சாந்தலிங்க சுவாமிகள் மடத்தில் குருபூஜை விழாவின் சார்பாக நடக்கும் கழகத்தில் தலைமை வகித்ததோடு அங்குள்ள திரு. இராமசாமி ஐயாவிற்கு தீக்ஷை செய்வித்து அம்மடத்திற்கு இளவரசு பட்டம் சூட்டினுர்கள்.

4—3—1950ல் சிரவணபுரம் சென்று கௌமார மடாலயத்து ஸ்ரீ இராமாநந்த சுவாமிகளோடு கலந்து பேசி மகிழ்ந்தார்கள்.

1951ல் சேக்கிழார் செந்தமிழ்க் கழகத்திற்கு மூன்றுநாள் தில்லைவாசிகள் விருப்பத்திற்கிணங்கிச் சென்று தலைமை தாங்கி இன்னுரை பகர்ந்தார்கள். அதனோடு திரு. இரத்தின சாமி செட்டியார் இல்லத்தில் அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் விருப்பத்திற்கிணங்கி ஸ்ரீ சுவாமிகள் வார வழிபாட்டை ஆரம்பித்து வைத்தருளினுர்கள்.

28—5—1952ல் தேவக்கோட்டை சேக்கிழார் கழக அன்பர்களாகிய சைவ சமய புரவலராகிய சேவு மெய்யப்பச் செட்டியார், பாலகவி, வயநாகரம் இராமநாதஞ் செட்டியார் முதலிய அன்பர்கள் வேண்டுகோட்கிணங்கி சேக்கிழார் செந்தமிழ்க் கழகத்தில் மூன்று நாள் தலைமை தாங்கி அரிய உரை பல பகர்ந்தார்கள்.

30. 5—52ல் ஸ்ரீ சுவாமிகள் குன்றக்குடி சென்று திருவண்ணாமலை ஆதீனம் தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் வரவேற்க அம்மடத்தில் தங்கி அந்த சுவாமிகளோடு அங்குள்ள முருகனை வணங்கி இன்புற்றார்கள்.

53ல் திருக்கைலாய பரம்பரைப் பெரியமடம் தருமபுரம் ஆதீனத்தில் நடந்த திருநெறிய தெய்வத் தமிழ் மகாநாட்டில் ஒரு நாள் தலைமை தாங்கி அருளுரை வழங்கியதோடு அன்று மடத்தில் தங்கி அங்குள்ள சுவாமிகளோடு அளவளாவி இருந்தார்கள்.

26—6—53ல் பேரூர் சென்று சாந்தலிங்க சுவாமிகள் மடத்தில் சாந்தலிங்க சுவாமிகள் தமிழ்க் கல்லூரியைத் திறந்து ஆசியுரை அருளினார்கள்.

18—5—54ல் இரட்டணை திருவள்ளுவர் கழக அன்பர்கள் வேண்டுகோட்கிணங்கி திருவள்ளுவர் வகுப்பு ஆண்டு விழாவில் தலைமை ஏற்று இன்னுரை பகர்ந்தார்கள்.

27—6—54ல் தில்லையில் திரு இரத்தினசாமி செட்டியார் பேராதரவில் நடக்கும் வார வழிபாட்டு கூட்டத்தின் ஆண்டு விழாவிற் றலைமை தாங்கி அருளுரை வழங்கினார்கள்.

27—7—54ல் கரூர் பொது சமய சன்மார்க்க சங்க அன்பர்கள் வேண்டுகோட்கிணங்கி வாரவழிபாட்டு ஆண்டு விழாவில் தலைமை ஏற்று பொருளுரை வழங்கினார்கள்.

ஓமந்தூர் கும்பாபிஷேகத்திற்கு திரு லெக்ஷிமிநாராயணரெட்டியார் முதலிய அன்பர்கள் வேண்டுகோட்கிணங்கிச்சென்று அபிஷேகத்தைத் தெரிசித்ததோடு அன்று பிற்பகல் நடந்த சன்மார்க்க சங்கத்தில் தலைமையேற்று பொன்னுரை பூத்தார்கள்.

புதுவை முதலாய பல இடங்களுக்குச் சென்று பல பொன்னுரை வழங்கி அருள செய்துள்ளார்கள்.

---

## ஸ்ரீ சுவாமிகள் செய்துள்ள திருப்பணிகள் முதலியன.

மயிலம் மடத்தில் பின்புறம் இரண்டு கட்டுள்ள மண்டபங்கள்.

மயிலம் மடம் தேவஸ்தான மாடுகள் தங்கி இருக்கும் தொழுக் கூடங்கள்.

மயிலம் சந்நதித் தெருவில் சில வீடுகள்

மயிலம் தமிழ்க் கல்லூரிக்குக் கட்டிடம், தோப்பு, காலிமனை முதலியன 35,000 ரூபாய்க்கு வாங்கினார்கள்.

மயிலம் தமிழ்க் கல்லூரிக்காக, விழுப்புரம் திரு. கந்தப்பத்தர் தானமான அளித்த கட்டிடத்தோடு பங்காக இருந்த மற்றொரு பாகத்தை 1750 ரூபாய்க்கு வாங்கினார்கள்.

மயிலம் தமிழ்க் கல்லூரியை விஸ்தரிப்பதற்காக 4 ஏக்கர் மாந் தோப்பினை வாங்கினார்கள்.

மயிலம் தேவஸ்தானத்திற்காக 18 ஏக்கர் புளியந்தோப்பு வாங்கினார்கள்.

மயிலம் தேவஸ்தானத்திற்கு மின்சார விளக்கு போட்டருளி னார்கள்.

மயிலம் மலைக்குக் குடிதண்ணீர் வசதி செய்துள்ளார்கள்.

அடிகளாரால் நிறுவப்பெற்ற



ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்.



ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி
உயர்நிலைத் தொடக்கப்பள்ளி, மயிலம்.

## ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் பட்டத்திற்கு வந்தபிறகு வெளியிட்ட நூல்கள்

1. மயூராசல புராணம், மூலமும் வசனமும் (இரண்டாம் பதிப்பு)
2. சிவஞான பாலய சுவாமிகள் நெஞ்சுவிடு தூது.
3. சிவஞான பாலய சுவாமிகள் கலம்பகம்.
4. மயிலம் பிள்ளைத்தமிழ்.
5. சிவஞான பாலய சுவாமிகள் பாடாண் பாட்டு.
6. ஞாயிறு வாழ்த்து.
7. மயிலாசல மாலை.
8. சிவப்பிரகாச விகாசம்.
9. சதமணி மாலை.
10. அரசிலித் தலபுராணம்.
11. விவேகமணி.
12. மயிலம் திருக்கோயில், திருமட வரலாறு, (இரண்டு பதிப்பு)
13. சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு.
14. பிரபுலிங்கலீலை மூலமும், உரையும்,
15. மயிலத்து உலா.

## ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் நாட்டிற்குச் செய்த தொண்டுகள்

1. உயர்தரப் பாடசாலை வைத்து மக்களுக்குக் கல்வி புகட்டுதல்.

2. கல்லூரி மாணவர்களுக்கு இலவசமாக உணவும், தங்க இடமும் அளித்தல்.

3. கல்லூரி மாணவர்கள் வார வழிபாட்டில் ஊக்கம் கொள்வான்வேண்டி போட்டிவைத்து இறுதியில் பெரும்பரிசு அளித்தல்.

4. முருகனுக்குரிய விழாக்காலங்களில் தக்க புலவர்களைக் கொண்டு கந்த புராணத்தைப் பயிற்றுவித்தல்.

5. இளஞ்சிறுவர்கள் இறைவனையே நினைத்திருக்க, தேவார பாடசாலை நிறுவியிருத்தல்.

6. முருகன் செந்தமிழ்க்கழகம் மூலம் தமிழை வளர்த்தல்.

பொம்மபுரம் மடத்துத் தெருவில் ஆறு வீடுகள் கட்டினார்கள். மடத்து முன்பாகத்தில் இருபக்கமும் குருபூஜைக்கு சாப்பிடும் இடங்கள் கட்டினார்கள்.

## சந்நிதானம் வாங்கிய தேவஸ்தானத்திற்கு சொந்தமான மொத்த நன்செய் புஞ்சை நிலங்கள்

| | | | நஞ்சை | புஞ்சை | மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | பாதிராப்புலியூர் | ... | 3·89 | — | 5000 |
| 2. | விளங்கம்பாடி | ... | — | 17·29 | 1000 |
| 3. | கொரளூர் | ... | 0·44 | — | 350 |
| 4. | கூட்டேரிப்பட்டு | ... | 11·92 | 13·15 | 6000 |
| 5. | கொல்லியங்குணம் | ... | 39·8 | 34·44 | 23,000 |
| 6. | தென் கொளப்பாக்கம் | ... | 10·6 | 21·32 | 3066 |
| | ஆக மொத்தம் | ... | 65·39 | 86·20 | 38,416 |

## சந்நிதானம் வாங்கிய மடத்திற்குச் சொந்தமான மொத்த நிலங்கள்

தைலாபுரம் ...

கொந்தமூர் ...

விளங்கம்பாடி ...

பொம்மயபாளையம் ...

நல்லாற்றூர் ...

மயிலம் ...

இத்தகைய சிறப்புகள் பலவும் ஒருங்கே அமையப்பெற்ற எங்கள் குருநாதனாகிய 18-வது பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் 60 வயதுடைய இன்றேபோல் என்றும் இருந்து, உலக வாழ்வையே விரும்பி முருகன் திருவருளாலும், குருநாதன் திருவருளாலும் பொன்னியாற்று மணலினும் பன்னாள் வாழ்வார்களாக.

## சோடசோபசார தீபாராதனை பாத்திரங்கள்

| | | தோலா |
|---|---|---|
| 1. | சேருகால் ஒன்று | 104 |
| 2. | ,, | 95½ |
| 3. | ,, | 92 |
| 4. | ,, | 81 |
| 5. | ,, | 72 |
| 6. | அர்க்கியவட்டில் நான்கு | 61 |
| 7. | புஷ்பக்குடலை | 67 |
| 8. | அபிஷேக கலசம் ஒன்று | 94¾ |
| 9. | உத்திரணி | 3⅛ |
| 10. | பத்திர தட்டு | 49¾ |
| 11. | பத்திர தட்டு | 19¾ |
| 12. | மணி ஒன்று | 207½ |
| 13. | தீபாராதனை தட்டுகள் ஐந்து | 97½ |
| 14. | குடம் ஒன்று | 103½ |
| 15. | குடம் ஒன்று | 89 |
| 16. | தூபக்கால் ஒன்று | 115½ |
| 17. | குடதீபம் முக்காலி உள்பட | 135½ |
| 18. | ஏழு கிளை கற்பூர தட்டு | 100¼ |
| 19. | சாம்பிராணி வத்தி கலசம் | 27 |
| 20. | ,, ,, | 25 |
| 21. | பன்னீர் சொம்பு | 40⅓ |
| 22. | ,, | 39½ |
| 23. | ஏகதீபம் | 108 |
| 24. | இரு கிளை தீபம் | 81 |
| 25. | முக்கிளைத்தீபம் | 74 |
| 26. | நாற்கிளைத்தீபம் | 85 |
| 27. | ஐங்கிளை தீபம் | 95 |
| 28. | சர்ப்ப தீபம் | 135 |



வெள்ளி பூசை சாமான்கள்

| | | தோலா |
|---|---|---|
| 29. | விருஷப தீபம் | 119¼ |
| 30. | மயில் தீபம் | 117¼ |
| 31. | குக்குட தீபம் | 120½ |
| 32. | குஞ்சர தீபம் | 128½ |
| 33. | சிம்ம தீபம் | 121½ |
| 34. | சூரிய தீபம் | 117 |
| 35. | சோம தீபம் | 106½ |
| 36. | புருஷாம்ருக தீபம் | 110¼ |
| 37. | அலங்கார தீபம் ஆறு தட்டுகளும் அதற்குரிய குண்டுகளும் | 370½ |
| 38. | சட்சத்திர தீபம் | 172 |
| 39 | சுருட்டி ஒன்று | 73¼ |
| 40. | கொடி | 61¾ |
| 41. | ஆலவட்டம் | 60¾ |
| 42. | கண்ணுடி ஒன்று | 78¾ |
| 43. | குடை ஒன்று | 117½ |

**விருதுகள் வகையரு**

| | | |
|---|---|---|
| 44. | சூரிய சுருட்டி ஒன்று | 398 |
| 45. | குக்குட சுருட்டி ஒன்று | 415 |
| 46. | மயூர சுருட்டி | 421 |
| 47. | யாளி சுருட்டி | 427 |
| 48. | விருஷப சுருட்டி | 275 |
| 49. | சுந்திர சுருட்டி | 414 |
| 50. | சந்திர சுருட்டி கலசங்கள் 6 | 233 |
| 51. | ,, வெண்டயங்கள் ஆறு | 251 |
| 52. | மூலஸ்தான வெள்ளி பிரபை | |

| | கல் நகைகள் | | | மதிப்பு |
|---|---|---|---|---|
| 1. | மாங்காய் மாலை | 1 | ரூ. | 2500 |
| 2. | மகிரி மாலை | 1 | ரூ. | 6000 |
| 3. | தளுக்கு பில்லை மாலை | 3 | ரூ. | |

# *உண்மையுணர்தல்

மயிலம் - பொம்மபுர ஆதீனப்புலவர்,
**வித்துவான், ஆ. சிவலிங்கனார்,**
விரிவுரையாளர், சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.

---

அன்பார்ந்த பெருமக்களே!

**வணக்கம்**

**காவிரிப்பூம்பட்டினத்திலே** வணிகர் குலத்திலே **கண்ணகி** என்ற கற்பரசியின் கணவன் **கோவலன்** என்பான், தன் மனைவியை விட்டு மாதவியென்ற கன்னிகையொருத்திபால் பெருவேட்கையுடையவனாய் அவளுடனேயே தங்கி யின்புற்றிருந்தான். ஒருகால் அவ்வூரில் இந்திர விழா நடைபெற்றது. மக்கள் விழாவில் கலந்து மகிழ்ந்தனர். மாதவியும் கோவலனும் கலந்து மகிழ்ந்தனர். அவ்விழாக்காலத்து ஒருநாள் அவ்விருவரும் மற்றைய மக்களைப்போலவே காலையில் கடற்கரைக்குச் சென்றனர். ஆங்கு ஓரிடத்தமர்ந்து மாதவி யாழ்கொடுத்துக் கோவலனைப் பாட வேண்டினாள். அவன் அகப்பொருட்சுவை ததும்பப் பாடினான். அதாவது ஒரு தலைவன் ஒரு தலைவியை விரும்பியடைதற்கு முயலும் கருத்துக்கள் அடங்கியிருந்தன அவனது பாடலில். அதைக், 'கோவலனே அவ்வாறு வேறு ஒருத்திபால் மனம் கொண்டான்' எனத் தவறாக எண்ணிய மாதவி, தனக்கு மனம் இல்லாதிருக்கவும், தானும் வேறு ஒருத்தன்பால் மனம் வைத்தவள்போல் நடித்துப்பாடினாள். அவள் பாட்டையும் அதன் பொருளுக்கேற்றவாறுள்ள அவள் முகம் கை முதலியவற்றின் மாறுபாட்டுக் குறிப்பையும் கண்ட கோவலன், அவள் வேறு ஒருத்தனை விரும்பினாள் என எண்ணி உடனே அவளை விட்டுத் துறந்தான். ஆனால் உண்மையில் மாதவிக்கு தவறான கருத்து இல்லைதான். அவள் நடிப்பைக் கண்டு அவன் ஏமாந்தான். அவன் நேரிலேயே கண்டதும் தவறாயிற்று.

அடுத்து அவன் கண்ணகியை அடைந்து அவளுடன் சிலம்பு விற்றுப் பொருள்தேட மதுரைக்கு வந்தான். வந்தவன் அதனை விற்றுவர எண்ணிக் கண்ணகியை இடையர் வீட்டில்

---

* காஞ்சீபுரம், சத்சங்கத்தில் இராமலிங்க சுவாமிகள் பிறந்தின விழாவில் (29—9—54) ஆற்றிய சொற்பொழிவு.

அடைக்கலமாக இருத்தித் தனியே தெருவில் வந்தான். எதிரே அரசாங்கப் பொற்கொல்லனைக் கண்டு சிலம்பினைப்பற்றிக் கூறினன். அவன் அரசியின் காற்சிலம்புகளைத் திருடியவன் ஆதலின், அதற்குக் கோவலனைத் திருடனாகக் காட்டிவிடலாம் என்று அவனைத் தன் வீட்டில் இருத்திவிட்டு அரண்மனை சென்றான். அப்போது பாண்டிய அரசன் **ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்** தன் மனைவி இராசமாதேவி ஊடினளாக, அவளைத் தேற்றுதற்பொருட்டு அவளுடன் தொடர்ந்தான். அச்சமயம் பொற்கொல்லன், 'சிலம்பைத் திருடிய கள்வன் என்மனைக்கண் அகப்பட்டான்' என்றான். அரசன் யாதும் ஆராயாமல் 'கொன்று அச்சிலம்பு கொணர்க' என்றான். பின்னர்ப் பொற்கொல்லன் அரசன் ஆணைப்படிக் கோவலனைக் கொன்றான். பொற்கொல்லன் சொன்ன சொல்லை யப்படியே நம்பிய அரசன் கோவலனைக் கொலைப்படுத்திவிட்டான். அவன் கேட்டது பொய்.

கோவலன் வரலாற்றில், மாதவியின் நடிப்பைக்கண்டு அவன் எண்ணிய எண்ணமும், பொற்கொல்லன் சொல்லைக் கேட்ட அரசன் ஆணையும் மிக மிகத் தவறுடையன என்பதை யாவரும் அறிவர். கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய் என்று உலகில் வழங்கும் பழமொழி எவ்வளவு பொருள் பொதிந்தது என்பதைக் கோவலன் வரலாற்றிலிருந்து நாம் அறியலாம். எனவே, மெய்யை உணரவேண்டுமானால்—உண்மையை உணரவேண்டுமானால்—தீர விசாரிக்கவேண்டும்—ஆராயவேண்டும் என்ற முடிவுக்கு நாம் வரலாம். **திருவள்ளுவரும்** கண்ட அளவிலும், கேட்ட அளவிலும் நின்றுவிடாமல் தீர ஆராய்ந்து காண்பதே சிறந்தது என்றார்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள் 355)

இதற்கு "யாதொரு பொருள் யாதோர் இயல்பிற்றாய்த் தோன்றினும் அத்தோன்றியவாற்றைக் **கண்டொழியாது** அப் பொருளினகண் நின்று மெய்யாய பொருளைக் காண்பதே மெய் யுணர்வாவது" என்று **பரிமேலழகரும்** உரை எழுதினர். எனவே காட்சியளவிலேயே உண்மை யுணரமுடியாது என்னலாம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

இக்குறள் கேள்வியளவிலேயே உண்மையுணர முடியாது என்பதை வலியுறுத்துர். "யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும் அப்பொருளின்கண் நின்று மெய்யாய பொருளை அறிவதே அறிவுடைமையாவது" என்பது இதன் பொருள். உங்கள் ஊர்ப்பெயர் கண்டாச்சிபுரம் என்பதை இவ்வூரிலுள்ள வியாபார விளம்பரப் பலகைகள்மூலம் கண்டேன்; ஏன்—இன்றைற சொற்பொழிவு அறிக்கையிலும் கண்டேன்; அன்றியும் இங்குள்ளார் யாவரும் சொல்லவும் கேட்டேன். நான் கண்டதும் கேட்டதும் கண்டாச்சிபுரம். ஆனால் தீர ஆராயப் புகுந்ததால் இது கண்டராதித்தபுரம் என்பது தெரிய வந்தது. முடிவாக உண்மை யுணரவேண்டுமானுல் தீர ஆராய வேண்டும் என்னலாம். எனவே இனித்தீர விசாரித்து உண்மை யுணர்வோமாக.

'உண்மையுணர்தல்' என்பது உள்ள பொருளின் தன்மையை உணர்தல் எனப் பொருள்படும். உள்ள பொருள் யாவை? யாவும்—கண்ணுக்குப் புலப்படும் யாவும் உள்ள பொருள்களே. கண்ணுக்குப் புலப்படாதனவும் உள. காற்று கண்ணுக்குப் புலப்படாதது. ஆனுல் அதை இல்லையென்று யாரும் கூறமுடியாது. அது உள்ள பொருளே. நம் உடலில் அது வீசுவதால்- தொடு உணர்ச்சியினுல் அதை உண்டு என உணர்கிருேம். கடவுளும் கண்ணுக்குத் தோற்ருதவரே. ஆனுல், அவரை எவ்வாறு உண்டு என்னலாம்? நமக்கு அவர் எவ்வகையிலும் நிரூபிக்கும்படியான அளவில் இல்லையே!" என வினவலாம். அதுபற்றிப் பின்னர்க் கூறப்படும். ஆனுல் ஒன்றுமட்டும் அவர் உண்டு என்பதற்குக் கூறுகின்றேன். உலகத்தில் அளவிறந்த பொருள்கள் உள்ளன. அவற்றை எல்லாம் உணர்த்துதற்குச் சொற்களும் உள்ளன. (பொருள்களுக்குச் சொற்கள் இல்லாமல்—வழங்காமல் இருக்கலாம். ஆனுல் வழங்கும் சொற்களுக்குப் பொருள்கள் இல்லாமல் இல்லை. நீங்கள் ஏதேனும் ஒரு சொல் சொல்லி அதனுல் ஒரு பொருளையும் உணர்த்தாமலிருக்க முடியுமா என்று பாருங்கள். 'எல்லாப் பொருள்களுக்கும் சொற்கள் உண்டு' என்று கூருமல் 'எல்லாச் சொற்களுக்கும் பொருள்கள் உண்டு' என்ருர் தொல்காப்பியர். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பது அவரது வாக்கு. இக்கருத்தை வைத்துக்கொண்டு கடவுள் உண்டு என்பதை நிறுவலாம். 'கடவுள் என்ற ஒன்று இல்லையென்பாரைப் பார்த்து, இல்லாத பொருளுக்குச் சொல் எப்படி வந்தது?' என்று கேள்வி யெழுப்புங்கள். அவர் பதில் கூருது தயங்குவர். எனவே கடவுள் என்ற சொல் கடத்தல் என்ற

பொருள் தந்து பின்னர்க் கடந்த ஒரு பொருளைக் குறித்தலால் நாம் கடவுள் உண்டு என்று நிறுவலாம். இது நிற்க.

ஒரு பொருளை உண்டு என்று நிறுவ மூன்று வழிகள் உள. காட்சி, கருதல், நூல் என்பன அவை. கண்ணுற்கண்டு ஒன்றை உண்டு என்பது காட்சி வழி. அதாவது நெருப்பைக் கண்டு நெருப்பு உண்டு என்பது. பொருளைக் காணாது அதனொடு தொடர்புடைய ஒன்றைக்கண்டு அதனை உண்டென்பது கருதல் வழி. புகை கண்டு காணாத நெருப்பை உண்டு என்பது. நூல் வழி என்பது ஆன்றோர்கள் நூலில் சொல்லியதைக் கொண்டு உண்டு என்பது. அமெரிக்கா என்ற தேசம் உண்டு என்று நூல்களில் படிக்கிறோம். அதைக் காணவில்லை; அஃது ஒன்றுண்டா என ஆராயவும் இல்லை; சொன்னதை நம்புகிறோம். இது நூல் வழி எனப்படும். இவைகளை அளவைகள் என வழங்குவர். இம்மூன்று வழிகளில் நாம் நூல் வழியால்—அதாவது நூல்கள் கடவுள் உண்டு என்றதால் உண்டு என்கிறோம். “ தோன்றும் பொருள்கள் யாவும் அழியும்; ஆதலின் தோன்றிய உலகமும் அழியும். அழியக்கூடியது அறிவுடையதாகாது. அறிவற்ற பொருள் தொழில் செய்யாது, எனவே தோன்றி யழிதலாகிய தொழில்களை உலகம் மேற்கொண்டது என்றால் அது பொருந்தாது. ஆதலினால் அதை அவ்வாறு தொழிற்படுத்த ஒருவன் வேண்டும். அவன் அறிவுள்ளவனாவான்; அவனே கடவுள் என்று உணர்வது கருதல் வழியால் உணர்வதாம். ஆனால் நம்போன்றார் இறைவனைக் காட்சி வழியால் கண்டு உண்டு என்ன முடியாது. நூல் கூறியதை நம்பி நம் சிற்றறிவின் துணைகொண்டு கருதல் வழியால் உண்டென்று கண்டு பின் காட்சி வழியினைப் பெற முயல வேண்டும். இவ்வகையில் கடவுளின் உண்மைத் தன்மையை உணர்வதே **மெய்யுணர்தல்—உண்மையுணர்தல்** எனப்படும்.

அடுத்து உள்ள பொருளாகிய கடவுள் எங்குள்ளார் என்பதை உணர்வது உண்மையுணர்தல் எனப்படும். அவர் எங்குள்ளார்? எங்கும் உள்ளார்; எப்பொருளிலும் உள்ளார். எப்பொருளாகவும் உள்ளார். அவ்வுண்மை நம்போன்றார்க்குப் புலப்படுவதில்லை. நாம் பொருள்களைப் பொருள்களாகவே காணுகின்றோம். அதாவது கல்லைக் கல்லாகவே—யானையை யானையாகவே காணுகின்றோம். ஆனால் ஞானிகள் கல்லையும் யானையையும் கடவுளாகவே காண்பர். மரத்தால் செய்யப்பட்டது ஓர் யானை. அதனைத் தூரத்திருந்து பார்க்கும் ஒருவன் அதனை உயிர்யானையாகவே காணுகின்றான். அவனுக்கு அது மரம் என்ற உணர்ச்சியேயில்லை. அவனே அருகில் வந்து

காணும்போது அது மரம் (மரத்தாலானது) என அறிகின்ருன். அப்போது அவனுக்கு உயிர் யானை என்ற உணர்வேயில்லை. தொலைவில் யானையாக உணர்ந்த அவன் அருகில் வந்த பின்னர் அது பொய்; 'மரம்' என உண்மை அறிகிருன். இந்நிலையில் நாம் யாவரும் காணப்படும் உலகத்தை யானை எனக் காணுகின்றவன்போல் காண்கின்ரேம். ஞானிகள் உலகை உலகம் என்றெண்ணுது அதனிடமாக இறைவனைக் காணுகிருர்கள், யானை வடிவில் மரம் இருத்தலைக் காணுகின்றவனைப்போல. யானை வடிவு முதலில் அவனுக்கு தொலைவில் மரத்தை மறைத்தது. பின் அருகில் அவன் வரத் தான் மரத்தில் மறைந்துவிட்டது. அதே நிலையில் நமக்கு பார் முதலிய பூதங்கள் சிவத்தை மறைத்திருக்கின்றன; ஆனுல் ஞானிகட்கு அவைகள் சிவத்தில் மறைந்து சிவம் தோன்றும்படியாயின.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்

என்ருர் திருமூலர். இவ்வாறு-ஞானிகள் கடவுள் உண்மையை உணருமாறு உணர்வதே உண்மை உணர்தலாம். இதைத்தான் வள்ளுவரும்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ருர்.

ஞானிகள்போல் நாம் உணரமுடியுமா? முயன்ருல் முடியாததொன்றில்லை முயலவேண்டும். சிலர் முயன்ருல் எளிதில் உணர்வர். சிலர் அரிதில் உணர்வர். பெரும்பாலார் இப்பிறவியிலேயே முடியாதவராவர். சம்பந்தர் எடுத்த எடுப்பிலேயே உணர்ந்து கண்டார். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முயற்சியளவில் சிறு சிறு வேறுபாடுகளில் எளிதில் உணர்ந்தனர். பல நாயன்மார்கள் அரிதில் உணர்ந்தனர். நம்போன்ற மக்கள் இன்னும் உணரவில்லை. உணர நாம் முயலவேண்டும்; விடாது முயலவேண்டும். பக்குவகாலம் வரின் உணர்வோம்.

பெருந்தொகை வைத்துப் போட்டிகள் நடத்துகின்றனர். பகுத்தறிவுப்போட்டி குறுக்கெழுத்துப்போட்டி எனப் பல காண்கின்ரேம். ஒரு சிலர் சிறுதொகையில் முயற்சிக்குறைவில் பெரும்பகுதி தொகையாகப் பெறுகின்றனர். சிலர்

விடாது ஆண்டுகளாக எழுதி ஒருநாள் பெரும்பகுதி தொகை யாகப் பெறுகின்றனர். பலர் முயற்சியும் பணமும் அதிகம் கொண்டு சிறிது ஊதியத்துடன் சிறு சிறு தொகை பெறுகின்ற னர். மூன்றும் நிலையினர்போல நாம் இருக்கின்றோம். நாமும் பெருமுயற்சியெடுத்து இறைவனை வழிபட்டு (சிறு தொகை பெறுவதுபோல) நோய் நீங்குதல், நினைத்த காரியம் கைகூடல் ஆகிய அருள்களைப் பெறுகின்றோம். நாமே இறைவனை முழு தும் உணர்வதற்கு இன்னும் முயலவேண்டும். எவ்வாறு முயலுவது?

நம் குற்றங்களை நீக்கிக்கொள்ளல் வேண்டும். நன்மை களைச் செய்வதைவிட முதற்கண் தீமைகளை நீக்கிக்கொள்வதே சாலச் சிறந்ததாம்.

“ நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே”

என்றார் ஒரு புலவர். நம்மிடத்து உண்டாகிய குற்றமாகிய அழுக்கைப் போக்கித் தூய்மை செய்துகொள்ளுதல் வேண்டும். மூன்றிடங்களில் நமக்கு அழுக்குண்டு. மனம், வாக்கு, காயம் ஆகிய இடங்களில் அழுக்குண்டு. நீரால் அழுக்கைப் போக்கிக் கொள்கிறோம். இம்மூன்றிடத்து அழுக்குகளும் யாவை? எவற் றால் போக்கிக்கொள்ளவேண்டும்? இவ்வினாக்களுக்குத் **துறை மங்கலம் - சிவப்பிரகாச அடிகள்** விடை கூறியுள்ளார்.

“ திருக்குறு மழுக்கா றவாவொடு வெகுளி
செற்றமா கியமன வழுக்கைத்
தியானமென் புனலால் பொய்புறங் கூறல்
தீச்சொலென் கின்றவா யழுக்கை
அருட்கிளர் நினது துதியெனும் புனலால்
அவத்தொழில் என்னுமெய் யழுக்கை
அருச்சனை யென்னும் புனலினாற் கழுவா
அசுத்தனேன் உய்யுநா ளுளதோ ”

என்ற அவ்வடிகள் வாக்கைக் காண்க. அழுக்காறு, அவா, வெகுளி, செற்றம் ஆகியவை மன அழுக்குகள் இவற்றை இறை தியானமாகிய நீரால் கழுவவேண்டும். பொய், புறங்கூறல், தீச்சொல் ஆகியவை வாய் அழுக்குகள் இவற்றைத் துதி என்ற

நீரால் கழுவவேண்டும். அவத்தொழில் மெய்யழுக்கு. இதை அருச்சனை என்ற நீரால் கழுவவேண்டும். அழுக்குகளைக் குற்றங்களாகவும் நீர்களைக் குணங்களாகவும் கொள்ளவேண்டும். எனவே குற்றங்களை விட்டுக் குணங்களை நாம் மேற்கொண்டால் உய்யலாம்—உண்மையுணரலாம்.

குற்றத்தை விட்டுக் குணத்தைக் கொள்வதா; குணத்தைக் கொண்டு குற்றத்தை விடுவதா? இக்கேள்வி நீந்தக் கற்றபின் நீரில் இறங்குவதா; நீரில் இறங்கி நீந்தக் கற்பதா? என்றது போலாம். இதன் முடிவு நீரில் இறங்கியே நீந்தக் கற்கவேண்டும் என்பதுதான் வரும். அவ்வாறே குணங்கொண்டுதான் குற்றத்தைப் போக்கவேண்டும். உடம்பில் உள்ள அழுக்கை நீரைக்கொண்டுதான் போக்குகிறோம். அதே நிலையில் மனம் வாக்குக் காயங்களில் உள்ள குற்றங்களாகிய அழுக்குகளை முன் கூறிய குணங்களாகிய நீர்களைக் கொண்டுதான் போக்கவேண்டும். அவ்வாறுதான் சிவப்பிரகாச அடிகளும் கூறினர். இதனால் உலகில் தீயவன் ஒருவன் கடவுள் வழிபாடு செய்வானை யானால் அவனை ஏளனம் செய்வதோ தடுப்பதோ கூடாது என உணரலாம். அவன் அவ் வழிபாட்டால் தீமை நாளடைவில் நீங்கப்பெறுவான். நாமும் சிவப்பிரகாச அடிகள் கூறியதை மனத்திருத்தி வழிபடல்வேண்டும். இது சற்சங்கம். இச் சொல் சன்மார்க்க சங்கத்தை நினைவூட்டுகின்றது. அது இராம லிங்க அடிகளை நினைவூட்டுகின்றது. அதனால் அவரது வாக்கினையும் ஈண்டு கூற விரும்புகிறேன். அவர் தம்மை எழு பகைவரும் அவரைச் சார்ந்தவரும் பற்றுதிருக்க இறைவனை முருகனை வேண்டுகின்றார். அவ்வெழுவரும் ஏழு தீக்குணங்கள்:

"காமவுட் பகைவனும் **கோப**வெங் கொடியனும்
கன**லோப** முழுமூடனும்
கடு**மோக** வீணனும் கொடு**மத** மெனுந்துட்ட
கண்கெட்ட ஆங்காரியும்
ஏமமறு **மாச்சர்ய** விழலனும் **கொலை**யென்
றியம்புபா தகனுமாமிவ்
எழுவரும் இவர்க்குற்ற உறவான பேர்களும்
எனைப்பற்றி டாமலருள்வாய்" (தெய்வமணிமாலை)

இவ்வெழுபகையும் நீங்கினால் - இவ்வெழுவகைக் குற்றமும் நீங்கினால், "ஈயென்று ஒருவரிடம் நின்று கேளாத இயல்புவரும்; ஒருவர் ஈதுஇடு என்றபோது அவர்க்கு இலை யென்று சொல்லாமல் இடுகின்ற திறம்வரும்; அயலார் நிதியொன்றும் நயவாத

மனம்வரும்; மெய்ந்நிலை யென்றும் நெகிழாத திடம்வரும். பிறர்தமைச் சீயென்று பேயென்று நாய் என்று தீங்கு சொல்லாத தெளிவுவரும்; திறம் ஒன்று வாய்மைவரும்; தூய்மை வரும்; இவற்றால் இறைவன் திருவடிக்கு ஆளாகலாம்." அக்குற்றங்கள் நீங்க இறைவழிபாடு இன்றியமையாதது.

இறைவனைத் தனித்தும் வழிபடலாம்; பலரோடு சேர்ந்தும் வழிபடலாம். இக்காலத்தில் பொதுவாகவே வழிபாடு குறைந்திருக்கின்றது. அதற்கான சூழ்நிலைகள் மலிந்துள்ளன. ஆதலின் மக்கள் தனித்தனி வழிபடுதலைக் கைவிட்டு வருகின்றனர். இந்நிலை மாறவேண்டும். அதற்கு மக்களை ஒன்றுகூட்டவேண்டும். கூட்டமாக வழிபாடு செய்யும்படிச் செய்தல்வேண்டும். அப்படிக் கூட்டமாக வழிபாடாற்றிவந்தால் ஒவ்வொருவருக்கும் வழிபாட்டுணர்ச்சி முதிரும். அன்பில்லாதவனும் மற்றவனைக்கண்டு போலியன்பு கொண்டு நாளடைவில் உண்மையன்பினனாக மாறுவான். ஆதலின் கூட்டுவழிபாடு தேவை. திருவிழாக்களும், சிறப்புப் பூசனைகளும் கூட்டுவழிபாட்டை மக்களுக்கு உண்டாக்குகின்றன. தினமும் கோயிலுக்குச் செல்ல இயலாத மக்களுக்குத்தான் அனைவரும் ஒன்று சேரும் வண்ணம் கார்த்திகை வழிபாடு, சோமவார வழிபாடு முதலிய சிறப்புப் பூசனைகளும் திருவிழாக்களும் ஏற்பட்டன என்னலாம். உண்மையன்புடைய மக்களும் பலர் கூடி ஆண்டவனை வழிபடுவது சிறந்தது.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே.

என்ற மாணிக்கவாசகர் வாக்கில் அன்பர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி வழிபட்டமை காணலாம். திருஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் அடியார்சூழக் கூட்டமாகக் கூடிச்சென்று ஆண்டவனைத் தலங்கள்தோறும் வழிபட்டனர். சுந்தரரும் அப்படியே வழிபட்டனர். கூட்டமாக வழிபடுவது நம் முன்னோர் கொண்ட வழக்கம் என்னலாம். கூட்டு வழிபாட்டில் இன்னொரு நன்மையும் உண்டு. உலகில் ஒருவனைப் பார்த்து

நலமா என்ருல் அவன், ‘ உன் புண்ணியத்தில் நலந்தான் ’ என் கின்ருன். ஓர் ஆபத்தில் சிக்க இருந்த ஒருவன் தப்பி வந்தால் அவனைப் பிறர் கேட்கும்போது யார் செய்த புண்ணியமோ தப்பி வந்தேன் என்கின்ருன். இவ்வார்த்தைகள் எதை உணர்த்துகின்றன? அவ்விருவரும் தாம் புண்ணியம் செய்ய வில்லையென்றும் நலமாக இருப்பதற்கும் தப்பி வந்ததற்கும் பிறர் புண்ணியந்தான் காரணமாகும் என்றும் எண்ணுகிருர் கள். அதனுல் பிறர் புண்ணியம் ஒருவர்க்குப் பயன்படுதலும் உண்டு. இதே நிலையில் கூட்டுவழிபாட்டில் சிறந்த அன்பர்க் குக் கிடைக்கும் திருவருள் அன்பிலார்க்கும் கிடைக்கும், “ நல லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை” என்பதுபோல்.

கூட்டு வழிபாட்டின் முதிர்வால் தனி வழிபாட்டுணர்ச்சி மேலெழும். சரியை கிரியை யோகங்கள் முறையே கைவரப் பெறும். அவற்றின் முதிர்வில் ஞானம் உண்டாம். ஞானம் உடையவர் ஞானியாவார். ஞானிகள் எத்தகையினர்? உண்மை யுணர்வினர். எப்பொருளையும் கடவுளாகக் காண்பவர். சுக துக்கமற்றவர், நன்ருங்கால் நல்லதாக் காணுதவர்; அன்ருங்கால் அல்லற்படாதவர். இருவினை ஒப்புடையவர்; எனவே மலமற்ற வர். சுண்ணும்பு நீற்றறையிலிருப்பினும் மூசுவண்டறைப் பொய்கையிலிருப்பதாகக் கொள்பவர். சீவன் முத்திநிலையில் இவர்கள்,

செங்கமலத் தாளிணைகள் சேரல் ஒட்டாத்
திரிமலங்கள் அறுத்தீசன் நேசரொடும் செறிந்திட்டு
அங்கவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி ஆடிப்பாடி
எங்குமியாம் ஒருவர்க்கும் எளியோ மல்லோம்
யாவர்க்கும் மேலானேம் என்றிறுமாப் பெய்தித்
திங்கள்முடி யாரடியார் அடியோம் என்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே.

என்ற பாடலுக்கேற்ப விளங்குபவர். இவர்கள் நிலையை நாமும் அடைய ஒவ்வொருவரும் உண்மையுணர முயலுவோ மாக.

---



வெள்ளி மகரவட்டம்



கல் இழைத்த மகிரி & மாங்காய் மாலைகள்

# வீரசைவம்


**வித்துவான், குமாரஸ்வாமி ஆச்சாரி, M. A.**

மயிலம் & பொம்மபுர ஆதீனப்புலவர்

விரிவுரையாளர், சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.


சமையம் சமைப்பது, மக்களைப் பக்குவப்படுத்துவதாம் இதற்கு மெய்ஞ்ஞானம் துணையாம். மெய்ஞ்ஞானமாவது விஞ்ஞானத்தால் தோன்றும் அறிவினை ஆய்ந்து தெளிதலாம்; உண்மைப்பொருளை உணர்த்து முகத்தால் துன்ப விடுதலைக்கு வழிகோலுவதாகும். விஞ்ஞானம் ஒற்றுமையையும் இன்பத்தையும் மெய்ஞ்ஞானத்தாலேயே அடைகிறது. எனவே ஒற்றுமையையும் இன்பத்தையும் நிலைநிறுத்துகிற மெய்ஞ்ஞானமே, மக்கள் நலம்பெற உதவும் மெய்ஞ்ஞானமே சமையமாம். பொருள்களின் பல்வகை வேறுபாடுகளையும் அவைகளுக்குள் உள்ள உறவையும் உணர்ந்தாலன்றி—(விஞ்ஞான உணர்ச்சி எழுந்தாலன்றி) மெய்ஞ்ஞானம் தோன்றாது. ஆதலின், அவ்வுணர்ச்சியில்லாத சமையம் பயனளிக்காது. விஞ்ஞானத்தின் அடிப்படை மக்களது ஒழுக்கத்தை வளர்த்தலேயாம் என்பதை மறந்து விஞ்ஞானமும் சமையமும் ஒன்றோடொன்று ஒவ்வாதன எனக் கருதலாகாது. பல்வகைச் சமையங்களும் இக்கொள்கையொடு . எழுந்தனவெனினும் சைவ சமயமே சாலச் சிறந்ததாம்.

சாதி மத ஆசிரமக் கொள்கைகளாலே மக்கள் பலவாறாகப் பிரிக்கப்பட்டு, பொருளாதார நிலையில்—உயர்வு தாழ்வு மிக, அல்லலுற்று வாழ்ந்த காலத்தில், அல்லலின்றி அமைதியான வாழ்க்கையை நிலைநாட்ட எழுந்தது வீரசைவ சமையம். இதற்கு உரிய உயரியதோர் நெறி "ஒன்றேகுலனும் ஒருவனே தேவனும்" என்பதுதான். சிவபரம்பொருளே வணங்குதற்குரிய கடவுள்; இந்நெறியில் நிற்பவர், எப்பொழுதும் சிவசிந்தையுடையவராக இருத்தல்வேண்டும்; பிற தெய்வங்களை வணங்கலாகாது. ஆசாரியரால் அளிக்கப்பெற்ற இஷ்டலிங்கத்தைத் தம்முடலில் தரித்தல்வேண்டும். அதனைப் போற்றுதல் வேண்டும்; இச் சிவபக்தி யில்லாதார் மேல் குலத்துப் பிறந்திருந்தாலும் ஈசற்கினியவராகார். சிவபக்திக்கு வேதியன் புலையன் எனும் வேறுபாடில்லை. சிவபக்தர் பக்தியில்லாக் கொடியரொடு கூடுதலாகாது: பக்தர் அல்லாதார் வீட்டில் உணவு

கொள்ளலாகாது; எவ்வகைப் பொருளையும் பெறலாகாது; தம் நெறியில் நிற்கும் குலத்துதித்த கன்னியரையே மணங்கொள்ள வேண்டும். அத்தகையவர்க்கே தமது கன்னியரைத் தருதல் வேண்டும்; சிவ வேடத்தோர்க்கு இடர்வந்துறின் அதனைத் தம்முயிர் விடுத்தேனும் போக்குதல் வேண்டும்; தமது சமைய சம்பந்தமான நூல்களையே கற்கவேண்டும்; புன்புலவர் நூல்களைக் கற்கலாகாது. ஆசார நிந்தையுள்ளவிடத்தில் பக்தன் செல்லலாகாது. கடவுளை நிந்திப்போர்களைத் தண்டனைபுரிந்து கொல்லவேண்டும், அரிதெனில் சபிக்கவேண்டும்; நிந்திப்போர் வலியரன்றேல் செவிபொத்திச் செல்லல்வேண்டும். கொல்லாமை, வாய்மை கள்ளாமை, வெருளாமை, பிரமசரியம், தயை, தானம், ஜபம், தியானம் முதலியவை சதாசாரமாம். (சித்தாந்த சிகாமணி)

இவற்றோடு மகளிர்க்குச் சம உரிமை தரல் வேண்டும் என்று வற்புறுத்தினர் பசவர். காதல் மணத்துக்கும் விதவா விவாகத்துக்கும் அவர் ஆதரவளித்தார்; இளம் பருவத்துச் செய்யும் மணத்தை வெறுத்தார். இக்கொள்கைகளை உற்று நோக்கின், ஒவ்வொருவரும் சுதந்தரராக வாழ வழி கோலுகிறது இச்சமயம் என்பது புலப்படும்.

"பிறர்மனை பிறர்பொருள் பெறலவாச்சினம்
அறுபகை முதல் நவையனைத்தும் நீங்கியே
பொறையொடு பரனது புகழ்விரும்பிநன்
னெறிதரு சிவாகம நேயமுள்ளனாய்" வாழ்தல்

வேண்டும் என்பதனால் ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியதைத் தாமே தேடிக்கொள்ளல்வேண்டும் என்பது பெறப்படும். எனவே ஒவ்வொருவரும் யாதேனும் ஒரு தொழிலைச் செய்தல் வேண்டும். நாட்டில் பிச்சை எடுக்கும் தொழில் இல்லாது போவதற்கு இதுவே வழி. மகாத்மா காந்தியடிகளைப்போலப் பசவரும் தம் கையால் நூற்று நெய்த ஆடையையே அணிதல் வேண்டும் என வற்புறுத்தினர். தொழிலுக்கு மதிப்பு தந்தார். அதனால் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களும் உயர்வதற்கு வழி உண்டாயிற்று. லிங்காயதத்தின் அடிப்படை இதுவே என்கின்றார் பசவர். ஒரு தெய்வக்கொள்கையும் கொல்லாமையும் மேற்கொள்வதால் யாகாதி வைதீக கருமங்கள் எல்லாம் வேண்டாம் என மறுக்கப்பட்டன. மகளிரும் தாழ்ந்த குலத்தாரும் வேதங்களைக் கற்கலாகாது என்ற கொள்கை விலக, எல்லோரும் சிறந்த நூல்களைக் கற்கவேண்டும் என்ற கொள்கை எழுந்து வளர்ந்தது. இராமாயணம், பாரதம் போன்றவை

களைப் படித்தலாகாது, தம் நெறி நூல்களையே படிக்கவேண்டும் என்ற விதியும் பசவரால் எழுந்தது. "இச்சமைய வழிபாடு கோவிலுக்குச் சென்று வழிபடுவதன்று, நாட்டின் (மக்களிடையே) சமூக ஒழுக்கப் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. இதன் கொள்கைப்படி வரலாறென்பது அரசர்களது வாழ்க்கைச் செய்தி கூறுவதன்று, மக்களது நிலையினைக் கூறுவதாம்" என்பர் சித்தராமையர். ஒரு சமூகம் அல்லது நாடு ஒற்றுமையும் இன்பமும் அடைந்து முன்னேற வேண்டுமானால் கல்வியும் தொழிலும் ஒவ்வொருவருக்கும் உரியதாகவேண்டும் என்னும் பசவரது அரசியற் கொள்கை போற்றுதற்குரியது.

இச்சமையம் சிவசக்தியின் இயல்பினை முழுதுணர்ந்துணர்த்துவதனால் பௌத்த சமண சமையங்களினும் மேலானது. கிரிஸ்தவம் இரக்கம் வேண்டும் என்கிறது. இச்சமையம் நன்மை செய்வோரை ஆதரித்துத் தீமை செய்வோரைத் தண்டிக்கவேண்டும் என்கிறது. "கண்டனுயின் முக்கட் கடவுளை நிந்திப்போனைத் தண்டனை புரிந்துகொல்க அரிதெனிற் சபிக்க" என்கிறது இச்சமையம். தீயவரிடத்துக் கொல்லாமையுணர்ச்சி பயன்படாது என்பதாம். 'வஞ்சக நெறியினால் பொருளீட்டுபவர் பெருங் கொள்ளைக்காரர்கள். அவர்களைச் சமூகத்தலைவன் (அரசன்) அழித்தல் வேண்டும்' என்கிறார் பசவர். "விள்ளரு நற்சிவ வேடத்தோர் பொருள் கொள்ளை கொள்கிற்பினும் குறைகள் கூறினும், பிள்ளையை யறுப்பினும் பிழைகள் செய்யினும், எள்ளுதல் இலன் எனில் ஈசற் கன்பனும்". "மிக்குறு பாவ வல்வினையனுயினும் புக்கர பத்தியாற் புனிதனுகுவான், தக்கதன் தந்தையைக்கொன்ற தண்டிதான், சிக்குறு பத்தியாற் சிவமதாயினான்". இலிங்கம் நெருப்பு, அது தன்னை யணிந்தாரது தீமைகளை எல்லாம் எரித்துவிடும் என்பர். "எள்ளுதல் இலனெனின் ஈசற் கன்பனும்" என்பதை இங்கு உளங்கொளல் வேண்டும்.

உலகெலாம் சிவமொன்ருக உணர்ந்தவற் கெனதென்றெண்ண இலகுமோர் பொருளுமுண்டோ? இலையென விளம்பும் நூல்கள். இதனால் எல்லோரும் தமக்கென வாழா நோன்ருள் பிறர்க்கென வாழும் பெற்றியராதல் வேண்டும் என்பதும் நாட்டிலுள்ள எல்லாப் பொருள்களும் எல்லோருக்கும் உரியனவாம் என்பதும் பெறப்படும். "தலைமைகொள் குருசிவ சரங்கட்காகவே, உலையிடு மரிசியன் ருேங்கல் மத்தெறி யலையமுதாம், தமக்காக ஆக்குறின் கொலைசெயு நஞ்சினும் கொடியதாகுமால்" என்பது மேற்கருத்தையே வலியுறுத்துகின்றது.

மகளிரது முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். ஆதலின் அவர்கள் கல்வியறிவுள்ளவராகத் திகழவேண்டும் என்ற பசவர், ஆடவர்போலச் சுதந்தரராக வாழவும் வழி வகுத்தார். ஆரியரது கொள்கையின்படி மகளிர் மணஞ் செய்துகொண்டு தான் வாழவேண்டும் என்ற கொள்கையை மறுத்தார். 'மகளிர் தமது விருப்பப்படியே மணங்கொள்ளுதல் வேண்டும். விருப்பமின்றேல் மணமில்லாமலே வாழலாம். தொண்டுபுரிவதொன்றே குறிக்கோளாதல் வேண்டும்' என்றார். "மிகுநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று" என்ற வள்ளுவரைவிடப் பசவர் முன்னணியில் நிற்கின்றார்.

இங்ஙனம் ஆய்ந்துநோக்கின் இச்சமையம் நாட்டின் நலத்துக்கு உதவுமாற்றை நாம் நன்குணரலாம்.

"கண்ணிலன் முடவன்போலக் கருதரு ஞானகன்மம்
எண்ணுறு மிரண்டுமொன்றை யொன்றவா யிருத்தலாலே
நண்ணுறு பலன்விருப்பின் நன்றுறத் துறந்தானேனும்
பண்ணுக வவையிரண்டு மெனமறை பகருமன்றே"

"ஆசாரத்தை, மேவுற்ற ஞானந்தன்னால் விளங்குறு மீசன் என்றால்
சாவுற்று மெய்வீழ்காறும் சார்வதாசார மன்றே"

"ஞானமற் றொழிந்த கன்மம் நவைதரு பிறப்பிற்கேது"

(சித்தாந்த சிகாமணி)

இவற்றால் மேற்சொன்ன கொள்கைகள் யாவும் வற்புறுத்தப் படுதல் காண்க. தாயுமானாரும் அருட்பிரகாச வள்ளலாரும் இத்தகைய் கொள்கையினையே வற்புறுத்தினர். கபீர்தாஸ் இராமதாஸ் போன்றவர்கள் கழறியதும் இதுவே. மேற்கூறிய கொள்கைகள் யாவும் பெரிய புராணத்துள் தெள்ளிதின் விளங்கக் காணலாம். வள்ளுவர் வகுத்த வழியும் இதுவே என்பது தெள்ளிதிற் புலனும்.

மாரிபெய்க மநுநெறி யோங்குக
பாரி லொண்சிவ பத்தர்கள் மல்குக
சீரின் மல்கும் சிவன்புகழ் வெல்குக
வீர சைவம் விளங்குக எங்குமே.

### கல்வெட்டில் கண்ட

# உழவர்களின் சிறப்பு

**கோவை கிழார்.**

தென் ஆர்க்காடு வட்டத்தில் திருக்கோயிலூர் என்ற திவ்ய தேசம் பெண்ணை நதியின் வடபுறத்தில் இருக்கின்றது. அவ்விடத்துக் கீழையூரில் வீரட்டானேசுவரர் என்ற புகழ்பெற்ற சிவாலயம் இருக்கின்றது. மேலையூரில் திருவிக்கிரமப் பெருமான் என்ற திருமால் கோயில் இருக்கின்றது. இக்கோயில் பண்டைப்பெருமை வாய்ந்த கோயில். இங்கேதான் பூதன், பேய், பொய்கை என்ற முதல் ஆழ்வார்கள் சந்தித்து எம்பெருமானுடைய தரிசனத்தைப் பெற்றார்கள். இப்பெருமை வாய்ந்த ஊரின் பெயர் திருக்கோவலூர் ஆகும். இது மெய்ப்பொருள் நாயனார் என்ற மன்னரின் தலைநகராக இருந்தது. மேலும் இது மலாடு என்ற மலை நாட்டிற்கு தலைநகராக இருந்தது. இப் பெருமாள் கோயிலிலே பல கல்வெட்டுகள் இருக்கின்றன. அக் கல்வெட்டுக்களின்படி இந்த நாட்டினுடைய பெயர் மலாடான ஜனநாத வளநாடு என்றும், உள்நாட்டின் பெயர் குறுக்கைக்கூற்றம் என்றும், ஊரின்பெயர் திருக்கோவலூர் ஆன மதுராந்தக சதுர்வேதிமங்கலம் என்றும், பெருமாளின் பெயர் திருவிடைகழி ஆழ்வார் என்றும் கூறப்பட்டுள்ளன. இப் பெயர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் சோழர்கள் காலத்தில் வழங்கிவந்த பெயர்களென்று அறியவேண்டும். மற்றொரு கல்வெட்டில் மிலாடாகிய ஜனநாத வளநாட்டுத் திருக்கோவலூர் எழுபத்தெண்பது நாட்டு பதினெண்பூமிச்சித்திரமேழி விண்ணகரமான திருவிடைகழி என்று கூறப்பட்டுள்ளது. இப் பண்டைப் பெயர்கள் எவ்வளவு அழகாக ஏற்பட்டிருக்கின்றன!

இந்தப் பெருமாள் கோயிலில் இரண்டாம் பிரகாரம் வடபுறச் சுவரில் ஒரு அருமையான கல்வெட்டு வெட்டப்பெற்றிருக்கின்றது. அதில் நிலமகளின் மக்களாகிய உழவர்கள் பெருமையை எடுத்துக் கூறும் ஒரு அழகிய செய்யுட்பகுதி ஒன்று இருக்கின்றது. அது சிறந்த கருத்துக்களைக்கொண்டிருப்பதினால் அதனை உள்ளவாறு அடிபிரித்து எழுதுவோம்.

" பூமிதேவிக்கு மக்களாகி நிகழ்
செந்தமிழ் வடகலை தெரிந்துணர்ந்து
நீதி கேட்டு நிபுணராகி
நறுமலர் வாடாத் திருமகள் புதல்வர்,
எத்திசைக்கும் விளக்காகி
இன்சொல்லா லினிதளித்து
வன்சொல்லால் மறங்கடிந்து
சதுசாகர பரிமண்டலத்து
சந்திராதித்த வரையினி தோங்கி
வாதராசன் காற்றசைப்ப
வருணராசன் நீர்தெளிப்ப
தேவராசன் திசைவிளக்க
எத்திசை மகளிரு மினிது வீற்றிருப்பத்
தெங்கும் பலாவும் தே மாஞ்சோலையும்
வாழையுங் கமுகும் வளர்கொடி முல்லையும்
பூவையுங் கிள்ளையும் பொலிவொடுங் கெழுமி
வாட்டமின்றிக் கூட்டம் பெருகி.
அறம் வளரக் கலி மெலியப்
புகழ் பெருகப் பகை பணியத்
திசையனைத்தும் செவிடுபடாமல்
செங்கோல் முன்னாகவும்
சித்திரமேழியே தெய்வமாகவும்
செம்பொற் பசும்பையே வலிமையாகவும்
கடிமையினெடுங் கருணையெய்திச்
சமயதர்மமினிது நடாத்தி
நிகழா நின்ற
உத்தம நீதியுயர் பெருங்கீர்த்தி
முத்தமிழ் மாலை முழுவது முணர்ந்த
சித்திர மேழிப் பெரிய நாட்டோர் "

இந்தச் செய்யுட் பகுதி ஒரு அழகிய அகவற்பாவால் அமைக்கப் பெற்றிருக்கின்றது. இந்தத் தமிழ்ப் பகுதிக்கு முன்னர் ஒரு சிறிய வடமொழிப் பகுதியும் உண்டு. இறுதியில் ஒரு உரை நடைப்பகுதியிருக்கின்றது. அவைகளைப்பற்றி பின்னர் எழுது வோம். மேலும், உரைநடைப்பகுதி முடிவு பெறுமல் நின்று கிடக்கின்றது.

செய்யுட் பகுதியில், அந்த நாட்டின் குடிகளாகிய உழவர் பெருமக்களின் பெருமை நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இச்செய்யுளின் ஆக்கியோன் பெயர் எழுதப்படவில்லை. அப்புலவர் பெருமகனுர் மிகச் சிறந்த புலமை வாய்ந்தவராக இருக்க வேண்டும். உழவர்களைப் பூமி தேவிக்கு அதாவது நிலத்திற்கு மக்களாக உரைத்திருக்கும் கருத்து மிகவும் அழகானது. அவர்கள் செந்தமிழ், வடமொழி இரண்டும் உணர்ந்தவர்களாகி நீதி தெரிந்த நிபுணர்களாகிச் செல்வத்தில் திகழ்ந்த மக்களாக இருந்தனர் என்று புகழப்பட்டுள்ளார்கள். இக்காலத்தில் அப்படிப்பட்ட மக்களை நாம் பார்க்கின்ருேமா? நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எழுத்து வாசனை இல்லாதவர்களாகி இருக்கும் இந்நாளில் வடமொழி, தென்மொழி இரண்டையும் கற்று நீதியும் அறிந்தவர்களாகி உழவர் சமுதாயம் இருந்தது என்ருல் அது ஒரு கனவா! நனவா!! என்றல்லவோ எண்ண வேண்டும்!!!

இனி, அந்தக் காலத்து உழவர் சமுதாயம் எவ்வாறு திகழ்ந்திருந்தது என்று செய்யுள் இயற்றிய புலவர் மேலும் கூறுகின்ருர். உழவர்கள் எல்லாத் திசைகளிலும் ஒளிவீசும் அறிவுச்சுடர்போல விளங்கி மக்களிடம் இனியசொல்கூறி இன்பத்தை அவர்களுக்கு அளித்து, கொடிய தன்மையைக் கடுஞ்சொல்லால் போக்கடித்து, உயிர்களுக்குச் சிறந்த சேவை புரிவார்களாம். அவ்வாறு வாழ்க்கையில் சூரிய, சந்திரர் இருக்கும்வரையில் இனிமை ஓங்கத் தென்றல் காற்று வீச, நல்ல மழை பொழிய, மேகங்கள் வானில் குவியப், பெண்பாலர்கள் இனிமையுடன் வாழ, நாடெங்கும் செழிப்புமிகுமாம். அவ்வாறு நிலம் செழித்திருக்கும்போது தென்னை, பலா, மா, வாழை, கமுகு, கொடி முல்லை எங்கும் ஓங்கி வளரப், புள்ளும் கிளியும் அவைகளில் சிறப்போடு அமர்ந்து வாட்டம் சிறிதுமின்றிக் கூட்டம் கூட்டமாய்ப் பெருகுமாம். அந்நாளில் அறமானது வளர, இன்பமானது பொங்கப், புகழானது விரியப், பகைமை தொலைய எல்லாத்திக்குகளிலும் வீண் ஒலியின்றி அரசியல் நலம் புரக்கவும், உழவர்கள் சித்திரமேழிக் கோயிலையே தமது கடவுளாகப் போற்றியும், அவனிடத்து அன்பே தங்கள் வலிமையாகக்கொண்டு, நமது சமயம் கூறும் அறங்களை நன்ருக நடாத்துவர். இவ்வாறு அறங்களை நடாத்தும்போது உயர்ந்த நீதியும் புகழும் கொண்டு, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் உள்ள நூல்கள் முழுதும் உணர்ந்திருப்பர். அப்படிப்பட்ட பண்புகளைக் கொண்டவர்கள் சித்திரமேழிப் பெரும் நாட்டவர்கள் ஆவர்.

இந்த அரிய கருத்துக்களைக் கொண்டிருப்பதே தமிழ்ச் செய்யுட்பகுதியாகும். இதனால் நாட்டின் பெருமையை அந் நாட்டில் வசிக்கும் உழவர் பெருமக்களே எடுத்துக்காட்டினர். ஆகவே அக்காலத்து உழவர்களுடைய உயர்ந்த பண்பாட்டை எவரே போற்றாமல் இருப்பர்! இச்செய்யுளை இயற்றிய புலவர் ஒரு அற்புதமான கனவு உலகத்தைத்தான் உண்டாக்கியுள்ளார். அவ்வுலக சமுதாயத்தை நாம் என்றைக்குக் காணப்போகின்றோம்?

இப்படிப்பட்ட பெருமை பொருந்திய பண்பாட்டைக் கொண்ட உழவர்கள் வாழும் திருக்கோவலூர் சித்திரமேழி நாட்டவர்கள் தங்கள் பெருமானுக்கு அறங்கள் செய்யாமல் இருப்பார்களா? தங்கள் பெரிய கோயிலுக்கு ஏற்ப அதற்குச் சிறந்த வழிபாட்டைச் செய்வார்கள் அல்லவா? ஒருநாள் உழவர்களெல்லாம் திருக்கோயிலிலே சபை கூடி ஆண்டுதோறும் ஏர் ஒன்றுக்குப் பதக்கு நெல்லும் ஆள் ஒன்றுக்கு குறுணி நெல்லும் ஆக அளிப்பதாக ஒப்புக்கொண்டார்கள். அந்த ஒப்பந்தம் எந்தக்காலமும் ஓங்கி வளர்ந்து நடைபெறவேண்டுமென்று எண்ணி அந்தத் திருக்கோயிலில் கல் சுவரில் பதித்து வைத்தார்கள்.

இந்தக் கல்வெட்டைப் பதித்ததின் நோக்கம் என்ன என்று உணரவேண்டாமா? பின்காலத்து மக்கள் இதனைப் படித்து அவர்களைப்போல நடக்கவேண்டும் என்ற நோக்கம் அதில் காட்சியளிக்கிறதல்லவா? நமது நாட்டு உழ்வர்கள் முன்னைய உழவர்கள் போன்று கல்வியிலும், ஒழுக்கத்திலும், புகழிலும் உயர்வார்களாக!

---



வெள்ளி மூலஸ்தானப் பிரபை

அரசியல் தோன்றிற்று. விஜயநகர சாம்ராஜ்யம் ஒரு இளஞ் சூரியன்போல உதயமாகி வடநாட்டு ஆக்கிரமிப்பைத் தடுத்தது. பிறகு மூன்று நூற்றுண்டுகள்வரை விஜயநகரம் தென்னுட்டைப் பாதுகாத்துச் சமய நிலையங்களைப் பழுது பார்த்து பெருக்கிற்று. ஆனுல் 16-ம் நூற்றுண்டு இடையில் விஜய நகரம் இசுலாமியரால் தோற்கடிக்கப்பட்டுத் தாழ்ச்சியடைந்தது. நாட்டில் எங்கும் பாதுகாப்பின்மை, கொள்ளை, கொலை, சமய அழிவு இவைகள் தோன்றின. மக்கள் சமயங்களைப் புறக்கணித்துவிட்டுப் பிறமதமும் புகுந்தார்கள். சமய நிலையங்கள் பணியாற்றுமல் ஒடுங்கிப்போயின. இசுலாமிய அரசியலார்கள் பழைய சமயங்களை வெறுத்தார்கள். அவர்கள் நிலையங்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்தார்கள். அவ்வாறு சமய நிலையங்கள் தம்பித்துப்போயின. போதாக்குறைக்கு வெளிநாடுகளிலிருந்து வெள்ளையர்கள் கப்பல், கப்பலாக வந்து வர்த்தகம் செய்யும் சாக்கோடு நாடுபிடிக்கத் தொடங்கினுர்கள். மற்றும் அவர்களோடுவந்த பாதிரிமார்கள் விவிலிய சமயத்தைப் பரப்பத் தொடங்கினுர்கள். இந்த நிலையில் நாட்டில் எவ்வாறு அமைதி நிலைக்கும்? அமைதி இல்லாத காலத்தில் சமயத்தைப்பற்றி நினைப்பார் இருப்பார்களா? சமய நிலையங்களின் கதி என்னவாகும்? இந்தப்படி நிலையற்ற நிலையில் நாடு இருக்க சமயங்கள் அழிந்துபோகும் என்றல்லவோ நாம் எண்ணுவோம்? நாட்டில் சமயங்களைப் பரிபாலிக்க அரசர்கள் இல்லை. ஈடுபட மக்களின் பொறுமை இல்லை. அந்தக் கேடு கெட்ட காலத்தில் ஒரு சிறந்த நிலையம் நாட்டில் தோன்றி நாட்டுள் சமயங்களைப் பாதுகாத்தது. அதுதான் **மடாலயம்.**

நமது நாட்டுச் சமயங்களில் எக்காலமும் ஈடுபட்டு அவைகளில் உறுதிகொண்டு சேவை செய்பவர்கள் துறவிகளே யாவர். சைவத் துறவிகளும் வைணவத் துறவிகளும் காட்டில் இருந்துகொண்டு தம் ஆன்மசாந்தியின்பொருட்டு உலகத்தைத் துறக்கவில்லை. உலகின் மேன்மையைக் கருதி சமயத்தை நிலைநிறுத்தவேண்டி உலகத்தாருக்கு அருகிலேயே இருந்துகொண்டு சேவை செய்தனர். ஊர்களுக்கு வெளியே தூய்மையான இடங்களில் மடங்களைக் கட்டிக்கொண்டு அங்கே தவம் புரிந்துகொண்டு சமயங்களைப் போற்றிவந்தனர். இப்படிப்பட்ட நிலையங்கள் தான் மடாலயங்கள். தென்னுட்டில் சைவ வைணவ வீரசைவ மடாலயங்கள் இந்தக் கலவரக் காலங்களில் தோன்றின. அங்கேதான் சைவம், வைணவம், வீரசைவம் வளர்த்தப்பட்டன. அச்சமய நிலையங்களையும் மடாலயத் துறவிகள் பரிபாலித்தனர். இவர்கள் செய்யும் மேன்மைபெற்ற சேவைகளைக் கண்டு நாட்டுச் செல்வர்களும், குறுநில மன்னர்களும்

தானதர்மங்கள் செய்தனர். இந்த வகையில் மடாலயங்களின் செல்வங்களும் பெருகின. ஒவ்வொரு மடத்திலும் முதல் மடாலய மூர்த்தியின் பெயரால் அம்மடாலயம் விளங்கிற்று. திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலியவைகள் சைவத்திற்கும், அகோபிலம், வானமாமலை, திருக்குறுங்குடி என்பவைகள் வைணவத்திற்கும், மயிலம், துறையூர், பேரூர் முதலியவைகள் வீரசைவத்திற்கும் உழைத்துவந்தன. அவைகளில், வீரசைவத்திற்காக உழைத்துவந்த மடங்களில் மயிலம் மடத்துத் தலை மடமாகிய **பொம்மையப்பாளைய மடாலயம்** மிகச் சிறந்தது. அதற்கு மூலபுருடராக விளங்கியவர் **சிவஞான பாலய சுவாமிகள்**. அந்த குரு பரம்பரையில் இதுவரையில் 17 மூர்த்திகள் மடாலயத்தை அலங்கரித்து வந்திருக்கிறார்கள். அவர்கள் குரு பரம்பரை மயில மட வரலாற்றில் பரக்கக் காணலாம். அதில் காணுத சில செய்திகள் இங்கே எழுதப் படும். அதாவது மடாலயத்திற்குப் பிரஞ்சு அரசியலார் எந்த முறையில் ஆதரவு அளித்தார்கள் என்ற செய்தியை விவரிப் போம்.

பாரத நாட்டிற்கு வந்த வெள்ளைக்காரர்களிலே பிரஞ்சுக் காரர்களும் ஒரு வகுப்பார்கள். இவர்கள் ஐரோப்பாவிலே மேற்பகுதியிலே இங்கிலீஷ்காரர்களுக்கு அடுத்திருப்பவர்கள். இங்கிலீஷ்காரர்கள் இந்தியாவிற்கு வந்ததை முன்னிட்டுப் பிரஞ்சுக்காரர்களும் பேராசை பிடித்து இங்கே வந்தார்கள். இரண்டு வகுப்பார்களில் பேராசை மிகுந்தால் ஒருவருக்கொரு வர் அழுக்காறு கொண்டு போட்டியிடுவார்கள் அல்லவா? இங்கிலீஷ்காரர்கள் சென்னையிலும், பிரஞ்சுக்காரர்கள் புதுச் சேரியிலும் இடம் அமர்த்திக்கொண்டு அப்போது பலவீனர் களாய் இருந்த முகமதிய நவாப்களில் பிளவு ஏற்படுத்திக் கொண்டு அவர்களிடம் நாடு கவரும் செயலில் இருந்தார்கள். பிரஞ்சுக்காரர்கள் முதலில் பலசாலிகளாகிப் பெரும் பகுதியைக் கைக்கொண்டார்கள். ஆனல் ஆங்கிலேயர்களில் சிறந்த போர் வீரர்கள் தோன்றி பிரஞ்சுக்காரர்களின் ஆசையில் மண் போட் டார்கள். இந்தப் பேராசைப்போரில் 17, 18-ம் நூற்றாண்டு களில் **டூப்ளே** என்ற அதிகாரி புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தான். அவன் வெகு பேராசைக்காரன். அவனுடைய மனைவி அவனை விடப் பேராசைக்காரி. இவர்கள் இருந்து நாட்டை அலங் கோலப்படுத்தி வந்தார்கள். டூப்ளே புதுச்சேரி கவர்னராக இருந்த காலம் கி. பி. 1742 முதல் கி. பி. 1754 வரையில் என்க.

மயில மடத்தின் ஆதீபீடம் பொம்மையப்பாளையம் என்பது ஆகும். அது புதுச்சேரிக்கருகில் இருக்கிறது. மடத்து

சுவாமிகள் எல்லாரும் பொம்மையப்பாளையத்திலும், மயிலத்திலும் மாறி மாறி இருந்துவருவார்கள். இரண்டு இடங்களிலும் மடத்துச் சொத்துக்கள் இருக்கின்றன. பொம்மையப்பாளையம் பிரஞ்சு அதிகாரத்தில் இருந்தால் மயிலம் ஆங்கிலர் பக்கம் இருந்த நவாபின் அதிகாரத்தில் இருந்துவந்தது. மயிலமடம், மிக முக்கிய மடமாகவும் கணக்கற்ற குடிகளைச் சீடர்களாகவும் வைத்திருந்தபடியால், இரண்டு அரசியலாரும் மடாதிபதிகளைக் கௌரவத்தோடு நடத்திவந்தார்கள். நவாபும் மடாலயத்து சுவாமிகளை நேசத்துடன் பாராட்டுவான். பிரஞ்சுக் கவர்னரும் அதைப்போலவே மடாதிபதியைக் கௌரவத்துடன் நேசித்துப் பரிசுகளை அனுப்பிவைப்பான். இந்தப் பெருமை அக்காலத்து மடாலயங்களில் எதற்கும் இருக்கவில்லை. மடாதிபதிகளும் தங்கள் மதிப்பை இழந்துகொள்ளாத முறையில் வெகு திறமையோடு நடந்துகொண்டார்கள்.

முதல் பட்டத்து சுவாமிகள் ஞானியாக உலக வாழ்க்கையற்று இருந்தார்கள். இரண்டாம் சுவாமிகள் பச்சைக்கந்தர் மரபில் தோன்றியவர். கல்வியிலும், ஞானத்திலும் சிறந்தவர். ஆகவே அவர்களுக்கு நிரம்ப அறிவாளிகளே மாணுக்கர்களாக இருந்தார்கள். துறைமங்கலம் **சிவப்பிரகாச சுவாமிகள்** அவர்களுடைய மாணுக்கராகி அவர்மீது பிரபந்தங்களை இயற்றினர். அவருடைய மருகரான **சாந்தலிங்க சுவாமிகள்** அங்கு சில காலம் வசித்தபிறகு திருப்பேரூர் சென்றார். அவருடைய மாணுக்கர் குமாரதேவர், அவருடைய மாணுக்கர் சிதம்பர முனிவர் முதலியவர்கள் எல்லாம் பொம்மையப்பாளையத்தின் பெருமைக்கு ஈடுபட்டவர்கள்.

மூன்ருவது பட்டச் சுவாமிகள் *1645–1695*-வரை பட்டத்தில் இருந்தார்கள். அவர்கள் காலத்தில் வைத்தியநாத தேசிகர் முதலியோர் தமிழ் வளர்த்திருக்கிருர்கள். அப்போது பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் வேரூன்றி விட்டது. நான்காவது பட்டம் *1696–1728*-லும், ஐந்தாவது பட்டம் *1729–1733* வரையிலும் பட்டம் வகித்தார்கள். அக்காலத்து பிரஞ்சுக்காரர்கள் புகழ்பெற்று விளங்கினர்கள்.

ஆருவது பட்டம் கறையாம்புத்தூர் சுவாமிகள் *1734* முதல் *1746* வரை ஆண்டார்கள். அவர்கள் காலத்தில் பிரஞ்சுக் கவர்னர் புகழ்பெற்ற டூப்ளே ஆவான். அவன் அடிக்கடி சுவாமிகளைக் கண்டு காணிக்கைகளைக் கொடுத்து ஆசீர்வாதம் பெற்றிருக்கின்ருன். அவனுடைய துபாஷியாக இருந்த

ஆனந்தரங்கம் பிள்ளை தன்னுடைய தினசரியில் அடியிற்கண்டபடி எழுதியிருக்கிறார். (Diary vol. I 264) "1744-ம் வருடம் டிசம்பர்மீ 14உ திங்கட்கிழமை (ராக்ஷச வருடம் மார்கழிமீ 3-ம் தேதி) இன்றுகாலை 6 மணிக்கு முரட்டாண்டிச்சாவடியிலிருந்த கவர்னர் டூப்ளே என்னுடைய சத்திரமாகிய திருவேங்கடபுரத்திற்கு வந்து காலை 8-மணிக்கு காலை யுண்டியருந்தி. பகலுந் தங்கி மாலை 4-மணிக்கு பொம்மையப்பாளைய மடத்திலுள்ள பாலய சுவாமியாரவர்களுக்குப் பேட்டியளிக்கச்சென்றார். கவர்னரும் அவருடைய மனைவியும் சுவாமிகளுக்கு 6 கெஜ நீளமுள்ள விசாலமான துணியும், 2 பன்னீர் புட்டிகளும் கொடுத்து மரியாதையாகப் பணிந்து சலாம் செய்தார்கள். பிறகு சுவாமிகள் அவர்களுக்கு தன் ஆசிர்வாதத்தைக் கொடுத்தருளினார்கள்.

ஏழாவது பட்டம் மாத்தூர் சுவாமிகள் 1749 முதல் 1761 முடிய பட்டம் வகித்தார்கள். அவர்கள் பல தலங்களுக்கு யாத்திரை புரிந்தார்கள். அக்காலத்து நவாபு யாத்திரை காலத்தில் சகல நன்மைகளையும் செய்யும்படி அதிகாரிகளுக்கு ஆணை (தாக்கீது) அனுப்பினான். அது அரபி பாஷையில் உள்ளது. அதன் மொழிப்பெயர்ப்பாவது. (P. 23).—

"1165-ம் பசலி ஜபர்மீ 26-ந் தேதி (கி. பி. 1756) அய்தராபாக்கத்துக்குக் கீழ்பட்ட சர்க்கார் செஞ்சி முதலான தாலுக்காக்களில் இப்போதிருக்கிற அமீல்தாரர்களுக்கும் மேல் வருகிற அமீல்தாரர்களுக்கும் அறியப்படுத்துகிறது என்னவென்றால், ஞான ராஜதானியாகிய பொம்மபாளையம் பெரிய மடம் சிவகஞ்சி மயூராசல நிவாசர் எதீசுரகர்த்தரான ராசகுரு பாலைய சுவாமியார் அவர்கள் தலங்களில் சுவாமி தரிசனத்திற்காகவும் தேசங்களிலிருக்கிற மடங்களின் விசாரணைக்காகவும் சிஷ்ய யாத்திரைக்காகவும் விஜயம் செய்வதற்காக, இதனடியில் கண்டிருக்கிற பிருதுகள் வகையறுக்கள் மாமூலமாய் சுவாமிக்கு பரம்பரையாய் நடந்துவருகிறதென்றும், இதை யாவரும் ஆக்ஷேபிக்கக்கூடாதென்றும் முன்னேயிருந்த நவாபு சூப்பகாற்கான்பகதூர் தாவுத்துக்கான் பாதர் அவர்கள் தாக்கீதுகளும் முன்னமே உண்டாயிருக்குது. இப்பவும் உங்களுக்குத் தெரிவிக்கிறதென்னவென்றால், மேற்படி சுவாமி இப்போது மடம் விட்டு சஞ்சாரம் வருகிறபடியினாலே எங்தெந்த கோவில்களிலும் வந்தாலும் அவாளவாள் இலாக்காக்களில் யாதொரு வித்தியாசமும் வராமல் ஜாக்கிரதையாயிருந்து நடப்பிக்கவும்.

அவர்களுடைய சாமான்களை சவரக்ஷணை செய்துகொள்ள வேண்டியதுக்காக எட்டுத் துப்பாக்கி சேனமும் எட்டுக்கத்தி சேனமும் பாத்திரைக்கு வைத்துக்கொள்ளும்படிக்கு உசூரில் உத்தரவு கொடுத்திருக்கிறது.

மேலும் துஷ்டாளாலேயாவது, கள்ளராலேயாவது தொந்திரவு நேரிடுகிறதாய் சுவாமி மனுஷாள் உங்களுக்கு தெரிவித்தால் அவாள் அவாள் இலாக்காபர்யந்தம் வித்தியாசங்கள் வராமல் பந்தோபஸ்தாயிருந்து நடத்தினதற்கு உடனே உசூருக்கு தெரிவித்துக்கொண்டு வரவும். இதனாலே நம்முடைய யோகத்துக்கும், ஆயிசுக்கும் பிரார்த்தனை செய்துகொண்டு வருவார்கள்." இவ்வாணையை அளித்த நவாபின் பெயர்:— 'ஊம்தாதுல் முல்குசிராஜுட்டவுலா அன்வாரூடீன், கான் பகதூர் மான்சூர் ஜங்க்' என்பது.

இனி பொம்மையப்பாளைய மடத்தைப்பற்றி பிரஞ்சு அரசியலை நடத்தின கவர்னர் **டூப்ளே** காலத்தில் ஏற்பட்டிருந்த தொடர்பினை **ஆனந்த ரங்கப்பிள்ளை** அடியிற்கண்டபடி தன் தினசரிக் குறிப்பில் எழுதியிருக்கின்றார்:—

27—10—46 — 14 அற்பிசி அக்ஷய வியாழன்: "இன்று காலை 5, 6 நாழிகைக்கு துறையூர் பச்சைக் கந்தப்பையர் பொம்மையப்பாளையத்தில் பாலைய்யர் மடத்திற்கு தலைவராகப் பட்டம் கட்டப்பட்டார். இதற்குமுன் அவர் பழனிமலையில் துறவியாக வாழ்ந்துகொண்டிருந்தார். முந்திய பட்டத்திலிருந்த பாலைய்யர், வைகாசி 11-ந் தேதி (21-6-46) இறந்தார். அந்தப் பாலைய்யர் சக்தியற்றவராக இருந்தபடியால் மடத்துத் தம்பிரான்கள் இஷ்டப்படி நடக்கத் தலைப்பட்டனர். ஆகவே மடத்து நிர்வாகம் சீர்குலைந்திருந்தது. இன்று பட்டத்திற்கு வந்திருக்கும் தலைவருடைய நடத்தை, தகுதி, அதிட்டம், வேலைத்திறமை எப்படி இருக்கும் என்று இனிமேல் பார்த்தால் தான் தெரியும்.

பட்டாபிஷேகத்தின்போது நான் சென்று அதனைத் தரிசிக்கவேண்டுமென்று இருந்தேன். ஆனால் வேலைத் தொந்தரவினால் செல்லமுடியவில்லை. ஆனால் ஆறுமுகப் பண்டாரத்தின்மூலம் இரண்டு கஜம் காவி வஸ்திரத்தைக் காணிக்கையாக அனுப்பினேன்." —(வால்யும் III – ப. 41)

இதனால் மடத்தின் நிலைமை முன் இருந்ததும் புது தலைவருக்குப் பட்டம் கட்டினதும் தெரியவருகிறது.

பட்டாபிஷேகத்தில் சடங்குகளை நடத்திவந்தவர் பச்சைக் கந்தையா என்பது அடியிற்கண்டவற்றால் தெரியவருகிறது.

1—11—46, 19 ஐப்பிசி அக்ஷய செவ்வாய்க்கிழமை.

"பாளைய சுவாமியின் பட்டாபிஷேகத்திற்குச் சடங்குகளை நடத்தவந்த துறையூர் பச்சைக் கந்தையர் திரும்பி துறையூர் செல்லும் வழியில் புதுச்சேரி பார்க்கவேண்டுமென்று இச்சைப் பட்டார். அவர் ஊர் புகுவதற்கு உத்தரவுச் சீட்டு வாங்கித் தந்தேன். அவரும் அந்தப்படி ஊருக்கு வந்தார்."

(வா. III. ப. 65)

இனி பிரசாதங்களை கவர்னருக்கு அனுப்பிவிட்டு மடத்துச் சொத்துக்களை விடுவிக்க ஆனந்தரங்கம் பிள்ளை முயற்சி எடுத்துக்கொண்ட செய்தி எழுதப்பட்டிருக்கிறது.

3—11—46, 21 அர்ப்பிசி அக்ஷய வியாழன் பிற்பகல்.

"பொம்மைடப்பாளையம் பாளைய தம்பிரான் பட்டம் கட்டின காலத்தில் சில பண்டாரங்கள்மூலம் பழம், சர்க்கரை, கற்கண்டு இவற்றை பிரசாதமாக அனுப்பியிருந்தார். அந்தப் பண்டாரங்கள் கவர்னரைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் மடத்துச் சொத்துக்களை சுங்கத்திலிருந்து விடுவிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதனைச் சொல்லி கவர்னரிடம் உத்திரவு வாங்கித் தந்தேன். கவர்னரும் சுங்க உத்தியோகத்திற்கு அதைப்பற்றி உத்திரவு அனுப்பும்படி என்னிடம் சொன்னார்."

(வா. III. ப. 72)

பச்சைக் கந்தப்பையரின் திறமை கண்டு ஆனந்தரங்கம் பிள்ளை மரியாதை செய்தது அடியிற்கண்ட குறிப்பால் தெரிகிறது.

5—11—46, 23 அர்ப்பிசி அக்ஷய சனி.

இன்று மாலை தோட்டங்களுக்குச் சென்றேன். பிறகு கம்பாலைய்யர் வீட்டிற்குப்போய் பச்சைக்கந்தைய்யரைக் காணச் சென்றேன். அவர் பாளையசுவாமி பட்டாபிஷேகத்திற்காக வந்தவர். என்னுடன் இரண்டு கஜம் துணியை எடுத்துக் கொண்டுபோய்ப் பச்சைக்கந்தையரைச் சேவித்துவிட்டு அதனை காணிக்கையாகக் கொடுத்தேன். அவர் சௌலம்ய நடத்தை யுடையவர், பெரும் படிப்பாளி, சம்ஸ்கிருதமும், தமிழும்

நன்ருக அறிந்தவர், ஆகவே அவரிடம் விடை பெற்றுக் கொண்டு கவர்னரைப் பார்க்க 6-மணிக்குச் சென்றேன்."

(வால்யூம் III. ப. 81)

பிறகு இரண்டு ஆண்டுகள் கழிந்தன. மடத்துச் செய்திகள் ஊழலாகிவிட்டன என்று கூறி பிரஞ்சுக்காரர்கள் சொத்துக்களை மறியல் செய்துவிட்டார்கள். அதைக்குறித்து பாலேய்யர் ஆனந்த ரங்கப்பிள்ளையைப் பார்க்கவந்த செய்தி இனிக் கூறப்பட்டது.

1748 பிப்ரவரி 28, பிரபவ மாசி 20 புதன்.

"இன்று காஞ்சீபுரத்திலிருந்து வந்த பாலேய்யாவின் மகனுக்கு விருந்தளித்தேன். அவனை இரவில் என்னைப் பார்க்கச் சொல்லியிருந்தேன். அதன்படி அவன் வந்தான். அவனுக்கு 2 கஜம் வெள்ளைத்துணி கொடுத்துப் பிறகு பொம்மையப் பாளையம் மடத்தைப்பற்றி விவரித்தேன். மடத்தினுடைய வேலைகள் ஊழல்களாக இருந்ததால் பறிமுதல் செய்யப் பட்டன; ஆகையால் அவைகள் சரியாக நடத்தினல் சொத்துக்கள் மடத்திற்குத் திருப்பிக் கொடுக்கப்படும் என்று சமாதானம் கூறிவிட்டு அவனை அனுப்பிவிட்டேன்." —(வா. IV. ப. 393)

அடுத்த ஆண்டில் (1749-ல்) பொம்மையப்பாளையத்திற்கு கவர்னர் வந்து புளியங்தோப்பில் முகாம் போட்டதும் ஆனந்த ரங்கப்பிள்ளை அவரை வரவேற்றதும் அங்கே சின்னத்தம்பி முதலி என்ற கல்விமான் பிள்ளையைக்கண்டு பேசினதுமான விவரங்கள் கூறப்பட்டிருக்கின்றன,

1749 நவம்பர் 15 சுக்ல-கார்த்திகை 4-ந் தேதி.

"இன்று முரட்டாண்டி சத்திரத்தில் கவர்னரைப் பார்க்கப் போகவில்லை. ஏனெனில் நாளை மாலை பொம்மையப்பாளையம் புளியங்தோப்பில் அவன் உணவருந்திவிட்டு என்னுடைய சத்திரத்திற்கு வருவதாகக் கேள்விப்பட்டேன். அடுத்தநாள் நவம்பர் 16, சுக்ல கார்த்திகை 5, ஞாயிறு அன்று கவர்னருக்குத் தலைவலி வந்ததினல் அவன் வரவில்லையென்று பொம்மையப்பாளையம் புளியங்தோப்பிற்கு அனுப்பியிருந்த மேஜை, நாற்காலி முதலியவைகள் என்னுடைய சத்திரத்திற்கு அனுப்பும்படி சொல்லிவிட்டேன். எருவு கொண்டுபோகும் மாட்டுவண்டியில் கவர்னரும், அவனுடைய மகள் முதலியோர்கள் வெகு காம்பீரமாக வந்தார்கள். 21 வெடிகள் போடச்சொல்லியிருந்தேன்.

வெடிச்சத்தம் கேட்டவுடன் ஒன்றரை மணிக்கு புளியந்தோப்புக்குச் சென்று கவர்னருடன் பேசினேன். சத்திரத்துப் பூசாரி உணவளித்ததாகவும் என்னையும் சாப்பிடும்படி அவன் கேட்டான். நானோ மிக மரியாதையாக 'நானும் என் மக்களும், பூசாரியும் சாப்பிடுவதெல்லாம் நீங்கள் கொடுத்தவையே; இதற்காக தனியாக தயாரிக்கப்படவில்லையென்றேன். சரி, பண்டாரம் கொடுக்கிறதை நாம் சாப்பிடுகின்றோம் நீ போகலாம்' என்றான். சத்திரத்தில் நான் உணவருந்திவிட்டு அக்கிரகாரம் சென்றேன். பொம்மையபாளையத்துக்கு வடக்கே குளக்கரையில் போகும்போது சென்னை சித்துக்காடு சின்னத்தம்பி முதலி தன்னுடைய டோலியின் முன்னால் போய்க்கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் கைகூப்பி வணங்கினான். பிறகு

" தோன்றில் புகழொடு தோன்றுக அஃதின்றேல்
தோன்றலில் தோன்றாமை நன்று "

என்ற குறளைச் சொன்னான். அதன் பிறகு " திருவள்ளுவர் குறளில் அருளியபடியே உங்களைக் கடவுள் பிறப்பித்திருக்கிறார், உங்கள் பிறவி நல்ல பிறவி ஆகும் மற்றவர்கள்போல் வீணானது அல்ல ஆயிரம், இரண்டாயிரம் கட்டைகளுக்கு அப்பால் வசிக்கும் பாதுஷாவும் உங்கள் பேரைக் கேட்டமாததிரத்தில் மகிழ்ச்சியடைகிறான். தமிழ் மக்களில் பெரும் புகழடைந்தவர் நீங்கள்தான். வேறென்னவேண்டும்" என்றான். அவரைப் பார்த்து " நீங்கள் சின்னத்தம்பி முதலி அல்லவா?" என்று கேட்டேன். " ஆமாம்" என்றான். அதற்கு விடையாக "ஒரு மனிதன் பெரும் பதவியிலிருக்கலாம். ஆனால் நீங்களோ கல்வியில் சிறந்தவர்கள் என்றறிந்தேன். குறளில் 1330-ம் நீங்கள் ஒப்புவிக்க முடியும். அவைகளில் கூறியபடி உண்மைகளை அறிந்து உங்கள் அனுபவத்திலிருந்து அவைகளின் பொருளை உரைக்கக்கூடும். வெகுளியை வென்று, பொறுமை உணர்ந்து, கல்வியாளருடன் நட்பு பாராட்டி எப்பொருளையும் ஆராய்ச்சி செய்வீர்கள். ஆகையால் உங்களைத் தரிசிக்கவேண்டுமென்ற ஆசையிருந்தது. அது இன்றுதான் பூர்த்தியாகியது." இவ்வாறு நான் புகழ்ந்ததற்கு அவர் தக்க விடையளித்தார். பிறகு அவரை விருந்துக்கழைத்தேன். ஆனால் அவர் வேறு வேலையிருப்பதாகச் சொல்லிச் சென்றார்."

இதனால் ஆனந்தரங்கப்பிள்ளையின் புலமையும் தமிழ் ஆர்வமும் விளங்குகிறதல்லவா? அப்படிப்பட்ட பெரியார் ஒருவரை அமைச்சராகக்கொண்ட பிரஞ்சு கவர்னர் தம் நாட்

டில் இருந்த மடாலயத்தை ஆதரித்தது வியப்பல்ல. இவை களைத்தவிர இன்னும் பல வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆதாரங்களும் சான்றுகளும் கிடைத்தால் அவைகளைப் பின்னுல் ஆராய இடம் கிடைக்கும்.

---

உ

சிவமயம்.

பாலருவாயர் துணை.

# பல தாயருக்கு ஒரு பிள்ளை.

தேவகோட்டை, செட்டிநாடு இதழாசிரியர், தருமபுர ஆதீன வித்துவான், விரிவுரையரசு, சித்தாந்தப்புலவர் மாமணி, பாலகவி, வயிநாகரம்

**வே. இராமநாதன் செட்டியார்.**

ஒரு தாய்க்குப் பல பிள்ளைகளிருப்பது உலகியலிற் காணப் பெறுவதாகும். பல தாயருக்கு ஒரு பிள்ளை யென்பது வியப்பிற்குரிய செய்தி. சிவஞான பாலய தேசிக மூர்த்தியை அடுத்திருந்து, அருளாரமுதத்தையுண்ட பெருமை சிவப்பிரகாச சுவாமிகளுக்கு உண்டு. கற்பனைச் சுவைமிக்க கவிகள் யாப்பதற்குரிய ஆற்றலைச் சிவப்பிரகாச சுவாமிகள் கருவிலேயே பெற்றிருந்தார்களென்று சொல்லவேண்டும்.

இயல்பாகவே கவிதை நலம் வாய்க்கப்பெற்ற சுவாமிகளுக்கு, அருட்குரவராகிய சிவஞான பாலயரின் கருணை நோக்கம் வாய்த்தது, நம்மனோரின் பெரும்பேறேயாகும். கற்பனைக் களஞ்சியமாகத் திகழ்ந்த சுவாமிகளின் திருவாக்கிற் காணப் பெறும் நயங்கள், வேறெந்த நூல்களிலும் காணப்பெருத தனிச் சிறப்புடையன. சிறியதொரு பொருளைத் தெளிவுறுத்துகின்ற பொழுதிலுங் கூடத், தமக்கே அமைந்திருந்த தனி ஆற்றலால், அதனைக் கற்பனைப் பாகுடன் கலந்து ஊட்டுவிப்பது சுவாமிகளது இயல்பு.

∴ பள்ளி மாணவர்களுக்குப் பயன் படுவதாகிய நன்னெறி என்ற நூலைச் சுவாமிகள் செய்துள்ளார்கள். இது நாற்பது வெண்பாக்களாலாகியது. இச்சிறு நூலிலுங்கூடப் பற்பல கற்பனை நலங்களை நாம் காணலாம். சுவாமிகளுக்குச் சமய குரவர்களிடத்துப் பெரும் ஈடுபாடு உண்டு. அதனைப் புலப் படுத்துவது "நால்வர் நான்மணிமாலை" என்ற உருவத்தாற் சிறிய பொருளால் மிகப் பெரிய பிரபந்தமாகும்.

இது வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்னும் யாப்புமுறைச் செய்யுட்கள், ஒன்றன்பின் ஒன்றாக அமைய நாற்பது செய்யுட்களால் நிறைவு பெறுகின்றது. இந்த முறையில் ஆளுடைய பிள்ளையாருக்குப் பத்து வெண்பாக்களும், ஆளுடைய அரசருக்குப் பத்துக் கலித்துறைகளும், ஆளுடைய நம்பிகளுக்குப் பத்து விருத்தங்களும், ஆளுடைய அடிகளுக்குப் பத்து ஆசிரியப்பாக்களும் இதில் உள்ளன.

ஆளுடைய பிள்ளையாரைப்பற்றிக் கூறும் வெண்பா வொன்றில் ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள் அவரைப் "பல தாயருக்கு ஒரு பிள்ளை" என்று குறிப்பிடுகிறார். சிவபாத விருதயருக்கும் பகவதியாருக்கும் பிள்ளையாகச் சீர்காழிப்பதியில் தோன்றினார் திருஞானசம்பந்தர். குழந்தையைப் பெற்றவள் நற்றாயென்றும், வளர்ப்பவர் செவிலித்தாயரென்றும் இலக்கியங்களிற் குறிக்கப்பெறுவர்.

செவிலியரும் தாயரென்ற பெயரால் அழைக்கப்பெறுவரேனும், அவருக்குக் கொங்கை சுரந்து குழந்தைக்கு ஊட்டுகிற பேறு கிடைப்பதில்லை. தாய்ப்பாலில்லாக் குழந்தைகளுக்குத் தாதியரை வைத்துப் பால் கொடுக்கச்செய்வது உண்டு. அத் தாதியரது கொங்கைகளிற் சுரக்கும் பால், அவர் பெற்ற குழந்தையின் பொருட்டானதே யன்றி, ஊட்டும் குழந்தையின் பொருட்டானதன்று என்பது நாமறிந்ததே.

"நற்றா யொருத்திக்கே தனியுரிமையினதாகிய கொங்கைச் சுரப்பு, ஞானசம்பந்தப் பெருமான் பொருட்டாக மற்றும் இரு தாயருக்கு வாய்த்தது" என்று சுவாமிகள் உணர்ந்தபொழுது அவ்விருவரில் உயர்ந்தவராகிய மங்கையர்க்கரசியாரது பேரன்பை நினைவு கூருகின்றார்கள். "சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானஞ், சுரந்துண்டார், பிள்ளையெனச் சொல்லச் சுரந்த, தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த, மன முடையா ளென்பிருந்தவாறு" என்பது திருக்களிற்றுப்படியா ரல்லவா?

பிள்ளையினது அருமை, பெற்றவளொருத்திக்கே தெரியும். செயலுக்கு அடிப்படையாயிருப்பது நினைவென்பதைத் தாய்மார்களின் கொங்கைச் சுரப்பிலிருந்து அறிகின்ருேம். பிள்ளையை நினைந்தவுடன் பீரிட்டுச் சொரியும் கொங்கைகளையுடைய தாய்மார்கள் பலரிருக்கிருர்கள். பிள்ளை பெருப்பேதையருக்கு அப்பிள்ளைகள் பாலுண்டாகின்ற தலையன்பும், கொங்கைச் சுரப்பும் உண்டாவது அருமையாகும்.

பிள்ளைப்பேற்றை அடையாதிருந்த மங்கையர்க்கரசியாருக்கு ஆளுடைய பிள்ளையாரின் திருப்பெயர் கேட்டவுடன் கொங்கைச்சுரப்பு உண்டாகியது என்னுங் குறிப்பு, நினைந்து பாராட்டுதற்குரியதாகும். ஞானசம்பந்தப் பிள்ளையாரைப் பாண்டி நாட்டில் வரவேற்ற காலத்திற், பாண்டிமாதேவியார் மங்கைப்பருவத்தினரா யிருந்தாரென்று அறிகின்ருேம். பிள்ளை பெருத மங்கையரே வரிவளைகளை அணிவரென்று பழய இலக்கியங்களிலிருந்து தெரிகின்றது. தலைக் கருக்கொண்ட மங்கைக்கு ஏழாவது திங்களில் வளைகாப்பு என ஒரு மங்கலச் சடங்கு நிகழ்த்துவதுகூட, அதன்பின்னர் அவள் அணிய முடியாததான வளையல்களை, அவளுக்கு மனநிறைவு வரும் அளவுக்கு அணிவிப்பதேயாகும்.

மங்கையர்க்கரசியாரை "வரிவளைக் கைம்மடமானி என்று ஆளுடைய பிள்ளையாரும் "வளைக்கைம்மானி" என்று சேக்கிழார் பெருமானும் குறிப்பிடுகின்ருர்கள். மங்கைப்பருவம் கடவாதிருந்த நங்கையாருக்கு மைந்தனுணர்ச்சியும், அவ்வுணர்ச்சி காரணமாகிய கொங்கைச்சுரப்பும் உண்டானது வியத்தகு செய்தியல்லவா?

பிள்ளை அழுதபிறகு பால் சுரக்கின்ற தாயைவிட, அப்பிள்ளையை நினைந்தவுடன் பால் சுரக்கின்ற தாய் அன்பிற் சிறந்தவளென்பது வெள்ளிடை மலை. தம் மேலைச் சார் புணர்ந்து அதனுலுண்டாகிய ஞானப் பசியினுலோ; சாரும் பிள்ளைமையினுல்வந்த மற்றைப் பசியினுலோ, செம்மேனி வெண்ணீற்ருர் திருத்தோணிச் சிகரம் பார்த்துக் குழந்தை அழுதது. அந்த அழுகை யொலியைக் கேட்டபிறகு அம்மையப்பர் இருவரும் வெள்விடையேறி ஆங்குப் போந்தனர். அம்மையார் அருண் ஞானப்பாலை அளித்தார்.

உலகுயிரனைத்துமீன்ற பால் மொழியாகிய கன்னி, இலை படர்ந்த பொய்கையிடத்தழுதல்கண்டு முலைசுரந்த அன்னையாயினுள். மங்கையர்க்கரசியோ; நிலைவிளம்பக் கொங்கைசுரந்த

அருட் கோமகளாயினுள். இவ்விருவரில் உயர்ந்தார் என வினவுவார்போன்று, பாண்டிமாதேவியின் உயர் தகுதியை ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள் அழகுபெற விளக்கி யுள்ளார்கள்.

பெற்ற நற்றுயொருத்தியிருக்கப், பின்னுஞ் சில தாயரை நற்றுய்த் தகுதியிலேயே பெற்றவர் ஞானசம்பந்தப் பிள்ளையா ரென்பதையும், அவருட் சிறந்தவர் பாண்டிமாதேவி யென் பதையும், ஆளுடைய பிள்ளையாரை விளித்துக் கேட்கும் வினு வின் முகமாகவே, வெளிப்படுத்துகின்ற சுவாமிகளது நல்லாற் றல் வேறெவருக்கும் அமையாதவொன்றென்பதில் ஐய முண்டோ?

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு,
முலைசுரந்த அன்னையோ முன்னின்-னிலைவிளம்ப,
கொங்கை சுரந்த வருட்கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு.

—நால்வர் நான்மணிமாலை நலம் பெருகுக.

---

உ
முருகன் துணை
சிவத்திரு சிவஞான பாலய அடிகளார் திருவடி வாழ்க.

# புகழ் உரு

**வித்துவான், வை. இரத்தின சபாபதி** - திருச்சி.

திருமருவும் செங்நெலோங்கும் தென்னுட்டிற் றேன்றித் தெருவெல்லாம் முழங்க வளமையுற்றிருப்பது உயர்தனிச் செம் மொழியாய தமிழ் என்பது மக்கள் யாவரும் அறிந்ததே. மொழியானது வளம்பெற - வாழ்வில் மலர—கன்னித்தன்மை மாருதிருக்க—களிப்புமிக ஊட்டி வாழ, வேண்டுமாஞல் தொடர் புற்ற—பேசப்படுகின்ற செங்கிலப் பகுதிகளின் நாகரிக வளர்ச் சிக்கு ஏற்ப—பண்பாட்டின் மாறுதல்களுக்கு ஒப்ப மாறுபடு கின்ற தன்மையோடு வளர்ச்சியடையவேண்டும். இவ்வாறு மாறுபடும்போதும் மொழியின் உண்மை அடிப்படை வேரூன்றி யிருத்தல்வேண்டும். அடிப்படை மாறுமாயின் அது

அம்மொழியின் வளர்ச்சியென்று கருதமுடியாது; பல மொழி களின் தோற்றம் என்றே கருதவேண்டிய நிலை யேற்படும். இம் மொழிநிலையின் செம்மை வளர்ச்சியைத் தமிழ் பெரும்பாலும் ஏற்று வந்திருக்கிறது ; வருகிறது.

உரு, உருவு, உருபு என்ற மூன்று சொற்களும் இன்று ஏறக்குறைய ஒருபொருட் சொற்களாக இருந்துவருகின்றன. ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் இருப்பின், ஒவ்வொரு சொற்களும் ஒவ்வொரு சிறப்புப்பொருள் தருவனவாக இருப்பது தமிழின் சிறப்பியல்புகளுள் ஒன்று. நோக்குதல், பார்த்தல், காணல் முதலியன ஒரு தொழிலைக் குறிப்பதுபோல் தோன்றினும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிப்பட்ட அடிப்படையில் தோற்றமுற்றெழுந்தன எனல் அறிஞர் துணிபு. மேற்குறித்த உரு, உருவு, உருபு என்ற மூன்று சொற்களும் தொல்காப்பியத்தில் ஏறக்குறைய நான்கு இடங்களில் பேசப்படுகின்றன. இவைகளில் "உரு" என்ற சொல் உயிர்ச்சொல்லாகப் பிரிக்கப்பட்டு அச்சம் என்று உரை கூறப்படுகிறது. "உரு உட்காகும்" என்பது தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பா. பின் காட்டலாகாப் பொருள் என்ற தலைப்பின்கீழ் "ஒப்பும் உருவும்" என்று கூறப்படுகிறது. உரையெழுதிய நச்சினார்க்கினியரும் "உருவாவது உட்கு. அதுவும் பொறிநுதல் வியர்த்தல் போல்வனவற்றாலன்றிப் பிழம்புபற்றி உணரலாகாது" எனக்கூறிப் போந்தார். இனி "உருவு" என்ற சொல் "உருவு நிறுத்த காம வாயில்" என்றும் "உருபு" என்ற சொல் "உருபென மொழியினும்" என்றும் பேசப்படுகின்றன. ஈரிடத்தும் வடிவு, பிழம்பு என்னும் பொருள் கருதியே பேசப்படுகின்றன. இனி "உருபென மொழியினும்" என்றற் றொடக்கத்துச் சூத்திரத்தில் "உருவென மொழியினும்" என்பதே பாடம்; வடமொழி வரலாற்று முறைக்கு ஒத்தது "உருபென." என மாற்றியது சேனவரையரது உள்ளக்கிடை எனக் கூறுவாரும் உண்டு. இதற்கு அவர்கள் துணைகொண்டு நிற்பது "ஐபந்திணைபால் அவ்வப் பொதுவினும்" என்ற நன்னூற் பொதுவியல் நூற்பாவுக்கு உரைகண்ட மயிலைநாதர் கூற்றை ஒட்டியது. பிறவும் உண்டு. உருபு, உருவு ஆய இரு சொற்களும் வடிவு என்ற ஒரு பொருளைக் குறித்ததாதலின் அது பற்றி ஐயம் வேண்டா, உரு என்பது காட்டலாகாப் பொருளவாய் மெய்ப்பாடுபற்றி அறியப்படுவதான உள்ள நிகழ்ச்சி நிலையைக் குறிப்பிடும் உரிச்சொல் என்பதும், உருவு என்பது கட்புலனாயதோர் பிழம்பைக் குறிக்கும் பெயர்ச்சொல் என்பதும் கொள்ளவேண்டியிருக்கிறது. இது தொல்காப்பியர்காலத்துச் சொற்பொருள்நிலை. தமிழ்ச்சொல் வரலாற்று நிலை.

இனி, காலநிலை மாறுபடுவதுபோல் இவண் குறிப்பிட்ட இரு சொற்களும் ஒரே பொருளைக் குறிப்பதாக ஆயின. உரு என்பது உடலையே குறித்தது. அதுமட்டுமன்றி உருவு என்ற சொல் வழக்காற்றில் மறைந்து உரு என்ற சொல்லே தோற்ற மளிப்பதாயிற்று யாண்டும். உருவு என்ற சொல் அம்சாரியை பெற்று உருவம் எனவும் வழங்கி வருகிறது. உரு என்ற சொல் தொல்காப்பியா காலப்பொருளின்படி எடுத்தாளும் இடம் அருகிவிட்டது ஏன்? இல்லையென்றுகூடக் கூறலாம். எனவே இக்கால முறைப்படி உரு என்ற சொல் கட்புலனுய தோர் பிழம்பு அல்லது வடிவு என்பதையே குறிப்பதாகும் என்பது வெள்ளிடை மலை.

அடுத்து புலவராற்று முறையில் கட்புலனுயதோர் உருவைக் காட்டலாகாப் பொருளவாயதும், கட்புலனுகாததும் ஆய ஓர் தன்மையே எனத் தற்குறிப்பேற்றமாகக் கூறுவதுண்டு. கவிகள் அவ்வாறு கருதுவது தம் இசைவிற்கேற்ற பொருட்டிறனேயன்றி எவ்வித வரையறைக்குட்பட்டதாகவும்தோன்ற வில்லை. சுந்தரர் வாயிலாகச் சேக்கிழார் காண்கிருர் பரவையாரை, "பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ—அற்புதமோ—சிவனருளோ" என்று. கம்பர் காண்கின்ருர் கூனியை "இன்னல்செய் இராவணன் இழைத்த தீமை" என்று. குரு ஞானசம்பந்தர் கருதுகிருர் தமது ஞானகுருவை அருளுரு என்று. இவ்வாறு கவிகள் தத்தம் விருப்பிற்கேற்பப் பாடப் படுவோரின் தன்மைக்கு ஒப்ப உருவத்தைத் தற்குறிப்பேற்றப் படுத்துதல் கவி வரலாற்றுநிலை. அங்ஙனம் அமைந்ததே "புகழுரு" என்பதும் ஆகும்.

சங்க காலத்துச் சான்ருேன் ஒருவன். புலவர் புரவலன். ஏன்? இலம்பாடுடை இரவலர் அனைவர்க்குமே புரவலன்தான். "ஒப்புரவினுல் வருங் கேடெனின் அஃதொருவன் விற்றுக் கோள் தக்கது உடைத்து" என்ற குறட் கருத்தைச் செயல் வள்ளுவமாக்கிய செப்பம் உடையவன். வறுமை மிக்கதாகத் தோன்றும் அமயத்திலும் அவனது நகர் புகழ்ந்து பாடப் பெறும் அளவிற்கு வளர்பெற்றவன். புலவருளத்தில் அவன் கொடுத்துக் கொடுததுக்கொண்டது புகழ். அவன் கொடுத்துக் கொள்ளும் வணிகன் அல்லன் ஆயினும் தானே வந்துசேர்ந்தது புகழ். "உரைப்பார் உரைப்பவையெல்லாம் இரப்பார்க்கு ஒன்று, ஈவார்மேல் நிற்கும் புகழ்" என்பது வள்ளுவமாதலின் அதனுல் அவன் உரு என்பு, தோல், இரத்தம் கெழீஇய உடலாக இன்றிப் புகழ் உருவாக-புகழ் உடம்பாக மாறுகிறது. இதைக் கண்டார் காட்டினுர் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

விறலியை ஆற்றுப் படுக்கிறார்; ஆனால் கொள்ளும் நிலை வேறு செல்; உனக்கு வேண்டியன கொடுப்பான் எனக் கூற வில்லை அவர். அப்படிக் கூறினால் கொடுக்கும் நிலையில் இன்னும் அவன் ஒரு முடிவைக் காணவில்லை என்று பொருள்படும் என்று கருதினர் போலும் புலவர். கொடையிற் சிறந்தவனாகக் கன்னனும் பேசப்படுகின்றான் பாரதத்தில். கடையெழு வள்ளல்களில் இன்னும் அறுவர் பேசப்படுகின்றனர். சங்க இலக்கியங்களில். இவர்களனைவரைவிடச் சிறந்த—செம்மையான—கருத்தூன்றிய ஒரு நிலையைத்தான் ஆசிரியர் விளக்குந் திறன் உண்மை வாய்ந்தது. அவர் கூறுகிறார். "விறலியே! புகழ் என்ற ஒன்று உண்டு என நீ கேட்டிருக்கின்றாய்; ஆனால் கண்ணால் கண்டதுண்டோ? இல்லை. காண விரும்பினையானல் நான் குறிப்பிடும் ஆளைச் சென்று பார்" என்று. நான் குறிப்பிடும் பெயருடைய ஆள் புகழின் உரு என்றே ஆசிரியர் கருதியிருப்பாரென்பது தெற்றெனத் தெளிந்த உண்மைக் கருத்து. ஆயின் இச் செய்யுளுக்குப் பொருள் எழுதிய—கூறிய அனைவரும் இப்பொருள்பட எழுதவும் கூறவும் இல்லை. அவரனைவரும் "விறலி நீ நல்ல புகழைச் செவியாற் கேட்பினல்லது (அவன் வடிவைக்) காண்டலறியாய்; காண்டலை விரும்பினையாயின்......... வேள் ஆயைக் காணச்செல்க" எனக் கூறினர். இவர்கள் நல்லிசை என்பதற்கு (ஆய் வள்ளலது) நல்ல புகழை என்றும் காண்பு அறியலை என்பதற்கு ஆய் வள்ளலது வடிவை என்றும் சொற்களை வரவழைத்துக் கூட்டிப் பொருள்செய்து போந்தனர். இவ்வாறு சொற்களைச் சேர்த்துக் கூட்டி இடர்ப்படுதலினும், விறலியே! நல்ல புகழ் என்ற ஒன்றைப் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறாய். அப்புகழைக் கண்ணால் பார்க்கவேண்டும் என்ற கருத்து இருக்குமாயின் இக்கால் சென்று காணலாம்! ஆயினுடைய உருவம்தான் புகழின் உருவம், புகழே ஆயின் உருவமாக அமைந்திருக்கிறது என்ற பொருள்படக் கூறுதல் தெள்ளிதும் செப்பமுடையதும் ஆகும். இதுவே ஆசிரியர் கருதியதும் ஆகும் என்பது என் உள்ளக் கிடை.

காலமும் சுழல்கிறது; உலகமும் சுழல்கிறது. நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருள்களும் சுழல்கின்றன. இவ்வளவு அரிய சுழல்களின் வயப்பட்டுப் பல்லாற்றானும் இழுக்கப்பட்டு வாழ்க்கை என்னும் உபிலையைத் திறம்பட ஓட்டுகின்றனர் மக்கள். பொள்ளற்குடத்தில் நீர் நிற்றல் போலப் பொத்தல்கள் நிறைந்த உடலில் உயிர் நிற்பது எவ்வளவு அருமை என்று கூறப்பட்டதோ அதனினும் அருமை நல்லவர்களைப்போல் நடிக்கும் கயவர்களும், சூழ்ச்சிக்

காரர்களும் சூழ்ந்துள்ள உலகத்தில் உண்மையாளன் வாழ்வது. இயற்கை விதித்த ஒழுங்கு முறையை அஃறிணைப் பொருள்களே பெரும்பாலும் ஏற்று நடக்கின்றன. உயர்திணைப் பொருள்கள் இயற்கை விதியை மாறவில்லை என்ற முகமூடியில் மாறி நடக்க ஆரம்பித்துவிட்டன. உள்ளம் ஒன்று ; செயல் ஒன்று ; இரண்டும் ஒத்தது போன்ற நடிப்பு இவைகளே மிகுதிப்பட்டன உலகில். "இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே" என்ற முறைப்படி வளமுற வாழ்ந்து இன்பம் கண்டார்கள் ; கண்டு வருகிறார்கள் ; ஒருசில அறிஞர்கள். எல்லாரும் இதை அடையமுடியாது. இறையென அறிந்தும் குற்றம் குற்றமே எனக் கூற முடிந்தது நக்கீரரால்தான். ஆற்றில் ஏடு எதிரேறவும், நெருப்பில் ஏடு வேகாதிருக்கவும் பாட முடிந்தது சம்பந்தரால்தான். பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடமுடிந்தது சேக்கிழாரால்தான். நாட்டின் உரிமையை நன்முறையில் வாங்க முடிந்தது அண்ணல் காந்தி அடிகளால்தான். இவ்வாறு மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனர். யாவரும் இப்படிப்பட்ட அருஞ்செயலைச் செய்துவிடலாமென மனப்பால் குடிக்கலாமே யன்றிச் செய்கையிற் கொணர இயலாது. யாவருக்கும் வசதிகள் பற்பல பல்காலும் பெருகி வளர்ந்து வரினும், செய்யவேண்டியவைகளை முட்டின்றியே செய்தார்களாயினும் உண்மையில் வெற்றியடைய முடியாது. இந்நிலையில் பலர் உளர். இதற்கு வள்ளுவர் கூறும் காரணமே ஒப்பமுடிந்தது. "மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்" "ஆகுல நீர பிற" என்பதே. இவற்றில் இரண்டாமடிக்கு ஒப்பவே பல செயல்கள் நடக்கின்றன பல புரவலர்களால். முதல் ஒப்ப நிகழ்வன சில புரவலர்களால். தமக்கு எதற்காக நிதி அளிக்கப்பட்டதோ அதற்காக—அந்நற் செயலுக்காகப் பண்புடன் உதவாது பாரிற் கண்டதற்கெல்லாம் எடுத்துவீசும் புரவலர்களும் உண்டு. புரவலர் என்ற பெயர் பெறலாமேயன்றி உள்ளமும் செயலும் ஒப்பிய காலத்துச் செயற்பட்ட அறத்தால் விளையும் புகழுரு யாண்டும் கிடைக்காது; கிடைக்கும் எனக் கருதுவதும் அவம். எல்லாரும் கொடை வள்ளல்களாகத் திகழ்ந்தும் புகழுரு எனச் சிறப்பித்துப் பாடப்பெற்ற தன்மை உள்ளமும், செயலும் ஒன்றிய அறக்கொடை புரிந்த வள்ளல் ஆய் ஒருவனுக்குத்தான் அமைந்தது. அவ்வாறே இன்றும், பல்புகழ் விரும்பிப், பணத்தை வீசிப் பட்டம் பதவிகளில் இருப்பவர்களைப் பல்லிளிக்கச் செய்யும் அளவுக்குப் பாரில் செல்வாக்கு அடையினும் புகழுரு அடைய முடியாது. காரணம் அது

பணம் கொடுத்து வாங்குவதல்ல. வள்ளுவரின் முதற் கூற்றுப் படி அறம் ஆள்வார்க்கே அது உரித்து. அவ்வாறு உள்ளமும் செயலும் ஒன்றித்து அறம் செய்துபெற்ற உரு புகழ் உரு. அது எங்கள் அடிகள் உரு. தந்நலம் கருதாத் தகையினராய வள்ளல் தமிழ் காத்த வான் புரவலர் கொண்ட வளபார் எழிலுரு. பதினெட்டாம் பட்டத்து எம் பாலய அடிகள் கொண்ட உரு. சிவஞான பாலய செம்மையோன் கொண்ட உரு. என வாழ்வை வளமாக்கி ஆட்கொண்ட அருளுரு.



வெள்ளி சுருட்டிகள்



வெள்ளி சுருட்டிகள்

# ஊழ் வினை

(சித்தாந்த கலாநிதி, பேராசிரியர்,
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை)

திருவள்ளுவர் வழங்கிய திருக்குறளைப் படிப்பதில் இந் நாளைய நன்மக்கட்குப் பேரீடுபாடு உண்டாகியிருக்கிறது. அரசியலறிஞர் முதல் பள்ளிச் சிறுர்கள் ஈருக அனைவரும் இந் நெறியில் ஒத்த கருத்துடையராக இருக்கின்றனர். உலகிற்கே நல்லறமுரைத்த வள்ளுவர்பால் மக்கட்கு நன்மதிப்பு உண்டாகி யிருப்பது நல்வாழ்வுக்கு அறிகுறி நினைவு, மொழி, செயல் என்ற மூன்று துறையிலும் உரிமைதிகழ மக்கள் வாழ்ந்தகாலம் திருவள்ளுவர் தோன்றித் திருக்குறள் வழங்கிய காலம்; அத்தகைய காலம் இப்போது வந்திருப்பதால், மக்கட்குத் திருவள்ளுவரிடத்தே இத்துணையீடுபாடு உண்டாயிருக்கிற தென்னலாம்.

இதற்கு முன்னெல்லாம் நம் நாட்டில் கற்றோர் எனப்படுப வர் இந்நாட்டில் வாழ்ந்தார் என்றாலும் அவருடைய எண்ணங் களும் செயலும் பிற நாட்டவர் நல்கியனவாகவே இருந்தமை யால் வேற்று நாட்டவராகவே விளங்கினர். குழவிப்பருவத்தே, தாய் தான் தந்த பாலொடு உடன் ஊட்டிய தமிழ் மொழியை இகழ்ந்தனர்; தமிழ் நினைவைக் கைவிட்டனர்; தமிழ் வாழ் வைத் துறந்தனர்; தமிழ் நடையைத் தாழ்த்தினர்; தமி ழுடையை மாற்றினர்; தமிழ்க் கல்வியைத் தூற்றினர்; தமிழ்ப் பண்பாட்டைக் கைவிட்டுத் தமிழ் மக்கள் எனப்படும், சான் றாண்மையைச் கைதுவி, காலஞ்சென்ற தேசீய கவி பாரதியார் கூறுவதுபோல "நாமமது தமிழரெனக்கொண்டு" உயிர் வாழ்ந்தனர். "தாய்நாட்டிலிருந்துகொண்டே வேறொரு பேய் நாட்டு மக்களாக நம்மை மாற்றிவிட்டதே இந்த அந்நிய மொழிக் கல்வி" யென மகாத்மா காந்தியடிகள் முதலிய சான் றோர் கதறிக் கழறிய சொற்கள் இன்னும் ஒலி மாறவில்லை.

இவ்வாறு உண்டாகிய மன மாசு இன்னும் நீங்கவில்லை; அடிமையுணர்வு அகலவில்லை; சென்ற இருநூறு ஆண்டுகளாக மெல்ல மெல்ல உடையைப்பற்றி உடலைப்பற்றி, உதிரத்தைப் பற்றி, உயிரைப்பற்றிப் பிணித்துக்கொண்ட அடிமைப் பண்பு நீங்கிவிடுமா? வந்ததுபோல் இல்லாவிடினும் ஒளிவர நீங்கும் இருள்போல விரைய நீங்காதன்றோ? உரிமை வாழ்வுபெற்று

இயலும் நாம் உள்ளத்தாலும் உரையாலும் செயலாலும் இன்னும் அந்த அடிமைப் பண்பு நீங்காதேயிருக்கின்றோம். அதனால் தூய உரிமைக் கண்கொண்டு எழுதப்பெற்ற திருவள்ளுவரை நாம் அடிமைக் கண்கொண்டு காண்கின்றோம். அதுதான் இப்போது நம்மால் செய்யமுடிகிறது.

இந்த வகையில் திருவள்ளுவர் வழங்கிய திருக்குறளில் பல பகுதிகள் தெளிவாய் விளங்கவில்லை. பல ஐயங்கள் உண்டாகின்றன. பல புதிய கருத்துக்களைப் புகுத்திப் பார்க்கின்றோம். உண்மைக் கருத்துக்கள் சிலவற்றை உண்மைக்கு மாறாகக் கொள்கின்றோம். இவை யாவும் இயல்பாக உண்டானவை. உரிமை ஞாயிறு தோன்றுங்கால் இத்தகைய கலக்கங்கள் உண்டாவது இயல்பு.

திருவள்ளுவரது திருக்குறள் ஊழ் என்றொரு பகுதியைக் கொண்டுளது. அஃது அறத்துப்பாலின் இறுதியில் பொருட்பாலுக்கு முன்னர் இருக்கிறது. அதனை அங்கே கொணர்ந்து திருவள்ளுவர் வைப்பானேன் என்பது ஒரு கேள்வி. இது நெடுங்காலமாக நின்று நிலவும் பழமையான கேள்வி. திருவள்ளுவர் இதனைக் கூறியிருப்பாரா? ஊழையும் உப்பக்கம் காண்டல் கூடும் என அறிவுறுத்தும் திருவள்ளுவர், "ஊழிற் பெருவலியாவுள" என அதற்கும் பெருமை பேசும் இப்பகுதியைக் கூறுவாரா? என்பனபோன்ற சில கேள்விகள் இப்போது புதியவாய் எழுகின்றன. நெருப்பிற் புகை தோன்றுவது போல நற்சொல் நற்செயல்களில் தீமை தோன்றுவதும், தீச்செயல்களில் நன்மை தோன்றுவதும் இயற்கை. இயற்கையெனப் பகவற்கீதையில் வியாசர் கூறுவதுபோல் பழமையில் தீமையும் புதுமையில் நன்மையும் உண்டாகலாமாதலால் இப் புதுக் கேள்விகளால் நன்மையும் விளையும் என்ற உறுதியால் இவற்றை மேற்கொண்டு மதித்து ஆராய்வது அறிவுபெற்ற அறிஞர்க்குக் கடன். அதுபற்றி இச் சிற்றாராய்ச்சி இங்கே செய்யப்படுகிறது. நல்லறிஞர்கள் ஆராய்ந்து நல்லது கொள்வார்களாக.

திருவள்ளுவப் பெருமான் வழங்கிய திருக்குறளின் அடிப்படையான கருத்துக்கள் யாவையென முதற்கண் காண்போம். நம் நாட்டு மக்கள் வாழ்வில், பேச்சில், செயலில் சில அடிப்படைக் கருத்துக்கள் உண்டு. இவற்றுள் சிறப்பாக மூன்றைக் காணலாம். அவை வினை, மறுபிறப்பு, மேலுலக கீழுலக வாழ்வுகள் ஆகிய மூன்றுமாகும்.

"இருள்சேர் இருவினையும் சேரா" "எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை, வீயாது பின் சென்றடும்" என்றும், "எழு பிறப்புந் தீயவை தீண்டா" எழுமை யெழுபிறப்பும் உள்ளுவர்," "இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனா," என்றும் "மேலுல கம். இல்லெனினும் ஈதலே நன்று," "ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும் தான்புக்கழுந்தும் அளறு" என்றும் வருவன இவ்வடிப்படைக் கருத்துக்களை எடுத்தோதுகின்றன.

இம் மூன்றனுள் வினையே மறுபிறப்புக்கும் மேலுலக கீழுலக வாழ்வுகட்கும் காரணம்; நல்வினை செய்தார் மறுபிறப் பில் மேலுலக வாழ்வு பெறுவர்; தீவினை செய்தார் மறுபிறப் பிற் கீழுலகடைந்து துன்புறுவர். நலந்தீங்கு கலந்த வினை செய்தார் பிறப்புக்களை யெய்துவர். இக்கருத்துக்களையும் நாம் இத் திருக்குறளிலேயே காணலாம். ஆகவே வினையால் மறு பிறப்புற்று, மேலும், கீழும், நடுவுமாகிய உலக வாழ்வுகளில் பிறந்து உழலுவதை விடுத்து வினையின் நீங்கிப் பிறப்பறுத்து வீட்டுலகம் சென்று சேர்வதே வாழ்வின் குறிக்கோளாகும். வீட்டுலகத்தைத் திருவள்ளுவர் "வானோர்க்கு உயர்ந்த உலகம்" என்றும், "வரன் என்னும் வைப்பு" என்றும், "இறைவன் அடி" என்றும் கூறுகின்றார். மேலுலகத்தை "புத்தேளுலகம்" "தாமரைக்கண்ணான் உலகு" "மேலுலகம்" என்று சிறப்பித் துரைப்பர். இவற்றையெல்லாம் நோக்கினால் மேல் கீழ் நடு எனப்படும் மூவகை யுலகங்களின் வாழ்வு வினை காரணமாக உண்டாவன என்பது இனிது விளங்குகிறது.

இவ்வினையுணர்வும் மறுபிறப்புணர்வும் பிறவும் திரு வள்ளுவரே படைத்து மொழிவன அல்ல. அவர்க்கு முன்னி ருந்த சான்றோர்களே கூறியிருக்கின்றனர். "வாழச்செய்த நல் வினையில்லது, ஆழுங்காலைப்புணை பிறிதில்லை" (புறம்) யாம் செய் தொல்வினைக்கெவன் பேதுற்றனை" (நற்) என வினை யுணர்வும், "சாதலஞ்சேன் அஞ்சுவல் சாவின், பிறப்புப் பிறி தாகுவதாயின், மறக்குவென் கொல்என் காதலன் எனவே" (நற்) "இம்மை மாறி மறுமையாயினும், நீயாகிய ரெங்கண வனை, யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே" (குறுந்) "இம்மை யுலகத்திசையொடும் விளங்கி மறுமை யுலகமும் மறுவின் றெய்துப" (அகம்) என மறுபிறப்புணர்வும் "வாராவுலகம் புகுதலொன்றெனப் படை தொட்டனனே குரிசில்" (புறம்), 'தொய்யா வுலகத்து நுகர்ச்சியும் கூடும் (புறம்) என மேலுலக வுணர்வும் சங்கச் சான்றோர்களால் கூறப்பட்டிருப்பதைக் காண லாம். இவ்வாறே மிகப் பழைய தமிழ் நூலாகிய தொல்காப்பி யத்தும் இம்மூவகையுணர்வும் குறிக்கப்பெறுகின்றன. வட

நூல்களிலும் வேதங்கள் தவிர ஏனை எல்லா நூல்களிலும் இவை கூறப்படுகின்றன. உலகாயதம் ஒழிந்த ஏனைச் சமயங்கள் யாவும் இவற்றை மேற்கொண்டுள்ளன. ஆதி வைதிகம் ஒழிந்த இந்திய சமயங்கள் பலவற்றிற்கும் வினையுணர்வு அடிப்படை எனத் தெளிய உணரவேண்டும்.

வினை யென்பது யாது? மனம் வாய், உடம்பு என்ற கருவிகளின் இயக்கமும் இயக்கமில்லாமையும் வினையென்று கூறப்படும். நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் வினையாகும். உலகில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பயன் உண்டு. இராச ராசன் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டினான் என்றால் கட்டுதல் வினையும், பெரிய கோயில் செயப்படு பொருளுமாகும். அதனால் அவன் அடைந்த பயன் இன்பமாம். இப்படியே ஒவ்வொரு வினைக்கும் செயப்படுபொருளும் பயனும் உண்டு. தொடக்கத்தில் சமய நூல்கள், செய்கையை வினையென்றும், செயப்படுபொருளைக் கன்மம் என்றும் கூறின. ஒரு செயல் செயப்பட்டபோதேயன்றிச் செயப்படாதபோதும் வினையெனவே நின்றதனால் பின்வந்த சமய அறிஞர்கள், செய்யப்படும்போதும் படாதபோதும் செயப்படுபொருள் உள்ளடங்கியிருப்பதுகண்டு, செயலையும் செயப்படுபொருளையும் ஒருங்கு கூட்டி வினையெனவும், கன்மமெனவும், இன்பமும் துன்பமுமாகிய பயன்களை வினைப்பயன் என்றும், கன்ம பலன் என்றும் வழங்கினர்.

ஒருவினை செயப்படுங்கால் அதனால் வினையும் பயனும் உருவாகிறது. அவ்வினை செயப்பட்டதும் பயனும் உருவாகி இன்பமோ, துன்பமோ, நல்குகிறது. சில வினைகள் முடிந்தவுடனே பயன் தருகின்றன. சில வினைகள் முடிந்தபின் சிறிது காலங்கழித்துப் பயனைத் தருகின்றன. இவையெல்லாம் நாம் உலகியல் வாழ்வில் நாளும் காணும் காட்சியாகும். தேசீய கவி பாரதி முதலிய காங்கிரஸ் தொண்டர்களின் வினை, செய்யப்பட்டபோது தனக்குரிய பயனை நல்காமல் பல ஆண்டுகள் கழித்து இப்போது நல்கக் காண்கின்றோம்.

இவ்வினைக் குறிப்பு வேதங்களில் காணப்படவில்லையென அவற்றை யாராய்ந்த அறிஞர் கூறுகின்றனர். ஆயினும், அவ் வேதங்களிற் குறிக்கப்படும் மந்திரங்களைப் பிழை சிறிதுமின்றி ஓதினால் கருதிய பயன் விளையுமெனப் பிற்கால வைதீகர்கள் கூறுவர். மந்திரங்களை வாயால் பிழை சிறிதுமின்றி ஓதுவதும் வினையே யென்பது நன்கு தெளிய வேண்டியதொன்று.

எனவே, தமிழ் நூல் முறைப்படி எல்லாநாட்டு எவ்வுயிரிடத்தும் வினையுணர்வு உண்டு என்பது தேற்றம்.

இனி மந்திரங்களை ஓதுங்கால் அவற்றின் பயன் அருவாய் உருவாகிறது. அம்மந்திரங்களை விதிப்படி யோதிமுடித்த வழி, மந்திரப் பயன் உருவாகி ஓதுவோர் விரும்பிய பயனை நல்குகிறது. அருவாய் உருவாகும் மந்திரப் பயனை அதிருஷ்டம் என வட நூல்கள் ஓதுகின்றன. இவ்வேதங்களைத் தொடர்ந்து நிற்கும் சங்கிதைகள் இவ்வினையியல்பை வற்புறுத்தாவிடினும் நல்வினை செய்பவன் துறக்க வுலக இன்பமும், தீவினை செய்பவன் நிரயத் துன்பமும் பெறுவர் என்று இசைக்கின்றன. இதனால் வினையுண்டென்பதும் மறு பிறப்புண்டென்பதும் பிறவும் பிற்கால வைதிகர்களுக்கும் உடன்பாடானமை தெளிகின்றோம்.

செய்வினையின் முடிவில் நிற்கும் வினைப்பயன் உடனே வந்தெய்துவதும், காலங்கழித்து வந்தெய்துவதும் உண்டெனக் கண்டோம். வினைமுடிவில் எய்தக்கூடிய பயன், வினை முடிந்த சிறிது காலத்திற்குப் பின்னர் வந்து எய்துவானேன்? ஏன் உடனே எய்துவதில்லை? என்பன முதலிய ஐயங்கள் எழுவதற்கு இடமுண்டு. வினை நிகழுங்கால் அருவாய் உடன் பிறக்கும் அதிருஷ்டம், தனக்குரிய பயனை விளைவித்தற்குறிய பக்குவம் எய்தவேண்டியிருக்கிறது. வினையைச் செய்தவர், அதற்குரிய பயனை நுகர்தற்குரிய காலம் வரும்வரையில், அதிருஷ்டம் பக்குவம் பெற்றுக்கொண்டுவரும். பக்குவமானவுடன் தன் பயனை அந்த அதிருஷ்டம் நுகர்வித்துவிடும். செய்வினையின் பயனைச் செய்தவர் பெறுதற்குரிய அதிருஷ்டம் பக்குவப்படுவதைச் சார்ந்திருக்கிறது. அதிருஷ்டமும் செயப்படுபொருள்போல வினையிடத்தே தோன்றுவதால் தமிழ் நூலார் கூறும் வினைக்கண் அடங்கி நிற்பது காண்க.

ஒருவினை (அதிருஷ்டம்) பக்குவப்படுவதற்குள் வேறு பல வினைகள் வந்து சேர்ந்துவிடும். இவற்றில் பக்குவப்பட்டவை இப்பிறப்பிலேயே பயனை நல்கும். எஞ்சியவற்றை நுகர்வது குறித்து மறுபிறப்பு வந்து சேர்கிறது. வினைப்பயன்களின் கூறுபாட்டிற்கேற்ப மறுபிறப்பில் புல் முதல் தெய்வமீறுகப் பல்வகை யுடம்புகள் தோன்றுகின்றன. இதனால் எடுக்கும் பிறப்புக்களும் பலவாகின்றன.

பிறவிதோறும் எடுக்கும் உடம்பு கருவியாகக்கொண்டே வினைப்பயன்களை நுகரவேண்டும். நுகரும் திறம் உடம்பு

தோறும் வேறுபடும். அதற்கேற்பச் சில பயிற்சிகள் உண்டாகிக் குணம்போல ஒன்றிவிடும். அவையே அவ்வுடம்பு கருவியாக வினைப்பயன் நுகர்வதற்கு வாயிலாய்ச் செயற்படுகின்றன. இவற்றை **வாதனை** என்பர் தமிழ் நூல்கள் வாதனையை **அவா** என்று குறிக்கும். பக்குவமெய்தி நிற்கும் வினைப்பயன் வாதனையின் வாயிலாக உயிரை வந்து அடைகிறது. வினைகள் பக்குவப்படுவதற்குரிய காலமும் பயன்களின் அளவும் அவ் வினைகளின் வன்மைகளைச் சார்ந்திருக்கின்றன. சில வினைகள் பக்குவமுற்றுப் பயன் நல்குங்கால் வேறுன சில வினைகளும் பக்குவமெய்தி நிற்கலாம். அவற்றுள் வலியதனுல், மெலியது, பக்குவமெய்தியிருப்பினும் பற்றுக்கோடாகிய வாதனையில்லாமையால் கெட்டழியும் சிவன் முத்தன் ஒருவன், தன் உடம்பளவாய் நிற்கும் வாதனையை (அவாவை) ப்பற்றி வந்து அடையும் வினைப்பயனை நுகரும்போது, பக்குவமெய்தியிருக்கும் ஏனை வினைகட்குப் பற்றுக்கோடாகாதபடி வாதனைகளைத் தன்பால் நிலையாவண்ணம் அறுத்துவிடுகின்றுன். அதனுல் அவன் வினைத்தொடர்புகளின் நீங்கி வீடுபெறும் திறம் பெறுகின்றுன்.

நம் நாட்டு அறிவு நெறிச் சமயங்கள் பலவும் இறைவன் உலகம் உயிர் என்ற மூன்று பொருளையும் கண்டிருந்தன. கடவுள் என்பதொன்றுண்டு என்பதைத் தொடக்கத்தில் வற்புறுத்தாத நையாயிகரும் சாங்கியரும் பின்னர் அதனையுணர்ந்து மேற்கொண்டனர். பிரமப் பொருள் ஒன்றேயுளது; ஏனை உலகம் உயிர் என்பன பொய்யென்றுகொண்ட பிரம வாதிகளும், **விவகார**மென ஒரு நிலை வகுத்து அதன்கண் இம்மூன்றும் உண்டெனக்கொண்டு சமயப்பணி புரிந்தனர். இம்மூன்றனுள் இறைவன் உயிர் என்ற இரண்டும் அறிவுடைப்பொருள் என்றும் பிற எல்லாம் அறிவில்லாதவையென்றும் கூறுவர். வினையும், வினைப்பயனும் வாதனையும் ஆகிய யாவும் அறிவில்லாதவை.

அறிவில்லாத வினைப்பயன் அறிவில்லாத வாதனையைப் பற்றுக்கோடாகக் கொள்வதும், இன்பமும், துன்பமுமாகிய வினைப்பயன்களை உயிர்கட்கு நல்குவதும் கூடா. அறிவுடைய உயிரை அறிவில்லாத வினைப்பயன்கள் வந்து எய்துவதற்கு அறிவுடைய இறைவன் வேண்டப்படுகின்றுன். அவன் உலகைப் படைத்து அவரவர் செய்த வினைப்பயன்களை அவரவரோடு கூட்டி நுகரச் செய்வதும் அந்த இறைவன் வேலை என்று கண்டனர். அதுபற்றியே தொல்காப்பியரும் கடவுளைப் "பால்வரை தெய்வம்" என்றுர். உலகுயிர்களைக் கடந்து நிற்கும் நிலையில் இறைவனைக் "கடவுள்" என்றும், அவற்ருேடு

தொடர்புற்று நிற்கும் நிலையில் "தெய்வம்" என்றும் **தொல்காப்பியரை யுள்ளிட்ட தமிழ் நூலார்** கூறினர்.

இனி வடநூலாருள் **யோக சமயத்தார்** இவ்வினைகளைச் சுக்கில கன்மம், கிருஷ்ண கன்மம், சுக்கில கிருஷ்ண கன்மம், அசுக்கில கிருஷ்ண கன்மம் என நால்வகைப்படுத்திக் கூறுவர். சுக்கில கன்மம் நல்வினை, கிருஷ்ண கன்மம் தீவினை, நன்மையும் தீமையும் கலந்த வினை சுக்கில கிருஷ்ணகன்மம், இரண்டுமிலாத வினை அசுக்கில கிருஷ்ணகன்மம். இறுதியிற் கூறிய அசுக்கில கிருஷ்ண கன்மத்தையே செய்பவன் வீடு பெறுபவன் என்பதும் அவன் அது செய்வதால் அவனுடைய புத்தி தத்துவத்திற் கிடந்து அவனை யடைதற்குப் பக்குவமுற்றுவரும் முன்னை வினைகள் (அவாவென்று தமிழில் கூறப்படும்) வாதனையாகிய பற்றுக்கோடு இல்லாமையால் கெட்டுப்போம் என்பதும் **யோக நூலார்** கொள்கை.*

ஒரு மனிதனுடைய நினைவு, சொல், செயல்களால் கன்ம மென்னும் நுண்ணிய பொருள் உண்டாகிறது. அவனுடைய விருப்பு வெறுப்புக்கள் பசைபோல் ஊறி அக்கன்மத்தைத் தன்பால் ஈர்த்துக்கொண்டு சீவ பதார்த்தத்தில் ஒட்டிக்கொள்ளும். இவ்வாறு, பல பிறவிகளிலும் ஈட்டப்படும் கன்மம் சீவனைச் சூழ்ந்துகொண்டு கன்ம சரீரமாகிறது. பிறப்பு மாறுங்கால் சீவன் கன்ம சரீரத்தோடே நீங்கும் இன்ப துன்பங்களை ஒப்ப நோக்கி நுகரும் மேலோர்க்கு அக்கன்மம் முதிர்ந்து உதிர்ந்தொழியும்; அல்லாதவர்பால் அக்கன்மம் பெருகி வெண்மை கருமை முதலிய "**இலேசியம்**" பெறும். ஐவகைச் சீலங்களிலும் சிறிதும் பிழையின்றி யொழுகும் சான்றோர் புதிய கன்மங்களைச் செய்யாமையால் முன்னைக் கன்ம பலங்கள் முற்றும் நுகர்ந்து கழிந்தபின் உடம்பின் நீங்கி உலகத்து உச்சியில் வாழும் வீடுபெற்று முத்தர்களோடு கூடி இன்புறுவர் என்று ஜயின நூல்கள் கூறுகின்றன. புத்த சமயம் ஆன்மா உண்டென்பதை மேற்கொளளா தொழியினும் வினையும், மறுபிறப்பும் பிறவும் மேற்கொண்டொழுகுகிறது யோகர்கள் போலப் புத்தர்களும் வினையை நலம் பயப்பன, தீங்கு பயப்பன, இரண்டும் பயப்பன, இரண்டும் பயவாதன என நால்வகைப் படுத்து இறுதியிற்கூறிய வினைவகையால் ஏனை வினைகளெல்லாம் கெடும் என்பர்† வினைகட்கெல்லாம் இச்சையே காரணம்.

---

(*வியாசபாடியமும் தத்துவ வைசாரதியும் IV–7)

†அத்த சாலினி பக். 89.

இச்சையை நீக்கினவன், அறியாமை வெறுப்பு ஆசை முதலிய வற்றைக் கெடுத்துப் பிறப்பறவுயரும் பெரியோனுவன். அவன் முன்னை வினைப்பயன்களை மட்டில் இப்பிறப்பில் நுகர்வான். அவன் வினைத் தொடர்பால் கீழ்நிலை எய்தான். அவன் அருக பதம் பெற்ற பரமேட்டி எனவுரைக்கின்றனர்.

இவ்வண்ணம் நம் நாட்டில் தோன்றிய சமயங்கள் பலவும் வினையும் மறுபிறப்பும் பிறவும் மேற்கொண்டுள்ளனவாயினும் உலோகாயதம் ஒன்றுதான் இவற்றைக் கொள்ளவில்லை, உல காயதருள்ளும் **சுசிட்சித சாருவாகர்** என்போர் ஆன்மா என ஒன்று உண்டெனக்கொண்டு அதுவும் இறக்குங்கால் உடம் போடே அழிந்துவிடுகிறதென்பர். ஆசீவகருள் வினையும் மறு பிறப்பும் பிறவுமாகிய கொள்கைகளை ஏற்பதிலர். இவர்களை அஜிதகேசகம்பளர் என்பர். ஆசிரியர் திருவள்ளுவர் வினையும் மறுபிறப்பும் பிறவும் மேற்கொண்டொழுகும் கொள்கையினர் என்பதை முன்பே கண்டோம்.

ஒருவருடைய நினைவு, சொல், செயல்களாகத் தோன்றும், வினைப்பயன் பழுத்து நிற்கும் நிலையில் ஊழ்வினை என்று கூறப் படுகிறது. ஊழ்த்தல் என்பது "இணர் ஊழ்த்தும் நாறுமலர் அனையர்" என்றும் "தீஞ்சுளைப் பலவின்பழம் ஊழ்க்கும்மே" (புறம்) என்றும் சான்றோர் வழங்குவதால் ஒரு வினைச்சொல் லாதலைக் காண்கின்றோம். இதன் பொருள் பயனுண்டாக முதிர்தல் என்பதும் அறிகின்றோம். மலர்ந்து மணமாகிய பயன் நல்கும் பூ, ஊழ்முகை (நற். 115) என்றும் கனிந்து பயன்படும் பழத்தை ஊழுறுபழம் (அகம். 117) என்றும் சான்றோர் வழங்குகின்றனர். இதனால் ஊழ்வினை யென்பது முதிர்ந்து பயன் நல்கும் வினை என்று பொருள்படுமாறு இனிது விளங்குகிறது.

பழுத்த பழம் மரத்தில் நில்லாது என்பது **உலகுரை,** நன்கு முதிர்ந்த கனி தன்பால் முதிரும் விதையாகிய பயனை எவ்வண்ணமேனும் அதன் முதலிலிருந்து நீக்கி அப்புறப்படுத்தி விடுமேயன்றித் தன்னிடமே கொண்டொழியாது என்பது கருத்தாம். மரம் ஒன்று பழம் ஊழ்த்தல் விதை பயந்து தன் இனம் பெருக்கும் குறிப்பிற்றுதல்போல் வினை ஊழ்த்தல் தன் பயனைத் தன்னைச் செய்தோர்க்கு நல்கி மேலும் வினைகளாகிய தன் இனத்தைப் பெருக்கும் இயல்பிற்றும் பழுத்த பழம் விதைப்பயனை வெளிப்படுத்தாது ஒழியாமைபோல ஊழ்வினை யும் தன் பயனை ஊட்டாது கழியாது என்பது விளங்குகிறது. ஊழ்கனிக்கு அஃது இயற்கையறமாதல்போல ஊழ்வினைக்குப்

பயன் நல்குதல் இயற்கையறமாம். இயற்கையறம் எல்லா ஆற்றலினும் வலிமிக்கதாதலால் ஊழ்வினையின் வலிமிகப் பெரிது என்பதுபற்றி ஆசிரியர் ஊழிற் பெருவலியாவுள என்று அதன் வலிமிகுதியை விளக்குகின்றார்.

பழுத்து வரும் பழம் இடையே மாறுபட்ட பொருள் களால் வெம்பிப் பயன் ஊழ்க்காது போதலும் உண்டு. அதுவும் இயற்கை நிகழ்ச்சி. அதனால் ஊழ்த்துவரும் வினையும் பயன் நல்காது கெடுதற்கு வாய்ப்புண்டு என்பது பெறப்படும். கனி வகைகள் பலவும் பெரும்பாலும் ஊழ்த்துப் பயன்படுதலும் மிகச் சிலவே இடையிற் கெடுதலும் இயல்பு. அதுபோல ஊழ்வினையுள் ஒரு சில மாறுபட்ட வினைகளால் பயன் ஊழ்க்காது கெடுதற்கு இடமுண்டு என்று சான்றோர் கண்டனர், அதனை ஆராய்ந்தவர், உலையா முயற்சியால் ஊழ்வினையும் பயன் ஊழ்க்காது கெடும் என்று தெளிந்து, "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்றனர். ஊழ்வினை ஊழ்க்காது கெடும் என அதன் வினையால் கூருமல், ஊழையும் ஊழ்க்காவாறு இடையூறு செய்வர் என்பது தோன்ற, உப்பக்கம் காண்பர் என்று ஆசிரியர் கூறுவது நினைவு கூரத்தக்கது. பள்ளம் நோக்கி ஓடுவதை இயற்கையறமாகக்கொண்ட தண்ணீரும் இடை நிகழ்த்தும் தடையால், நின்று வற்றுதல்போல ஊழ்வினையும் இடை நிகழ்த்தும் முயற்சிகளால் நின்று வற்றுவது இயல்பாதலின், ஊழை உப்பக்கம் காண்பது உயிர்கட்கு இயலுவதொன்ருயிற்று. ஆகவே ஊழ்வினை தனக்குரிய பயனை ஊழ்த்து நல்குவதில் பெருவலி இயற்கை யறமாக வுடையதென்பதும், எனினும், மாறுபட்ட வினையால் அவ்வலி தடையுற்று நின்று வற்றும் என்பதும் முடிபாயின. இதுபற்றியே சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரும் நோய் என்ற திருக்குறளும் தோன்றுவதாயிற்று. சான்றோரும் வினைபெருவலியுடையதாயினும், வெல்லத்தக்கது; கெடுதற்குரியது என்றெல்லாம் பேசுவாராயினர்.

---

# வீரசைவர்களின் தமிழ்த்தொண்டு

T. V. சதாசிவ பண்டாரத்தார்,
ஓய்வுபெற்ற தமிழாராய்ச்சி விரிவுரையாளர்,
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

நம் தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டுத் தொண்டுபுரிந்த பெருமக்களை ஆராயுங்கால், அவர்களுள் வீரசைவர் பலர் இருத்தலைக் காணலாம். எனவே, தமிழ் வளர்த்த பெருமையில் வீர சைவர்க்கும் பெரும் பங்குண்டு என்று ஐயமின்றிக் கூறலாம். கி. பி. பதினுன்காம் நூற்றுண்டின் முற்பகுதியில் தமிழ் வேந்தர்களின் ஆட்சி வீழ்ச்சியுற்றபின்னர் நம் தமிழகம் சற்றேறக்குறைய அறுநூறு ஆண்டுகள் வரையில் பிறமொழியாளர்களாகிய ஏதிலாரது ஆட்சிக்குள்ளாகி எல்லையற்ற துன்பங்களை நாளும் அனுபவித்து வந்தமையோடு தன் பெருமைகுன்றித் தாழ்ந்த நிலையிலும் இருந்தமை வரலாற்றுராய்ச்சியால் நன்கறியக் கிடக்கின்றது. அந்நியர் ஆட்சி நடைபெற்ற அக்காலப்பகுதியில் நம் தாய்மொழியாகிய தமிழ் அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளப் படாமல் அவ்வயலாரது மொழியே அரசாங்க மொழியாக அமைந்துபோயினமையால் தமிழ்மொழி ஆதரவற்ற நிலையை எய்தியது. எனவே, அதனைப் போற்றுவோரும் கற்பாரும் கற்பிப்பாரும் மிக மிகக் குறைந்துபோயினர். அக்கொடிய காலங்களிலே இளம்பிள்ளைகளுக்கு எழுத்தறிவித்துக் கல்வி கற்பித்துவந்தவர்கள் ஊர்தோறும் வாழ்ந்துகொண்டிருந்த வீர சைவப் பெருமக்களாகிய பாலாசிரியன்மாரேயாவர். அவர்கள் எல்லோரும் சிறந்த தமிழ்ப்புலமையும் கடவுட்கொள்கையும் சீலமுமுடையவர்களாகத் திகழ்ந்தமையால் கிராமத்திலிருந்த செல்வர்களாலும், பொதுமக்களாலும் பெரிதும் மதிக்கப்பெற்று இளம்பாலாசிரியர்களாக இனிது வாழ்ந்து வந்தனர். அன்னோர், தமிழ் மொழியோடு வாழ்க்கைக்கு இன்றியமையாத கணக்கு முதலியவற்றையும் இளஞ்சிறூர்க்குக் கற்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் உவாத்திமைத்தொழிலில் பேரூதியம் பெறுவதற்கு வாய்ப்பில்லாத அக்காலத்தில் தாம் பெற்றதுகொண்டு அமைதியாகத் தூய வாழ்க்கை நடத்தி வந்தமையோடு தமிழ்த் தொண்டினை இயன்றவரையில் புரிந்து வந்தமையும் தமிழ்நாடு என்றும் மறவாமல் போற்றத்தக்கதோர் அருஞ்செயலாகும்.

அவர்களுடைய தமிழ்த் தொண்டினை இரண்டுவகையாகப் பிரிக்கலாம்; அவ்விரண்டினுள், தம்பால் கல்வி பயின்ற சிறுவர்களுள் நுண்மதியும் ஆர்வமுமுடையவர்களுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களை எத்தகைய ஊதியமும் பெருமல இலவசமாகக் கற்பித்து அன்னோரைத் தமிழ்ப் புலவராக்கியமை ஒன்று; பிறிதொன்று, தாம் வாழ்ந்துவந்த ஊர்களில் திருக் கோயில்களில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது அந்தாதி, மாலை, கலம்பகம், உலா, கோவை முதலியனவும் தல புராணங் களும் பாடி யரங்கேற்றி யாண்டும் தெய்வமணங் கமழச் சமயத் தொண்டுபுரிந்து வந்தமையேயாம். அப்புலவர் பெருமக்கள் ஊர்தோறும் நடத்திவந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களும் குருகுலங்களுமே, அந்நியர் ஆட்சியில் தாழ்வுற்றிருந்த நம் தாய் மொழியைக் காப்பாற்றிவந்தன என்று உறுதியாகக் கூறலாம். நாட்டில் ஆங்காங்கு வாழ்ந்துகொண்டிருந்த பரம்பரைச் செல்வர்களும் பாலாசிரியன்மார்களாகிய அப்புலவர்களின் தன்னலமற்ற தொண்டினைப் போற்றி அன்னோரைப் புரந்துவந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நம் நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டு, அதன் பயனாக அரசாங்க உதவிபெற்ற ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் தோன்றிய காலத்தேதான் வீர சைவப் புலவர்கள் நடத்திவந்த பழைய பள்ளிக்கூடங்கள் மறைந்துபோயின.

அப்பள்ளிக்கூடங்கள் மறைந்தபின்னர், தமிழறிஞர்களைக் கிராமங்களில் காண்பது அரிதாயிற்று. அங்கிருந்த இளைஞர் களுள் ஆர்வமுடையவர்கள், தமிழ்ப்புலமை பெறுவதற்கும் இடமில்லாமற்போயிற்று. பிறகு, ஆங்கிலமே முதல் மொழி யாகக் கற்பிக்கப்படும் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் நம் நாட்டில் ஆங்காங்கு அரசாங்க வுதவிகொண்டு அமைக்கப் பெற்றன. அவற்றில் கல்வி பயின்ற மாணவர்கள், ஆங்கில மொழியை நன்கு கற்றுத் தேர்ச்சி எய்திப் பட்டமும் பதவி யும் பெற்றுத் தம் தாய்மொழியாகிய தமிழில் பற்றும் பயிற்சி யும் இல்லாதவர்களாகப் போய்விட்டனர். அவர்கட்குப் பண்டைத் தமிழ் நூல்களைப் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கா மற் போயினமையால் அன்னோர் பண்டைத்தமிழரின் பண் பாடு, நாகரிகம், வீரம் முதலானவற்றை அறியாதவர்களாகவே யிருந்துகொண்டு நம் தமிழகத்தில் தம் வாழ்க்கையை நடத்தி விட்டனர். இக்குறைபாடு, தம் தாய்மொழி இலக்கியங்களைப் படிக்காமல் அந்நிய மொழி நூல்களை மாத்திரம் கற்று அவற் றில் ஈடுபாடுடையவர்களாயிருந்தமையால் உண்டாயிற்று என் பது தேற்றம். இவ்வுண்மையை,

'ஆங்கிலம் ஒன்றையே கற்றார் அதற்கு
ஆக்கையோ டாவியும் விற்றார்
தாங்களும் அந்நிய ராஞர் செல்வத்
தமிழின் தொடர்பற்றுப் போஞர்'

என்று ஓர் அறிஞர்
கூறி வருந்தி யிருத்தலாலும் நன்கறிந்துகொள்ளலாம்.

இதனையுணர்ந்த பெரியோர் சிலர் இத்தகைய நிலைமை இனி ஏற்படாதவாறு தமிழ் மொழிக்கு ஆக்கமும் ஆதரவும் தேட முற்பட்டனர். அவர்களது அரிய முயற்சியினுல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கு ஓரளவு ஆதரவு கிடைத்தது என்று கூறலாம். இண்டர்மீடியேட், பீ. ஏ. வகுப்புக்களுக்குத் தமிழ்ப் பாடங்கள் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றியும், தமிழ் வித்வான் தேர் வும் ஏற்படுத்தப்பட்டது. அத்தேர்விற்குப் பயிற்சியளிக்கும் பொருட்டுத் தமிழ்க் கல்லூரிகளும் சில இடங்களில் அமைக்கப் பெற்றன. அவற்றுள் மயிலத்தில் நிறுவப்பெற்றுள்ள ஸ்ரீ சிவஞான பாலய தேசிக சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி, யாவரும் பாராட்டற்குரிய பெருமையுடையதாகும். இக்கல்லூரியை மயிலத்தில் அமைத்துச் சிறப்பாக நடத்திவருபவர்கள் பொம்மபுரம் ஆதீனத் தலைவர்களாகவுள்ள ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிக சுவாமிகளவர்களேயாவர். இவர்கள் தம் கல்லூரி மாணவர்களுக்குத் தமிழ்ப் புலமையோடு நல்லொழுக்கமும் தெய்வ பத்தியும் அமையுமாறு தக்க பயிற்சியளித்துவருவது எல்லோரும் போற்றுதற்குரிய அருஞ் செயலாகும். இவர்களுடைய செயற்கரிய செயல்கள், முன்னர் ஊருக்கொரு குடியினராயிருந்துகொண்டு பல ஊர்களில் தமிழ் வளர்த்துவந்த வீரசைவப் புலவர்களின் அருந்தொண்டுகளை இந்நாளில் நம்மனோர்க்கு நினைப்பூட்டி மகிழ்விக்கின்றன எனலாம். இவர்களுடைய தமிழ்த்தொண்டையும், சமயத்தொண்டையும் நம் தமிழ்நாடு என்றென்றும் மறவாமல் போற்றும் என்பது திண்ணம்.

அன்பும் அருளும் நிறைந்த ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய தேசிக மகா சந்நிதானம் அவர்களுக்கு அறுபதாண்டு நிறைவு விழா நடைபெறுவதுணர்ந்து பெருமகிழ்ச்சியுறுகின்றேன். இவர்கள், சைவமும் தமிழும் தழைத்தோங்க அரும்பெருந் தொண்டுகள்புரிந்து பல்லாண்டுகள் வாழ்ந்தருளுமாறு புறம் பயத் தெம்பெருமான் திருவடிகளைப் பன்முறை வணங்குகின்றேன்.



திருப்பாவை திருவெம்பாவை மகாநாட்டில் தலைமை தாங்குதல்.



மயிலம் கோயிலின் தோற்றம்.

# இரண்டறி கள்வி

**வித்துவான் - கோ. குஞ்சிதபாதம்**
*தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, செயங்கொண்டசோழபுரம்.*

மாலை நேரம். ஒண்டிறற் கதிரவன் தன் திண்டிறற் கதிர்களை ஒடுக்கி அத்தகிரியை அடையும் வேளை. பழமுண்ட பறவைகள் படுக்கை கொள்ளும் மரம் நோக்கிப் பறக்கின்றன. நீல வானிலே கரிய மேகங்கள் எழுந்து இன்புறுத்துகின்றன. வேனிற்காலத்து இம்மாலையை விரும்பாதார் யார்? கதிரவனின் கனல்மாற்ற மாலையை எதிர்நோக்கும் காதலர்கள், காலைமுதல் மாலைவரை கடுக உழைக்கும் உழைப்பாளிகள், செல்வத்திற் புரண்டு பொழுதைக் கழிக்க வகையறியாக் கனவான்கள், அனைவருக்கும் வேனிற்காலத்து மாலை நேரம், அக்காலத்தில், மலர்களின் மணமுண்டு மெத்தென வீசும் தென்றல், கோவலர் எழுப்பும் குழலோசை, மாலையில் மலரும் நாண்மலர்களின் நறுநாற்றம் இவைகள் களிப்பூட்டும் என்பதில் ஐயமுண்டோ?

தனிப்பெருங் குடியுதித்த தன்னேரில்லாத் தலைவி, மதியைப் பழிக்கும் முகம், மானைப்பழிக்கும் விழி, வில்லைப்பழிக்கும் நுதல், காரைப்பழிக்கும் கூந்தல், கொவ்வைச் செவ்வாய், முத்துப் பற்கள், மோகனப் புன்னகை, இரும்பினையுமுருக்கி விடும் கரும்பை நிகர்மொழியுடையாள், குயிலின் குரல், மயிலின் சாயலாள். அதிகம் வளர்த்துவானேன் பெண்டிரும் ஆணமை வெஃகும் பேரெழிலாள், மாலை நேரத்தில் மலர் கொய்யும் விருப்பினள், தோழியர் குழாத்தொடு மலர்வனம் புக்காள், புதுமலர் கொய்தாள், கொடியூசலாடினுள், கொஞ்சு மொழி பேசும் அஞ்சுகம்போற் பாடினுள், தோழியர் தங்கள் விருப்பம்போல் ஓடியாடினர், இயற்கையின் எழிலில் மயங்கிய தலைவி ஆண்டெழுந்த குயிலின் குரலில், மயிலின் ஆடலில் மதி மருண்டாள், தன் குழாத்தைப் பிரிந்தாள், இன்னிசை எழுப்பிய வண்ணம் பூங்காவினூடே நடந்தாள், பளிக்குப் பாறை-செய்வினை கூடிய தங்கச்செய் குன்று, குன்றினை வளைத்து சிலுசிலென நீரோடும் சிற்றோடை, ஓடையிடைப்பூத்த நீர்ப் பூக்கள், மலர்த்தேனுண்டு மயங்கும் வண்டுகள், வண்டுகள் கூட்டும் இன்னிசை, இவற்றின் அழகில் தன்னை மறந்தாள் தலைவி.

மறத்தமிழ்க் குடியுதித்த மாத்தமிழ்த் தலைவன், செழுங்கிளை தாங்கும் செல்வக் குடித்தோன்றிய செம்மல், பரந்தமுகம்,

பாரித்த தோள், குறுநகை கொண்ட கொவ்வைச் செவ்வாய், ஏறுபோற் பீடு நடை, பெருமிதப் பார்வை, விம்மிதத் தோற்றம், ஆண்மையும் அறிவாற்றலும் ஒருருவாய்ந்ததன்ன ஆணழகன், அதிகம் கூறுவானேன் ஆடவரும் பெண்மை வெஃகும் பேரின்பப் பெரியோன்.

காலை நேரம், வேட்டை விருப்புடையோன், தோழர் குழாத்தொடு காட்டினையடைந்தான். வெய்யிலின் வெப்பத்தையும் கருதாமல் வேட்டையில் நாட்டம் கொண்டனர், ஆடிக் களைத்தனர், இளைப்பாறி இருந்தனர். காலமென்னுஞ் சிற்பி கடுக நடந்தான், கதிரவன் விரைந்தான், மாலையும் வந்தது. களைத்த தலைவனின் கண்ணிலே, துள்ளியோடும் புள்ளி மானொன்று பட்டது. மானின் கவர்ச்சியில் மனமிழந்தான். மான் கன்றை மருவி யாட விழைந்தான். அம்பால் எய்திலன், அள்ளி எடுக்க முயன்றான். மானோ துள்ளித் தாவி தூரமாய்ச் சென்றது. தொடர்ந்தான் தலைவனும்.

அம்மான் நம் பெண்மான் நின்ற புதுமலர்ச் சோலையில் புகுந்தது. தொடர்ந்த தலைவனின் செவியில் தெவிட்டா இன்னிசை—தென்னாட்டின் தெய்வத் தமிழோசை வந்து பாய்ந்தது. மழலைச் சொல்லொடு கலந்துவரும் இன்னிசையில் கருத்தைப் பறிகொடுத்தான். காந்தம் வழிச்செல் இரும்பு போல் இசை வந்த திசை நோக்கி நடந்தான். இன்னிசையால் பின்னப்பட்ட அவனதுளந்தாங்கிய உடலை தள்ளாடும் கால்கள் ஈர்த்து வந்தன. வந்தவன் திடுக்கிட்டான், நின்றான், கண்களோ இமைக்க மறந்தன. அசைவற்ற அவன் அவ்வுயிரோவியத்தின் அழகை அள்ளி அள்ளிப் பருகினான். தெள்ளிய நீரோடையிலே அவனது உருவம் தென்பட்டது. அவ்வுருக் கண்டாள் கன்னி, இசை நின்றது, இமைப்பும் அகன்றது, கண்கள் அச்சத்தால் அகன்றன, வியப்பால் விரிந்தன, அவளுடல் ஆடிற்று, கணத்தில் நிலையுணர்ந்தாள், தலைவன் நோக்கிலே தண்ணளி கண்டாள், கண்கள் பேசும் கருத்தினை யுணர்ந்தாள், இருவரும் ஒருமித்து நோக்கினர். நான்கு கண்களும் கலந்துறவாடி, காதல் மொழி பேசி கருத்தொருமித்தன. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில்லையல்லவா ?

நாணத்தால் முகஞ்சிவக்க, நகைமுகங்காட்டி நின்றாள் நங்கை. தலைவன் நோக்கத் தான் குனிந்து நோக்காப்போது தான் பார்த்து அகமிக மகிழ்ந்தாள் ஆரணங்கு. குறிப்பிற் குறிப்புணரும் குரிசில் குயில் மொழியே! உன் உள்ளத்தைக்

கொள்ளைகொண்ட இப்புள்ளி மானை என்பால் விடு என்றான். வாள் விழியாள் பதிலிறுக்க வாயைத் திறந்தாள். வார்த்தைகள் எழவில்லை, தத்தளித்தாள். தடுமாற்றத்தோடு என்ன எனக் கேட்டாள். நின்பால் துள்ளிவந்து நிற்கின்ற புள்ளி மான் வேண்டுமெனக் கேட்டேன். ஆயின் உன்னைக்கண்ட பின் அந்த மானைச் சொந்தமாக்கும் எண்ணமிழந்துவிட்டேனென்றான். தனித்திருக்கும் பெண்ணிடத்தில் இவ்வடா மொழி பேசல் தகாதெனக் கூறினாள் கோமளாங்கி. கொஞ்சு மொழி பேசும் கோமகளே! கண்ட பெண்களைப் பெண்டாள நினைக்கும் பித்தரினத்தவனல்ல யான். கண்டதும் காதல், காதல் போயின் சாதல் எனப்பேசி கன்னியின் மனதைக் கெடுத்துக் கற்பினை மாசுபடுத்தி பின் கைவிடும் கயவனல்ல யான். என்றுமே, கடமையும் கட்டுப்பாடும், ஒழுங்கும் உறுதியும், அன்பும் அடக்கமும் தங்கள் பண்பெனக் கொண்ட பைந்தமிழர் மரபிலே வந்தவன் யான். காலமென்னும் தேவன் செய்துவைத்த காவியமே! கண்கள் காணக் காட்சியை இன்று கண்டேன். கன்னலிலே சாறெடுத்து கன்னித் தமிழ் குழைத்து கனி இதழால் பரிமாறும் வாயாளே! இளந்தமிழே சுவையுடைத்தென்ற என் எண்ணம் முழுதும் தவறென்றுணர்ந்தேனிப்போது. மறுவற்ற மதிநிகர் முகத்தாளே! உனது மதிமுக அழகிலே, மலர்நோக்குப் பார்வையில், முத்துப் பல் வரிசையிலே, மோகனப் புன்னகையில், கன்னத்துச் சரிவினிலே, கருத்து நிறை உள்ளத்தில் கலந்தொத்த என் மனது கனவிலும் மாறாது கட்டழகே! என்ற தன் உள்ளக்கிடக்கையை உரைத்தான் தலைவனும்.

ஆணழகன் அள்ளி வீசின காதற் சொற்களில் கருத்தினை இழந்துவிட்டாள் கன்னி. அடுக்குச் சொற்களிலே அழகு மிளிரக் கண்டாள். உணர்ச்சி தன் உள்ளத்தை உந்த உரைத்தாள் சில வார்த்தை. கணத்திலே வந்து கருத்தினைக் கவர்ந்த காதலரே! கவிஞனின் கற்பனையில் கருத்தழகு மிளிர்வது போல் என் காதல் இதயத்தில் இன்ப ஒளி தோன்றிற்று. ஆனாலும் மணமுடிந்த பின்பு நாம் மணமொத்து வாழ்வமென்றாள் ஏந்திழையாள்.

காதலர்கள் கலந்துறவாடுகையில் மதம் பிடித்த களிறொன்று பிளிறிக்கொண்டு வெருண்டோடி வந்தது. யானையைக் கண்டாள் நங்கை. அச்சத்தால் அலறி ஒதுங்கி நின்றாள் அயில்விழியாள். அஞ்சல் என்று அள்ளி அணைத்துக்கொண்டான் ஆணழகன். கையின் வேலால் களிற்றை எய்தான். அலறி ஓடியது அவ்விலங்கு. அச்சம் தவிர்ந்தாள் ஆயிழை

யாள். ஆனாலும் அவன் பிடியினின்று விடுவித்துக்கொள்ள விரும்பவில்லை. அவளது நாணம் புனலோடும் வழிப் புல் சாய்ந்தாற்போல் சாய்ந்தது. அறிஞனின் அரவணைப்பில் அடங்கிய ஆரணங்கு இன்பபுரிப் பாதையிலே இன்றுபோல் என்றும் செல்வோமா செந்தமிழே! என்று விம்மிதத்தால் கேட்டாள். இன்பத் தமிழ் பேசும் இளமயிலே! காதல் இன்றேல் சாதல் நன்று என்ற மணி மொழியின் கருத்தை யறிந்தவன், கண்ணே யான். மான் விழியே! தூய என் தமிழ்மேல் ஆணையிட்டுச் சொல்கின்றேன் இன்றுபோல் என்றும் வாழ்வது உண்மை என்றான். இன்பத் தலைவரே! சென்று தவழ் முல்லையினைக் கத்தரித்தல் இன்றி கரந்தழுவு மாமரமதுபோல அடியேனை மணமே புரிந்து மகிழ்விக்க வேண்டுகின்றேன் என்றாள் தலைவி. ஆறிரண்டு நாளையிலே அட்டியிலலாமலே அழகு மணம் நான் புரிவேன்—அச்சம் தவிர்ந்திடுவாய். அதுகாறும் நாளும் தவராமல் நானுன்னைச் சந்திக்க இக்குறி யிடத்தில் நண்ணிடுவாய் என்றான். தலைவியும் தலையசைத்தாள். இவ்வாறு பற்பல பேசி இன்ப வானிலே அன்புச் சிறகடித்து வானம்பாடிகளாய்ப் பரந்து சென்றனர்.

பாவையைத் தேடி பாங்கியர் வந்தனர். கூவியழைத்தனர். அக்குரல் காதலர்க்குக் கண்டில் கடுவிடம்போல், வெந்த புண்ணில் வேல் போல், சிவபூசையில் கரடி போல் துன்பத்தைத் தந்தது. பிரியா விடைபெற்று உடல் நீங்கும் உயிர்போல் உளமின்றிப் பிரிந்தனர்.

குறியிடத்தில் வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பான் வேற்கையான். வேல் விழியாள் வருவாள். காதல் மொழி பேசுவாள், இன்பம் பரிமாறுவாள், இருவரும் ஒருவராய் இன்பப் படகில் இணையொன்றிக் காதலின் கரைகாண அவாவுற்று காணமுடியாது கதிரவன் ஒளிக்குமுன் ஒல்லெனப் பிரிவார்கள். இது நாள்தோறும் நடந்துவரும் இன்ப வாழ்க்கை.

நாட்கள் பல உருண்டன. ஓர்நாள், தலைவியின் வருகை தாமதித்தது. தன்னிலையிழந்தான் தலைவன். சோர்ந்த முகத்தொடும், தளர்ந்த நடையொடும் தலைவியைக் கண்டான். தலைவியின் முகத்தை நிமிர்த்தினான், முத்துப்போல் கண்ணீர் வடிவதைக் கண்டான். வாடாத தாமரையே உன் முகம் வாடக் காரணம் என்ன என்றான் வியப்போடு. என்னரசே! நம் இன்ப வாழ்வினிலே இடையூறு நேர்ந்தது. குறையுண்டு கோமானே! வெளியில் செல்வதற்கு வீட்டினர் மறுத்து விட்டார். அக்குறையை நீக்கிட என் எண்ணம் கேட்டு நீர்

நடப்பீரா எனக் கேட்டாள். ஏடறியாக் காவியமே! கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால் மண்மேல் குமரற்கு மாமலையும் ஓர் கடுகாமென்பதை உணராயோ? உன்முகம்வாட என்னுளம் வாடல் அறியாயோ? உன் உள்ளக்கருத்தினை ஒளி வின்றி உரையென்ருன். என் வாழ்வே! என் மணத்தை முடித்திடவே என் வீட்டார் மனங்கொண்டார். ஆகவே நாளை விருந்தினராய் என்னகம் வந்து விருப்பம் உரைத்து விரைவில் மணமுடிக்க வேண்டுகின்றேன் என்ருள் மனமுடைந்து. விருந்திற்கிசைந்தான் தலைவன். காதலரிருவரும் பரிவுடன் பிரிந்தனர்.

மறுநாள் காலை: தலைவனுக்குத் தலைவியினகத்தில் விருந்து. மட்டற்ற மகிழ்ச்சியால் உந்தப்பட்ட தலைவி நிலையழிந்து உலவினள். கரியிடமிருந்து கன்னியைக் காத்த வீரனுகையால் விருந்தினன் விருப்பமாய் உபசரிக்கப்பட்டான். விருந்துண் டான். அவனது கண்கள் தன் காதல் விருந்தை நாடிச் சுழன்றன; பயனில்லை அவனுடல்போல் உள்ளம் இருக்கை கொள்ளவில்லை. தத்தளித்தது, செயலிழந்தது, தன்னிலை யுணர்ந்தான், தன் விருப்பம் கூற வெட்கினுன். பெற்ருேரைக் கொண்டு பேசி முடிக்க எண்ணினுன். தலைவியின் தன்னையர் பால் விடை பெற்ருன். வெளியேற எழுந்தான், கண்கள் கன்னியைக் காண முயன்றன. எதிரே கதவிடுக்கு. அங்கே சுருண்டெழுந்த மேகத்தினூடே தண்ணளிகொண்ட அம்புலி யைக் கண்டான். அம்புலி முகத்தில் ஏக்கத்தைக் கண்டான். ஏதுமறியான்போல் தனிவழியே செல்கின்ருன்.

செல்பவன் நெஞ்சிலே எண்ணக் கடலலைகள் எழுந்து மோதின; சிந்தனை சுழன்றது. சுழற்சியின் இறுதியில் ஓர் எண்ணம். இரவுக்குறியிலே நடுயாமத்தில் கானம் நாற நறு மணத்துடன் வந்து இன்பம் பரிமாறி என்னுயிரைக் கொள்ளை கொண்ட ஏந்திழையா இவள்? பேதைப்பெண். காதலன் ஓர் புறம், தன்னையர் ஓர்புறம், தன்னையர்முன் தன் நிலை காத்திட— தன் களவு மறைத்திட இல்லத்தில் ஆடை திருத்தி அணி கூந்தல் அழகூட்டி தன்னெழுக்கம் மறைத்து தன்னையருக் கேற்ப அமைதி தோற்ற வாழ்கின்ருள். இரவில் நம்முடன் இணையொன்றி, பகலில் தன்னையரின் நிலைக்கேற்ப ஒழுகும் தன்மையுடையாளிவள், இரண்டு கள்ளத்தன்மையை அறிந்த வளாய் ஒழுகுகின்ருள். ஆகையால் “இரண்டறி கள்வி நம் காதலோள்” என எண்ணி ஏங்கினுன். இவ்விரு நிலைக்கும்

யானே பொறுப்பினன். இந்நிலே மாற்றல் என் கடன். இனி, இதுவே என் முதல் வேலே என உறுதிகொண்டான். தலே நிமிர்ந்தான்—நடந்தான்.

இவ்வழகிய கருத்தினேக்கொண்ட காவியச் சுவையினேக் கற்றவர் வெறுப்பரோ? இந்நிலேயைப் படம் பிடித்துப் பளிங்குபோல் காட்டுகின்ற கவிஞனின் கவித்திறத்தைப் பாராட்ட மறுப்பரோ? கீழ்க்காணும் பாடலேப் படியுங்கள்; பகருங்கள் விடையினே.

**இரண்டறி கள்வி** நங்காதலோளே
முரண்கொடுப்பிற் செவ்வேன் மலேயன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்குல் நம்மோரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமலருதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய்நீவி
அமராமுகத்தளாகித்
தமரோரன்னள் வைகறையானே (கபிலர்)

[குறுந்தொகை—312]

உ

திருக்கயிலாய பரம்பரை பொம்மபுரம் ஆதீனம்
மயிலம் தேவத்தானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள்மீது பாடிய

# கீதங்கள்

S. தியாகராஜ அய்யர், மங்கலம்பேட்டை.

---

(புன்னாகவராளி)

பாலைய தேவா பாலைய தேவா
பாஹி ஸ்ரீ சிவஞான பாலைய தேவா.

வேலைக்கரைமிளிரும் பாலைய தேவா
வேந்தர்க்கருள்புரியும் பாலைய தேவா
பாலையுணவாக்கும் பாலைய தேவா
பச்சகந்தர்க்கருள் பாலைய தேவா (1)

கச்சிப்பதிமருவும் பாலைய தேவா
கடலுள் மூழ்கிவரும் பாலைய தேவா
நச்சுதவிர்த்தருளும் பாலைய தேவா
நவாப்புக்கருள்செய்யும் பாலைய தேவா (2)

மூப்புக்கிளமைதரும் பாலைய தேவா
முதிர்நரையைப்போக்கும் பாலைய தேவா
நீப்பரும் நோய்களெல்லாம் பாலைய தேவா
நீற்றினால் நீக்கியருள் பாலைய தேவா (3)

கண்டிகை பூண்டருளும் பாலைய தேவா
கந்தன்றனை நிகரும் பாலைய தேவா
தண்டிகையூர்ந்தருளும் பாலைய தேவா
சங்குகர்னரான பாலைய தேவா (4)

சேயூரின் வெண்மணலைப் பாலைய தேவா
தீஞ்சர்க்கரையாக்கும் பாலைய தேவா
மாயூரமாமலைமேல் பாலைய தேவா
வாழ்வேவந்தருள் செய்யும் பாலைய தேவா (5)

சித்திபுரிந்தருளும் பாலைய தேவா
தீமேற் றவம்புரியும் பாலைய தேவா
பத்தியளித்தருளும் பாலைய தேவா
பாரிலெவரும்பரவும் பாலைய தேவா (6)

செந்தமிழ்க்கல்லூரி பாலைய தேவா
தீர்க்கமுடன் அமைத்தாய் பாலைய தேவா
முந்துஞ்சமயநெறி பாலைய தேவா
முன்னேற்றஞ்செய்யவேண்டும் பாலைய தேவா (7)

(பாலைய தேவா பாலைய தேவா.)

## திருப்புகழ்

மயலான பேயெமை அணுகாதே
மனமான சேயுடல் நலியாதே
உயலான தோர்நெறி தனைமேவி
உயர்வாகவேயருள் தருவாயே
மயிலாசலா மக தவசீலா
மகராலயா ஒளிர் வடிவோனே
ஜெயவீர மாதவர்க் கினியோனே
சிவஞான பாலையப் பெருமாளே.



சந்நிதானம்
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளை வணங்குதல்.



ஸ்ரீலஸ்ரீ தருமை சந்நிதானமும்,
ஸ்ரீலஸ்ரீ மயிலம் சந்நிதானமும்,

உ

குருவே துணை

# மன நலம்

**வித்வான் இராமசாமி அடிகள்,**

துணைத்தலைவர்,

சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர்.

---

மக்கள் மாண்புடன் விளங்கக் காரணமாய் இருப்பது மன நலம். மனத்தினைப்பற்றி பல பெருமக்களும் பலவாறு கூறியுள்ளனர். மனம், நெஞ்சு, உள்ளம் என்னும் சொற்கள் ஒரு பொருள் குறிப்பனவாக எடுத்து ஆள்கின்றனர். மனம் பண்படவேண்டும்; பண்பட்ட மனத்தால்தான் செயற்கரும் செயல்களைச் செய்யலாம். வாழ்வாங்கு வாழ வழி வகுக்கலாம். உயர்வும் உறுதியும் ஓங்கத் திகழலாம். அன்பும் அறனும் நேர்மையும் பண்பும் நிலைநிற்கச் செய்யலாம். வைத்து ஓடாத மனநிலை படைத்தவரே அறவோர் ஆவர்.

மனம் தீநெறிச்செல்லாது ஒருவழிப்படுத்தும் வாழ்க்கை யமைந்த மேலோர்கள் மனம் நலம் பெறுவதற்கான வழிகளை பலவகைக் கோணங்களிலிருந்து விளக்கி உள்ளனர். வீர சைவச் செந்நெறியில் மேம்பட விளங்கிய அருளாளர் செந் தமிழ்ப் புலமைசேர் சிவநெறிச் செல்வர் வேதாந்த சித்தாந்த விளக்கம் அருளிய தனிப்பெரும் தவமுதல்வர் இரக்கம் உறுதி விளக்கம் மெய்யறிவு ஆதியனவே வீட்டுநெறிக்கு உரியன என எடுத்துக்காட்டிய பெருந்தகை சாந்தலிங்க அடிகளார் தம் வாழ்க்கையில் கொண்ட மாண்புறும் நெறியருள் வைராக்கிய சதகத்தின் முதற்பாடலில்,

> வாழி நெஞ்சமே! சென்றிடேல்! நின்றிதோர்
> வார்த்தையெற்கு உரை செய்வாய்!
> கீழ்யாம் இயற்று உயர்தவத்து இவ்வுடல்
> கிடைத்ததன்றோ மற்று(து)
> ஊழிகாலம் இங்கிருக்குமோ நீயும் ஓர்ந்து
> உளைபெனில் உருபொழ்தே
> சூழும் ஏழ்பவம் துடைத்தல் செய்யாய் இதேன்
> தொழுதரன் துணைத்தாளே

எனக் கூறியுள்ளார்.

இதில், நீரோட்டம்போல் நிலைபெரு நெஞ்சினை நோக்கித் தம் வழிப்படுத்தும் கூற்று வினாவிடையாக விளக்கப்படுகிறது. உடலும் உயிரும்போல ஒன்றிய அறிவும், மனமும் வாதிடுவதாக அமைந்துள்ளது அதனைக் காண்போமாக.

அறிவு :—மனமே நீ வாழ்வாயாக !

மனம் :—சேறும் நீரும்போல் பிரிவின்றி உன்னோடு ஒருமித்து நிற்கின்ற என்னை வேறுபடுத்தி வாழ்த்துவதேன்.

அறிவு :—காட்டாறு போல ஐம்பொறி வழியில் ஓடி அலைகின்ற மனமே அவ்வாறு ஓடாதே. சிறிது நேரம் நில். எனக்கு ஒரு சொல் கூறு !

மனம் :—யான் சொல்லவேண்டியது எதுவென்று உரைப்பின் சொல்லுவேன்.

அறிவு :—நாம் முன் பல்ஊழிகாலம் நல்வினையாற்றியதால் கிடைத்ததல்லவா இம் மனித யாக்கை.

மனம் :—ஆம், உண்மைதான்.

அறிவு :—அப்படி கிடைத்த மனித யாக்கையிலே மெய்யறிவு பெற்று, நற்பணியாற்றி இறைவனடியைச் சேராது, வீணுகக் கழிப்பது சரியா ?

மனம் :—நாம் இறைவனடியை அடையாது, இருப்போம் இல்லை, அதற்கேன் விரைதல் வேண்டும் பின்னர் அடைவோம்.

அறிவு :—இவ்வுடல் உயிர்வாழ்க்கை குடம்பை தனித்தொழிய புள்பறந்ததுபோல் நெருநல் உள்ளவன் இன்றில்லை என்னும் நிலையில் அல்லவா இருக்கின்றது.

மனம் :—அழிந்தால் மறுபிறப்பில் இறைவனடி யடையலாமே, ஏன் விரைதல் வேண்டும்.

அறிவு ;—பெறுதற்கரியது மானிடப்பிறவி பெற்ற பிறவியில் இறைவனடியை அடைய முயலாது இருப்பின் பின்னும் இப்பிறப்பே கிடைத்தல் இயலுமோ? இப்பிறவி கிடைத்தற்கரியது; பண்டை நல்வினைப்பயனால் எய்தியது என்பதை உணர்ந்துள்ளாய் ஆனால், மனமே! இவ்வுடலோடு உயிர்வாழும் காலத்தே இறைவன் இணையடிகளை வணங்கி என்றும் இறவாத இன்ப அன்பினைப் பெறுக. எழுவகைப் பிறவியை நீக்கிக்கொள்க. என்பதாக மனம் நலம் எய்தற்குரிய பண்பினை விளக்குகின்றார். பின்னும் :

தாளையேதர மறிகிலா தெமக்கெளி
தருசிவப் பிரகாசற்
காளியாமெனத் திரிந்தவன் பணிபுரிந்
தரிய வீ டடைகில்லாய் ... ... ...

என அருளுகின்றார்

மெய்யறிவு தந்தவர். கருணையினால் வினையில் கிடந்த எமக்கு எளிதிலே திருவடிபணிய அருளியவர். ஞானப் பெருந்தகை சிவப்பிரகாசரின் பணிபுரிந்து வீட்டுநெறியினைப் பெற்றாயில்லை என மனதினை நோக்கி வலியுறுத்தி வழிப்படுத்துகின்றார் நந்தம் சாந்தலிங்க அடிகளார்.

இவர் செம்பொருள் கண்ட வாய்ச்சொல் என்னே! மனம் நிலை பெறாது ஓடுவது, ஐம்புலவேடரால் அலைவது, ஆற்றோட்டமும், காற்றோட்டமும் பின்னிட முன் செல்வது, தீயனவற்றை எளிதில் பற்றுவது, என்பனவற்றைக் கருத்தில் கொண்டு அம்மனம் நன்னெறிச்சென்று நல்லனவற்றைப் பின் பற்ற எண்ணவேண்டும் என்பதை வலியுறுத்தத் தம் முதற் செய்யுளில் "சென்றிடேல் நின்று ஒரு வார்த்தை சொல்" எனப் பன்முறையும் விளித்து, விளித்துக் கூறுவதுபோல் அமைத்துள்ளார்.

இம்முறையிலே கற்பனைக் களஞ்சியமாம் தமிழ் வளர் உள்ளச்செம்மல் சிவப்பிரகாச அடிகளார் மனதை ஒரு குதிரையாக உருவகிக்கிறார். புலன்களை அது செல்லும் மயக்க நெறியாகக் கூறுகின்றார். அப்படிச்செல்லும் மனக்குதிரையை அற நெறிப்படாது அடக்குதற்கு இறைவன் இன்னருளன்றி வேறொன்றாலும் இயலாது என்கின்றார். அடங்கிய மனம்

கட்டுண்டிருப்பதல்ல. அது நன்னெறிப் படவேண்டும், அந் நெறி இறைவனது அருள்வேட்கும் செந்நெறிதான் என்று சொல்லுகின்றார். அந்நெறியை அருள்பவன் அவனே என் பதையும்,

“ மனம் எனும் வயமா என்வயப்படாது
மயக்குறும் ஐம்புல வீதி
மதிப்படா தோடுகின்றது முறையோ
மறித்ததை நிறுத்தி எந்தனக்கு
நினையலது உதவுவாரிலை அதனால்
நினைப்பரா உற்றனன் அதனை
நிறுத்திநீயிவர்ந்து பின்னர்நீ வேண்டும்
நெறிகளில் சென்றிட விடுவாய்”.

என்று அது செல்லும் தீநெறியும் அதனை அடக்குவதற்கு பிறவாயாக்கைப் பெரியோன் இன்னருளை வேண்டும் திறனும் ஒருங்கே யமைய அருளியுள்ளார்.

இதனையே உடன்பாட்டு முகத்தால் அப்பர் அடிகளும் மனமே! நீ நிலைபெறவேண்டுமானால் இங்கே வா! பொது நிலையமாம் இறைவனது திருக்கோயிலை அலகிடு; நீர் தெளி; மெழுகு; மாலை புனைந்து அவனடிக்கிட்டு வழிபடு; அவன் புகழ்களைப் பாடிப் பணி எனக் கட்டளையிடுகின்றார். இவ்வாறு வழி வழிவந்த பெருமக்கள் மனநலம் பெறுதற்காகக் கையாண்ட வழிகளும் அவர்கள் மனநலத்திண்மையும் நம் மனோருக்கு அறிவியலுடனே அருள்நெறி அளிக்கும் பொன் னேடுகளாகப் பொலிவுடன் விளங்குகின்றன. அவர்கள்பெற்ற மனநலம் தத்தமக்கேயன்றி அன்றும் இன்றும் என்றும் அந் நெறி நின்று நலம்பெறுவோர் அனைவருக்கும் மேம்பாட்டைத் தருகின்றது.

மக்களினம் வாழ தாம் வாழ்ந்துகாட்டி மக்களுக்காக வாழ்ந்த இத் தனிப்பெரும் தலைவர்கள் இவ்வாறு எதிர்மறை யாலும் உடன்பாட்டாலும் மனநலம் பெறுதலே சிறப்பு எனக் காட்டியது ஏன்?

அவ்வாறு இவர்கள் காட்ட பண்டைய முன்னோர் வழி வகுத்தனரா? என்ற ஐயம் எழுமேல் அதனைப் போக்க வள்ளு வர் முன்னிருக்கின்றார்.

அவர் கூறுகின்றார்.

நிலைபெற்றதாகிய இவ்வுயிர் மேம்பாடு அடையவேண்டு மானல் மனநலம் வேண்டும்; அந்நலம் அவ்வோருயிரன்றி நிலை பெறும் பல்லுயிரும் மேம்படு துணை நிற்கும் என்கின்றார். ஏன்! வள்ளுவரது மனநிலை அதற்குச் சான்றாக முன் நிற்கின்றது. அவரது செம்மை மனம் அவரை வாழ்வித்து மேம்படச் செய்ததோடு அம்மனத்தால் தோன்றிய திருக்குறள் அன்று முதல், இதுவரை இனி மேலும் அதனை யுணர்ந்த அனைத் துயிர்க்கும் ஆக்கம் தருவதாயுள்ளது.

இம்மன நலம் சார்ந்து வாழும் சான்றோரை ஒட்டியே அமையும் என்பது வள்ளுவர் உள்ளக்கிடக்கை. இதனைத் தான் சமய முதல்வர்களும் இறைவனையும் குருவையும் சாரு கின்ற நெறியிலே அன்னோர் அருள் முன்னிற்க அமையும் என்று கூறிப் போந்தனர். இதனை **வள்ளுவர் :**

> “மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
> எல்லாப் புகழும் தரும்”

என ஏழு சொற்களால் எழிலுறக் காட்டியுள்ளார்.

எனவே மனநலமும், அதனுடன் சார்ந்தோரை வாழ்விக் கும் சான்றாண்மையும் கொண்ட எந்தம் அருள்மிகு அடிகளா ரின் மணிவிழாவில் அவர் அருள் பெற்று மனநலமெய்தி வாழ்வோமாக.

---

கட்டுண்டிருப்பதல்ல. அது நன்னெறிப் படவேண்டும், அந் நெறி இறைவனது அருள்வேட்கும் செந்நெறிதான் என்று சொல்லுகின்றார். அந்நெறியை அருள்பவன் அவனே என் பதையும்,

“ மனம் எனும் வயமா என்வயப்படாது
மயக்குறும் ஐம்புல வீதி
மதிப்படா தோடுகின்றது முறையோ
மறித்ததை நிறுத்தி எந்தனக்கு
நினையலது உதவுவாரிலே அதனல்
நினைப்பரா உற்றனன் அதனை
நிறுத்திநீயிவர்ந்து பின்னர்நீ வேண்டும்
நெறிகளில் சென்றிட விடுவாய் ”.

என்று அது செல்லும் தீநெறியும் அதனை அடக்குவதற்கு பிறவாயாக்கைப் பெரியோன் இன்னருளை வேண்டும் திறனும் ஒருங்கே யமைய அருளியுள்ளார்.

இதனையே உடன்பாட்டு முகத்தால் அப்பர் அடிகளும் மனமே! நீ நிலைபெறவேண்டுமானல் இங்கே வா! பொது நிலையமாம் இறைவனது திருக்கோயிலை அலகிடு; நீர் தெளி; மெழுகு; மாலை புனைந்து அவனடிக்கிட்டு வழிபடு; அவன் புகழ்களைப் பாடிப் பணி எனக் கட்டளையிடுகின்ருர். இவ்வாறு வழி வழிவந்த பெருமக்கள் மனநலம் பெறுதற்காகக் கையாண்ட வழிகளும் அவர்கள் மனநலத்திண்மையும் நம் மனோருக்கு அறிவியலுடனே அருள்நெறி அளிக்கும் பொன் னேடுகளாகப் பொலிவுடன் விளங்குகின்றன. அவர்கள்பெற்ற மனநலம் தத்தமக்கேயன்றி அன்றும் இன்றும் என்றும் அந் நெறி நின்று நலம்பெறுவோர் அனைவருக்கும் மேம்பாட்டைத் தருகின்றது.

மக்களினம் வாழ தாம் வாழ்ந்துகாட்டி மக்களுக்காக வாழ்ந்த இத் தனிப்பெரும் தலைவர்கள் இவ்வாறு எதிர்மறை யாலும் உடன்பாட்டாலும் மனநலம் பெறுதலே சிறப்பு எனக் காட்டியது ஏன் ?

அவ்வாறு இவர்கள் காட்ட பண்டைய முன்னோர் வழி வகுத்தனரா? என்ற ஐயம் எழுமேல் அதனைப் போக்க வள்ளு வர் முன்னிருக்கின்ருர்.

அவர் கூறுகின்ருர்.

நிலைபெற்றதாகிய இவ்வுயிர் மேம்பாடு அடையவேண்டு மானால் மனநலம் வேண்டும்; அந்நலம் அவ்வோருயிரன்றி நிலை பெறும் பல்லுயிரும் மேம்படு துணை நிற்கும் என்கின்றார். ஏன்! வள்ளுவரது மனநிலை அதற்குச் சான்றாக முன் நிற்கின்றது. அவரது செம்மை மனம் அவரை வாழ்வித்து மேம்படச் செய்ததோடு அம்மனத்தால் தோன்றிய திருக்குறள் அன்று முதல், இதுவரை இனி மேலும் அதனை யுணர்ந்த அனைத் துயிர்க்கும் ஆக்கம் தருவதாயுள்ளது.

இம்மன நலம் சார்ந்து வாழும் சான்றோரை ஒட்டியே அமையும் என்பது வள்ளுவர் உள்ளக்கிடக்கை. இதனைத் தான் சமய முதல்வர்களும் இறைவனையும் குருவையும் சாரு கின்ற நெறியிலே அன்னோர் அருள் முன்னிற்க அமையும் என்று கூறிப் போந்தனர். இதனை **வள்ளுவர்** :

> " மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
> எல்லாப் புகழும் தரும்"

என ஏழு சொற்களால் எழிலுறக் காட்டியுள்ளார்.

எனவே மனநலமும், அதனுடன் சார்ந்தோரை வாழ்விக் கும் சான்றாண்மையும் கொண்ட எந்தம் அருள்மிகு அடிகளா ரின் மணிவிழாவில் அவர் அருள் பெற்று மனநலமெய்தி வாழ்வோமாக.

---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சேக்கிழாரில் திருவள்ளுவர்

**வித்துவான் - கு, நடேச கவுண்டர்,**
அகநகர் உயர்பள்ளி, கோயமுத்தூர்.

"தூக்குசீர்த் திருத்தொண்டத் தொகைவிரி, வாக்கினுற் சொல வல்லபிரான் எங்கள், பாக்கியப்பயனுப்பதிகுன்றைவாழ்" சேக்கிழார் நாயனுர் திருவாய்மலர்ந்தருளிய பெரிய புராணத்தில் தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவர் அருளிச்செய்த திருக்குறட் சொல்லும் கருத்தும் எவ்வாறு துதைந்துள்ளன என ஓரளவு எடுத்துக்கூறுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

அறிஞர் விரும்பிக் கற்றற்கேற்றனவாக நம் செந்தமிழ் மொழியில் அளவற்ற அரும்பெறல் நூல்கள் அமைந்துள்ளன. அவற்றுள்ளும் மிகச் சிறந்தனவாக,

"வள்ளுவர் நூல் அன்பர்மொழி வாசகந் தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம்"

என ஆறு நூல்கள் உமாபதி சிவாச்சாரியரால் பாராட்டப் பெற்றுள்ளன.

அவற்றுள் "வள்ளுவர் நூல்" உலகப் பொதுமறையாக அன்றும் இன்றும் அனைவராலும் போற்றப்பெற்று வருகின்றது. "தந்தெய்வம் எந்தெய்வம் என்று எங்கும் தொடர்ந்தெதிர் வழக்கிடநின்ற" முழுமுதல் இறைவனைப்போலத் தங்கள் சமய நூல் எங்கள் சமயநூல் எங்கள் சமய நூல் எனப் பல சமயத்தாரும்—இக்காலத்திலே பலவகைப்பட்ட அரசியற் கிளர்ச்சியாளருங்கூட — உரிமைகொண்டாடப்பெறுவது. தொண்டர் புராணமோ எனின், அங்ஙனம் பொதுவாக நில்லாது,

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை என
உய்வகையால் **பொருள் சிவன்** என்றருளாலே
உணர்ந்தறிந்தார்".

(சாக்கியநாயனர் புராணம் 5-ம் செய்யுள்)

ஆகிய சிவனடியார்களின் திறங்களைச் செப்பும் சிறப்பு நூல். இச்சிறப்புநூலில் பொதுமறையின் சொல்லும் பொருளும் செவ்விதில் செறிந்து மிளிர்கின்றன. பொதுமறை கூறும் இலக்கணங்களுக்கு எடுத்துக்காட்டாகச் சிறப்பு நூலின்கண் கூறப்படும் அடியார்களின் வரலாறுகள் அமைந்துள்ளன.

சேக்கிழாரது திருக்குறட் பயிற்சி வன்மையைக் குறித்துக் கர்ணபரம்பரைச் செய்தியொன்று வழங்கி வருகின்றது. அவர் சிறுவராக இருந்தபோது சோழமன்னன், "மலையிற் பெரியது எது? கடலிற் பெரியது எது? நிலத்திற் பெரியது எது" எனக் கேட்கப் பலரும் விடை பகர அறியாது திகைத்தபோது சேக்கிழார்,

"நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

"பயன் தூக்கார் செய்த உதவி நயந்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

"காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

எனத் திருக்குறட் பாக்களால் விடையிறுத்தாராம். அங்ஙனம் இளம்பருவத்திலே வள்ளுவர்பால் தெள்ளிய பயிற்சியுடையரா யிருந்தவர், வளர்ந்து அறிவு மிக்க அமைச்சராயிருந்து இறைவன் அருள் வாய்த்து அரும்பெறல் நூல் ஆக்குங்கால் வள்ளுவரை மறந்துவிடுவாரோ? வாய்க்குமிடமெல்லாம் வள்ளுவர் திரட்டிவைத்த பாக்கியத்தைப் பயன்படுத்திக்கொள்ளுகின்றார். இனிச் சில எடுத்துக்காட்டுக்கள் காண்பாம்.

திருக்கயிலைமலை அண்ணல் வீற்றிருக்கப்பெற்றது. ஆங்கு மூன்றுலகத்துள்ளாரும் நான்மறைகளும் தாம் வேண்டியவற்றை வேண்டியாங்குப்பெற, "வேண்டுவார் வேண்டுவதே

ஈவானே" வணங்க நண்ணுகின்றனர். அத்தகைய இறைவனைக் காட்டுவது அவரவர் முன்புசெய்த மாதவப் பயனே யாகும்; தவம் இல்லாதவர் வேண்டியதை வேண்டியாங்கு எய்தமாட்டார்; இறைவனையும் காணமாட்டார். ஆதலால் இறைவனைத் தன்மேல் இருப்பவனுகக் காட்டி, நண்ணினுர்க்கு வேண்டும் பயனையும் தந்து தண்ணிலாவென வெண்ணிறம் வீசிப் புண்ணியந் திரண்டாற்போலப் பொலிந்துள்ளது கயிலை மலை என்பார்,

"அண்ணல் வீற்றிருக்கப்பெற்ற தாதலின்
நண்ணு மூவுலகும் நான்மறைகளும்
எண்ணில் மாதவம் செய்ய வந்தெய்திய
புண்ணியம் திரண்டுள்ளது போல்வது"

(திருமலைச்சிறப்பு 2 செ.)

என்ருர் சேக்கிழார். கயிலைமலை இறைவனது அரசிருக்கை:—

பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனும்
இந்திராதியரும் இறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கள் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செகுத்தும் உற்றவர்த் தாங்கியும்
பரசுநர் பரசப் பணிகுநர்பணிய
அரசு வீற்றிருப்பது" அங்கேதான்.

எனவே அவரவர் வேண்டியதைப்பெறக் காரணமாக இருப்பதால் கயிலை "மாதவம் செய்த புண்ணியம் திரண்டுள்ளது போல்வது" ஆயிற்று. இத்தொடர்,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப்படும்" என்ற திருக்குறளை

நினைப்பிக்கின்றது. கயிலையை நண்ணி இறைவனைக் கண்டு குறைதீரப் பெறுவார் எண்ணில் பல்கோடி உயிர்க்கூட்டத்தில் ஒரு சிலரேயாவர். ஏன்? என்பதற்கு விடை

"இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலா தவர்" என வள்ளுவர் கூறுகின்ருர்.

புண்ணியமே இறைவனுக்கு உறைவிடம்; இறைவனைக் காட்டுவது; இறைவன் வடிவம்; இதனை,

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"

என்று வள்ளுவர் வற்புறுத்தார்.

"ப்ராக் புண்யாசல மார்க்க தர்சித சுதாமூர்த்தி!"

எனச் சிவபெருமானுக்கும் சந்திரனுக்கும் இரட்டுற மொழிந்தார் சங்கராசாரியர்.

பொருள்:—சந்திரனைக் குறிக்கும்போது கிழக்குத் திசையிலுள்ள புண்ணிய மலையின் (உதயகிரியின்) வழியிலே காணப் படுகின்ற, அமுதமயவடிவன்

சிவனைக் குறிக்கையில்—முன்னைப் பிறவிகளிற் செய்த மலைபோன்ற புண்ணியங்களின் வழியால் காணப்படுகின்ற பேரின்பமயமான வடிவன் என்பதாம்.

"அணுவிலும் அணுவாய்ப் பெரிதிலும் பெரிதாயுள்ள ஆன்மா இச்செந்துவினது இருதய குகையிலுள்ளது என்னும் பொருள்பட வடமொழி உபநிடதங்கள் பல உரைக்கும். அதனை வள்ளுவர் பெருமான் "மலர்மிசை யேகினான்" என்ற தொடரால் உணர்த்தினார். இவ்விரு மொழி மறைகளின் கருத்தை அருண்மொழித்தேவர் அழகாகத் தம் செய்யுளில் அமைத்திருக்கின்றார். திருவாரூர் நிலமகளின் இருதய கமல மலராகும். அதன்கண் புற்றிடங்கொண்ட பெருமான் வெளிப் பட்டிருக்கின்றார்; ஆன்மாக்களின் உள்ளக் கமலத்தில் வெளிப் படுவதுபோல என்ற கருத்தமைய,

"பூதம் யாவையின் உள்ளலர் போதென
வேதமூலம் வெளிப்படு மேதினிக்
காதன் மங்கை இதய கமலமாம்
மாதர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால்" (திருமலை—33)

(பூதம்-ஆன்மாக்கள்; உள்ளலர் போதென-இதய கமலமலரில் வெளிப்படுதல்போல; வேதமூலமாகிய இறைவன் வெளிப்பட்டுள்ளதும், நிலமகளின் இதய கமலமாகவுள்ளதுமான ஆரூர் எனக் கூட்டிப் பொருள் கொள்க.)

இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர்

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என அருளினார்.

சேக்கிழாரும் திருநாட்டுச் சிறப்பு 26-ஆம் செய்யுளில்

"அரசுகொள் கடன்களாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவரும் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாடம்நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்"

என்றார். குரவர்-தென்புலத்தார், கடவுள்-தெய்வம், விருந்து-, கிளை-ஒக்கல் ஆகிய இவர்களைப் பேணுதலைக் குறித்ததோடு "அறங்கள் பேணி" என்றதனால் இம்மையில் உடம்பைப் பேணுதலோடு மறுமையில் உயிர்க்கு வேண்டியதையும் செய்துகொள்ளுவதால் தன்னைப் பேணுதலையும் குறித்தார். எனவே வள்ளுவர் கூறிய "ஐம்புலத்தாறு"ம் ஆறுவது கூறாக அரசனுக்குச் செலுத்தவேண்டிய கடமையையும் கூறியுள்ளார் சேக்கிழார்.

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"
"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"

என்ற பொதுமறைக் கருத்து,

"நற்றமிழ்வரைப்பின் ஓங்கு நாம்புகழ் திருநாடென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந்து இனிதுகாக்கும்
கொற்றவன் அநபாயன் பொற்குடைநிழற் குளிர்வதென்றால்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்பலாமோ".

என்ற செய்யுளில் அமைந்திருத்தல் காண்க.

"அறம்பொருள் இன்பமான அறநெறி வழாமற்புல்லி
மறங்கடிந்து அரசர்போற்ற வையகம் காக்கும்நாளில்
சிறந்தநல் தவத்தால் தேவி திருமணிவயிற்று மைந்தன்
பிறந்தனன் உலகம்போற்றப் பேரரிக் குருளை அன்னான்".

(திருநகரச்சிறப்பு 17). இச்செய்யுளில் மனுவேந்தன் அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றினையும் அறநெறி வழுவாமல் தழுவினான் என்கின்றார் சேக்கிழார். அறநெறி வழுவாமல் அறத்தைப் புல்லுவதாவது "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்" எனவும் "அழுக்காறவா வெகுளியின்னாச்சொல் நான்கும்-இழுக்கா வியன்றதறம்" எனவும் கூறுவதால் விளக்க முறும். அறநெறி வழாமற் பொருளைப் புல்லுதல்

"அறனீனும் இன்பமுமீனும் திறனறிந்து—தீதின்றி வந்த பொருள்", "சலத்தாற் பொருள் செய்தேமார்த்தல் பசுமட் குடத்தினீர் பெய்திரீஇ யற்று" என்ற குறட் பாக்களால் விளங்கும். இன்பத்தை அறநெறி வழாமற் புல்லுவதாவது "அறத்தான் வருவதே இன்பம்" என்பதனுல் விளங்கும். எனவே, மனுவேந்தன் அறத்தால் மறங்கடிந்து பொருளால் அரசர்போற்ற வையகம்புரந்து இன்பத்தால் தவப்பேருகிய மைந்தனைப் பெற்ருன் என்று பொருள் தந்து, வள்ளுவர் கருதிய அரசியலுக்குச் சாட்சியாக இத்திருப்பாட்டு அமைந் திருக்கின்றதன்ருே !

ஆவின்கன்று தேர்க்கால்மீது செல்லப்பட்டு இறந்தது கண்ட வேந்தன் மகன்

"மலர்தலை உலகம் காக்கும் மனுவெனும் எங்கோமானுக்கு
உலகில் இப்பழி வந்தெய்தப் பிறந்தவா ஒருவன்"

என்று வருந்தினுனும். இதில் "இவன் தந்தை என்னோற்ருன் கொல் என்னும் சொல்" (குறள்) வந்தெய்துவதற்குக் காரண மாகாமல் "பழிபிறங்காப் பண்புடை மகன் (குறள்) ஆகாமல் 'பழிவந்தெய்தப் பிறந்தேனே' எனக்கவலுகின்ருன்; இதனுட் குறட்பாக்களின் கருத்து மறைந்தமைந்துள்ளமை காண்க.

பசுவின்கன்று மடிந்தவிதத்தை அமைச்சர் கூறக்கேட்ட மனுவேந்தன் "ஆவுறு துயரம் எய்தி ... ... வேதனை அகத்து மிக்கு" ஏங்கினுனை; இத்தொடரில் "அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய் தன்நோய்போல் போற்ருக்கடை" என்ற குறள் பொதிந்துளதன்ருே.

மந்திரிகள் மனுவேந்தன் வருந்துவதைக்கண்டு சிந்தை தளர்ந்தருளுவது மற்றிதற்குத்தீர்வின்று" கழுவாய் செய்தல் கடன் என்று கூறியபோது அரசன் அவர்கள் கூற்றை மறுத் துரைத்தான். நடுநிலை தவருமல் பசுவினுக்கு முறைவழங்க முன்னுகின்ருன். அந்நிலையில் அவனை "மனுவென்னும் வறல் வேந்தன்" என்ற அடைமொழியில் சேக்கிழார் சிறப்பிக்கின் ருர். அந்த விசேடணம் "வேலன்று வென்றிதருவது மன்ன வன்—கோலதூஉம் கோடாதெனின்" என்ற திருக்குறளை நினைப்பூட்டுகின்றது. எனவே மனுவேந்தன் வேலினுலும் கோலினுலும் விறலுடையவன் எனக் குறித்தார் சேக்கிழார்.

" இறப்பினும் திருவெலாம் இழப்ப எய்தினும்
துறப்பிலர் அறம்எனல் சூரர் ஆவதே" என்ற

கம்பர் கருத்தும் ஈண்டு குறிக்கொள்ளத்தக்கது. இத்தன்மை நியாய வீரம் எனப்படும்.

நியாய வீரனாகிய மனுவேந்தன் "தம்பொருள் என்பதம் மக்கள்" (திருக்குறள்) என்பதையும் பொருட்படுத்தாது "ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்– தருமந்தன் வழிச்செல்கை கடன் என்று தன் மைந்தன், மருமம் தன் தேராழி உறவூர்ந்தான்" என்று அருண்மொழித்தேவர் அருளினார். தன் குலத்துக்குள்ள ஒரே மைந்தன்மேல் தானே தன் தேராழியைச் செலுத்தி நடு நிலைமையோடு முறை செலுத்திய தன்மை "கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்— கோடாமை சான்றோர்க்கணி" என்ற வள்ளுவரின் துணிபாகும். "தருமம் தன் வழிச் செல்கை கடன்" என்றது அரசன் மகனுக்கு அழிவு வருமே என்ற கருத்தினால் அமைச்சர்கள் கூறிய சழக்குரையின்படி கழுவாய் செய்திருந்தால் அது "மனத்துக்கண் மாசின்றி" அறத்தை மேற்கொண்டதாகாது; அவர்கள் கூற்று "சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா உட்கோட்டமின்மைபெறின்" என்ற பொதுமறைக்கு மாறுபட்டது; அதன்படி நடந்தால் "தருமந்தான் சலியாதோ" என்று கருதி, தருமம் தன்னுடைய வழியிலே முட்டின்று நடக்குமாறு முறை செய்வதே தன் கடமை என்று மனுவேந்தன் துணிந்தமையைக் காட்டுகின்றது. அப்போது "அண்ணலவன் கண் எதிரே அணிவீதி மழவிடைமேல் விண்ணவர்கள் தொழ நின்றான் வீதிவிடங்கப்பெருமான்"; அப்போதே உயிர் பிரிந்த ஆன் கன்றும், மன்னவன் மகனும் மந்திரியும் ஒருங்கே எழுந்தனர் என்று கூறுவது.

" இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"

என்ற பொதுமறைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

" இனையவகை அறநெறியில் எண்ணிறந்தோர்க்கு அருள்புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர் "

என்ற தொடரில் அறநெறியில் நின்றோரே இறைவன் அருள் பெறற்குரியார் என்பதும் "அறவனார் பூங்கோயில்" என்ற தொடரால் இறைவனை, "அறவாழியந்தணன்" என்றதன் காரணமும் விளங்கும்.

இனித் தியாக வீரத்தைச் சேக்கிழார்,

"கூடும் அன்பினிற் கும் பிடலேயன்றி
வீடும் **வேண்டா விறலின்** விளங்கினர்" எனத்

திருக்கூட்டச் சிறப்பிற் கூறியருளினர். வேண்டா விறல் - வேண்டாமையாகிய வீரம், இச்சொற்றொடர்,

"இறலினும் எண்ணது வெஃகின் **விறலீனும்
வேண்டாமை** என்னும் செருக்கு" என்ற

திருவள்ளுவர் கருத்துத்தானே!

திருமுனைப்பாடி நாட்டின் சிறப்புக் கூறும்போது

"மங்கையர் வதன சீத மதியிரு மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடிநாடு"

என்றார் சேக்கிழார். இதன் பொருள்—மகளிரது முகமாகிய குளிர்ந்த மதியினது இருபக்கத்திலும் அவரது விழிகளாகிய கயல்கள் செவியிலணிந்துள்ள குழையை அடையும் என்பது. கயல்கள் குழையை நாடுவது (அதாவது மீன்கள் தடாகத் துள்ள கொடிகளின் இளந்தளிரை நாடுவது) இயல்புதானே! இது மகளிரின் முகம் கண் இவற்றின் வருணனையாக இருப்பினும் மற்றோர் சிறப்பான பொருளையும் குறிப்பாய் உணர்த்து கிறது. பெண்களது கண் குழையை நாடுவதேயன்றி மனிதர் யாதனையும் நாடத் தேவையில்லாதபடி வளம் மிகுந்தது இந் நாடு என்பது அக்குறிப்புப்பொருள். இது ஒரு பொருளில் மற்றொருபொருள் குறிப்பாகத் தோன்றுதல் என்பர் அணியி லக்கணம் வல்லுநர். அணிவகையில் குறிப்பு ஒழித்துக்காட் டணியாகும். இக்குறிப்புப்பொருள் "நாடென்ப நாடா வளத் தன நாடல்ல நாடவளந்தரும் நாடு" என்ற குறட் கருத்தே யாகும்.

இளையான்குடிமாறநாயனர் புராணத்தில்,

"ஆளும்நாயகர் அன்பரானவர் அளவிலார் உளம்மகிழவே
நாளும் நாளும் நிறைந்துவந்து நுகர்ந்த தன்மையின் நன்மை
நீளு மாநிதியின் பரப்பு நெருங்கு செல்வம் நிலாவிளண் [யால்
தோளினர் அளகைக்கிருத்திய தோழனர் என வாழுநாள்"

என்ற திருப்பாட்டு நல்விருந்தோம்பலின் சிறப்பை விளக்கு கின்றது. இதில் "அளவிலார்...நாளும் நாளும் நிறைந்துவந்து"

என்றது "வருவிருந்து வைகலும் ஓர்புவான்" என்ற திருக் குறளின் தொடரையும்; "ஆளுநாயகர் அன்பர்......நுகர்ந்த தன்மையின் நன்மையால்.......செல்வம் நிலாவி" என்பது "அகனமர்ந்து செய்யாளுறையும் முகனமர்ந்து — நல்விருந் தோம்பு வானில்" என்ற திருக்குறளையும், "அளவிலார்...... நிறைந்து வந்து நுகர்ந்த தன்மை என்பது "செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்" என்ற திருக்குறள் தொடரை யும் "ஆளுநாயகரன்பர்......நுகர்ந்த தன்மையின் நன்மையின் ......அளகைக்கிருத்திய தோழனுறென வாழுநாள்" என்பது இனைத்துணைத்தென்ப தொன்றில்லை விருந்தின் துணைத்துணை வேள்விப்பயன்" என்ற திருக்குறளையும் நினைக்கச் செய்கின்றன அல்லவா!

இங்ஙனம் சேக்கிழாரில் (திருத்தொண்டர் புராணத்தில்) திருவள்ளுவர் (திருக்குறள்) பலவகையானும் கலந்து நிறைந் துள்ளது. தாலிபுலாக நியாயமாகப் புராணத்தின் முகத்தி லுள்ள சிலவற்றையே ஈண்டு எடுத்துக் காட்டினேன். அறிஞர் கள் மற்றைய பகுதிகளிலும் இவ்வாறு நிறையக் கண்டு மகிழ்ச்சியுறலாம்.

ஒன்று குறிக்கொள்ள வேண்டுகின்றேன். திருக்குறட் சொல்லையும் பொருளையும் நல்லிசைப்புலவர் எல்லோருமே தத்தம் நூல்களில் எடுத்து ஆண்டுள்ளனர். ஆனால் ஏனையோர் நூலில் திருக்குறள் அமைந்திருக்கும் முறைக்கும் சேக்கிழாரில் அமைந்திருக்கும் முறைக்கும் ஒரு சிறந்த வேறுபாடு உண்டு. ஏனையோரது செய்யுளாகிய உடம்பிற்குத் திருக்குறள் புறத்தே அணிந்த அணிகலன்போல அழகுசெய்யும். சேக்கிழாரது செய்யுளுடம்பில் அங்ஙனமன்று. நல்லுடல் படைத்தோன் உண்ட அமுது செறித்து, குருதியோடு வீரியமாய்க் கலந்து உடலுக்கு உறுதி தருவதுபோலத் திருக்குறள் திருத்தொண்டர் புராணத்தில் கலந்து பரந்தியங்குவதை அறிஞர் கண்டின் புறலாம்.

# என் உளத்தை விட்டகலா

**வித்துவான் - V. குமாரசாமி அய்யர்,**

தமிழாசிரியர், மேலூர்.

1.

சிதம்பரம் மீனுட்சி தமிழ்க் கல்லூரியில் 1928-ஆம் ஆண்டு ஜூன் மாதம் யான் புகுமுக வகுப்பில் சேர்ந்து, பாலையர் படத்துத் தெருவிலிருந்த என் அருமைச் சிறிய தாயார் வீட்டில் உணவும் இருப்பிடமும் அமைத்துக்கொண்டு படித்துவந்தேன். அத்தெருவில் சேர்ந்தாற்போல வீரசைவர்களுடைய வீடுகள் இருந்தன. எல்லோரும் எனக்கு உறவினர்கள்; ஆனுல் புதியவர்கள்; என்ருலும் என்னிடத்தில் யாவரும் அன்புடையவர்களாகவே யிருந்தார்கள்.

ஒருநாள் காலை 7 மணியிருக்கும். நடுவீட்டு (சண்முக ஐயர் வீடு) வெளித்திண்ணையில் வனப்புமிக்க, செந்நிறமான, முகப்பொலிவுடன் கூடிய பெரியார் ஒருவர் அமர்ந்திருக்கக் கண்டேன். அவர்களுடைய தோற்றம் என் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து ஈர்த்தது. அண்மையில் அவர்களை யார் என்று பார்க்கச் சென்றேன். சிறியேனுகிய என்னை "வாருங்கள்" என்று அவர்கள் அழைத்தார்கள். யான் வணக்கம் செய்துவிட்டு முன் திண்ணையில் உட்கார்ந்தேன். பின்னர் யான் கல்வி கற்க வந்திருப்பதைப்பற்றியும் எங்கள் குடும்பச் செய்திகளையும் பிற உறவினர் நலங்களையும் விசாரித்தார்கள். அவற்றிற்குத் தக்கவாறு பதில் கூறினேன். யான் படிக்க வந்திருந்ததில் தங்களுக்குள்ள பெருமகிழ்வை யறிவித்தார்கள். அப்பொழுது அவர்கள் பேசிய பேச்சில் அன்பு விளங்கியது. அவ்வன்பு என்னை அவர்களுடன் ஒன்றுபடுத்தி இந்நாள் வரையில் வளர்பிறைபோல் வளர்ந்து பிணைத்து நிற்கின்றது. அத்தகைய ஈரமளைந்த வாய்மொழியாளரே பின் ஓராண்டில் குருமகா சந்நிதானமாகி, சிவஞான பாலைய சுவாமிகளாக அன்பர்க்கு அருள் வழங்கிவரும் நம் அடிகளாவர். எங்களது முதற் சந்திப்பினைத் திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலின்கீழ் ஞானுசிரியனைக்கண்ட காட்சிபோல யான் கருதுவதுண்டு. ஆனுல் நான் திருவாதவூரடிகளுக்கு ஒப்பாகேன். சுவாமிகளைச் சிவபெருமானுகக் கருதலாமல்லவா? சைவ சமய நூல்கள் குருவைச் சிவனுக எண்ணவேண்டுமென்றுதானே

கூறுகின்றன. உளநூலார் முதன்முதலில் நிகழ்ந்தது மறவாமல் மனத்தில் பதிர்ந்திருக்கும் என்பர். ஆதலின் இக்காட்சியை யான் எவ்வாறு மறத்தல் கூடும்!

சுவாமிகள் சிதம்பரத்தில் ஒருமாத காலம் வீட்டு வேலையாகத் தங்கியிருந்தார்கள். அப்பொழுது அவர்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அப்பழக்கத்தால் சிவப்பிரகாச சுவாமிகளுடைய பிரபந்தத்தில் சிவஞான பாலைய சுவாமிகளைப்பற்றிய கலம்பகம் முதலிய நூல்களின் பெருமையை அவர்கள் கூற அறிந்தேன். அதற்கு முன்னர் எனக்கு அந்நூல்களில் சிறிதும் பழக்கமில்லை. பின்னரே அவற்றின் நுட்பத்தை உணர்ந்தேன்.

2.

எனக்கு நவராத்திரி விடுமுறை வந்தது. என்னைப் பொம்மபுரம் மடத்திற்குத் தங்களுடன் வருமாறு அழைத்தார்கள். சுவாமிகளுடைய கருத்திற்கு இணங்கி உடன் சென்றேன். அப்பொழுது குரு மகா சந்நிதானமாக விளங்கியவர்களைத் தரிசித்தேன். அவர்கள் கம்பீரமான தோற்றமுடையவர்கள்; கருணையும் வண்மையும் வாய்ந்தவர்கள். அவர்களைக் கண்டால் யாவர்க்கும் மரியாதையோடு கூடிய அச்சம் தோன்றும். அதனால் அவர்களிடம் நெருங்கி உரையாடச் சிறியவனாகிய எனக்குத் துணிவு உண்டாகவில்லை.

நவராத்திரி முடிவில் திருமடத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானும் மடத்தின் அதிபரும் திருவுலா வருவது வழக்கம். அவ்வாறே அதற்கு ஏற்பாடாகிக்கொண்டிருந்தது. அப்பொழுது சுவாமிகள் என்னிடம் சந்நிதானம் உலா வந்து அமர்வார்கள். அவ்வமயம் புலவர்கள் பாக்கள் புனைந்து சொற்பொழிவாற்றுவார்கள். நீங்கள் கவிகள் புனைந்து அவ்வாறு செய்யவேண்டும் என்றார்கள். அதற்கு நான் எளிதில் சம்மதிக்கவில்லை; காரணம் அச்சமே. அப்பொழுது மடத்தில் சிவகுருநாத ஐயர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் நன்றாகப் படித்தவர். அவரும் என்னை உற்சாகப்படுத்தினார். இவ்வளவு சொல்லும்பொழுது என்ன செய்வது? ஒருவாறு தேறுதல் செய்துகொண்டு சம்மதித்தேன். நான் முன்னரே அறுசீரடியாசிரியவிருத்தம் இயற்ற அறிந்திருந்தேன். அப்பாவிலேயே ஐந்து பாடல்களியற்றி இருவரிடமும் படித்துக் காட்டினேன்; நன்றாயிருக்கிறது என்று என்னை மேலும் ஊக்கப்படுத்தினார்கள். இரவில் உலா வந்தவுடன் சந்நிதானம் கொலு

மண்டபத்தில் அமர்ந்தார்கள். கூட்டமும் அதிகமாக இருந்தது. அப்பொழுது சிவகுருநாத ஐயர் சந்நிதானத்திடம் நான் பாக்கள் புனைந்திருப்பதைப்பற்றி யறிவித்தார்கள். சந்நிதானம் அப்படியா என்று என்னை நோக்கிப் புன்முறுவல் பூத்து உட்கார்ந்து சொல்லும்படி அருளினார்கள், நான் பாட்டை நன்றாகப் படித்துக் கூடியவரையில் பொருளையும் விரிவாக எடுத்துரைத்தேன். சந்நிதானமும் அங்கிருந்த அறிஞர்களும் என்னுடைய புனைவுத்திறனைப் பாராட்டினார்கள். இது யான் மடத்தில் ஆற்றிய முதற் சொற்பொழிவு. இந்நெறியில் என்னை அவையில் முந்துறச் செய்த சுவாமிகளுடைய அருளை எளியேன் எங்ஙனம் நினையாமல் இருக்கக்கூடும்!

### 3.

சுமார் பதினைந்து அண்டுகளுக்கு முன்னர் மயிலத்தில் சாது மகா சபை நடைபெறப்போவதாக ஒரு துறவியார் பெரிய விளம்பரம் செய்தார். ரயில்வே நிலையங்களிலும் பிற முக்கியமான இடங்களிலும் பெரிய விளம்பரத்தாள்கள் ஒட்டப்பட்டிருந்தன. அதில் தமிழ் நாட்டிலுள்ள மிக்க செல்வர்கள் பலருடைய பெயர்களும் சிறந்த புலவர்கள் பலருடைய பெயர்களும் போடப்பட்டிருந்தன. சபை, மூன்று நாளைய நிகழ்ச்சிகளையுடையதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்குத் தலைவர்கள் திரு. ஞானியார் சுவாமிகள்; திரு. மறைமலையடிகளார், திரு. சிவஞான பாலைய சுவாமிகள் என்னும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சிக்குறிப்பு நான்கு பக்கங்களைக்கொண்டது. எனக்கும் அதில் ஓர் சொற்பொழிவு போட்டிருந்தது. அத்துறவியாரை யான் அறியாமல் இருந்தாலும் மயில மலையில் சபை நடப்பதால் செல்லலாம் என்ற துணிவுடன் சென்றேன். விழுப்புரம் ரயில்வே சந்திப்பில் ஆசிரியர்—திரு. அ. வரத நஞ்சைய பிள்ளை, திரு. வீ. குமாரவீரையர் முதலிய புலவர்களையும் சந்தித்தேன். அவர்களும் யான் கொண்ட கருத்துடையவர்களாகவே வந்திருப்பதை அறிந்தேன். பின்னர் யாங்கள் மயிலம் போய்ச் சேர்ந்தோம். பொதுமக்கள் பல மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். கூட்டம் மிக அதிகம். சொற்பொழிவாற்றச் சிறந்த புலவர்கள் பலர் வந்திருந்தார்கள். திருநாள் கூட்டம் போலவேயிருந்தது. ஆனால் சபையை நடத்துவதாக வெளியிட்ட துறவியாரை யாங்கள் காணமுடியவில்லை! இறுதியில் சபையை நடத்தவேண்டிய பொறுப்புக்கள் யாவும் சுவாமிகளையே சார்ந்தன. புலவர்கள் பலரைக் காண நேர்ந்ததைப் பற்றிச் சுவாமிகள் மிக மகிழ்ச்சியுற்றார்கள். மூன்று நாளும் சுவாமிகளே சபைக்குத் தலைமை தாங்க நேர்ந்தது.

அவைத்தலைவராக அமர்ந்த அடிகளாரை ஆசிரியர்—திரு. அ. வரத நஞ்சையபிள்ளையவர்கள் தாம் புனைந்த செய்யுளால் வரவேற்றார்கள். அதில் "காற்றானது பல இடங்களிலுள்ள மேகங்களை ஒன்று சேர்த்துக்கொண்டுவந்து ஓரிடத்தில் பெய்யும்படி செய்துவிட்டுச் சென்றுவிடுகிறது. அதுபோல் பல இடங்களில் உள்ள புலவர் பெருமக்களை வரச்செய்து மயிலமலையில் சொன்மழை பொழியச்செய்தலாகிய நற்காரியத்தை அத்துறவியார் செய்துவிட்டார்; அப்பயனை இச்சபையினர் அனுபவிக்கவுள்ளனர்" என்ற பொருளமைந்த செய்யுளும் ஒன்றிருந்தது.

சபையின் நிகழ்ச்சிகள் யாவுல் செவ்வையாக நடைபெற்று வந்தன. வந்திருந்த மக்களுக்கு உணவு மடத்துச் செலவில் அளிக்கப்பெற்றது. ஆனால் மழையில்லாத பஞ்சத்தால் தண்ணீர் கிடைப்பது அரிதாயிருந்தது. வயல் பக்கங்களிலுள்ள கிணற்றிலும் தண்ணீர் குறைவாயிருந்தது. சமையலுக்குத் தக்க காலத்தில் போதிய தண்ணீர் கொண்டுவர முடியவில்லை. தண்ணீரை லாரியின் மூலமாக நீண்டதூரத்திலிருந்து கொண்டுவர சுவாமிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இரண்டாம்நாள் கூட்டம் ஆரம்பமாயிற்று. பகல் மணி 3 இருக்கும். வித்துவான்—திரு. மா. இராஜமாணிக்கம்பிள்ளையவர்கள் பேச இருக்கிறார்கள். அப்பொழுது சுவாமிகள் முன்னுரையில் "புலவர்கள் பலர் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய மொழிகளைக் கேட்க மக்கள் பல இடங்களிலிருந்து வந்திருக்கிறார்கள்; வேண்டிய உணவுப்பொருள்களுக்கு முருகப்பெருமானுடைய திருவருளால் மடத்தில் எவ்வித குறைவுமில்லை. உணவு சமைத்திடத் தண்ணீர் இல்லையே! இயற்கை துணை செய்யாததால் தக்க காலத்தில் பசிக்கு உணவு சமைத்திட முடியாமலிருக்கிறதே! இந்நிலையில் யான் ஒரு மடாதிபதியாக இருந்து என்ன செய்வது! என்று கண்ணீர் விட்டுத் தழுதழுத்த குரலில் இயம்பினார்கள். அப்பொழுது சபையே கலக்கமடைந்துவிட்டது. யாவர்க்கும் உடல் சிலிர்த்தது. யாவரும் இரங்கினர். சபை நிசப்தமாக இருந்தது. அந்நிலையை மாற்ற ஓதுவார் தேவாரப் பாசுரங்களை ஓதினார். பின்னர் பேசத்தொடங்கிய திரு. இராஜமாணிக்கம் பிள்ளையவர்கள் என்னுடைய சொற்பொழிவு திரு. மறைமலையடிகளாரின் தலைமையில் நடைபெறுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இப்பொழுது தலைவராக இல்லாவிடினும் இத்தகு அருள் உள்ளம் படைத்த அடிகளாரின் தலைமையில் யான் பேசுவதே சிறந்தது என்று கூறிப் பேச்சைத் தொடங்கினார்.



பொம்மபுர மடாலயத் தோற்றம்.



நல்லாற்றூர்

சிவப்பிரகாச சுவாமிகள் கோயில்.

அவ்வமயம் சுவாமிகளின் கருணை நிறைந்த உள்ளத்தை யான்மட்டுமல்ல, சபையினரே அன்று நன்கறிந்தனர், அதனை எங்ஙனம் மறத்தற்கியலும்! இவ்வரிய காட்சிகள் இவை என்றும் என் உளத்தை விட்டகலா.

மற்றும், சுவாமிகள்பால் அவ்வப்பொழுது யான்கண்ட நல்லியல்புகளுக்குச் சான்றாகவுள்ள சந்தர்ப்பங்கள் பல. பிறரது குற்றம் பொறுத்தல், பிறருடைய குறைகளைச் சிறிதும் வெளிப் படுத்தாமை, அளவறிந்து—பண்பறிந்து உரையாடல், கடிந்து பேசாமை, தம்மைப் பெருமைப்படுத்திக்கொள்ளாமை, நூலுணர்ச்சியிலேயே தம் காலத்தைச் செலவிடல் ஆகிய நல் லியல்புகளுக்கு உறைவிடமாகவுள்ள எங்கள் பெருமானது புகழினை எங்ஙனம் ஒருங்கே எழுதிக்காட்டல் இயலும்! எங்கள் நாதன் திருத்தாள் என்றென்றும் வாழ்க. வாழ்க.

# எனது எண்ணம்

வித்துவான். திரு. அடிகளாசிரியன்
தமிழ் விரிவுரையாளன்; கரந்தைப் புலவர் கல்லூரி.

1. எல்லாச் சமயங்களும் ஒவ்வொரு சிறந்த கருத்தினை உட்கொண்டே எழுந்துள்ளன.

2. உடம்பிற்கு வேருய் உயிர் என்பதொன்றுண்டு என்பது தெரிந்தால், அவ்வுயிர் உடம்பைக்காட்டிலும் சிறந்ததென்று கருதினுல், அவ்வுயிரே நாம் என்பது விளங்கினுல், அவ்வுயிராகிய நாம் கடைத்தேறுவதற்கு ஏதாவதொரு சமயக் கொள்கைகளைப் பின்பற்றி வாழ்தல் மிக நல்லது.

3. நாம் ஏதாவதொரு சமயக் கொள்கைகளைப் பின்பற்றி வாழும்பொழுது மற்ருெரு சமயத்தை இகழ்ந்து ஒதுக்கினுல், அது நம்முடைய குறுகிய நோக்கத்தினையே காட்டுவதாகும்.

4. அங்ஙனமிருந்துவிடாமல், நாம் மேற்கொண்ட சமயத்தைப்போலவே பிற சமயங்களையும் மதித்து, நமக்குக் காலங்கிடைத்தபொழுதெல்லாம் வேறு சமயநூல்களையும் ஆராய்ந்து, அவற்றில் காணப்பெறும் நல்ல பொருள்களை எடுத்துக்கொண்டால் அது நமக்கு அளவில்லாத நன்மைகளையே உண்டாக்கும்.

5. மக்கள் தீய வழிகளிலிருந்து விலகி நல்ல வழிகளைப் பின்பற்றவேண்டும் என்பதையே எல்லாச் சமயங்களும் கூறுகின்றன.

6. சமயங்கள் கூறும் நல்ல வழிகளில் முதல் வழி மனத்தைத் தூய்மை செய்தலொன்றே.

7. மனத்தில் தோன்றும் தீய குணங்களில் தலைசிறந்தவை காமமும் வெகுளியுமே.

8. காமம் வெகுளி என்னும் இரண்டிலிருந்தே ஏனைய தீய குணங்களெல்லாம் தோன்றுகின்றன.

9. உடம்பிலுள்ள அழுக்கை நீக்கி அழுக்கில்லாத நல்லுடை யணிதலே இக்காலத்து மக்கள் சிறந்த நாகரீகமாகக் கருதுகின்றனர்.

10. இந்த நாகரீகம் சிறந்ததன்று; மனத்தில் தீய குணங்களாகிய அழுக்கில்லாமற் செய்வதே சிறந்த நாகரீகம்; அந்த நாகரீகத்தைப் பெற்றவரே சிறந்தவராவர் என்று அறிஞர் கூறுகின்றனர்.

11. மனத்திலெழும் தீய குணங்களைப் போக்கி மனத்தைத் தூய்மையாக்கக் கருதினால், அது கடவுள் பத்தி ஒன்றினாலேயே கைகூடுவதாகும்.

12. உலகப் பொருண்மேல் வைத்த விருப்பத்தைக் கடவுட் பொருண்மேல் வைத்து அப்பொருளை எக்காலத்தும் நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து நைந்து நைந்து நம்முடைய மனம் உருகவேண்டும்.

13. கடவுளை நினைந்து மனம் உருகினால் மனத்திலுள்ள தீய குணங்களெல்லாம் தாமாகவே ஓடிவிடும்; தீய குணங்கள் இல்லாத மனத்திலே அன்பு செழித்து வளரும்; அன்பு வளரின், கடவுளுடைய திருவருள் பதியும்; திருவருள் பதிந்தால் பெறற்கரிய பேற்றினை நாம் அடையலாகும்.

14. எல்லா அல்லல்களுக்கும் காரணமான தீய குணங்களை மனத்திலிருந்து ஓட்டி, மனததிற்கு அமைதியையும், உவகையையும் கடவுள் பத்தி கொடுக்கின்றபடியாற்றான் அளவிறந்த மக்கள் அதனைப் பின்பற்றுகின்றனர்.

15. கடவுள் பத்தியால் மன அல்லலைப் போக்கக் கற்றுக்கொண்ட மக்களிடம் சிலர் சென்று "கடவுள் இல்லவே இல்லை" என்று கலகமிட்டுக் கத்தினாலும் அதனை அவர் ஏற்றுக்கொள்வதே யில்லை.

16. கடவுளின் திருவருள் பதியப்பெற்ற தூய மனத்தால் சமயப் பொருள்களை ஆராய்கின்றவர்க்கே சமய நுண்பொருள்களெல்லாம் நன்கு விளங்கும்.

# காதலும் கடமையும்

வித்துவான், செ. வரதராசன்.
(கழக உயர்நிலைப்பள்ளி, உளுந்தூர்பேட்டை.)

காதல், இயற்கைப் பேரின்பம்; அன்புவழி மலர்வது; அகம் என்று தமிழிலக்கணம் வகுத்துக் கூறும்.

கடமை, அறத்தின் வழி வளரும் உயரின்பம்; அறிவின் வழி மலர்வது; புறம் என்பதனோடு பொருத்திக் காட்டப்படும்.

தலைவன்—தலைவியர், தம்முள் ஒன்றி அன்புடையவர், எத்தனை இன்னல்கள் எதிர்த்தாலும், அவர்கள் தம்முள் ஒன்றி இன்பம் துய்ப்பர். இது காதல் வாழ்வு. இக்காதல் வாழ்வு மாறின் சாதல் நிலையே நிலைக்கும்.

தலைவன்—தலைவியராக ஒன்றிய இருவர், அல்லது தனித்து நின்ற ஒருவர் என்றும் இன்பமே நேரினும் துன்பமே தொடரினும் உலகெலாம் இன்புற்றிருக்க எண்ணி செயலாற்றுவர். இது கடமை வாழ்வு. இச் செந்நெறி சிதைந்தால் மனித வாழ்வே மாசுபட்டதாகும்.

இக்காதலும் கடமையும் மன்பதை வாழ்விற்கு இன்றியமையாதன. ஒருவரது வாழ்வில் ஒன்று சிறப்புறுகின்றது. மற்றொன்று சிதைவுறுகின்றது. எனினும் அவர்களது வாழ்வு சீருடையதாகாது. காதலும் கடமையும் இரு கண்கள் இரண்டும் சிறக்க வாழ்வதே வாழ்வு !

ஆனால், காதல் சிறக்குமிடத்தில் கடமை நிலைக்குமா? கடமை உயருமிடத்தில் காதல் வெற்றியுறுமா? என்பது இன்றைய வாழ்வியலில் முன்னிற்கும் பிரச்சனை. இரண்டும் ஒருமிக்க அமைந்து வெற்றி வாழ்வினை அமைக்கும் காட்சியினை திருவள்ளுவர் தெளிவாகக் காட்டுகின்றார். காண்போமாக!

தலைவன் ஒருவன், தனது தலைவியை நினைத்தான். தான் அவளிடம் பெற்ற இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் புணர்ச்சி, பாங்கியிற் புணர்ச்சி இன்பங்களை எண்ணி மகிழ்ந்தான். இவை நிகழ்ந்த பகற்குறிக்கு இன்று இடையூறு நிகழ்ந்துவிட்டது.

இருந்தாலும் வருந்தினனு? இல்லை, இல்லை. இரவுக்குறிக்கு முயன்றான். நிலவின் மறைவு, இருளின் வரவு, அன்னையின் உறக்கம் முதலியவற்றை எதிர்பார்த்து பல இடையூறுகளைக் கடந்து, தலைவியின் இல்லத்தை அடைந்தான். இல்லுள் உள்ள தலைவியும் தானும் தோழியின் துணையால்கூட முயன்றனர்; முயங்கினர்; மகிழ்ந்தனர்.

ஆயினும் இந்த மகிழ்ச்சிக்குத்தான் எத்தனை இடையூறுகள்! எத்தனை நாட்களுக்குத்தான் இத்தொல்லை? தலைவர் விரைவில் வரைந்துகொள்ளவேண்டும். என்று தலைவி எண்ணுகின்றாள். இதனைத் தோழி குறிப்பின் உணர்கின்றாள்; தலைவியைச் சிறிது சேய்மைக்கண் இருத்தித் தலைவனைச் சந்திக்கின்றாள்; 'தாங்கள் இவளை வரைந்துகொண்டு உலகோர் தம்மில் இருந்து தமது பாத்து உண்ணும் இல்லறத்தோடு படல் வேண்டும்' என்று உரைக்கின்றாள்.

இத்தோழியின் வேண்டுகோளுக்கு விடையாகப் பேசத் தொடங்குகின்றான், தலைவன்; 'அம்மா!' 'என்ற வியப்போடு தொடங்குகிறான்', பேசுகின்றான்.

"என்ன, உறுதியுணராத் தோழியே, இத்தலைவியொடு கூடிய இன்பம் எத்தகையது அறிவாயா? என்னென்ன உணர்த்துகின்றன தெரியுமா? 'அம்மா!' அதனை யான் என்னென்று கூறுவது!

அந்த இன்பம் இருக்கட்டும்! அவள்தான் எத்தகையவள்! எத்தனை அழகியவள்! (அம்+மா) அழகிய மாமை நிறமுடைய அழகியாயிற்றே! அந்த கருநிறந்தான் எவ்வளவு சிறப்பினது! இல்லாமலா ஒளிபடைத்த கண்ணின் மணியானது கருப்பு நிறத்தினதாக இருக்கின்றது! வானத்தின் நிறமும் கடலின் தோற்றமும் பெண்மையின் தோற்றத்திற்கு வண்ணமளிக்கும் கூந்தல் நிறமும் கருநிறமேயன்றோ! இவையனைத்தும் எத்தனை எண்ணங்களை மக்களுள்ளத்தில் ஊட்டுகின்றன; என்னென்ன சிந்திக்கத் தூண்டுகின்றன; எவ்வளவு அறிவுச் செல்வத்தை அள்ளி வழங்குகின்றன! இத்தகைய சிறப்புடைய (அ+மா+அரிவை) அந்த மாமை நிறமுடைய (மா) சிறந்த அவளால் யான் பெறும் பயனை நீ அறிவாயோ!

'அரிவை'

அவள் எத்துணை அறிவுடையவள் தெரியுமா? வயதான் மங்கைப் பருவத்தினளாக-பன்னிரண்டிற்கும் பதின்மூன்றிற்

கும் இடைப்பட்ட வயதினளாக இருந்தாலும் அவள், அறிவால் அரிவைப் பருவத்தாள்; இருபது முதல் இருபத்தைந்து வயதிற்குட்பட்டவள். அறிந்தும் அறியாததுபோல்காட்டி அறிவுறுத்தும் மடமையினை யுடைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாவாள் அவள். ஆம்! எல்லாம் தெரிந்தவள் அந்த அரிவையாள்!

'முயக்கு'

அவளொடு யான் துய்த்த இன்பந்தான் எத்தகையது! அந்த முயக்கத்திற்கு உவமைகூற என்ன இருக்கின்றது! கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று உணரும் ஐவகை உணர்ச்சி நிலைகளும் அடங்கிய இன்ப நிலை அது! ஐந்து பொறிகளும் ஒன்றுபடும் நிலையில் அன்றோ உண்மை நிலைகள் உணரப்படுவன, இந்த ஐம்புலன்களின் ஒருமை நிலைக்கு புதுமை கண்ட புத்தரின் ஒருமை நிலையினைக்கூட ஒப்பிடக்கூடாதே!

தோழியே, அவளது முயக்கத்தால்பெற்ற மகிழ்ச்சி எப்படி இருந்தது தெரியுமா?

'உண்டற்று'

உண்டது போன்றது. உண்ணல் என்பது, கடித்தல்–நக்கல்–பருகல்–விழுங்கல்–மெல்லல் ஆகிய ஐவகைச் சுவைக்கும் முறைகளையும் உள்ளடக்கிக் கூறும் ஒரு சொல். ஐம்புலச் சுவையும் ஒருமிக்க அளிக்கும் அவளது முயக்கின் சிறப்பினை வேறு எச்சொல் கொண்டு சொல்ல இயலும்? அவளது இன்பம் பேரின்பம் தோழி! ஆல் என்ற இடைச்சொல்லையும் நெளிய உச்சரிக்கும் உண்மையை நினைத்துப் பார்!

'பகுத்து + (உண்டற்று)'

அந்த இன்பம் இந்த அளவில் மட்டும் சிறந்ததன்று. பகுத்து உண்ணும் சிறப்பினையுடையது. யானோ தலைவியோ தனித்து இருக்கும்போது துன்பமேயன்றி இன்பம் சிறிதேனும் காண முடிகின்றதா? இல்லையே! இதுபோன்றுதான் ஒருவன் தனித்து உண்ணும்போதும் இன்பம் இல்லை? ஆனால், கூடி, தாமும் பிறருமாகச் சேர்த்து, குலவி உண்ணும்போது இன்பம்! இன்பம்! உண்மை இன்பம்! உயர்ந்த இன்பம் காண முடிகின்றது!

'தமது + (பாத்து)

பகுத்து–பிறருக்குக் கொடுத்து–உண்ணும்போது, பிறர் வருந்தி ஈட்டிய செல்வத்தைக்கொண்டு என்னதான் அறநெறி

யில் செலவிடுவதாக இருப்பினும் சிறப்படைய இயலுமா? செலவிடும் செல்வம் மற்றவரது என்பதால் செலவிடுவோரது மனச்சான்று அவரது மகிழ்ச்சியினை மாய்த்துவிடும். எனவே, தமது உண்மை உழைப்பினுல் வந்த உயர்பொருளைத்தான் மற்ற வர்க்கும் ஈந்து இன்பங்கொள்ளவேண்டும். ஆம்! யானும் எனது உரிமைத் தலைவியொடுதானே பேரின்பம் பெறலாம்!

'இருந்து'

ஆயினும், அலைந்து திரிந்து அமைதியற்ற நிலையில் முழு இன்பத்தில் திளைக்கமுடியுமா? அமைதியிருந்தால்தானே இன்பம்? உண்மை இன்பம் இயலும்.

'இல்+(இருந்து)'

நினைத்த இடத்திலெல்லாம் நிலைத்த இன்பம் காண வாய்க்காது; வீட்டில்–இல்லில்தான் அஃது இயலும்!

'தம்+(இல்)'

வீடும் தம்வீடாக–தமது உரிமைத் திருவீடாக இருந்தால் எத்துணைச் சிறப்பு!

ஆம், தோழி! தமது உரிமை வீட்டில் இருந்து, தான் முயன்று, சேர்த்த செல்வத்தை மற்றவர்க்கும் பகுத்து அளித்து உண்ணும்போதுதான் உண்மையான – உயர்ந்ததான – உறுதியான இன்பத்தைக் காண முடிகின்றது.

அத்தகைய இன்பத்தைத்தான் எனது தலைவியொடுகூடிய முயக்கத்தால் உணர்கின்றேன். தோழி, தலைவியது கூட்டுறவே, மணந்து செய்யும் கடமைகளைக் காட்டும்போது நீ வேறு உணர்த்தவேண்டுமா? விரைவில் மணம் முடிக்கத்தான் முயன்றுகொண்டு இருக்கின்றேன்.

—என்று தலைவன் கூறுகின்றுன்.

தோழியோ, பிறிதொன்றும் பேசமாட்டாது, தலைவனைப் பிரிந்து, தலைவியொடு கூடி, இல்லிடைச் சேர்கின்றுள்.

இக்கருத்து வளஞ்சேர்ந்த இத்தலைவனுடைய சொற்கள், நம் அறிவிற்கு விருந்தாகும். இவை அடங்கிய திருக்குறளைக் காண்க!

"தம்மில் லிருந்து தமதுபாத்து, உண்டற்றுல்
அம்மா அரிவை முயக்கு."

இது காதல் வளத்தோடு கடமை உணர்ச்சியும் வெற்றி பெறுதலைக் காட்டும் இடம்.

இக்காதலும் கடமையும்—அன்பும் அறமும்—அகமும் புறமும்—இயற்கையும் செயற்கையும் (அறிவு) ஒன்றும் போது தான் முழுமைப்பட்ட மனித வாழ்வு மலர்கின்றது; காதல் இன்பமும் கடமை நலமும் ஒன்றேடொன்று பிணைந்து வளமுறுகின்றது. எனவேதான் காதலும் கடமையும் சிறக்கும் இல்லறமே நல்லறமாகப் போற்றப்படுகின்றது.

ஒருவனுடைய கொள்கையிலிருந்துதான் செய்கை பிறக்கின்றது. கொள்கையாவது ஒருவன் சிந்தித்து மேற்கொண்ட கருத்து. அச்சிந்தனையே சொற்களாகவும் செயல்களாகவும் மலர்கின்றது. காமத்துப்பால் ஊட்டும் இக்குறள், கடமையின் பால்—அறத்தின்பால் சிந்திக்க—எண்ண இடமளிப்பது எப்படி எனக் காண்போம்.

தலைவன் தனது காதலியொடு ஒன்றிய இன்ப நலம் துய்க்கும்போதும் அவனது உள்ளம் எதனை எண்ணி இருக்கின்றது! தான் துய்த்த இன்பம் எப்படி இருப்பதாக எண்ணுகின்றான்! தானே ஈட்டிய செல்வத்தை மற்றவர்க்கும் பகுத்தளித்து உண்டால்—உண்டாகும் இன்பத்திற்கு ஒப்பாக இருப்பதாக எண்ணுகின்றான். ஆம்! அவனுடைய உள்ளம் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அருளுள்ளமாக—பொது உடமைக் கருத்தினதாக இருக்கின்றது. அத்தலைமகன், 'மனிதனுடைய கடமை, மற்ற உயிர்கட்கும் உதவும் மாண்பினதாகும்' என எண்ணுகின்றான். அதனையே உவமையாகவும் கூறுகின்றான். ஏன்? அவன், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்!

உவமப் பொருளானது, சிறந்ததாக—உவமேயப் பொருளினும் கூட மாட்சிமைப்பட்டதாக இருக்கவேண்டுமென்றே! "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்பதன்றே தொல்காப்பியம்! அவன், "தனது காதல் இன்பத்தினும் கடமை இன்பமே!—அதுவும் பிறர்க்குதவும் பண்பே சிறந்தது" என்று எண்ணுவது அவனது உள்ளச் சிறப்பினை எவ்வளவு உயர்த்துகின்றது! அவன் உள்ளம் வாழ்க! வளர்க!

தான் உயர அறம் ஆற்றுவதற்குப் பயன்படுத்தும் பொருள் தமதாக—தாமே ஈட்டியதாக—பிறரது உழைப்பினுலன்றி, தமது உழைப்பினுல் வந்ததாகவே இருக்கவேண்டும் என்று கூறுவதினும் உயர்ந்த உள்ளத்தை எங்கே காணலாம்.

'இக்காதற்றலைவன், இப்பொழுது காதல்தானே செய்கின்ருன்! கடமையினைச் செய்கின்ருனில்லையே!' என்று கருதலாம். அன்று-அன்று, அவன் காதல் நிகழ்த்தும் முகத்தான் கடமையும் முடிக்கின்ருன். தன்னுல் காதலிக்கப்பட்ட-தன்னைக் காதலித்த ஒருத்தி, தனித்துத் துன்புற்றிருக்கச் சகித்திருத்தல் சால்புடைமையாகுமா? அதனை நீக்கவே நினைத்தான்; நீக்கினுன்; மகிழ்ந்தான். 'ஆனுல், மீண்டும் பிரிந்து அவளுக்குத் துன்பத்தை உண்டாக்கப் போகின்ருனே!' என்று எண்ணலாம். அப்பிரிவும் அவளது நன்மைக்கே என்பது எண்ணப்படவேண்டும். அன்றியும், 'அடுத்து முடிக்கவேண்டிய கடமையினை-மணந்து இல்லறம் நிகழ்த்தவேண்டிய உரிமையினைத் தான் மறக்கவில்லை; முயலுகின்றேன்; முயன்றுகொண்டே இருக்கின்றேன்' என்றுதானே அவன் இப்போது பேசிக்கொண்டு இருக்கின்ருன்!

'பகுத்துண்டது போன்றது' என்று தலைவியிடம் பெற்ற இன்பத்தை உவமை கூறி விளக்கும் அவன், தலைவியோடுதானே இன்பம் துய்த்தான். அங்கே எங்கே பகுத்துண்ணல் நிகழ்கின்றது? இவ் உவமை பொருந்துமாறு உண்டோ?' எனில் உண்டு என்க! என்னை? இக்காதல் இன்பமோ, ஒத்த அன்பும் அறிவும் நலமும் குணமும் வயதும் ஆகியவை நிறைந்த ஆண் பெண் இருவர் தம்முள் ஒன்றித் துய்க்கின்ற இன்பம்! தலைவன், தலைவியிடத்தும் தலைவி தலைவனிடத்தும் இன்பம் துய்க்கின்றனர். தலைவன் தலைவிக்கும் தலைவி தலைவனுக்கும் இன்பம் அளிக்கின்றனர். ஆம்! ஒருவருக்கு ஒருவர் இங்கே உதவிக் கொள்ளுகின்றனர்; தமது பாத்து-தத்தமக்குரிய இன்பத்தினைப் பகுத்து உண்கின்றனர்!

'தமது பாத்து உண்டல்' என்ற உவமையால் உரைக்க வேண்டுவது ஒன்றுண்டு. இஃது உடற்கூறு பற்றியதோர் உண்மை. ஆண், பெண் இருவருள், ஆண்மகன் உணர்ச்சி வயப்படுவதும் உணர்ச்சி நலன் இழப்பதும் மிக்க விரைவில் நிகழ்ந்துவிடும். ஆனுல் பெண் மகளிடமோ விரைவில் நிகழ்வதில்லை. நிலைத்து, நிதானமாக, படிப்படியாகத்தான் பல்கும்; இவ்வண்ணமேதான் முறையும். இவ்வுண்மை உணராத-தலைவன், தலைவியர் தம்முள்கூடிய கூட்டத்துள் முழு இன்பந் துய்த்தல் இயலாது இடர்ப்படுவர். இதன் அடிப்படையில் தான் பல குடும்பங்களில் பூசலும் பிரிவும் மணவிடுதலையும் எல்லாம் நிகழ்கின்றனவென்பது உறுதி. எனவே, தலைவன் தனது இன்ப உணர்ச்சியை, தலைவிக்கும் படிப்படியாக ஊட்டல்வேண்டும்; தலைவியும் உணர்ச்சி வயப்பட்டவளாக ஆக்கப்படுதல்

வேண்டும். பிறகே, இருவரும் தம்முள் முயங்கி, இன்ப வெள்ளத்தில் நீந்தவேண்டும். தலைவியும் இவ்வகையில் தலைவனோடு ஒத்துழைக்கவேண்டும். ஏன்? தலைவனுக்குள்ள உரிமை நலம். நீதி நலம் அனைத்தும் தலைவிக்கும் உண்டன்றோ! 'இவ்வுண்மை உணர்ந்து செயற்படுதலும் மக்களுக்குக் கடமையாம்' என்றும் அத்தலைவன் எண்ணி, இவ்வுவமையினைக் கூறினான் எனக் கொள்ளுவது திருவள்ளுவரது உடற்கூறுணர் அறிவிற்கு உயர்ந்ததோர் எடுத்துக்காட்டாகும். இயற்கைப் புணர்ச்சியின் போதும் தலைவியைக் கண்டவுடன் உணர்ச்சி வயப்படும் தலைவன், அவளைத் தன்னிலைக்குக் கொண்டுவருதற்குத்தானே, மெய் தொட்டுப் பயிறல் முதலிய செயல்களில் ஈடுபடுகின்றான். அமைதியுற்று, நிறைந்து, அடங்கியுள்ள காதல் உள்ளத்தை படிப்படியாகச் சிறக்கச்செய்து, பேரின்பந் துய்க்கவேண்டும் என்னும் இந்நிலை, "உள்ளது சிறத்தல்" என்னும் தத்துவத்தை ஒட்டியுள்ளது காண்க!

'தமது பாத்து' என்பது வேறொரு உயர்வறத்தையும் உணர்த்துவது காண்லாம். பரத்தையரது உறவால்-பிறர்மனை நோக்கும் இழிவால் பெறும் இன்பத்தினை வெறுத்து, தமது உரிமை மனைவியிடம் உறும் இன்பமே உயர்ந்தது - உயர்ந்தது என்பதாகும். [தம்மில் இருந்து - தமது மனைவியோடு இருந்து. தமது - தமக்கு உரிமையான (மனைவியின்) நலத்தை பாத்து - தன்னுடையதை அவளுக்கும் அவளுடையதைத் தனக்குமாகப் பகுத்து. உண்டற்று - துய்த்தது போன்றது.] ஆம்! பிறர் மனை நோக்காப் பேராண்மைத் திறமும் வரைவில் மகளிரை விரும்பா வாழ்வும் திருவள்ளுவரால் போற்றிக் காட்டப்படும் மக்கட்குறும் அருங் கடனன்றோ!

ஒருவருடைய எண்ணம், எழுத்து, சொல், செயல் அனைத்தும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற அடிப்படையில் அமையவேண்டும். " அறம் பொருளின்பம் வீட்டைதல் நூற் பயனே " என்பது இலக்கணம். இவற்றின் அடிப்படையில் வாழ்க்கையினை அமைப்பதுதான் மக்களது கடமை. இந் நான்கு உறுதிப் பொருள்களையும் நம்தலைவன் நினைவொடு கொண்டு மகிழ்கின்றான் என்றால், அவனுடைய செயல் சிறப்பு எப்படி அமையும்?

'தாம் ஈட்டியதைப் பிறர்க்கும் பகுத்துண்ணவேண்டும்' என்று அறமும் அறத்திற்கு ஆகும் பொருள் தாமாக-தாமே ஈட்டியதாக அமையவேண்டும், என்று பொருளும் 'பகுத்துண்டால் இன்பம்; அரிவை முயக்கால் இன்பம்' என்று இன்பமும் இங்கு நினைக்கப்படுகின்றன.

இப்படி அறம், பொருள், இன்பம் நினைக்கப்படும்போது வீடு பேறு எண்ணப்படுவது எப்படி?

இத்தகைய நேரிய அறவாழ்வு வாழ்வதே கடவுள் தொண்டாகும் என்பது ஓர் உண்மையன்றோ! மேலும், அவ்வரிவை முயக்கே வீடுபேற்றினை நினைவுறுத்துவது காணலாம்.

வீடுபேற்றினைத் துய்த்தல் ஐம்புலன்களும் ஒருமிக்கப் பேரின்பம் பெறும் ஒரு பெருநிலை என்பர். இதனைத் திருவள்ளுவரே, "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐப்புலனும் ஒண்தொடி கண்ணே உள." என்று கூறி பெண்ணின்பத்தையும் இதனோடு ஒப்பக் காட்டுகின்றார். இதனையே உண்டற்று என்று கொண்ட உவம விளக்கச்சொல்லும் உறுதிப்படுத்துவது காண்க. இன்னும் இவ்வின்பப் பெருநிலையினை விளக்கப் புகும்போது, "தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல் தாமரைக் கண்ணான் உலகு." என்று கூறி, தாமரைக் கண்ணனாகிய திருமாலின் உலகினும் விருப்புடைய இவளது முயக்கம் பேரின்பத்தை இசைவிக்கும் என்று உணர்த்துகின்றார். இதனினும் சிந்தித்தோ - மொழிந்தோ - எழுதியோ விளக்க வாய்க்காத இன்பம் பெருநிலையினை எங்ஙனம் விளக்குதல் சாலும்!

இவற்றை எல்லாம் கொண்டே, 'இயல்பான இல்லற வாழ்வுகொண்டு வாழ்வோரே வீடுபேற்றுப் பெருமையினைப் பெறுதல் சாலும், மெய்யறிவுற்றோர், பக்தி செய்து, முக்தி பெறும் முயற்சியாக தெய்வங்கள் பல போற்றி, உயிர்க்கொலை, முதலிய பொல்லாங்குகளை வரவேற்று திகைக்கவேண்டாம் எனக் கூறுவதாகவும் கொள்ளலாம். ஆம்! பல்வகை இடையூறுகட்கு இடையில் மனவுறுதி சான்றவராய் ஆற்றிப் பயன் பெற முயலும் கடமையே குறிக்கோளாகக்கொண்ட துறவறத்தினும் காதல் கடமை இரண்டும் வாய்த்துள்ள இல்வில்லறமே முதன்மையாகும் சிறப்பினதாகும் என்று தான் மேற்கொண்ட அறத்தின் சிறப்பினைப் போற்றவேண்டும் கடமை வழி நின்று உலகோருக்கு இல்லறமென்னும் உயரின்பப் பாதையினைக் காட்டுகின்றான் இத்தலைவன்.

காதல்-கடமை, இரண்டையும் கைக்கொண்டு சிறக்கும் இக்காட்சித்தலைவன், எத்தகு சூழ்நிலையிலும் காதல்மட்டுமன்றி கடமையும் வெற்றிபெற வழிகாட்டிப் போற்றுகின்றான். இக்கருத்தினை அமைத்துக் குறள் தந்த திருக்குறள் வாழ்க! வாழ்க!

# தமிழ்ச்செல்வர் மயிலத்தவர்

**தி. செ. முருகதாசபிள்ளை**

*கௌமார மடாலயம், திருவாமாத்தூர்*

இறைவன் படைப்பில் எப்பொருளும் இனிமையுடையவைகளாகவே அமைந்துளளன. அதை உள்ளவாறு கண்டு மகிழ்பவன் ஞானி, ஞானமென்பது உண்மையறிவு. அந்த இன்பத்தைச் சிவமாகக் காண்பவன் மேலான சிவஞானியென்று கூற விளங்குகின்றான். அதுபோலவே இன்ப மயமான உலகப்பொருளைத் துன்பமாகக் காண்கிறான் வேறொருவன். துன்பமோ-இன்பமோ அவனவன் மனநிலைக்கேற்ப அமைகின்றது. ஒருவன் இன்பமெனக் காண்பது மற்றொருவனுக்குத் துன்பாகவும், துன்பமென ஒருவன் காண்பது மற்றொருவனுக்கு இன்பமாகவும் அமைவது உலகநிலை. கால வேறுபாட்டால் ஒருவனுக்கே இவை மாறுபடவும் கூடும்.

ஆயின் எக்காலத்தும் யாவருக்கும் இனிமை தருவது ஒன்று உண்டா எனில்? உண்டு; அதுதான் 'தமிழ்'. இனிமை என்ற பொருளே அதற்கியல்பாயுள்ளது. இன்றல்ல, பண்டைக்கால முதலாக அந்த இனிய தமிழை முதலாகக்கொண்டே நம் நாடு பெரும் புகழுடையதாயிற்று. மேலே சொன்ன இன்ப வடிவான சிவமும் தமிழும் ஒத்த இயல்புடையன. அத்தமிழின் இனிமையில் ஈடுபட்டு அதை வளர்த்த வேந்தர்களும் புலவர்களும் இத்தனைபேரென்று யாரால் கூற இயலும்?

அவர்கள்மட்டுமென்ன ? பற்றற்றான் பற்றினைப்பற்றிய தவசிகளும்கூட விடமுடியாதது தமிழ்ப்பற்று என்றால் வேறு சிறப்பு என்ன உளது? உலகிற் பொதுவாகப் பலருக்கும் இனிமை தருவது மாதர்களது சொல்; அதனிலும் இனிமை தருவது "தமிழ் மொழி" என்கின்றார் வண்ணச்சரபம்-தண்டபாணி சுவாமிகள்.

"சிமிடிலங்கார முலையார் மொழியினும் தித்திப்பதாம்—தமிழ்"

(தமிழலங்காரம் காப்புச்செய்யுள்)

உலகிற் பலருக்கும விளங்கக்கூடிய பொருளை உவமிப்பது தானே புலவர்கள் மரபு? அம்மட்டில் விடவில்லை. பொது வகையில் இனிமை தருவது மாதர் மொழி என ஒதுக்கி சிறப்பாக, அதை அறவே வெறுக்கும் உயரிய நிலையுடையார் ஞானி

கள். அவர்களும் தமிழின் இனிமையை வெறுர் என்பதைப் பிரித்துக் காட்டுகிறுர் தாமியற்றிய, வருக்கக் குறள் நூலில்,

சுண்ணந் திமிர்ந்தமுலேத் தோகையர் சொற்கைப்போரும்
வண்ணத் தமிழ்க்(கு) உருகுவார். என்பது.

என்னே தமிழின் இனிமை! அதன் இனிமையுணர்ந்து இலக்கணமியற்றியவரும் தவமுதிர்ந்த அகத்தியமுனிவர் என்பதை யார் அறியார்? சிவபிரானும், முருகக்கடவுளும், புலவர்களுடனிருந்து ஆராய்ந்து வளர்த்தாரென்ருல் தமிழின் இனிமைக்கு உயர்வுக்கு இன்னும் வேறு என்ன சிறப்புக் கூற வேண்டும்.

அத்தகைய தமிழ்ச் செல்வத்தைத் தலேமையாகக்கொண்ட நிலயங்கள் பல நந்தமிழ்நாட்டுளிருந்தன அந்நாள். ஆனுல் அவைகளில் கற்றறிந்த பெரும் புலவர்களே கூடியிருந்தனர். ஆனுல் கற்பவர்களுக்குப் பலனளிக்கக்கூடிய கல்லூரிகளாக விளங்கவில்லே. அக்குறையைத் தீர்ப்பது பெருஞ் செல்வர்கட்கு உரியதாக இருந்தது. அருட் செல்வர்களாகமட்டும் உள்ள தவசிகள் அதனே நடத்த முடியாது. அதற்காகப் பல பேரரசர்கள் பெரும் பொருளே வழ்ங்கித் தவத்தோடு தமிழையும் வளர்த்து மக்களே நல்வழிப்படுத்துமாறு சைவ மடங்களில் உள்ள தலேவர்களிடம் அப்பொறுப்பை நியமித்தனர். காலம் செல்லச் செல்ல, தமிழும் சைவமும் தவமும் தளர்ச்சியடையும்படி விட்டனர். சூழ்நிலேகளும் வேறுபட்டன.

அந்நிலேயில், தமிழ்நாட்டின் செல்வமாக, தமிழ் மக்களின் தவமாக, சிவப்பற்று, தமிழ்ப்பற்று, சமயப்பற்று, தவப்பற்று இவைகள் ஒருங்கேயமைந்த ஒரு செல்வரை தமிழ்க் கடவுளாக இனிமையுடையவனுக, இளமையுடையனுக, என்றும் உள்ளவனுக விளங்கும் முருகக்கடவுள் நமக்குத் தந்தருளினுர். அவர்தான் மயிலம் - தமிழ்க்கல்லூரியை நிறுவியவரும், பொம்மபுரத்தும் மயிலாசலத்தும் திருவருட் செங்கோலாட்சிபுரிபவரும் முருகன் தெய்வத்தானத் தலேவரும் ஆகிய பதினெட்டாம் பட்டம் - சிவத்திரு சிவஞான பாலய அடிகளாராவர். அக்கல்லூரியிற் பயின்று புலவர்களாகவரும் புண்ணியமுடையவர் ஆண்டு தோறும் எத்தனேயோபேர்! அடிகளார் தாய் தந்தையாக உடலேயோம்பி, குரு தெய்வமாக உணர்வை வளர்க்கும் ஒப்பற்ற பெரியாராகும்.

'காண்டற்கெளியன் கடுஞ்சொல்லனல்லனேல்' என்ருங்கு ஆடம்பரமற்ற அன்புமுறையில் வாழ்ந்து மக்களே மகிழ்விக்கும்

மாண்பினர், பூசைநெறிவழாப் புனிதர், பவப்பிணியும் பசிப் பிணியும் போக்கும் தவப்பொலிவினர். வடமொழியும் செந் தமிழும் உணர்ந்த பெரும் புலமையினர். இவரே தமிழ் நாட் டின் செல்வர்! தமிழ் மக்களின் செல்வர்! தமிழ்க்கடவுளின் செல்வர், ஏன் தமிழின் செல்வரும் ஆவர் என்றெல்லாம் சொல் வது வெறும் முகமனல்ல. உள்ளதை உள்ளவாறு கூறுவதில் வியப்பென்ன?

தமிழ்க் கல்லூரிகள் மடங்களின் தலைவர்கள் பேரால் நடத்த வழிகாட்டியாக முதன்முதல் மயிலத்தில் கல்லூரி தொடங்கியவர் நம் அடிகளார். இவர்கள் அடியொட்டியே பல கல்லூரிகள் பின் தோன்றலாயின, இனியும் தோன்றும். அதற்கெல்லாம் ஆதாரமாக விளங்கும் தவத்திரு சிவஞான பாலய அடிகளாரது மணிவிழா நிகழ்கின்ற இந்நாளிலே ஒன்று கூடி வாழப்பெற்ற நாம் பெரும்பேறுடையோமென மகிழ்கின் றோம். இப்பேற்றை வழங்கிய முருகப்பெருமான் திருவருள் வாழ்க! தமிழ்ச் செல்வரான அடிகளார் பல்லாண்டு பல் லாண்டு வாழ்க! அவர்களது தமிழ்க்கல்லூரி வாழ்க! நலம்.



நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள்

# இலக்கணத்தோடொட்டிய இலக்கியம்

பொம்மபுரம் - மயிலம் ஆதீன வித்துவான்
**வே. சிவசுப்பிரமணியன்,** விரிவுரையாளர்,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்.

மக்கள் பலர் ஒன்றுகூடி வாழத்தொடங்கிய காலத்தில் ஒருவர் கருத்தை மற்றொருவர் அறிந்துகொள்ள பேச்சுமுறை (மொழி) தேவைப்படுவதாயிற்று. உணவும் உடையும்போல வாழ்வின் இன்றியமையாத தேவைகளுள் ஒன்றாகிவிட்டது மொழியும். மக்கள் உள்ளத்தே புதிய புதிய கருத்துக்கள் தோன்ற, புதிய பொருள்கள் பல மக்களால் அறியப்பட அதனால் புதிய சொற்கள் பல மலிந்து மொழி வளம்பெற்றது. இவ்வாறின்றி ஒரு காலத்தில் ஒருவரால் ஆக்கப்பட்டது மொழி என்று கூறுவது அறிவாய்வுக்கும் மொழி வரலாற்றுக்கும் பொருந்துவ தொன்றன்றாம்.

உணவிலே பல்விதமான சுவைகளும் பக்குவங்களும் கொண்டு மக்கள் இன்பம் எய்தினார்கள். உடையிலே தழையுடை முதலாக பட்டினும், பருத்தி நூலினும் ஆகிய நுண்ணிய மெல்லிய ஆடைகள் வரையில் நெய்துடுத்து இன்பம் கண்டார்கள். ஒவ்வொன்றிலும் இன்பம் காணும் உள்ளம் படைத்த மக்கள் தம் வாழ்விற்கு இன்றியமையாத மொழி கொண்டும் இன்பம் காணப் புகுந்தகாலமே அவர்களிடையே இலக்கியம் மலர்ந்த காலமாகும்.

வியத்தகு காட்சிகளையும், சிறந்த நீதிகளையும், தமது வாழ்வியல் முறைகளையும் தமது நினைவாற்றலுக்கு ஏற்ப மொழியின் துணைகொண்டு எடுத்துக்கூறி தாமும் இன்பம் துய்த்துப் பிறரையும் அனுபவிக்கச் செய்தனர். இவ்வித இன்ப அநுபவத்தின் ஒரு நிலையே இலக்கியம் ஆகும்.

சிறந்த இலக்கியமானது எல்லோருக்கும் இன்பத்தைத் தருவதாக இருத்தல்வேண்டும். அத்தகையதே உண்மையான இலக்கியமாகும். கணக்கு நூலை எடுத்துக்கொள்ளுவோமானால் கற்குங்காலத்து அது ஒரு சிலர்க்கே இன்பமூட்டும். அவருள்ளும் சிலர் வேறு அதனாற் பெறும் பயனை நினைந்தே கற்கின்றனர் என்பதும் இன்பம் ஒன்றையே எண்ணிக் கற்கவில்லை என்பதும் துணிவு. இன்பத்திற்காகவே கற்கப்படுவதாய் வருவன வனைத்தும் இலக்கியமாம்.

இவ்வகையான இலக்கியம் தம்மை ஆக்குவோனது கற்பனை யாற்றலுக்கும், மொழித்திறனுக்கும் ஏற்றவாறு சிறந்து விளங்குகிறது. மக்களது நாகரீக நிலைக்கும் வாழ்க்கைக் குறிக்கோளுக்கும் ஏற்ப இலக்கியம் மாறுபட்டுக்கொண்டே செல்லும். உலகினுள் ஒரு சிலர் நல்ல கற்பனையாற்றல் உடையவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதை எடுத்துக் கூறத திறனுடையவர்களாய் இல்லாமல் இருக்கின்றனர். சிலர் நன்றாகக் கூறும் திறனுடையவர்களாயினும் நினையும் திறனிலர். இவ்விருவகை யோரையும் எண்ணுமிடத்து நினையும் திறனும் கூறும் திறனும் பெற்றுள்ள, சிறந்த இலக்கியம் தோன்றக் காரணமாக உள்ள ஒருவனது அருமை நமக்கு நன்கு புலனாகும்.

அத்தகைய சிறந்த இலக்கியத்தை ஆக்கும் கவிஞன் நமது இலக்கியத்தை மக்கள் போற்றுவார்களா? தூற்றுவார்களா? என்பதைப்பற்றிச் சிந்தித்து ஆக்குதல் கூடாது. அவ்வாறு சிந்தித்து மக்களது போற்றுதலுக்குரியதாக ஆக்கவேண்டும் என்று எண்ணி ஆக்கும் இலக்கியங்கள் இலக்கியங்களாகா. சில தாம் விரும்பிய கொள்கையாகிய மக்களின் பாராட்டுதலைப் பெறுமலே அழிந்து படுவதும் உண்டு. ஆகவே மக்களது விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது தன்னிச்சையில் இலக்கியத்தை ஆக்குதலே ஒரு புலமையாளன் செய்தொழிலாம்.

இத்தகைய முறையில் அமைக்கப்பட்ட இலக்கியங்களுக்கென்று தனிப்பட்டதொரு இலக்கணமும் அமைந்து கிடக்கின்றது. இலக்கணங்கள் இலக்கியம் ஆக்குவோனைக் கட்டுப்படுத்தும் விலங்குகள் என் இக்காலத்துச் சிலர்கொண்டு தமிழ் மரபையும் கவிதை மரபையும் கெடுத்துத் தாம் விரும்பியபடி சிலவற்றைப் புனைந்து புகழ்பெற்று வருவது கண்கூடு. இவை புதுமை விரும்பிகளால் போற்றப்படினும்கூட பிற்காலத்தில் அழிந்து ஒழிவனவேயன்றி வாழும் இலக்கியங்களாகா. எதையும் மரபுபற்றிச் செய்யவேண்டும் என்பதையே பழந்தமிழ்ப் புலவர்கள் கைக்கொண்டிருந்தனர் என்பதை அன்னோரது கவிதைகளின்மூலம் அறிகிறோம். இத்தகைய சிறந்த கவிதை புனையும் ஆற்றல் பெற்றவர்களுக்கு இலக்கணம் ஏவலனாகிப் பணி செய்வதேயன்றி விலங்காகி நலிந்து நிற்பதன்று.

கவிதைகள் முறை பிறழ ஆகித் தமிழ் மரபு குலைவதைப் போற்றவேண்டும் என்பதாலும்; மொழிக்கேட்டைப் போக்கி மொழிக்குச் சிறந்த வாழ்வு தரவேண்டும் என்னும் நோக்கத்தாலுமே இலக்கணங்கள் ஏற்பட்டன. இவ்விலக்கணங்களும்

கூட பல்வகை இலக்கியங்களிலும் கண்ட நல்லனவற்றைத் தன்பால் கூட்டி, வழங்கிவரும் உயர்ந்தோரது வழக்கினையும் ஒப்புமை கண்டு செம்மையான மொழிவளரத் தூண்டுகோல் செய்ய எழுந்தனவாம். எனவே மொழிவளர்ச்சியின் பல்கால வரலாற்றில் மொழி செல்லும் பாதையைச் சீர்திருத்தற்குத் தோன்றுவதே இலக்கணம் என்பது ஏற்படும்.

பிற்கால இலக்கியங்களைத் தோற்றுவிக்கும் முறையில் மொழிப்பாதுகாப்புச் செய்கின்ற படியாலும், அங்ஙனம் செய்கின்ற ஆற்றலையும் முற்கால இலக்கியங்களிலிருந்து பெற்றபடியாலும் இலக்கணம் இலக்கியத்தோடு உடலும் உயிரும்போல இணைந்து இயங்குகிறது என்பதை அறியலாம்.

இக்காலத்துச் சிலர் இலக்கியமே பெரிதெனப் பயின்று இலக்கணத்தை வெறுத்தொதுக்கி வருதலை நாம் காணுகிறோம். ஆயினும் கவிதைகளுக்குப் பொருளறியும்காலத்து இலக்கணத்தை வெறுத்த காரணத்தால் அந்நூல்களின் உரைகளில் எழுதப்பட்டுள்ளவற்றை உருச்செய்தோ, போதிக்குங்காலத்து ஆசிரியர் கூறுவனவற்றை அப்போதைக்கு உணர்ந்து கொண்டோ செல்கிறார்கள். இவர்கள் தாமாகக் கவிதைகளின் பொருளை அறியவும் துய்க்கவும் ஆற்றல் இல்லாதவர்களாய் எஞ்ஞான்றும் பிறிதொரு துணைவேண்டியிருத்தலையும் நாம் அறியலாம்.

இந்த முறையில் இலக்கணத்தோடொட்டிய இலக்கியங்களின் அருமையும், அவற்றை அறிதற்கும், அனுபவித்தற்கும் இலக்கண அறிவு நிரம்பப்பெறவேண்டுவதையும் உணர்தற்குச் சான்றாகக் கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாச அடிகள் பாடலில் ஒன்றை அவ்வகையில் நின்று ஈண்டு ஆய்வது பொருத்தமுடைத்தாம்.

அல்லமாப்பிரபு தேவரது சரித்திரத்தை விளங்கக்கூறும் பிரபுலிங்கலீலை என்னும் நூலில் வரும் ஒரு பகுதி:—

விள்வலதேயம் எனச் சிறந்ததொரு நாட்டை மமகாரன் எனப் பெயரிய அரசன் ஆண்டு வருகிறான். இவனது தலை நகரம் "வனவசைமாநகரம்" என்னும் பெயரினையுடையது. பல்வகையான வளங்களும் உடைய நகரம். இந்த நகரிலே வாழும் யானை குதிரை ஆகியவைகளின் சிறப்பு ஒரு செய்யுளில் கூறப்படுகிறது.

இந்த யானைகள் தம்மை மற்ற எல்லா யானைகளையும்விட உயர்ந்த யானைகள் என்று பிறர் மதிக்கவேண்டும் என்று விரும்பின. ஆனால் உலகத்தில் உள்ள யானைகளைவிட ஆற்றலாலும் சிறப்பாலும் இவை உயர்ந்தவை ஆதலின் சிறந்தவையே. ஆயினும் இவைகட்கு ஓரே ஒரு தடையுளது. அது இந்திரனது ஐராவதம் எனப் பெயரிய யானை. அது எதனால் இவைகளைவிட உயர்ந்ததாகும் என்றால் நான்கு தந்தங்களையுடைமையால். இந்திரனது ஐராவதம் நான்கு தந்தங்களையுடைமையால் உயர்ந்ததாயிற்று. இரண்டு தந்தமுடைய வனவசைமா நகரத்து யானைகள் அதனினும் தாழ்ந்தனவாய் இருக்க விரும்பில. எப்படியாவது ஐராவதத்தைவிட உயர வேண்டும் என்றும் விரும்பின. ஒரு தந்திரமும் அவைகட்கு உதித்தது. ஐராவதம் உயர்ந்தது என்று சொல்கிறவர்களைப் பார்த்து ஒரு வினாவை எழுப்பின. தந்தங்கள் மிகுதியாக இருந்தால் உயர்வா? குறைந்திருந்தால் உயர்வா? என்று கேட்டன. மிகுதியாக இருந்தால்தான் உயர்வு என்றார்கள். அப்படியானால் நான்கு தந்தமுடைய ஐராவதம் மிக உயர்ந்தது. இரண்டு தந்தமுடைய நாங்கள் அதைவிடத் தாழ்ந்தவர்கள். ஓரே தந்தமுடைய விநாயகர் எம்மைவிடத் தாழ்ந்தவர் என்றன. கேட்டவர்கள் விநாயகரைத் தாழ்ந்தவராக ஒப்புக்கொள்ள மறுத்தனர். உடனே தமது கொள்கையையும் விநாயகரை உயர்ந்தவராக்கவேண்டும் என்ற எண்ணத்தால் மாற்றிக் கொண்டார்கள்; தந்தங்கள் குறைந்திருந்தால்தான் உயர்வு என்று. இம்முறையில் ஓரே தந்தமுடைய விநாயகர் உயர்ந்தவர். இரு தந்தமுடைய வனவசைமாநகரத்து யானைகள் விநாயகரினும் தாழ்ந்தவையாயின. நான்கு தந்தமுடைய ஐராவதம் மிகத் தாழ்ந்ததாயிற்று. இம்முடிபால் வனவசைமாநகரத்து யானைகளின் எண்ணம் நிறைவேறியது. அவை ஐராவதத்தினும் உயர்ந்தவையாயின. இக்கருத்தினைத் தெரிவிக்கும் பாட்டின் பகுதி கீழே வருகிறது:—

"ஈசன் அளித்த ஒருகோட்டு
யானைக்கு யாங்கள் இணையாயின்
வாசவனைத் தாங்கு ஈரிருகோட்டு
யானை எம்மை மானும் எனும்
பாசவுரற்கால் யானை" என்பதாம்.

(ஈசன் அளித்த-சிவபெருமான் பெற்ற, ஒருகோட்டு யானைக்கு-விநாயகராகிய ஒரு தந்தத்தையுடைய யானைக்கு, யாங்கள்-வனவசைமா நகரத்து யானைகளாகிய நாங்கள், இணையாயின்-ஒப்பாவோமானால், வாசவனைத்தாங்கு - இந்திரனைச்

சுமக்கும், ஈரிருகோட்டு யானை - நான்கு தந்தங்களையுடைய யானையாய ஐராவதம், எம்மை மானும் - எம்மை ஒக்கும், எனும்-என்று சொல்கின்ற, பாச-கயிறுபூட்டிய, உரல் கால் யானையொடு-உரல்போன்ற கால்களையுடைய யானைகளொடு என்பது இதன் பொருள்.)

பாடற்பொருளின்படி நோக்கின் விநாயகரை நாங்கள் ஒத்தால் ஐராவதம் எங்களை ஒக்கும் என்றிருக்கிறது. இதில் விநாயகர் உயர்ந்தவர், வனவசை யானைகள் தாழ்ந்தவை, ஐராவதம் அதனினும் தாழ்ந்தது என்பது எவ்வாறு புலப்படுகிறது. மூன்றும் ஒன்றை ஒன்று ஒத்திருப்பதாகவே புலப்படுகிறது.

ஆனல் பாட்டின் பொருளை விளக்குபவர்கள் யான் மேல் விளக்கிக் காட்டியபடியே விளக்குகிருர்கள். அதற்குக் காரணம் என்ன? அவ்வளவு பொருட்செறிவை இவ்விரண்டு வரிகள் எங்ஙனம் அடக்கிக்கொண்டுள்ளன. இங்கேதான் இலக்கணம் துணைபுரிகிறது. எவ்வாறு துணை செய்கிறது என்றும் காணுவோம் :—இப்பாட்டில் இரண்டு உவமைகள் வந்துள.

1. விநாயகரைப்போல வனவசை யானைகள்.
2. வனவசை யானைகளைப்போல ஐராவதம் என்பது.

முதற்பிரிவில்—விநாயகர் உவமை
வனவசை யானைகள உவமேயம்
(பொருள்)

இரண்டாம் பிரிவில்—வனவசை யானைகள் உவமை
ஐராவதம் உவமேயம்
(பொருள்)

பொருளினும் உவமை உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்பது இலக்கணம் கூறும் செய்தியாகும். "உயர்ந்ததன்மேற்றே உள்ளுங்காலை" என்னும் தொல்காப்பியப் பொருளதிகார உவமவியல் மூன்ரும் சூத்திரத்தையும்,

"உவமை எனப்பட்டது உயர்ந்த பொருளாகல்வேண்டும் என்றவாறு, எனவே உவமிக்கப்படும் பொருள் இழிந்து வரல்வேணடும் என்பது" எனப் பேராசிரியர் எழுதிய உரையையும் காண்க.

இவ்விலக்கணப் பகுதியைக்கொண்டு காணுமிடத்து முதற் பகுதியில்—விநாயகர் உயர்ந்தவராகிருர். வனவசை யானைகள்

அவரினும் தாழ்ந்தவையாகின்றன. இரண்டாம் பிரிவில்—வன வசை யானைகள் உயர்ந்தவையாகின்றன. ஐராவதம் அதனி னும் தாழ்ந்ததாகிறது.

இவ்வாருகவே ஒரு கொம்புடைய விநாயகர் உயர்ந்தவராகவே, இரு கொம்புடைய நாங்கள் (வனவசை யானைகள்) தாழ்ந்தவராவம்; இரு கொம்புடைய நாங்கள் உயரின், நான்கு கொம்புடைய ஐராவதம் எங்களினும் தாழ்ந்ததாகும் என்னும் பொருளும் கிட்டுகிறது.

இவ்விடத்தில் இன்னெரு செய்தியையும் உணரவேண்டும். உவமை உயர்ந்துவரல்வேண்டும் என்பதையும் தொல்காப்பியர் தாமே கூறிவிடவில்லை என்பதும், தமக்கு முன்னுள்ள பல இலக்கியங்களைப் பயின்று அவற்றில் உள்ள உவமைத்தன்மைகளை அறிந்தே இலக்கணம் வகுத்தார் என்பதும் ஆகும். காரண காரியத் தொடர்ச்சியாய் இலக்கியம் கொண்டு ஆக்கப் படுவதாயும், பின் தோன்றும் இலக்கியங்களின் ஆக்கத்திற்கு வழிகோலுவதாயும், உள்ளது இலக்கணம்.

இலக்கணத்தைச் சிவப்பிரகாசர் பயன்படுத்திக்கொண்டவாற்றை அவர் நூலுள் பரக்கக்காணலாம். இலக்கணத்தை உவமையாகவும், இலக்கியத்தை விளக்குவதற்கும் எடுத்தாண்டுள்ள சிவப்பிரகாசரின் திறன் நிறைந்த இலக்கியம் கற்று மகிழற்குரியது. ஒவ்வொருவரும் இலக்கணத்தை முறையுறப் பயின்று தாமே கவிதைகளின் பொருளை நன்கறிந்து துய்க்கும் ஆற்றல் எய்துவார்களாக.



சந்நிதானம் நிறுவிய கட்டிடம்.



பொம்மபுர மடாலயத் தோற்றம்.

# பரிமேலழகரும் சிவஞான முனிவரும்

வித்துவான் - கு. மா. நாராயணசாமி, விரிவுரையாளர்
கணேசர் செந்தமிழ்க்கல்லூரி, மேலைச்சிவபுரி.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறளுக்கு உரைகண்ட பதின்மருள் பரிமேலழகரும் ஒருவர். இவர் இயற்றிய உரை மிகச் சிறந்தது என்பதைப் புலவர் உலகம் நன்கு அறியும். மெய்கண்டார் அருளிச்செய்த சிவஞான போதத்திற்குச் சிற்றுரையும் பேருரையும் கண்ட சிவஞான முனிவர் இவர் இயற்றிய உரையை நன்கு உணர்ந்துள்ளார். மேலும் சிவஞானபோத உரையில் பல இடங்களில் பரிமேலழகர் உரையைப் பின்பற்றி எழுதியுள்ளார் என்பதை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவஞானபோத எட்டாஞ் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து உதாரண வெண்பாவின் உரையில் "குறையின்றியமையாமைப்பொருள், அது "வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தன்றுலகு" என்பதனுள் பரிமேலழகருரையானும் உணர்க" என்று சிவஞான முனிவரே கூறுவது ஓர் எடுத்துக் காட்டாகும்.

1. " அகரமுத லெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு" இக்குறளுரையில்

"காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், ஆதிபகவன் முதற்றேயென உலகின்மேல் வைத்துக் கூறினர்; கூறினரேனும், உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பது கருத்தாகக்கொள்க" என்று கூறுகின்றார் பரிமேலழகர். இவ்வுரை நுட்பத்தை நன்குணர்ந்த சிவஞான முனிவர் சிவஞானபோதச் சிறப்புப்பாயிரத்தில்,

"பலர்புகழ் ஞாயிறுபட ரினல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல்" என்ற பகுதிக்கு

"படரிற் காண்டல் செல்லும் கண்ணெனற்பாலதனை எதிர்மறை முகத்தாற் கூறினர், இன்றியமையாமை விளக்குதற்கு. இப்பொருள்பற்றிக் கண்மேல்வைத்துக் கூறினரேனும், உவமேயப் பொருட்கேற்பக் காண்டல் சேறற்குப் படர்ந்த ஞாயிறு போலென்பது கருத்தாகக் கொள்க" என்று எழுதியுள்ளமை நோக்கி இன்புறற்பாலது.

2. "குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளாதவர்" என்ற குறளுரையில்,

"கேட்பவர் அவற்றினும் மழலைச்சொல் இனிதென்பரென்பது குறிப்பெச்சம்" என்றும்,

"அன்போடியைந்த வழக்கென்ப" என்று தொடங்கும் குறளுரையில் "இயைந்த என்பது உபசார வழக்கு" என்றும், "வழக்கு ஆகுபெயர்" என்றும் எழுதியுள்ளார் பரிமேலழகர். சிவஞானமுனிவர் சிவஞானபோத அவையடக்கவெண்பாவின் உரையில் "ஆகலான் எம்மாற் செய்யப்படும் நூலையும் அவ்வாறு கைக்கொள்வரென்பது குறிப்பெச்சம்" என்றும், சிவஞானபோத முதற்சூத்திர உரையில், "அந்தத்தைச் செய்யுங் கடவுளை அந்தமென்றது உபசாரம்" என்றும், ஷ சூத்திர இரண்டாமதிகரணவுரையில் "சங்காரமென்பது ஆகுபெய" ரென்றும் எழுதியுள்ளார்.

3. "சமன்செய்து சீர்தூக்குங்கோல்போல்" என்று தொடங்கும் குறளுரையில், "உவமையடையைப் பொருட்கண்ணும், பொருளடையை உவமைக்கண்ணும்" கூட்டிப் பொருளெழுதிச் செல்கின்றார் பரிமேலழகர். சிவஞானமுனிவர் சிவஞானபோத முதற் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்துள் கூறப்படும் உதாரண வெண்பாவாகிய

"வித்துண்டாமூலம் முளைத்தவாதாரகமாம்" என்ற பாட்டின் உரையில் "உவமைவினை பொருளினும் பொருளடை உவமையினும் சென்றியையும்" என்று எழுதியுள்ளார்.

4. "இருள்சேர் இருவினையும்" என்று தொடங்கும் குறளுரையில் புரிதல் என்னும் சொல்லுக்கு எப்பொழுதுஞ் சொல்லுதல் என்றும்,

"குடம்பை தனித்தொழிய" என்று தொடங்கும் குறளுரையில், "தனித்தொழிய வென்றதனுன் முன்றனியாமை பெற்றும்" என்றும் விளக்கிச்செல்வர் பரிமேலழகர். சிவஞானமுனிவர் சிவஞானபோத இரண்டாஞ் சூத்திரத்தில் புரிதல் என்னும் சொல்லுக்கு எப்பொழுதும் மேற்கோடல் என்றும், ஷ மூன்றுஞ் சூத்திரத்து ஆரும் அதிகரணத்தில் "உணர்த்த உணர்தல் எனவே முன்னுணராது கிடத்தல் பெற்றும்" என்றும் விளக்கியுள்ளார்.

5. "கோளில் பொறியிற் குணமிலவே" என்று தொடங்கும் குறளுரையில், "காணாத கண் முதலியனபோல் வணங்காத தலைகள் பயனிலவெனத் தலைமேல்வைத்துக் கூறினார், கூறினாரேனும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில வென்பதூஉங்கொள்க என்று கூறுகின்றார் பரிமேலழகர். சிவஞானமுனிவர் சிவஞானபோத இரண்டாஞ் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து உதாரண வெண்பாவின் உரையில் "வினைக்குத் தொன்மை கூறுவார் இனம்பற்றி மாயை மலங்களுக்குந் தொன்மை கூறினாரென்றும், ஷை எட்டாஞ் சூத்திரத்து நான்காம் அதிகரணத்து உதாரண வெண்பாவின் உரையில் "மலகன்மம் எனவே இனம்பற்றி மாயையுங் கொள்ளப்பட்டது" என்றும் கூறுகின்றார்.

6. "பணிவுடையன் இன்சொலனாதல்" என்று தொடங்கும் குறளுரையில், "இன்சொலனாதற்கு இனமாகலின் பணிவுடைமையும் உடன் கூறினார் என்றும், "நல்லாறெனினுங் கொளல் தீது" என்று தொடங்கும் குறளுரையில் நல்லது கூறுவார் தீயதும் உடன் கூறினார் என்றும் கூறுகின்றார் பரிமேலழகர்.

சிவஞானமுனிவர் சிவஞானபோத முதற்சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து உதாரண வெண்பாவின் உரையில் "இரணிய கருப்ப மதத்தையும் மறுத்தற்பொருட்டுப் படைப்புக் கடவுளையும் உடன் கூறினார்" என்று கூறுகின்றார்.

7. "மடியிலாமன்னவ னெய்தும்" என்று தொடங்கும் குறளுரையில், "அடியளந்தான் என்றது வாளா பெயராய் நின்றது" என்றும்,

"மங்கலமென்ப மனைமாட்சி" என்று தொடங்கும் குறளுரையில், "இதனால் வாழ்க்கைக்கு ஆவதோர் அணிநலங் கூறி வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது என்றும் கூறுவர் பரிமேலழகர். சிவஞானமுனிவர், சிவஞானபோத ஆறாஞ்சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து உதாரண வெண்பாவில், "அறிவறியாமெய்" என்பதற்கு, "அடியளந்தான்றாயது என்றாற்போல அறிவறியாமெய்யென்றது வாளா பெயராய் நின்றது" என்றும், ஷை எட்டாஞ் சூத்திரத்து நான்காம் அதிகரணத்து உதாரண வெண்பாவின் உரையில், "மங்கலமென்ப நன்மக்கட் பேறு என்றாற்போல நீங்கானை நீங்கு நினைந்து என்றதனால் வருகின்ற சூத்திரத்திற்குத் தோற்றுவாய் செய்ததுமாயிற்று" என்றும் விளக்கிச்செல்வர்.

8. அழுக்காறுடையான்கண் ஆக்கம்போன்று'' என்று தொடங்கும் குறளுரையில், "உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லையென்பது பெற்ரும்'' என்றும்,

"உரனென்னுந் தோட்டியான்'' என்று தொடங்கும் குறளுரையில் "திண்மையீண்டறிவின்மேற்று'' என்றும் கூறுவர் பரிமேலழகர்.

இக்கருத்துக்களைச் சிவஞானமுனிவர் முறையே, சிவஞான போதப் பதினேராஞ் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து உதாரண வெண்பாவின் உரையில், "மலம் நசித்தலாவது தனது மறைத்தற் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதன் மாத்திரையே பிறிதன்றென்பதூஉம் உவமையாற் பெறுதும்'' என்றும்,

ஷை நான்காம் சூத்திரத்து முதலதிகரணத்து உதாரண வெண்பாவின் உரையில், "ஆய்தல் ஈண்டு நிச்சயித்தற் பொருட்டு'' என்றும் எடுத்துக் காட்டுவர்.

9. பரிமேலழகர் எழுதிச்செல்லும் அவாய்நிலை, உடம்பொடு புணர்த்தல், சொல்லெச்சம், அநுவாதம் அதிகாரத்தாற் பெறுதல், பிறருரை மறுப்பு, ஈருரை, இலக்கியங்களை உரை நடைப்படுத்தி எழுதுதல், முன்னே கூறியதைப் பின்னே கூற வேண்டியிருப்பின் மேலே யுரைத்தாம் என்று கூறுதல் முதலியனவற்றைச் சிவஞான முனிவரும் சிவஞான போதவுரையில் பலவிடங்களில் எடுத்தாளுகின்ருர். ஈண்டு எழுதப்புகின் விரியுமாதலின் ஆங்காங்கு ஒப்பு நோக்கி உணர்ந்து இன்புறுக.

இதுகாறும் கூறியவாற்ருல் திருக்குறள் பரிமேலழகர் உரையை நன்கு உணர்ந்துகொள்வோமானுல் சிவஞானபோதச் சிற்றுரை பேருரைகளை ஒருவாறு உணர்ந்துகொள்ள முடியும் என்பது தேற்றம்.

# மாந்தம்

(வித்துவான், Dr. K. பாலசுப்பிரமணியம், M. I. H, மயிலம்.)

குழந்தைகளுக்கு வயிற்றில் மந்தம் ஏற்பட்டு அதன் மூலமாகப் பல்வேறு நோய்கள் வருகின்றன. அவைகளை மருத்துவர்கள் மாந்தம் என்று அழைக்கிறார்கள்.

மாந்தம் வரக் காரணங்கள் :—எருமைப்பால், வாழைப் பழம், தேங்காய், கடலை, வெல்லம், புளித்தமோர், மாமிசம், கனிகள், துவரை, உழுந்து முதலிய வாயுவை உண்டாக்கும் பண்டங்களை மாதர்கள் குழந்தைகளுக்கு மிகுதியாகக் கொடுப்ப தாலும், தாங்கள் மிகுதியாக உண்பதாலும் மாந்தம் சம்பந்த மான நோய்கள் வருகின்றன. வயிற்றில் வாயு பதார்த்தங்கள் சென்று தங்கி ஜீரணமாகாமல் வயிற்றுவலி, மலக்கட்டு இவை கள் முதலில் ஏற்படும். அதே காலத்தில் குழந்தைகளுக்குச் சுவாசப்பையில் நீர்த்தேக்கம் வந்தால் அவை இரத்த ஓட்டத் தைப் பாதிக்கும். உடனே சம்பந்தப்பட்ட குழந்தைக்கு வலிப்பு காணும். இதைத் தென்னாட்டில் மக்கள் கணை இழுப்பு என்று கூறுகிறார்கள். இங்குள்ளவர்கள் மாந்த வலிப்பு என்று கூறுகிறார்கள்.

மாந்த வகுப்பில் சுமார் 20 வகைகளுக்குமேல் உண்டு. வாதமாந்தம், பித்தமாந்தம், கபமாந்தம், விஷமாந்தம், போர் மாந்தம், விறலைமாந்தம், சிரமாந்தம், நீர்மாந்தம், வலிப்புமாந்தம், சுழிமாந்தம், முக்குமாந்தம், சன்னிமாந்தம், ஊதுமாந்தம், வீக்க மாந்தம், செரியாமாந்தம், மட்டுமாந்தம், எரிமாந்தம், தலைமாந் தம், அட்சரமாந்தம், தோஷமாந்தம், முதலியவைகளாம். இன்னும் வாத, பித்த, கப தொந்தங்களால் கலந்து வருவனவும் உண்டு. இவைகள் எல்லாம் நரம்பைத் தாக்கி வலிப்பு காணும்போது பயங்கரமாக இருக்கும். இவைகளை மீறவொட் டாமல் தடுப்பதோடு அறவே ஒழிக்கவேண்டிய வகையில் சிகிச்சைகளைக் கையாளவேண்டும். சில மாந்தங்கள் நரம்பு களில் ஊறிவிடுமானால் நீடித்து விட்டுவிட்டு மாதாமாதம் வந்து கொண்டிருக்கும். அதற்குச் சரியான சிகிச்சை முறைகளைக் கையாண்டு நீக்கிவிடவேண்டும். மீண்டும் அவை காணாமல் தடுக்கச் சில பத்திய முறைகளைக் கையாளவேண்டும். இம்

மாதிரி சமயங்களில் மாந்த எண்ணெயைக் கொடுப்பது தவரு கும். வலிப்பு கண்ட உடனே மாந்த எண்ணெய்களை உபயோகித்தால் உடனே சன்னி வர ஏதுவாகும். அச்சமயத்தில் சன்னி காணுமானுல் அசாத்தியமாகும்.

மாந்த குணம்:—மாந்தம் தாக்கிய குழந்தையின் உடல் வெதும்பி, வேர்க்கும். முலையுண்ணுது. வாந்தி பண்ணும். மலம் கெட்டு பால்போலவும், நிறமாறியும் கழியும். உடம்பு வெப்பு நாற்றமும், கைகால்கள் குளிர்ச்சியுமாகும். நாவுலரும். குரல் கம்மும். கண்சுழலும்; மீறினுல் மேனி மஞ்சனித்து, கண்கள் மேல் நோக்கும். தாறுமாருக இழுக்கும். நெஞ்சிற் கபங் கட்டிக் குழந்தை மயங்கும். சிகிச்சைக்கு மீறினுல் மரணம் சம்பவிக்கும்.

## மாந்தங்களுக்கு இலகு வயித்திய முறை

பொடுதலை, வேம்பு, மா, புளி, நுணா, நொச்சி, வேலிப் பருத்தி, ஓமம், உள்ளி, திப்பிலி இவைகளை ஒரு நிறையாய் இடித்து ஒரு படி நீரில் போட்டுக் காய்ச்சி ஆறுக்கு ஒன்ருக வற்றவைத்த கியாழம் சங்களவு கொடுத்துவர, ஊது மாந்தம், போர் மாந்தம், சத்தி மாந்தம், செரியாமாந்தம், கட்டு மாந்தம், இவை தீரும்.

நொச்சி, வேளை, மேனி, நுணா, தும்பை, மிளகு, பூண்டு, வசம்பு, ஓமம் இவைகளை இடித்துக் கியாழம் வைத்துக் கொடுக்க நீர்மாந்தந்தீரும்.

நுணா, நொச்சி, வேளை இவைகளின் வேர், ஓமம், பொடுதலை, பூண்டு, வசம்பு, இவைகளை ஒரு நிறையாய் இடித்துக் கியாழம் வைத்துக்கொடுக்க விஷமாந்தந் தீரும்,

பொடுதலை, இந்துப்பு, வசம்பு, பூண்டு, மிளகு இவைகளை ஒரு நிறையாய் இடித்துக் கியாழம் செய்துகொடுக்கப் பால்மாந்தந் தீரும்.

வேலிப்பருத்தி, வெள்ளறுகு, வாதமடக்கி, பூண்டு, தேவதாரம், சதகுப்பை, திப்பிலி, வசம்பு இவைகளை இடித்துக் கியாழம் செய்துகொடுக்கத் தலைமாந்தந் தீரும்.

கோடகசாலை, துளசி, ஆடாதோடை, தும்பை, முதியார் கூந்தல், சங்கிலை, சீந்தில், திப்பிலி, கடுகுரோகிணி, உள்ளி இவைகளைச் சமமாய் இடித்துக் கியாழம் செய்துகொடுக்கச் சுழிமாந்தந்தீரும்.

பூவரசம்பட்டை, சங்கிலை, சீந்தில், துளசி, சுக்கு, ஓமம், மேனி, முள்ளி, முருங்கை ஈர்க்கு, நீர் முள்ளி, வேளை இவைகளை ஒரு நிறையாய்க் கியாழம்செய்து கொடுத்துவர வீக்க மாந்தம் தீரும்.

ஓமம், திப்பிலி, மிளகு, உள்ளி, ஆமையோடு, சீந்தில், ஆடாதோடை, இவைகளை ஒரு நிறையாய்க் கியாழம் செய்து கொடுக்க முக்குமாந்தம் தீரும்.

வசம்பு, நிம்பவேர், நிலவேம்பு, உள்ளி, கருஞ்சீரகம் இவைகளை ஒரு நிறையாய்க் கியாழம் செய்துகொடுக்க உளைமாந்தந் தீரும்.

துத்தி, வெந்தியம், ஆடாதோடா, நுணா ஈர்க்கு, வில்வம், தைவேளை, பொடுதலை, செம்முள்ளி, இவைகளை ஒருமுறையாய்க் கியாழம் செய்துகொடுக்க அட்சரமாந்தந் தீரும்.

முடக்கொத்தான், மேனி, வேலிப்பருத்தி, சுக்கு, சடாமஞ்சில், மிளகு, ஆமையோடு, ஓமம், சீரகம், இவைகளை ஒரு நிறையாய்க் கியாழம் செய்துகொடுக்கத் தோஷமாந்தந் தீரும்.

பொடுதலை, மா, புளி, வேம்பு நுணா, வேலிப்பருத்தி, நொச்சி, ஓமம், மேனி, சிங்கில், துளசி, ஆடாதோடை இவைகளை ஒருநிறையாய்க் கியாழம் செய்துகொடுக்கச் சகல மாந்தங்களும் தீரும்.

இவை யாவற்றிற்கும் குழந்தைகளின் தாயர்கள் இச்சா பத்தியம் இருக்கவேண்டும். தாயர்களின் ஒழுக்கக்கேடே குழந்தைகளுக்குப் பெரும்பாலும் நோய்வரக் காரணங்களாகும் என்பது பாலவாகடம் பகரும் பெரியோர்களின் கருத்தாகும்.

# அறிமுகம்

வித்துவான். சீ. பாலசுப்பிரமணியன், தமிழாசிரியன்,
(கழக உயர்நிலைப்பள்ளி, பள்ளிகொண்டை.)

காவியம் என்ற கண்கொண்டு பார்க்கும்பொழுது சிலப்பதிகாரமே நம் கண்முன் முதலில் தோன்றும். நமக்குக் கிடைத்துள்ள காவிய நூல்களுள் இதுவே முதலிடம் பெறுவதாம். தமிழ் நாட்டில் மூன்று தமிழ்த் தலைநகரங்களுள் வளர்ந்து தமிழ்க் கவிஞரால் உருவம் கொடுக்கப்பெற்ற இந் நூல் தனித்தமிழ் நூல். பின்னர்த் தோன்றிய மொழிபெயர்ப்பு நூல்கள் போலாது தனிமுதல் நூலாய்த் திகழ்வன சிலப்பதிகாரமும் மணிமேகலையுமாம்.

ஆசிரியர் இளங்கோவடிகள் காவியத்தின் தலைவர்களான கண்ணகி, கோவலன் ஆகிய இருவரையும் எடுத்த எடுப்பிலேயே அறிமுகப்படுத்திவிடுகிறார். கண்ணகி, பெண்களும் தொழத் தகுந்த பெருங்குணமுடையவள். திருமகள் போன்ற உடலழகு உடையவள். வடமீன் போன்ற பெருங்கற்பினள் என்று அவளை ஆசிரியர் அறிமுகப்படுத்துகின்றார். அதனை ஆசிரியர்

> அவளுந்தான்,
> போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
> தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
> மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
> காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாள்மன்னோ;

என்று கூறுகிறார் கவிதை வடிவிலே உடலழகும் கற்பின் திறனும் பெருங்குணனும் வாய்க்கப்பெற்றவள் கண்ணகியென்று புகழ்ந்து பேசிய ஆசிரியர் கண்ணகியின் அறிவுநிலை குறித்துப் பேசாமை வியப்புக்குரியதே. ஆசிரியர் தொல்காப்பியர் காதலர் இருவர்க்கும் ஒத்த கல்வி இருத்தல்வேண்டும் என்பதை "பிறப்பே குடிமை" என்று தொடங்கும் நூற்பா வாயிலாக அறிவித்துள்ளார். கல்வியும் கலையும் கண்ணகியினிடம் இல்லை. அதுவே அவளைக் கோவலன் நீத்தற்குக் காரணமாயிற்று என்பதை ஆசிரியரால் கூறாமல் இருக்க முடியவில்லை. அவரையும் மீறி அக்கருத்து வெளிப்பட்டுவிடுகிறது மறைமுகமாக.

ஆசிரியர் கோவலனை அறிமுகப்படுத்தும்போதும் அவன் நிலையை ஒருவாறு விளக்கிவிடுகின்றார். கோவலன் மிகுந்த புகழ் உடையவன். அவன் புகழினையும் வடிவினையும் மடவார்

பலர் வியந்து பாராட்டுகின்றார்கள். அந்த மடவார்களுடைய வடிவ நிலையினையும் மொழியினையும் கூறும்போது நமக்கும் அத்தகையவரைப் பார்க்கவேண்டும் என்ற பேராவல் எழும். அவர்களுடைய முகம், முழுமதிபோன்று வருகின்ற விருந்தினர்க்குத் தண்மையும் ஒளியும் கொடுப்பதாய் உள்ளது. முகம் மட்டும் இனிமையாக—அழகாக—கண்ணுடிக் கன்னங்களாக இருந்தால் போதுமா? அவர்களுடைய மொழியும் இனிமையாக இருந்ததாம். இசையைக் காட்டிலும் இனிமை உடையது வேறொன்றும் இல்லையன்றோ? அந்த மதிமுக மடவார் மொழி பண்ணினையும் வெல்லக்கூடிய அளவில் இருந்ததாம். அத்தகைய அவர்கள் அனைவரும் விரும்பியேத்தும் காமனை இக்கோவலன் நிகர்த்துள்ளான் என்று நினைத்து அவனைப் பாராட்டிப் பேசி "அவன் நமக்கு வாய்க்கப்பெறுவானா" என்று எண்ணும் அளவிற்கு ஏற்றவனாக இருந்தான் அடிகளது காவியத்தின் தலைவன் கோவலன். இவ்விதமாக ஆசிரியர் அறிமுகப்படுத்துகின்றார் இரண்டாவதாக. அதனையே,

அவனுந்தான்,
மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினா ராயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்துங் கிழமையான் கோவலன் என்பான் மன்னோ;

என்று கூறுகின்றார் அடிகள். கோவலன் பெரும்புகழ் படைத்தவன் என்று தொடங்கியவர் அவனது ஆண்மையையோ, கொடையையோ கூறியிருக்கலாம். மதுரைக் காண்டத்து அடைக்கலக் காதையுள் மாடல மறையோன் வாயிலாகக் கோவலனது பெருவீரம், பெருங்கொடை, பேரருள் ஆகிய குணநலன்களைப் புகழ்ந்து பேசும் ஆசிரியர் அவனை அறிமுகப் படுத்தும்போது அவை ஒன்றையும் புலப்படுத்தாமை நுணுகி ஆராயத்தக்கது. ஒருவனிடம் காணப்பெறும் குணங்கள் பலவற்றுள் அவனிடம் மிகுந்து தோன்றும் குணமே பலர்க்கும் முதலில் தோன்றுவது இயற்கை. ஆசிரியர் இளங்கோவடிகட்குக் கோவலனைப்பற்றி எண்ணும்போதே அவன் மதிமுகமடவார் தம்மால் கண்டு ஏத்தப்படும் செவ்வேள் தன்மை முதலில் தோன்றுகிறது. "காதலால் கொண்டேத்தும் **கிழமையான்**" என்று அவர் குறிப்பிடுவது ஆராயற்பாலது.

பெருங்குணமும் இயற்கையறிவும் படைத்த கண்ணகியைக் கோவலன் பிரிந்தான் என்றால் அவளிடம் ஒருகுறை இருந்திருக்கவேண்டும் என்பது படுமன்றோ? கடவுளர் போற்றும் கடவுளான கண்ணகியிடம் இக்குறை தோன்றல்கூடாது.

இவனது வண்டு மனமே அதற்குக் காரணம் என்பதை அவர் அவனை அறிமுகப்படுத்தும்போதே கூறிவிடுகின்றார். இவ் வண்டு மனத்தையே அவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்லுகின்றார். வண்டு மனம் படைத்தவர் என்று கருதப் படும் வரைவின் மகளிரில் தோன்றிய மாதவி சிறந்தவளாக மாற, வண்டுக்குத் தேன்தந்து அதை வாழ்விக்கும் மலர் போன்ற குணம் படைத்த வணிக மரபில் தோன்றிய கோவ லன் வண்டாய் மாறிய நிலை வியக்கத்தகுந்தது. அதனை ஆசிரி யர் விளக்கும் முறையும் சுவைக்கத் தகுந்ததொன்றாம்.

ஒருவனுக்குத் திருமணம் பல காரணங்களால் நிகழலாம். பெற்றோர் ஓய்வுபெறவேண்டும் என்பதற்கோ, குலக்கொடி தழைக்கவேண்டும் என்பதற்கோ, மகன் வாழ்க்கை திருந்த திருந்தவேண்டும் என்பதற்கோ மணம் நிகழலாம். கோவல னுக்கு மணம் இக்காரணங்களுள் எதற்காக நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது எண்ணத்தகுந்தது. ஆசிரியர் இளங்கோ வடிகள் அக்காரணத்தையும் நமக்கு ஒருவாறு விளக்கிவிடுகின் றார். "மாநகர்க்கீந்தார் மணம்" என்ற தொடர் அவர் கருத்தை முத்தாய்ப்பு வைத்தாற்போல் காட்டுகிறதன்றோ? ஊரார்க்கு மணச்சேதியை அறிவித்தனர் என்று கூறவந்த ஆசிரியர் ஈந்தார் மணம் என்று கூறுவது, ஊராருக்காகவே திரு மணம் நிகழ்ந்தது—ஊராரின் புகாரைப் போக்குவதற்காகவே நிகழ்ந்தது என்பதை நமக்கு விளக்குகிறதன்றோ? கோவலன் செயலால் துன்புற்றிருந்த பெற்றோர் அவன் மணச்சேதியை மனத்தால் காணும்போதே மகிழ்ந்தனர் என்று அவர் கூறும் போதும் இக்கருத்து வலியுறுகிறது. இதுகாறும் கோவலன் குணநலன்களைக் காட்டியது கண்ணகியிடம் நாம் குறைகாணக் கூடாது என்பதற்கேயாம், இதனாலும் "நறுந்தாதுண்டு நய னில் காலை வறும்பூதுறந்து வேறொன்று நாடும் வண்டு" போன்ற அவன் குணம் வலியுறுகின்றதன்றோ?

இக்கருத்தையே ஆசிரியர் மனையறம்படுத்த காதையிலும் வற்புறுத்துகின்றார். கண்ணகியின் வாழ்வில் தீங்குகள் நிகழப் போவதை முன்னரே உணர்ந்த ஆசிரியர் வாழ்த்து கூறும் போதும் அவரையறியாமல் மனத்தில் எழுந்த அன்பு காரண மாய், தாமே வாழ்த்துவதுபோல்,

> "காதலர்ப்பிரியாது கவவுக்கை நெகிழாது
> தீதறுக", என்று வாழ்த்துகின்றார். அடிகள்,

ஐயோ! கற்புக்கரசியே உன் கணவனை இழக்கப்போகின்றாயே! பெருந்தீங்கு அடையப்போகின்றாயே! என்று ஏங்குவது இத் தொடரால் விளங்குகின்றது. கண்ணகிக்கு நிகழவிருக்கும்

தீங்குகளுக்குக் காரணமாய் இருந்தவளை அவரால் எங்ஙனம் மறக்கமுடியும்? தீங்குபற்றிய எண்ணத்தோடே மங்கல வாழ்த்தை முடித்த இளங்கோவடிகள், தீங்கிற்குக் காரணமான மாதவியை மனையறம்படுத்த காதையின் எடுப்பிலேயே அறிமுகப்படுத்திவிடுகின்றார்.

கயமலர்க்கண்ணியும் காதற்கொழுநனும் எழுநிலைமாடத்து இடைநிலையில் இருந்தனர். அஞ்ஞான்று அங்குத்தென்றல் சுரும்போடும் வண்டோடும் வீசியது. சுரும்பு, நீர்ப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ ஆகியவற்றுள் நுழைந்து மகரந்தத்தைப் பூசிக்கொண்டு மாதவிப்பூவின் தேனை உண்டு வந்ததாம். நீர்ப்பூவிலும் கழுநீர், ஆம்பல், முழுநெறிக்குவளை, அரும்பு பொதியவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை ஆகிய வயற்பூக்களின் மணத்தினை நுகர்ந்து தாழைத்தோட்டின் பொடியைப் பூசிக்கொண்டு வண்டு மொய்க்காத சண்பகப்பூக்கள் மலர்ந்த சோலையுள் நுழைந்து மாதவிக்கொடியிலுள்ள மலர்களை ஆராய்ந்து தேனை உண்டு அதனுடன் அமையாது பெண்களின் கூந்தலுள் புகுதற்கு விரும்பி அங்குமிங்கும் சுற்றும் சுரும்போடு தென்றல் வீசியது என்று இளங்கோவடிகள் சுரும்பின் தன்மையை விளக்குகின்றார். வரைவின் மகளிர் கூட்டத்துள் மாதவியை அவன் தேர்ந்தெடுத்து உண்டான். கண்ணகியின் வாழ்வில் இடையூறாய் நின்றவள் மாதவியே என்பதை ஆசிரியர் மறைக்க முடியாமல் வெளியிட்டுவிடுகின்றார்.

மாதவிக்கொடி என்று கூறாமல் கோதை மாதவி என்று அவர் பாடியுள்ளதே இக்கருத்தைப் புலப்படுத்தும். அச்சுரும்பு பல மலர்களைச் சுவைத்தும் அமைதிகொண்டிலது. மாதர் வாண்முகத்து புரிகுழல் அளகத்துப்புகல் ஏக்கறுகிறது இத்தகையவனன்றோ கோவலன்? இடையீடில்லாத இன்பத்தினையன்றோ அவன் வேண்டுகின்றான். இந்த அடிப்படையை—அறிமுகத்தை நாம் உணர்ந்துகொண்டால் மாலை வாங்குநர் சாலும் நங்கொடிக்கு என்ற வயந்த மாலையின் பேச்சைக்கேட்டு வேண்டிய தொகை கொடுத்து மாலையை வாங்கி மாதவி வீடு சென்று கண்ணகியை முற்றிலும் மறந்த கோவலன் செயல் நமக்குப் புலப்படும். கோவலனே கண்ணகியின் துயரத்திற்குப் பொறுப்பு. கண்ணகி குற்றவாளியல்லள் என்பதைக் காட்டுவதற்கு இளங்கோவடிகள் சூழ்நிலையமைக்கும் திறமை வியக்கத்தகுந்ததே. இவ்வளவும் காவியத்தின் தலைவர்களை அறிமுகப்படுத்தும்போதே இளங்கோவடிகள் செய்துவிடுகின்றாரன்றோ?

# பாரதியாரும் தேசியமும்

(வித்துவான். வே. பத்மதேவி, சென்னை.)

நாம் பாரதியாரை அமரகவி என்று கூறுகின்றோமென்றால் அதற்குக் காரணம் அவர் பாடிய பாடல்கள் அவர் காலத்தோடு மட்டுமில்லாமல் என்றும் சிரஞ்சீவி நிலைபெற்றுத் திகழ்வதே யாம். இவ்வாறு வருங்கால மேன்மையை வற்புறுத்தும் நல்லறிஞர்களைத் தீர்க்கதரிசிகளென்று சொல்லுகின்றோம். அத்தகைய நிலையில் எதிர்கால நாட்டில் ஐக்கிய ஆட்சி நிலவ வேண்டுமானால் அது எப்படியிருக்கவேண்டுமென்று வற்புறுத்துகின்றார் பாரதியார்.

நம் நாட்டில் காலப்போக்கில் மேடைப்பேச்சுகள் மிகுந்து விட்டன. அழகாக ஆடை அணிகளை அணிந்துகொண்டு ஒய்யாரபாக ஒலிபெருக்கியின்முன் நின்றுகொண்டு உட்கார்ந்திருப்போர் ஒவ்வொருவராக எழுந்து சென்றாலும் ஒரு கை பார்த்து விடுவோமென்ற உத்தேசததில் மேடையில் முழக்கமிடும் மேதாவிகள் பலர் மிகுந்துவிட்டனர். இவர்கள் மேடையிலேறிப் பேசுங்கால் ஆயிரம் ஆயிரம் திட்டங்கள் உதிக்கும் இவர்கள் கருத்தில். ஆனாலும் ஒன்றையாவது உருப்படியாகச் செய்துமுடிக்கின்றார்களா? அதுதான் இல்லை. சொல்லொன்றும் செயலொன்றுமாய் மக்களினத்தை ஏமாற்றுகின்றனர். இக்கருத்து அமரகவி வாக்கில்,

1. நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறனும் இன்றி
வஞ்சனை சொல்வாரடி—கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி.

2. கூட்டத்தில் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடி—கிளியே
நாளில் மறப்பாரடி. என்று உதிக்கின்றது.

இவர் கருத்து இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த இணையற்ற புலவரான திருவள்ளுவர் கருத்தாகிய

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

என்பதனோடு பெரிதும் பொருந்துவதாய் உள்ளது.

நம் தேசியத் தோழர்கள் பிரசாரம் செய்யும்போது நாமெல்லாம் உண்மையான நாட்டுப் பற்று உள்ளவர்கள் என்பது உறுதி யானுல் வெளிநாட்டுப்பொருள்களை விலைகொடுத்து வாங்கக் கூடாது; உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிக்கவேண்டு மென்று கூறுகின்றனர். ஆனுல் அவர்கள் எழுதும் பேனு அமெரிக்க நாட்டில் தயாரிக்கப்பட்டதாய் இருக்கும். ஊற்றும் மை இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாய் இருக்கும்.

மேலும் இவர்கள் சொல்லுவது ஒன்றும் செய்வது ஒன்று மாய் இருப்பதோடு தேசியத்தில் நம்பிக்கையும்கூட வைப்ப தில்லை. உதாரணமாய் கதருடுத்துங்கள் என்று கடமைக்காகப் பிரசாரம் செய்யும் பலர் நூல்கூட நூற்கத் தெரியாதவரா யுள்ளனர். இதனை விளக்கவே பாரதியார்,

உப்பென்றும் சீனியென்றும்
உள்நாட்டுச் சேலையென்றும்
செப்பித் திரிவாரடி—கிளியே
செய்வதறியாரடி.

யந்திரசாலை என்பார்
எங்கள் துணிகளென்பார்
மந்திரத்தாலே எங்கும்—கிளியே
மாங்கனி வீழ்வதுண்டோ. என்று கூறுகிறுர்.

பாரதியார் நேர்மையையே அடிப்படையாகக் கொண்ட வர். நீதி பிறழ்ந்து நடப்பவர்களைக் கண்டால் பிடிக்காது அவருக்கு. அதனுல்தான்,

நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரிவாள் எங்கள்தாய்—அவர்
அல்லவராயின் அவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடுவாள். என்று கூறுகிறுர்.

இத்தகைய மேன்மையாளரால்தான் உலகம் நிலைத்திருக் கிறது என்பது திருவள்ளுவர் கருத்து. அவர்,

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்". என்று கூறுகின்றுர்.

நம் நாட்டில் உத்திராக்ஷப்பூனை என்ற ஒரு கதை வழங்கு கின்றது. அக்கருத்தைப்போன்ற கொள்கை நாட்டில் நிலைத்து விட்டது. நெடுந்தூரத்தில் கட்குடம் செல்லும்போதே நெஞ் சத்தில் கள்ளின் எண்ணத்தைக்கொண்டு நிற்பார் ஏதாவது நினைப்பார்களே என்பதற்காக வெளியில் சிவ சிவ என்று கூறுவர்.

"புறங்குன்றி கண்டனையரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியாருடைத்து"

என்று வள்ளுவர் குறிப்பிடும் ஆட்கள் இவர்களோ என எண்ணவேண்டியுள்ளது.

சைவம் காக்கின்றேனென்று கூறுகின்றவன் கள்ளை விரும்பினால் அவன்மட்டில் கெடுகின்றான். ஆனால் எல்லாவற்றையும் மறந்து தியாகத்தீயில் மூழ்கிவிட்டதாய்க் கூறுகின்றவர்கள் மேடைகளிலும் சந்துபொந்துகளிலும் வந்தேமாதரம் என்று முழக்கமிட்டுவிட்டு உள்ளுக்குள் அதனைச் சற்றும் எண்ணாதிருப்பின் அத்தகையோரை என்னென்று கூறுவது. நாடகத்திலே வேடமணிந்துகொண்டு நடிப்பவர்கள் நாடகக் கொட்டகையிலேயே அதனை மறந்துவிடுகிறார்களல்லவா? அதுபோல இவர்கள் பேச்சளவில் நின்றுவிடுகின்றனர். இச்செய்கை நாட்டையே அல்லவா நாசம் செய்துவிடும் இதனை,

"சிந்தையில் கள்விரும்பி
சிவ சிவ என்பதுபோல்
வந்தே மாதர மென்பார்—கிளியே
மனதிலதைக் கொள்ளாரடி"

என்று பாடுகிறார்.

நாட்டில் பட்டினிப் பட்டாளம் மிகுந்து வருகின்றது. ஆனாலும் இத்தகைய நேரத்தில் பணம் படைத்த பலர் தங்கள் பகல் வேட்டையைத் தொடர்ந்து நடத்துகின்றனர். வரலாற்றுக்கு எட்டாத பண்டைநாளிலிருந்து வள்ளல்கள் மலிந்துவந்த இந்த நாட்டிலே இத்தகையநிலை ஏற்பட்டதனால்தான் நாடு வறுமைக் களஞ்சியமாய் உள்ளது. இதனை,

"சொந்த சகோதரர்கள்
துன்பத்தில் சாதலவேண்டும்
சிந்தை இரங்காரடி—கிளியே
செம்மை மறந்தாரடி" என்றார் பாரதியார்.

அண்ணன் தம்பிக்கே அகங்கரைந்துருகாதவன் அண்டை வீட்டுக்காரர்களின் அலறல்களை ஏன் கேட்கப்போகிறான். அந்த நேர்மையற்றவன் உள்ளம் பொல்லாதது என்பதை "துன்பத்தில் சாதல் கண்டும்" என்ற அடிகள் வற்புறுத்துகின்றன.

கவரிமான் தன் மயிரில் ஒன்று உதிர்ந்துவிட்டாலும் உயிர் வாழாது. அதன் தன்மையைப்போன்றதே பெரியவர்களின் தன்மையும். இதனை "மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்" என்ற குறள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

நம் தமிழகத்தில் மானம் ஒரு சிறந்த மாணிக்கமாய்ப் போற்றப்படுகின்றது. "சேரன் இரும்பொறையும் பாண்டியன் நெடுஞ்செழியனும் மானத்திற்கு ஓர் இணையற்ற பெரு கேற்றிவிட்டனர். அத்தகைய மேன்மையாளர் மலிந்த நாட்டிலே அற்பர்கள் சூழ்ந்துவிட்டனர். இவர்கள் வாழ்வையே குறிக்கோளாகக்கொண்டு மானத்தை மண்ணுங்கட்டியாக மதிக்கின்றனர். இத்தகையோர் கூட்டத்திலிருப்பது பாதகமாம் என்பதை,

"மானம் சிறிதென்றெண்ணி
வாழ்வு பெரிதென்றெண்ணும்
ஈனர் குலந்தனிலே—கிளியே
இருக்க நிலைமையுண்டோ"

என்று கூறுகின்றார் பாரதியார்.

பாரதியார் போலி தேசியவாதிகளைக்கண்டு சீற்றம் கொள்கிறார். அச்சீற்றம் சிறிது சிறிதாக உச்சநிலையடைகிறது. பாரதியார் கூறினவை சிற்றளவினவாய் இருப்பினும் அதற்குத் தக்கபடி நடந்து காட்டி வெற்றிபெற்றவர். அந்த நெஞ்சு வலிமையால்தான் நேர்மை பிறழ்ந்தவர்களை நிந்தனை செய்கிறார்.

நாடெங்கும் பஞ்சம். தாய் பட்டினி கிடக்கிறாள் தடுக்கவோ வழியில்லை. ஆனால் வந்தேமாதரக்கோஷம் மட்டும் வானத்தைப் பிளந்துசெல்லும். இச்செயலால் யாருக்குப் பயன். தன் தாயை, தன் தாய்நாட்டைக் காக்கும் திறமையற்றவர்கள் வெளியில் மட்டில வாயைத் திறந்து வந்தேமாதரக் கோஷமிடுவதில் பயனேயில்லை என்பதைப் பாரதியார்,

"தாயைக்கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க வழியறியார்
வந்தே மாதரமென்பார் வாயைத்திறந்து சும்மா—கிளியே

என்று கூறுகிறார்.

இவ்வாறு சமுதாயத்திலுள்ள எண்ணற்ற தீமைகளை வெளிப்படையாகக் கண்டிக்கின்றார் பாரதியார். இவர் கூறும் கொடுமைகள் அனைத்தையும் நீக்கி நேர்மையைக் கடைப்பிடிப்போமானால் நம் நாடு மேலும் மேலும் நன்னிலையடையும் என்பதில் தடையேயில்லை.

வாழிய பாரதியின் செம்மைசான்ற நெறிகள. வாழிய பாரத மணித்திருநாடு.

# நூலாசிரியருக்குப் பெருமை அளிப்போர் யார்?

வித்துவான், பூ. பரசுராமன்
(R. C. உயர்நிலைப்பள்ளி, சேத்துப்பட்டு)

இலக்கியம், வாழ்வை அளக்கும் கோல். ஒரு நல்ல ஆடி. பண்டை மக்களின் ஒழுகலாறு, என்ன என்பதை இலக்கிய வாயிலாக நாம் அறிந்து இன்புறலாம். இலக்கிய உணர்ச்சி ஒருவர்க்கு நன்கு அமையுமாயின், அவர் மனம் ஏனையவர்களைக் காட்டிலும் சிறந்து விளங்கும் என்பதில் எட்டுணையும் ஐய மின்று. இலக்கியங்களை நாம் உள்ளது உள்ளவாறு அறிய முற்படவேண்டும். இலக்கியத்தில் ஆசிரியர் கருத்து ஒன்றாக, படிப்போர் கருத்து பிறிதொன்றாக அமையுமாயின் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிய தன்மையை ஒக்கும்.

உள்ளது உள்ளவாறு அறிதல் எங்ஙனம்? பெரும்பாலும் நூலாசிரியர் கருத்து புலப்படும். ஆனாலும் சிற்சில இடங்களில் உட்கருத்துக் காணக் கடினமாகும். அத்தகைய இடங்களில் உரையாசிரியர் மேன்மையும் பிறவும் நனி விளங்கும்.

சங்கம் தந்த எட்டுத் தொகை நூல்களுள் எட்டாவதாக தேனினும் இனிய தீந்தமிழ் நூலாம் புறநானூற்றை வைத் துள்ளனர். இதற்கு முழுதும் உரை இல்லை. நூலின் பாதி அளவிற்குமேல் பழைய உரை உண்டு. இதற்கு நல் உரை எழுதி நாட்டிய நாவலர் இன்னார் என அறிதல் இந்நாளில் இயலாத நிலையில் உள்ளது வருந்தற்குரிய செய்தியேயாம். உரை அறிஞர் பாராட்டும் தகைமையில் உள்ளது. சாதாரண அறிவுடையார்க்குப் புலனாவது கடினமே. நூலாசிரியர் அக் கருத்தை உணர்ந்து ஒத்து எழுதியுள்ளதுபோல எண்ணச் செய்யும் தகைமையுடைத்து. சிற்சில இடங்களில், நூலாசிரிய ரால் பாட்டு என்னமோபோல அமைக்கப்பட்டிருப்பினும், தன் மதிவன்மையால் கருத்து விளக்கத்தைக் காட்டும் மாண்பி லிருந்து இவர் ஆற்றலினைப் பிறர் அறிதல் கூடும். சில பகுதி களுக்கு நயம் காணுவார். அவை யாவும் சிந்தனைக்கு வேலை கொடுக்கும். சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் அழகு அதிகம். இவரை இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க் கினியர், அடியார்க்கு நல்லார் முதலியவர்களுடன் ஒப்பவைக்

கும் தரமுடையார் என்றே துணிந்து கூறலாம். தமிழ்நாட்டின் பண்டை வரலாறுகளையும், தமிழர் ஒழுக்கம் முதலியவற்றை யும் அறிவிக்கும் கருவூலமாகிய இப்புறநானூற்றுக்கு உரை வகுக்கப்புகுந்ததொன்றே இவர் பேராற்றலுடையார் என் பதைப் புலப்படுத்தும்.

புலன் ஒழுக்காகச் செய்யுளிற் சொல் தன்மை அமைந்த வாறே பொருள் கூறிச் செல்லுதலும், பிறரைக் கண்டியாமல் அவர்கள் கூறும் பலதிறப்பட்ட பொருள் வேறுபாடுகளையும் எடுத்துக் கூறுவதும், இன்றியமையாதவற்றைமட்டும் சுருங்கக் கூறி விளங்கவைத்தலும் இவர் உரையில் காணும் சிறப் பியல்புகள்.

கண்டீரக் கோப்பெரு நள்ளியை, வன்பரணர் என்பார் பாடும்போது,

“... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ...
பீடின்மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யாக் கூறிக் கிளத்தல்
எய்யாதாகின் றெஞ்சிறு செந்நாவே” (புறம். 148.)

என்ற அடிகள் பயின்றுள்ளன. இவைகளுக்கு விளக்க வுரையில் உரையாசிரியர் ‘பொய் கூறுமையிற் ‘செந்நா’ என் றும், தற்புகழ்ந்தாராகாமற் ‘சிறுசெந்நா’ என்றும் கூறினர்’ என்றும் வரைந்துள்ளார்.

பாடிய புலவர் தற்புகழ்ச்சியுடையவராகவே நாம் கருத லாம். ஆனால் அப்படி எண்ணிவிட்டால் பாடிய புலவனுக்கு இழுக்கு ஏற்படுமே என்று எண்ணி இங்ஙனம் உரை வரைந் தார்போலும். உண்மையாக புலவன் சிறிய வாய் என்று குறிக்க ‘சிறு’ என்றும், பொய் கூறுத தன்மையேன் என்பதற் காகச் ‘செந்நா’ என்றும் சொல்லி இருக்கலாம். பின் அமைந்த உரை இரண்டும் ஒத்திருக்கலாம். ஆனால் ‘சிறு’ என்பதற்கு நூலாசிரியர் அங்ஙனம் நினைத்திருக்கமாட்டார். ஆனால் அப் படி எண்ணுதல்தான் தகவுடைத்து என்பதுபோல உரைத் திறன் அமைந்தது பொருத்தமே. இதனால் புலவனுக்குப் பீடுடைமையாதல் பெறப்படும். உரையாசிரியர் நூலாசிரியர் சால்பை அறிந்தாற்போன்று உரை வகுக்கின்றார்.

அடுத்து, பாரியைக் கபிலர் பாடுகின்றுழி,

" அளிதோதானே பேரிருங்குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோவரிதே
நீலத்திணைமலர் புரையு முண்கண்
கிணைமகட் கெளிதாற் பாடினள்வரினே"

(புறம். 111.)

என வருகின்றது. இப்பாட்டில் "பாடினள் வரினே" என்ற தன் கருத்து என்று தனியே எடுத்தெழுதி நூலாசிரியருக்குப் பெருமை அளிக்கின்றுர். அஃதாவது, "அவட்கும் அவ்வா றன்றித் தன் பெண்மையால் மயக்கிக் கோடல் அரிது என்ப தாம்" என வரைந்துள்ளார். ஒரு பாடிவரும் பெண்ணுக்கு எளிதாகும் என் நாடு. ஆனுல், வில்லில் பெருமையுடைய வேந் தர்க்கு அரிதாகும் என்ருல், ஒருகால் பெண்மைக்கு மயங்கும் தன்மையனே பாரி என்ற ஐயம் பாட்டினைப் படிப்போருக்கு உறுதியாக எழும். தனியே உரையாசிரியர் கருத்து விளக்கம் தரவில்லை என்ருல் பாரிக்குக் குற்றம் தங்கும். இவன்பால் குற்றம் தங்கும் என்ற முறையில் பாட்டு இருக்குமாயின் பாடிய புலவனும் புலனழுக்கற்ற அந்தணாளனுகிய கபிலனுக்கு இழுக்கு வேறு. இவைகளை உணர்ந்தே உரையாசிரியர் புலமை தோன்ற வரைவாராயினர். இந்த இடத்தில் நூலாசிரியர் பெருமை உரையாசிரியர் உரையால் பாடு பெறுகின்றது என் பதை எவரும் மறுக்க ஒண்ணுது.

ஈர்ந்தூர் கிழான் தோயன்மாறனைக் கோனுட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனுர் பாடும்போது,

" ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
உண்ணு மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசினெனவே."

(புறம். 180.)

என்று முடித்துள்ளார். இங்கு உரையாசிரியர் 'இரக்கும்' என்ற சொல்லுக்கு அகலம் தருகிருர். 'இரக்கும் என்று இழித்துக் கூறியது பலகாலும் வடிக்கவேண்டுதலானும், பசிக்கு உதவவேண்டுதலானும்' என்று வரைந்துள்ளார். இங்கு நூலாசிரியர் பாடு உரையாசிரியர் உரையால் அன்றி வேறில்லை.

கொல்லன் என்பவன் ஒரு தொழிலாளி. எந்த நேரத்தும் எப்படி வேலையிட்டாலும் பணத்தின் காரணமாக வேலை செய்ய முற்படுவார் ஒரோ வழி ஒரு சிலர். அனைவரும் அப்படி அல்லர். ஆனால், கூறும் வேலையைத் தட்டாது செய்வர். சாதாரண நிலையிலுள்ள குடும்பத்தாரும், கொல்லனிடத்து வேலை முடித்து வாங்க இரக்கமாட்டார்கள். ஆணை முறையில் தான் வேலை தருவார்கள். அங்ஙனமாக பலபேருக்கு உணவு அளிக்கும் தன்மையிலுள்ளான் ஒருவன் ஒரு கொல்லனை இரந்தான் என்றால் என்னமோபோல் உள்ளது. இதை அறிந்தே அச்சொல்லகலத்தைப் பெய்தார் உரையாசிரியர்.

நம்மிடம் ஒரு பணியாளன் வேலை செய்கிறான் என வைத்துக்கொள்வோம். நாம் அவனுக்குப் பணம் தருகிறோமே என்று எந்த நேரத்திலும் அவனை வேலையிடின் அவனும் செய்யான். எந்த மனிதனுக்கும் ஓரளவு ஓய்வு வேண்டும். பணத்தையே பொருளாகக் கொள்வோரும் ஓய்வின்றி எந்த தொழிலையும் இடையறாது மேற்கொள்ள விரும்பார்.

பலகாலும் ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் தரும் வேலை வடித்துக்கொடுத்த வண்ணமாகவே இருக்கிறான். மேலும் தொழில் வளருகிறது.

நமக்கு ஒரு தொழில் விரைவில் முடியவேண்டுமாயின், இன்றும் சாதாரண நிலையிலுள்ள அலுவலாளரிடம் பொருள் கொடுத்தும், இரங்கிய நிலையில் நாம் தொழிலைச் சாதித்து வருதல் அறிந்ததொரு செய்தியாகும். பசியைக்கண்டு மனம் மருளுவான் ஆகையால் பசிக்கு உதவவேண்டும் என்ற கருணை நோக்கு மிகுதிப்படுகின்றது. இதனால் கொல்லனை இரக்க நேர்கிறது தோயன் மாறன். இது ஒரு நயமான இடமாகும். உரையாசிரியர் ஏற்றம் இங்கு அறிந்து இன்புறற்பாலது.

இதுகாறும் கூறியவற்றால் நூலாசிரியரின் பெருமையை உள்ளவாறு உணர உரையாசிரியர் உரையே சாலச்சிறந்தது என்பதே வெள்ளிடைமலை. நச்சினார்க்கினியர், சேனாவரையர், கல்லாடர், தெய்வச்சிலையார், பேராசிரியர், இளம்பூரணர், பரிமேலழகர் முதலானோர் உரைகளும் இதுபோன்றே நூலாசிரியருக்குப் பெருமை அளிக்கின்றன. இவைகளை எல்லாம் நன்கு கற்று நூலாசிரியன் பெருமை அறியவேண்டுவது பைந்தமிழ்ச் செல்வம் காப்போர் கடனாகும்.

# பிறர்க்குரியாளர்

வித்துவான், தி. மு. சங்கரலிங்கம், தமிழாசிரியர்
(திருவாமாத்தூர், விழுப்புரம் P. O.)

தோன்றிற் புகழொடு தோன்றுக ; அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

அரிதாய மானிடப்பிறவி எடுத்தார் பலருள் நம்மால் அறியப்படுவோர் சிலராயிருத்தலைப்போலவே அறியப்படாதார் பலராயுமுள்ளனர். இவ்வாறு சிலர் பிறரால் அறியவும், பலர் பிறரால் அறியாமலும் இருத்தலுக்குக் காரணங்கள் உண்டு. அஃதென்னை எனின் :—முன்னையோர் பிறர்நலங்கருதும் பெற்றியுடைய வாழ்வியலையும், பின்னையோர் தன்னலம் கருதும் தாழ்வாம் வாழ்வியலையும் கொண்டிருத்தலேயாம் என்க.

தனக்கென வாழ்வார் பிறப்பதற்கே ஆளாகி இறக்கின்றார்கள். அவர்களால் யாதொரு பயனும் கிடையாது. ஆயின் தன்னலங்கருதாத் தகைமையாளரோ எனின் பிறர் நலன் கருதித் தன்னுடல், பொருள், ஆவி இவைகளைத் தருபவராயிருத்தலின் அவர்கள் பிறருக்கே ஆளாகி இறவாப் பெரும் புகழ் படைத்து இன்பெய்துகின்றனர். இவ்வாறு பிறர்க்கென வாழ்தலின் காரணம் அன்புடைமையேயாகும் என்பதை,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்ற குறளிற் கூறுகின்றார். இவ்வாறு தனக்கென வாழாப் பெருந்தன்மையோடு பிறர்க்கென வாழ்ந்தவர்கள் இம்மண்ணகத்துப் பலராவர்.

அவர்களுள் பாரி, பேகன் முதலிய வள்ளல்களும், சிபிச் சக்கரவர்த்திபோன்ற மன்னர்களும், பண்ணன் போன்றவர்களும் சிறந்து காணப்படுகின்றனர். எவ்வாறெனிற் கூறுதும்.

பாரி என்பான் ஓர் நாள் கானகத்தூடே சென்றுகொண்டிருந்தான், வழியில் ஓர் முல்லைக்கொடி தாவிப் படரக் கொழு கொம்பின்றித் தவிக்கிறது. தரையிலே கிடந்து புரள்கின்றது. கண்டான் மன்னன், கருத்தில் இரக்கம் வைத்தான். கொழு கொம்பாகத்தான் ஊர்ந்துவந்த எழிற்றேரை அக்கொடியின்

பக்கலில் நிறுத்தி அதன்மேல் அக்கொடியைப் படரவைத்துத் தான் மன்னனுயினும் தன் மனமகிழ்வோடு மண் தரையில் பாதம் வருட வறிதே நடந்து அரண்மனை சென்ருன்.

பேகன் என்பான் ஓர் நாள் மயில் ஒன்றைக் கண்டான். கார் காலம், சூல் மேகம் வானிற் சூழ்ந்து கருமையாக இருந்தது. மயில் களிப்பால் வானேக்கித் தன் தோகையை விரித்தாடி மகிழ்வடைகிறது. கணடான் பேகன். தோகை விரித்துக் களிப்பால் ஆடுவதைக் குளிரால் ஆடி நடுங்குகின்றது என எண்ணினன். தான் போர்த்திருந்த பொன்னுடையை எடுத்து மயில்மீது போர்த்தினன். என்னே! இதன் பெருமை. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரின பண்புதான் எத்தகைத்து!

இதுபற்றியன்ருே,

மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக! (புறம். 145.)

என்றும்,

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத்(து) இருளகற்றும்—தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர். (பு. பொ. வெ. படாண்.)

என்றும் ஆன்றவிந்தடங்கிய சான்றவர்கள் புகழலாயினர்!

சிபி என்ற மண்ணுளும் மன்னவன் தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறவின்பொருட்டு அதன் உயிருக்காகத் தன்னையே கொடுத்துதவி தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பெருமை படைத்ததினுலன்ருே,

தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன், (புறம். 43.)

என்று இலக்கியம் புகழ்கிறது.

கடைச்சங்கநாளில் வாழ்ந்த வள்ளல்களுள் பண்ணன் என்பானும் ஒருவன். அவன் நற்கனி ஈயும் மரம் பலகொண்ட

அற்புதக் காவினையும் கொண்டவன். பைந்தமிழ்ப்பா அருளும் புலவர்களையும், யாசிக்கும் இரவலர்களையும் சுற்றமெனக்கருதி ஆதரிக்கும் மனப்பான்மையுடையவன். அல்லன செய்தார்க்கும் நல்லன புரியும் வல்லோன். காட்சிக்கெளியனும் கடுஞ் சொல்லனல்லனுய் வாழ்ந்த அவனது கொடைத்திறன்களுள் சோற்றுக்கொடையே தலையாயதாக உள்ளது.

மானம் குலம்கல்வி வன்மை அறிவுடைமை
தானம் தவம்முயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல்......

என்ற பத்தையும் பறந்துபோம்படி செய்யும் வல்லமையுடைய பசியைப்போக்க நல்லுணவுதரும் நற்பண்புடையான். பொதுவாக சங்க இலக்கியங்கள்மூலம் பாராளும் மன்னர்கள் உணவற்றுப் பசியுடன் வாடிவரும் பாணர் முதலியோர்க்கு உணவளித்தலை மேற்கொண்டிருந்தனர் என்று தெரிகின்றது. இதுவே சிறந்த அறமாகும் என்பதனை,

அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி.

என்று வள்ளுவர் பெருமானும்,

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.
(மணிமேகலை. 11, 95, 96.)

என்று சாத்தனுரும்,

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே. (புறம். 18.)

என்று குடபுலவியனுரும் பிறரும் கூறியதால் காண்க. இத்தகைய பேரறிவுரைகள் உணவளித்தலின் உண்மையான உயர்வைப் புலப்படுத்துகின்றன அன்ருே?

ஒருகால் பண்ணன் சுற்றத்தார் பசியால் வாடினுர்கள்; வருந்தினுர்கள். கண்டான் பண்ணன். அற்ருர் அழி பசி தீர்த்தலையே கடனெனக்கருதிய கண்ணியன்; அதனையே பொருள் வைப்புழி என எண்ணிய புண்ணியன். சுற்றம்

களிக்கச் சோறளித்தான். அற்கா இயல்பிற்றாய பெருஞ் செல் வத்தைப் பசியால் வாடும் சுற்றம் நுகரச்செய்தான். பொன்றுங் காற் பொன்றாத் துணையான அறம் புரிந்து ஈத்துவக்கும் இன் பம் கொண்டான். அழியாப் புகழ் அடைந்தான். சிறுகுடி கிழான் பண்ணன் சீர்பல படைத்தான்.

இவ்வரிய நிகழ்ச்சியைக் **குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்** புரவலனாயிருந்தும் இரவலன் நிலையிலிருந்து அறிகின் றான். பண்ணன் செயலைப் பாராட்டுகிறான் மனமுவந்து, பாடு கிறான் பண்போடு, என்னவென்று ?

"யான் உயிர்வாழும் நாளையும் பெற்றுப் பண்ணன் வாழ்வானாக! பாணர்களே! என்னுடைய உறவினரின் வறு மைத் துயரைக் காணுங்கள். பண்ணன் தரும் சோற்றை அவனுடைய உறவினர் உண்ணும்போது புதிதாகப் பழுத்த மரத்தினிடத்து பறவைகள் ஒலித்தல்போல உண்டாகும் பேரொலி கேட்கிறது. காலம் தப்பாத மழை பெய்யும் காலத்தை நோக்கித் தம் முட்டைகளை எடுத்துக்கொண்டு மேட்டு நிலத்தினை அடையும் எறும்புகளைப்போல, சோறு ஏந்திய கையினர்களாய் சுற்றத்தோடும் கூடிய சிறுவர்கள் கூட் டம் கூட்டமாய்ச் செல்லும் கவினுர் காட்சியைப் பார்க்கின் றேன். அதனைத் தெரிந்திருந்தும் பசி என்னை வருத்த மீண்டும் மீண்டும் கேட்கிறேன் பசிப்பிணிக்கு மருத்துவனாய சிறு குடி கிழான் பண்ணன் இல்லம் அடுத்துள்ளதா? தொலைவில் உள்ளதா? என்று. ஐயன்மீர்! எனக்கு விரைந்து அதனைக் கூறுங்கள்" என்பதாக. இதனை அப்புரவலன் புலவனாயிருந்து பண்ணன் புகழ்பாடும் பண்பாட்டைப் பாருங்கள்.

பாட்டினுள் சுற்றம் உண்டு ஒலிக்கும் நிலைக்கு "**யாணர் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன**" என்ற உவமையும், உணவைக் கையில் எடுத்துச் செல்லும் நிலைக்குப்

> பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
> முட்டை கொண்டு வற்புலம் சேரும்
> சிறுநுண் எறும்பின் சில்லொழுக் கேய்ப்ப.

என்ற உவமையும் அறிஞர் அகத்தை ஆனந்தத்தில் அழுத்தும் சிறப்பை உடையன.

இவன் தன்பால் உள்ள செல்வத்தை "வறியார்க்கீதலே ஈகை" என உட்கொண்டு ஈந்தான் என்பதை மரம் பழுத்துத் தன்பாலுள்ள கனிகளைக் கைம்மாறு கருதாது காசினியோர்க் களித்தல்போல என்றும், பண்ணன் ஈயும் உணவை உண்டு பசி வருத்தம் நீங்கிக் களித்துப் பேசினர் என்பதைப் பழம் தின்று பாடும் பறவைபோல என்றும் சிறப்பித்து இப்பாடல் பாடிய புரவலனும் புலவன் இப்பண்ணனைப் **பசிப்பிணி மருத்துவன்** என்று பாராட்டியது சிந்தித்து மகிழ்தற்குரியதன்றோ? இது போலும் நல்லோனிடம் உண்டாகும் செல்வம்பற்றி,

> பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
> நயனுடை யான்கட் படின்.

என்ற வள்ளுவர் குறளுக்குப் பண்ணன் இலக்கிய மாதலைக் காண்க.

எனவே, **"யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந்தன்ன பசிப் பிணி மருத்துவன்"** என்று பாட்டில் கூறப்படும் அருங்கருத்துக்கள் பண்ணன் **பிறர்க்குரியாளன்** என்பதைத் தெள்ளிதின் உணருமாறு செய்கின்றன அன்றோ?

எனவே உலகம் நிலைத்திருத்தலுக்குக் காரணம் பிறர்க் கென வாழுநர் உள்ளதால் எனின் பிறர்க்கென வாழும் பெற்றி யுடைய பண்ணனின் பெருமையை மீண்டும் மீண்டும் கூறப் புகின் நரி தன் வாலால் பரவையை (கடல்) அளத்தலைப் போன்றதேயாகுமன்றி வேறென்னும்.

கடைச்சங்க நாளில் பண்ணன் வாழ்ந்தான் என்பதை நாம் கண்டிலமெனினும் அவன் புகழ் அன்றும், இன்றும் என்றும் நின்று வளரும்.

# வள்ளுவன் கூறிய வாய்மைகள்

வித்துவான், முருக சரவணபவன், தமிழாசிரியர்,
(ஒட்டக்கூத்தர் மடாலயம், கல்லாலம்பூண்டி)

காலத்தின் போக்கிலே கருத்திற்கேற்ற பேச்சுக்காலம் இந்தக்காலம்! பேச்சே எழுத்தாகவும் வருகின்ற காலம்! மொழி நடையிலும் பேச்சின் போக்கு ஊறிப்படிந்து வருகின்றது. மேடைகளும் இதழ்களும் இந்தக் காலத்தின் கலை நிலையங்கள்! குருவியானது வரம்பற்ற விரிந்த வானத்தில் பறக்கின்றது. மான் ஓரளவு பரந்த கானகத்தில் ஓடுகின்றது. மனிதனோ வரம்புற்ற சிறிய தெரு வழியே நடக்கின்றான். வர வர அறிவு உயர்வதன் அடையாளம் இது மனிதன் வானத்திற் பறந்தாலும், கடலினுள் ஓடினாலும் கட்டுப்பட்ட வரம்புகள் அவனை ஆட்கொள்ளுகின்றன. அஃது அவன் அறிவின் சிறப்பாகும்.

வரம்பற்ற வாய்மைகள் சிலவற்றை வள்ளுவர் வாக்கினின்று காண்பாம்.

தெள்ளுதமிழ்ப் பாவலனும் வள்ளுவன் இச் செந்தமிழ் நாட்டிலே தோன்றி அந்தமில் புகழைப் பெற்றான்; பேரறிஞர் சிந்தையைக் கொள்ளைகொண்டோன். அப்பெரியோன் தன் வாழ்வில்கண்ட உண்மைகளை—அனுபவ பூர்வமான உலகியல் தன்மைகளை—தன் கருத்துத் தெளிவை ஆன்றோர் உளங் கோடற்கேற்ற செந்நெறிகளை பைந்தமிழாம் செந்தமிழ்நாட்டவர்க்குமட்டுமன்றி, இவ்வுலகிற்கே அழியாதவொரு செல்வமாக, குறட்பாவடிவிலே என்றும் நின்று நிலவுமாறு மாண்புறச் செய்துள்ளான்.

நிறைந்த பொருளுடைய அந்நூல், மனித வாழ்க்கையின் இன்பதுன்ப நிலைகளை நெடிதாராய்ந்து, துன்பம் நீக்கி இன்பம் பெற இடையீடாயுள்ள மனப்போக்கினைத் தடுத்து நிறுத்தக் கூடிய, பொருத்தமுள்ள கருத்துக்களைக்கூறிய காரணத்தாலன்றோ இலத்தீன், கிரீக், ஜெர்மனி போன்ற எண்ணிறைந்த பல பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது! ஆதலின் அது உலகப் பொது மறையாகவும் மனித வாழ்க்கையின் மாண்புற்ற நூலாகவும் திகழ்கின்றது. மொழி வேற்றுமைகள் இல்லாதிருந்தமையான் அதுவே ஒருவாறு செந்தமிழ்நாட்டின்

பொது தத்துவத்தை—சமரச சன்மார்க்கம் நிறைந்த புகழை இப்புவிமிசை யாங்கணும் நிலவச்செய்துள்ளது.

இம்மாநில மனிதர்களின் வாழ்க்கையில் இன்பத்தினும் துன்பமே மிகுந்துள்ளது என்பதனை ஆன்றமைந்த முற்றுணர்வோர்களும், உலகைத் துறந்த துறவிகளும், கலையைப்புகன்ற கவிஞர்களும் கண்டார்கள். அதனை மக்களிடையேயும் கூறினார்கள். அவ்வாறாயின் துன்பம் மனிதர்களிடையே காணுதற்குரிய காரணமென்ன? என்பது குறித்து ஆராயப்புகுந்த வள்ளுவர் அதற்குரிய காரணங்களைத் தெரிவித்துள்ளார்.

அஃதாவது மனிதன் எவ்வெண்ணங்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளுகின்றானோ அவ்வப்பொருள்களின் காரணமாய் ஏற்கின்ற துன்பம் சேராது நீங்குகிறது. உதாரணமாக ஒருவன் தேநீரை பற்றுக்கொண்டு நாள்தோறும் பருகுகின்றானெனக் கொள்வோம். ஒருநாள் அவனுக்குத் தேநீர் கிடைக்கவில்லையாயின் அதனால் அவன் படுகின்ற துன்பம் குறைவற்றது; அவன் அறிவிழந்து அயலார்பால் வெறுப்புற்று நீதி கூறினும் வேண்டாமென மறுத்து கூறுகின்றான்.

இதற்கெல்லாம் காரணம் அவன் தேநீரை அருந்துவதோடு நில்லாது அதனிடத்து நீங்காத மிகுந்த பற்றுக்கொண்டமையே! எனவே, மனிதன் தன்னை ஈர்க்கும் எவ்வெப்பொருளினும் பற்றிலாதிருப்பின் அவ்வப்பொருளினாலுந் துன்பங்கள் அவனை அணுகாது. இத்திறம்பெற்ற கருத்தை தெய்வப்புலவர் திருவள்ளுவர் குறட்பாவடிவில் செய்தலை ஈண்டு ஒப்பு நோக்கல் சிறந்தது.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்."

ஆகவே மனிதன் துன்பமின்றி வாழ தீங்கிழைக்கின்ற பொருள்களிடத்துக்கொண்டுள்ள பற்றொழியப்பெற்றிருத்தல்வேண்டும்.

இன்னும் அடக்கமின்மை, வாய்மையின்மை, சினங்கொள்ளல், அவாவுறுதல், களவு செய்தல்போன்ற தீச்செயல்களினாலும் மனிதன் தன் வாழ்நாளில் துயருற்று அயர்வடைகின்றான் என வள்ளுவர் குறட்பா மூலம் எடுத்தியம்புகின்றார். அதனை உன்னிக் காணுங்கால் நுண்ணியதும் உயரியதுமான உண்மைக் கருத்துக்கள் நமக்குத் தெரியவரும்.

# மகளிர் மாண்பு

வித்துவான், சு. சிவகாமி, தமிழாசிரியர்,
(அரசியலார் உயர்நிலைப்பள்ளி, பெரியகுளம்.)

திருவள்ளுவர் ஓர் உலக கவி. அவர் ஓர் உலக நூலாகத் திகழ்ந்த திருக்குறளை யியற்றினர். உலக முழுதையும் தன் நிழலிலே புரக்கும் வெண் கொற்றக் குடையாகத் திகழ்வது அந்நூல். திருக்குறள் ஒரு நீதி நூல்; அற நூல்; இலக்கண நூலுமாகும். அந்நூலில் திருவள்ளுவர் பெண்ணைப்பற்றிக் கூறும்போது "பெண்ணிற் பெருந் தக்க யாவுள" என வீறுடன் வினவுகின்றார். பெண்ணுருத் தாங்கியவரெல்லாம் பெண்ணாகார். ஆணுருத் தாங்கியவரெல்லாம் ஆணாகார். அவ்வுருவத்தோடு அவரவர்க்குரிய குணநலங்களும் நிரம்பி யிருப்போரே பெண்ணென்றும், ஆணென்றும் சிறப்பிக்கப் படுவார். ஆகவே பெண்மைக்குரிய ஒழுக்கம் நிறைந்தவளே— தன்னினும் சிறந்து பெறத்தக்கது வேறொன்றுமில்லாத அத் துணைச் சிறப்பு வாய்ந்த—பெண்ணாவாள். இதனை "கற்பென்னும் திண்மை யுண்டாகப் பெறின்" என்ற பின்னடியில் விளக்கிக் கூறினர். கற்பியல்பு உடைய பெண்ணினும் பெருந் தகுதியுடையது எது? எதுவுமில்லை.

தமிழ்ப் பெண்கள் தாம் கணவனொடு வாழும் வாழ்க்கையை எவ்வளவு உயர்வுடையதாகக் கருதினர் என்பதைக் காண்பாம்: தலைவியின் சிறு பருவத்தில் உடனிருந்து பழகியவள் தோழி; தன் இன்பத்திற்கு உறுதுணையாக இருந்தவள். இப்போது தலைவனோடு தான் கூடி இல்லறம் நடத்துங்கால் தன்னைக் கண்டு செல்ல வந்துள்ளாள். அவளோடு தலைவி அளவளாவுகிறாள். தனது இல்வாழ்க்கைப் படலத்தை இன்பமாய் எடுத்துரைக்கின்றாள். அவ்வாறு உரைக்கின்ற தலைவி இடையில்,

"வேண்டேன் பிறந்தகத்து ஈண்டிய வாழ்வே;
... ... ... ... ... ... ... ... ...
நன்றே தோழி நங்கணவன் வாழ்வே"

எனக் கூறுகின்றாள். என்ன உறுதி! எத்துணைப் பற்று! இவ்வாறு கூறக் காரணம் என்ன? ஏதோ வினைவயத்தால் வாழ்க்கையில் நல்குரவு (வறுமை) தோன்றியிருக்கலாம், அதைச் சீர் செய்துகொள்ளத் தோழி தலைவியின் பிறந்த

வீட்டை அவளுக்கு நினைவூட்டியிருக்கலாம். அல்லது, தலைவி தலைவனிடத்துக் கொண்ட அன்பை அறிய ஏதேனும் வினவியிருக்கலாம். அக்கேள்விக்குக் கிடைத்த பதிலாகும் இது.

முற்றாத வரகு; பசுமையாய் இருக்கிறது. அதனை உலர்த்துவதற்கோ இடம் பாறைதான்; அந்த வரகிலும் முன் இரவல் கொடுத்தவர்களுக்குப் பங்கு; அதனைச் சமைக்க விறகில்லை; காடுசென்று கொண்டுவரவேண்டும். கறியுணவு ஏது? குப்பையில் முளைத்த கீரை; அதற்கும் உப்பு இல்லை. உண்கலம் இரவல். போகட்டும்! இதுவேனும் வேளைக்கு வேளை கிடைக்குமா? இல்லை. ஒன்றுவிட்டு ஒருபொழுது தின்று கிடக்க வேண்டும். இவ்வளவு முட்டுப்பாடான வாழ்க்கையாயினும் கணவனோடு கூடிய வாழ்க்கை நன்றாம்! ஆனால் பிறந்த வீட்டிலோ என்றால் நன்றாக மழைபெய்து ஈரமுள்ள நிலம்; அரசனே உழவனாகிப் பனை நுகத்தில் யானையைப் பூட்டி அதனை உழுகிறான்; அதில் விளைக்கப்பட்டது வெள்ளி; விளைந்தது பொன். ஆகா! செல்வம் கொழிக்கின்றது. அப்படி இருப்பினும் பிறந்தகத்துச் செல்வ வாழ்வு வேண்டாமாம்! என்ன அப்பெண்ணின் மனப்பண்பு!

"இரா மழை பெய்த விராவீரத்து" என்னும் பாடல் இதனை விளக்கும்.

தமிழ் நூல்கள் பலவற்றினும் இத்தகைய பெண்மைத் திறம் விரவிக்கிடக்கின்றது. "கொண்ட கொழுநன் குடிவறனுற்றெனக் கொடுத்த தாதை கொழுஞ் சோறுள்ளாள்" என்ற நற்றிணை அடிகளும் அத்திறத்தையே விளக்குகின்றது.

இனி, மகளிர் கணவனுக்கு உற்ற வாழ்க்கைத் துணையாய் அமைந்து மனையறம் நடத்துதல் மட்டுமின்றி துணைவன் தீநெறிக் குட்பட்டு அவச்செயல் புரியுங்கால் அதனை எடுத்துக் காட்டி அவனை நன்னெறிப்படுத்துதற்கும் உரியர். இவ்வுரிமை அவர் தம் மாண்பை மலை விளக்கென விளங்கச் செய்வதாம். தனது கணவன் இன்பத் துறையில் எளியனானமை யுணர்ந்த இல்லாள் திருநீலகண்ட நாயனாரை நோக்கி "தீண்டுவீராகில் எம்மைத் திருநீலகண்டம்" என ஆணையிட்டதும் அவ்வீரம் பொருந்திய அறவுரையைக் கேட்ட நீலகண்டர் அஞ்சியொதுங்கி அன்றுமுதல் மனத்தாலும் மாதரைத் தீண்டாதொழிந்ததும் நாயன்மார் வரலாற்றில் காணப்படுவதோர் உண்மையன்றோ?

மதுரையில் கண்ணகியுடன் இடைச்சேரியில் தங்கிய கோவலன் அவளது பொறைமிக்க பெருமையையும் தன் போற்ரு ஒழுக்கம் மேவிய சிறுமையையும் நினைந்து அவளைப் பாராட்டிக் கூறினன்.

பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீள் நில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!

என்ற அப்போற்றுரைகள் கோவலன் கண்ணகியிடத்துக் கொண்ட மதிப்பை விளக்கும்.

அன்றியும், கற்புடைய மகளிர் தன் உயிரினும் இனிய காதற்கணவன் இறந்துபட்டாராயின் தம் உயிர் கொண்டு அவர் உயிர் தேடி செயற்கருஞ்செயல் புரிவரென்பதும் தம்மை வஞ்சித்து தம் அறத்திற்கு ஊறு செய்வார் எவராயினும் தம் கற்பென்னும் கொழுந்தீயால் சுட்டெரித்துப் பொடியாக்குவர் என்பதும் சிலப்பதிகாரச் செந்தமிழ் நூலால் அறியப்படும் செய்தி. கோவலன் அநியாயமாகக் கொலையுண்டதற்காகப் பாண்டி மன்னன் உயிர் துறந்தான்; அவன் தேவியும் ஒருங்கு உயிர் நீத்தாள்; தன் கணவனைக் கள்வனென்று கொலைபுரிந்த மதுரையைக் கண்ணகி சுட்டெரித்தாள்.

இத்தகைய கண்டோரஞ்சும் கற்புடைய பெண்மையை உலகம் தெய்வமாகப் போற்றியது; தபசிகள் தொழுதனர்; முடிமன்னவர் அடிபணிந்தனர். கவுந்தி என்னும் தவப் பெண் மணி கண்ணகியை மாதரி என்னும் ஆயர்குல மடந்தையிடம் அடைக்கலமாக அளிக்கும்போது,

"கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்."

என அவள் பெருமையை எடுத்துக்கூறி இத்தகைய பத்தினித் தெய்வம் இருக்கும் நாட்டில்,

"வானம் பொய்யாது; வளம் பிழைப்பறியாது; நீணில வேந்தர் கொற்றம் சிதையாது" எனவும் விளந்தாள். பெண்மை மாண்புணர்ந்த சேரமன்னன் செங்குட்டுவன் அதனைத் தெய் வம் எனப்போற்றி கோயிலும் எழுப்பித்தான். பிறநாட்டு மன்னரும் அம்மன்னன் வழிநின்று பத்தினித் தெய்வ வழிபாடு பூண்டனர்; உலகமும் போற்றியது. பழந்தமிழ்ப் பெண் மக்களின் சீரிய மாண்பை அங்கை நெல்லிக்கனியெனக் காட்டும்

மாபெரும் நூல் சிலப்பதிகாரம். நம் தமிழ் மகளிர் இதனைத் தம் உச்சிமேற்கொண்டு மெச்சும் கடப்பாடு பெரிதும் உடையர். செந்தமிழ்த் தாயின் சேவடி யணியாம், இதனை "நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்" என்று கவி பாரதி சிறப்பித்தது சாலும்; சாலும்.

தன் சிறு வீட்டின் முன்புறத் தூணைப்பற்றி நின்று 'உன் மகன் எங்கே' என்று கேட்டவனைப் பார்த்து ஒரு தாய், புலியிருந்து சென்ற குகைபோல பெற்ற வயிறோ இது; அவனோ போர்க்களத்தே தோன்றுவான்' என்று வீரந்தோன்றக் கூறியதும், தன் மகன் போர்க்களத்தே புறங்கொடுத்து மாண்டான் என்று பலர் கூறக்கேட்ட நரை மூதாட்டி, 'அங்ஙனமாயின் அவனுக்குப் பால் கொடுத்து வளர்த்த இவ்வுறுப்பை அறுத்தெறிவேன்' எனக் கனன்றுகூறி கையில் வாள் கொண்டு போர்க்களம் புகுந்தாள்; மகன் நேர் நின்று போராடி மார்பிற் புண்பட்டு மாண்டு கிடப்பதை நேரே கண்டாள்; பெற்ற அன்பினும் பெரிதும் உவந்தாள் என்பதும், இன்ன பிறவும் புறநானூற்றுப் பாடல்களால் அறியப்படும் வரலாறுகளாம். பழந்தமிழ் மாதர் வீரத்தின் மாண்பை விளக்குதற்கு இன்னும் என்னவேண்டும்?

இவற்றால் பெண்மைக்குரிய தாய்மை, வாழ்க்கைப் பொறுப்பு, கட்டுப்பாட்டுணர்ச்சி, அபிமானம் முதலான சிறந்த குணங்கள் தெரிகின்றன. அக்காலத்துப் பேரறிஞர் மங்கையர் மாண்பை மதித்தனர். பெண்மைக்குப் பெருமையளிக்கும் பேரறிஞர்கள் வாழட்டும்!

# திருமறுகு!

வித்துவான், க. நாகேஸ்வரன், தமிழாசிரியன்,
(மாவட்ட உயர்நிலைப்பள்ளி, பாகாலா, சித்தூர் Dt.)

மெய்ஞ்ஞானவித்தகர் தம் வாக்கு மேதினியில் என்றும் பொய்ப்பதில்லை. நிறைமொழி மாந்தராணை நிலைபெற்று மிளிர்கின்றது. அது நாளாக ஆக வலுவடைந்துகொண்டே போகிறது. அந்நிலையில் தவப்பெருஞ் சீலராம் சிவப்பிரகாசச் செல்வர்தம் வாக்கொன்று நினைவிற்கு வருகிறது.

இன்று மயிலமலைச் சாரலிலே தமிழ் முழங்குகின்றது; தவத்திரு சிவஞான பாலய அடிகளார் தம் கருணைப்பெருக்கால். அதன் கால்கோளைப் பதினேழாம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டிருக்கின்றார்கள் சிவப்பிரகாச அடிகளார்.

சிவத்திரு சிவஞான பாலய அடிகளாரைத் தம் குருமூர்த்தமாகக் கொண்டொழுகிய சிவப்பிரகாச சுவாமிகள் தமக்கு ஞானத்தைப் போதித்து வீட்டுலக நெறியை விளக்கிய திருவாயினைப் புகழ்கின்றார். அப்புகழ்ச்சிதான் தமிழ் மழையாகப் பெய்து புலமையென்ற பயிர் தழைக்கக் காரணமாயிற்றென எண்ணுகின்றேன்.

அரசன் பவனி வருகின்றான்; அவனுடன் நால்வகைச் சேனைகள் வருகின்றன; நகரமாந்தர் வருகின்றனர். இவ்வளவிற்கும் இடம் கொடுக்கக்கூடிய வகையில்தான் பண்டைக் காலத் தலைநகரங்களின் திருமறுகுகள் அமைக்கப்பட்டன. அதேபோல மந்திரவேந்தன், அதுவும் அமுதினும் இனிதாகி, அன்பே மயமாகி, தானே தானாகி, உடற்குயிராகி, பிறவிக் கடலின் புணையாகி கயிலை வழித்துணையாகிப் பொலிந்து புகழ் மேவிப் பவனிவரும் திருமறுகு பனிவெண்திங்கள் சடைமுடியோன் படிவம் உணர்த்தும் விளக்காகும் திருமறுகு அமைந்துள்ளது. அம்மறுகினைக் காண்கின்றோம். அம்மறுகிலே எத்தனையோவிதமான காட்சிகளைக் காண்கின்றோம். ஒருபுறம் தமிழ்—மற்றொருபுறம் சைவம்.

நாட்டின் இருகண்கள் மொழியும் மதமும். ஆண்டவனை யறியும் வழியை—தற்போதைய காலப்போக்கில் அருமந்த தமிழுடனே முதல் முதல் புகட்ட முன்வந்தவர்கள் சிவத்திரு சிவஞான பாலய சுவாமிகளேயாவா. அடிகளார் ஊன்றிய தமிழ் விதைதான் தென்னுடெங்கும் தமிழ்க்கல்லூரிகள் தோன்றக் காரணமாயிற்று.

ஞானிகள் முக்காலமு முணர்ந்தவர்கள் ; அவர்கள் வாக்கு பொய்ப்பதில்லை. நிறைமொழி மாந்தரின் சொற்கள் நின்று நிலவும் நீர்மையன. ஆகவேதான் தவப்பெருஞ் செல்வராம் சிவப்பிரகாச அடிகளார் "மந்திரவேந்து பவனிபோதும் திரு மறுகு" என்று சிவத்திரு சிவஞான பாலய சுவாமிகளின் திரு வாயினைக் குறிப்பிட்ட அச்சொற்கள் அழகிய "அரசுலாந் திருமறுகிலே" அமைந்திருக்கவேண்டிய அத்தனையையும் உண் டாக்கிவிட்டன.

தமிழ்நாட்டின் உயிர் கடவுட்பற்று. கடவுட்பற்றின் சின்னங்கள்தாம் திருத்தளிகள்—கலைமன்றங்களான கடவுட் கோயில்கள்—அன்பின் இருப்பிடங்களான ஆலயங்கள்—குவிந்த மனப்பண்பையுண்டாக்கும் கோயில்கள்.

இத்தகைய திருத்தளிகளின் மேன்மை இறைவன் உலகத் தோடு இரண்டறக் கலந்துள்ளமைபோல தமிழுடன் இரண் டறக் கலந்து கிடக்கின்றது. தேவாரப் பண்களும் திருப்புகழும் திருத்தளிகளின் புகழைப் பறைசாற்றி விளக்குகின்றன. அந்த மந்திரவேந்தன் பவனிபோதும் திருமறுகாகிய எங்கள் ஞான மூர்த்தியின் திருவாக்கிலும் அந்தப் பண்மழை மொழிந்து கொண்டேயிருக்கிறது. அந்த மழையினுல் விளையும் புலமைப் பயிர் சிலரிடம் வரண்டு காணப்படுகிறது. ஞான மழையால் பெருக்கெடுக்கும் கடவுட் பற்றென்ற ஊற்றினைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்வதில்லையவர்கள்.

இவ்வாறுன நிலை நீங்கவேண்டும். தன்னிச்சையால் எதனை யும் ஆக்கவியலாத மனிதன் தன்னினும் மேலான பரம்பொரு ளின்மேல் நம்பிக்கை கொள்ளவேண்டும் — உலகமெலாம்

தானுகி உயிர்க்குலங்கள் தத்தம் தொழிலைச் செய்யுமாறு பணிக்கும் அந்த பரம்பொருள்மேல் நம்பிக்கை கொள்ளவேண்டும். கடவுள் நம்பிக்கையற்றவனிடம், அமைதியேது? அமைதியற்ற வாழ்வை வாழ்வென்று வரையறுக்க முடியுமா? அணுகுண்டினைக் காட்டி அகிலத்தையே ஆட்டிவைக்கும் ஆங்கிலேயனல்லவா கடவுட்பற்றுடையவனுக இருக்கிறுன். அப்படியிருக்க அன்பினையும் கருணையையும் அடிப்படையாகக் கொண்ட செந்தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் அந்த ஆங்கிலேயரைவிட எத்தனையாயிரம் பங்கு கடவுட்பற்றுகொண்டவராக இருக்கவேண்டும். அடிப்படையற்ற கட்டடம் அதிக நாள் நீடிக்காது. ஈரக் களிமண் குடத்திலே தண்ணீர் ஊற்றி வைப்பதிலே எள்ளத்தனையாவது பலனுண்டா? மணமற்ற மலரும் கருத்தற்ற காவியமும் பலன்படுவதில்லை. அதேபோல பரம்பொருள் நம்பிக்கையற்று பயிலும் தமிழ், பண்ணெடு கலவாத பாடல்போலாகும்; பண்கெட்டால் மண்; இறையன்பு தழைக்க வழி வகுக்காத புலமை பயனற்றது.

# திருவினும் பெரியாள்

திரு. C. இராமலிங்கம், M. A., தத்துவப் பேராசிரியர்,
(அண்ணாமலைச் சர்வகலாசாலை, அண்ணாமலை நகர்.)

திருத்தொண்டர் தொகையுள் "இல்லையேயென்னாத இயற்பகைக்கும் அடியேன்" என்ற வரி நம்முடைய கருத்தைக் கவர்கின்றது. இவ்வரியில் "இல்லையே என்னாத" தொடர் நமக்குத் திருவள்ளுவர்தம் குறளை நினைப்பூட்டுகின்றது. "யான் வறியவன்" என்னும் துன்பச்சொல்லை ஒருவன் உரைப்பதற்குமுன் அவனுக்குக் கொடுக்கும் தன்மை நல்ல குடிப்பிறப்பு உடையவனிடம் உண்டு என்று திருவள்ளுவர் குறிக்கின்றார். "இல்லையே என்னாத" இயற்பகையார் ஆன்ற குடிப்பிறப்பு உடையவர் ஈத்துவக்கும் இன்பம் மிகவும் கண்டவர். திருத்தொண்டத தொகைவரியில் முற்பகுதியை ஒருவாறு அறிய முற்பட்டோம். அவற்றில் உள்ள பிற்பகுதியை இனி சிந்திப்போம். இயற்பகை என்று ஒரு நாயனார் குறிக்கப் பெறுகின்றாரென்றால் எதற்குப் பகை? எது இயல்பு? என்று நாம் கருதவேண்டியதாகின்றது. அடியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எதை வேண்டினாலும் இல்லையென்னாது ஈந்துவக்கின்ற அவரை "உலகியற்பகை" என்றார் அருண்மொழித்தேவர். இதனை அவர் தம் திருவாக்கால் காண்போம்.

"மிக்கசீரடியார்கள் யாரேனும் வேண்டும் யாவையும் இல்லை என்னாதே" இக்கடற்படி நிகழ முன்கொடுக்கும் இயல்பின் நின்றவர் உலகியற்பகையார்." கேட்டதை இல்லையென்னாது ஈதலை உலகியற்பகை என்றார். யார் எதனை இரந்தார்கள் ; எவ்வண்ணம் ஈந்தனர்.

அறிவால் ஆய ஆய, நுண்மைக்கு நுண்மையாய்ச் சேர்க்கின்ற நுண்பொருள் திருவுருக்கொண்டு நிலவுலகில் தோன்றி இயற்பகை நாயனாரை அடுத்து அவர் தம் திறத்தினை விளக்க முற்படுகின்றார். இயற்பகையாரது மாறாது கொடுக்கும் திறத்தினை உலகிற்குக் காட்டும்பொருட்டு காமுகற்குரிய வேடமும் மாயையின்படியே கொண்டும் விளங்குகின்றார். இயற்பகையார் அடியவர்களை வரவேற்கும் முறை தெரிந்தவர் ஆகையால் அவர் தம்மை எதிர்நோக்கி வணங்கி அருச்சனைகள் செய்து தம் தவப்பயனை அடியவரை ஆண்டு அழைத்துவந்தது என்றார். சேக்கிழார் அடியவரைக் "கைதவ மறையார்" என்று

குறிக்கின்றார். ஏன் இவ்வாறு கூறல்வேண்டும்? அவர் நாயனாரிடம் எதுவும் பெற்றுச் செல்லும் கருத்தோடு போந்தாரில்லை. அவர் உள்ள உறுதியினைப் புலப்படுத்தவே போந்தார் ஆகையால் "கைதவ மறையார்" என்றார்.

இயற்பகை நாயனாரின் ஈதல் திறத்தினைத் தான் கேட்டு அவர்பால் ஒன்றுவேணடி வந்ததாக இயம்பினர். இசைவு தெரிந்து இயம்புவதாகக் கூறுகிறார். இயற்பகையார் தான் தமது உறுதியினின்றும் பிறழாது வாழ்கின்ற வாழ்வே சிறப்புடையது என்று கருதுகின்றவர். தன்னிடம் இல்லாத ஒன்றை அடியவர் கேட்டுவிடுகிறாரோ என்பதிலேயே இயற்பகையார் மனம் ஏக்குற்றுக் கிடந்தது உள்ள பொருளை அன்பர் கேட்டால் தருவதில் தயக்கமில்லை. அவர் தன் தயக்கம் சொல்லிலே தெற்றெனப் புலனாகின்றது. தன்பால் இருக்கும் யாவும் அடியவர்தம உடைமையே என்று கூறுகிறபொழுது "யாதும் ஒன்றும் என் பக்கம் உண்டாகில் அன்னது எம்பிரான் அடியவர் உடைமை ஐயமில்லை நீர் அருள் செய்யும்" என்ற சொல்லிலே எங்கு தமது விரதம் பாழ்படுகின்றதோ என்ற அச்சம் புலப்படுகின்றது.

அடியவர் நாயனாரின் மனைவியை வேண்டி வந்ததாக உரைக்கின்றார். மனைவியைக் காட்டி நாயகன் எதிரிலே கேட்டால் தகாது ஆகலின் "சொன்னபோதிலும்" என்றார். கேட்கின்றவர் தீய எண்ணத்துடன் கேட்கவில்லை என்பதை நமக்கு புலப்படுத்துவதுபோல சேக்கிழார் பெருமான் "அந்தணர் சொன்னபோதிலும் இழிகின்றார்". இவ்வுரைகேட்ட நாயனார் "முன்னையின் மகிழ்ந்து தொழுதார்" என்று குறிக்கப்பெறுகிறார். நாயனாருக்கு மகிழ்ச்சி பெருகுவதில் வியப்பில்லை. அவர் தயங்கியது எல்லாம், தான் இல்லாத ஒன்றைக் கேட்கப்பெற்றால் என்ன செய்வது என்பதே ஆகும். ஈய இயையும் ஒன்றை கேட்ட நிலையில் அவர் பெரிதும் மகிழ்வு கொண்டார்.

நாயனார் தமது மனைவியிடம் தெரிவிக்கின்றார். சில சொற்களாலே கருத்தைத் தெரிவித்துவிடுகின்றார். அம்மையாரின் நிலையினை அருண்மொழித்தேவர் விளக்குகின்ற பான்மை அறியவும் இன்புறற்பாலதொன்றாகும். அவர் தம் நிலையினை இருவகையாகக் காணலாம். முதலிலே அம்மையார் உற்றது கலக்கம், பின்னை உற்றது தெளிவு. ஏன் கலக்கம்? உலகிலே இதுவரை கேளாத ஒன்றையன்றோ அடியவர் கேட்கின்றார். இதை எண்ணுகின்றபொழுது அம்மையாருக்குக் கலக்கம். இக்கலக்கத்தினின்று தெளிவு எவ்வண்ணம்

பிறந்தது எனின் நாயனுரும், அம்மையாரும் சிவநேயம் ஒன்ருலே பெறும் பற்றுடையவராக வாழ்ந்தவர்கள். அவர் தம் இல்லற வாழ்வு தடாகத்திலுள்ள தாமரைக்கும் நீருக்கும் உள்ள தொடர்பை ஒத்ததாகும். மேலும் அம்மையார் கருதியது தனது நாயகர் சிவநேயர், இல்லையேல் என்னுதை நோன்பினை நோற்கின்றவர். அவர் தம் நோன்பிற்குத் துணைபுரிவதே தனது கடன் என்பதே மறுத்து அவர் தம் கலக்கத்தைக் காண்பது தகாது என்று கருதிய அவர்கள் அது அவர் தம் விழைவாயின் தனக்கு என வேறு உரிமை இல்லை என்று சொல்லுதலிலே நமக்கு அது தெளிவாகின்றது. அம்மையார் உலகவழி நின்று இந்நிகழ்ச்சியைக் கருதுதல் ஆகாது என்றும், வேறு கருத்து இதன்பால் அமைந்துள்ளது என்றும் தெளிந்தார்கள். ஆதலால் நேர்ந்துள்ளது திருவருள் நிகழ்ச்சி என்று கருதித் தெளிவு அடைந்தார் எனலாம். உலகில் இல்லாத செயல் என்ற எண்ணம் தோன்றியபொழுது கலக்கமுற்ருர்கள். இந்நிகழ்ச்சியின் உட்பொருள் வேறு ஒன்று என்று அறியலுறுகிறபொழுது தெளிந்தார்கள். அம்மையார் தனது கணவனுரை வணங்க நாயனுர் அம்மையாரை எதிர் வணங்கினுர் என நாயனுருடைய மாட்சி நாயகியைப் பொருத்தே அமைகின்றது. இதனை நமக்கு சேக்கிழார் பெருமான் அறிவுறுத்தும் பான்மை பெரிதும் மகிழ்வதற்குரிய ஒன்ருகும். இந்நிலையில்தான் சேக்கிழார் அம்மையாரை "திருவினும் பெரியாள்" என்று கூறுகின்ருர்கள். அச்செம்மையினை உட்கொண்டே இக்கட்டுரைக்குத் தலைப்பாக அதனை அமைத்தது. பிறிதொரு கருத்து இந்நாளில் காமநூல்கள் ஒரு வேளை பரவி பெண்மக்களிடம் தாய்மையும் இறைமையும் காணுது காமப் பொருளாகக்கொண்டு ஆடவர் துன்புற்று இருக்கலாம். நாயனுர் தமது வாழ்வில் பெண்ணை காமப்பொருளாக கருதி வாழ்வு நடத்தவில்லை என்பதையும் மேற்பட்டதாகிய தாய்மையையும், இறைமையையும் கொண்டு வாழ்ந்தவர் என்பனபோன்ற கருத்துக்களை நமக்கு வெளிப்படுத்தவே இந்நாயனுர் வரலாறு திருவருள் அமைத்தது என்று எண்ண இடம் இருக்கின்றது.

நாயனுர் தமது நாயகியைக் காமக்கிழத்தியராகக் கருதி இருப்பரேல் அடியவர் தம் வேண்டுதலுக்கு இசைவு தந்திரார். இவ்வாறு கருதுவதற்கு இடம் உண்டா எனின் உண்டு. அப்பர் பெருமான் திருவிடைமருதூர் திருப்பாடல் ஒன்றில் இறைவன் உன்தன் என்று குறிக்கப்போந்தவர் உலகம் இனியவாகக் காணுகின்றவற்றை எல்லாம் ஒருசேர இவற்றினும் உந்தன் என்று குறிக்க முற்படுகிருர்.

"கனியினும் கட்டிபட்ட கரும்பினும் பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும் தனிமுடி கவித்து ஆளும் அரசினும் இனியன்" என்கின்றார். காலத்தை நினைவில் இருத்தி காலத்தின் கண்ணாடியாகிய இலக்கியத்தினை ஊன்றிப்படித்து நிகழ்ச்சிகளை இடம், காலம், ஆசிரியர், நுவலப்படும் பொருள் ஆகிய இவற்றை இயைபுபடுத்திக் காணவே இன்பம் பயப்பது ஆகும்.

நாயனார் நோற்ற நோன்பு, உற்ற வெற்றி நாயகியார் தன் மாண்பிலே அவர் தன் இசைவிலே அமைந்து கிடப்பதினை "திருவினும் பெரியாள்" என்ற வாக்கு நமக்கு அமைத்துக் காட்டுகின்றது. ஒரு வெண்ணாட்டுக்கவி பாடல் ஒன்றில் சிறுவர் மகிழ்வது சிறு பொருள்களிலே, விளையாட்டுப்பொருள் களிலே என்ற கருத்தைப் பாடலின் முற்பகுதியில் அமைத்து இவ்வகையில் சிறுவன் ஒருவன் விளையாட்டிலே அயர்ந்து தந்தையின் வெகுளியை மூட்டி உறங்கிவிடுகின்றான். தந்தை நாளும் துயிலுவதன்முன் தாயில்லா அச்சிறுவனைக் கண்டு அணைத்து, முத்தமிட்டு துயிலச் செல்லுதல் வழக்கம். அவ்வாறு செல்லுகின்ற தந்தை அச்சிறுவன் படுக்கையின் பக்கலிலே கண்டவை விளையாட்டுப் பொருள்கள். தந்தைதான் பொறாத கொடும் நிலையினை நினைந்து கவல்கிறார்; இவ்வகையில் பாட்டு அமைகின்றது. ஆனால் இப்பாடலின் உட்கிடை வேறு என்று யான் கருதுகின்றேன். சிறுவராக இருந்த நாம் மகிழும் பொருள்கள் வேறு. வளர்ந்த நிலையில் இன்று நாம் மகிழும் பொருள்கள் வேறு. ஆனால் இரு நிலையிலும் பொருள்கள் அழியும் தன்மையனவே. உறுதிப்பொருள்கள் இல்லை. ஒப்பு நோக்கின்பொழுது நாம் கொள்ளும் பொருள்கள் சிறுவர்கள் மகிழும் பொருள்களைவிட சிறந்தனவாகக் காணும். சுருக்கமாகக் கூறின் நமது தம்பி அல்லது மகன் மகிழ்வது தஞ்சை ஆடும் பொம்மையிலே (தலையாட்டிப் பொம்மை). அதனால் நாம் மகிழும் பொருள்கள் பலவற்றையும் மூன்றினுள் அடக்கினால் மண், பெண், பொன் என்று அடங்கும்.

இப்பொருள்கள் மக்கள்மீது சேர்த்துகின்ற ஆட்சியினை நாம் நாளும் காண்கின்றோம். மண்ணை இழந்தும், பொன்னை இழந்தும் வாழ்கின்றவரைக் காண்கிறோம். ஆனால் பெண்ணை

இழந்தவர் உறுகின்ற துன்பம் மிகப்பெரிதாகக் காணப்பெறு கின்றது. இவ்விழப்பு வகையில் பொறுக்க ஒண்ணுததாக அமைவது பெண் ஆகும். பற்று மிகுந்து விளங்குவதும் பெண் ணிடமாகும். மண்ணையும், பொன்னையும் துறக்கத்துணியும் ஒருவன் பெண்ணை எளிதில் துறக்கத்துணியான். ஆதலால் பற்று மிகுதியால் நிற்கின்ற உறவிலே பெண் இழப்பதற்கு அரியதாக அமைகிறது. நாயனுரை அடியவர் வேண்டியது அவர்தம் மனைவியை என்ருல் அப்படியே மேலெழுந்த வாரியாக பொருள் கொள்ளல் பொருந்தாது. மேலும் அடியவர் ஒருவர் இந்நிலையில் விழைந்தார் என்று கொள்ளுதல் தவறு ஆகும். இவ்வகையில் நாயனுர் தம் துறவு அல்லது நோன்பின் திறன் அறியப்படுதல் வேண்டும். இதுவல்லாத வேறு வகையில் இழிந்த நிலையில் பொருள் கொள்ளத் துணிவோரும் உள்ளார். மிகவும் வருந்தத்தக்கதே ஆகும். அடியவர் நாயனுர் முதலா ஞேர் நிலையை உலகிற்கு உணர்த்த வேண்டி வந்தவர் ஆவார். அவர் தம் மனைவியாரைக் கவர்ந்து செல்லும் கருத்துடையவர் அல்லர். இச்செய்தியினை நமக்குத் தெள்ளிய முறையில் பெரிய புராண ஆசிரியர் விளக்குகின்ருர். அம்மையாருடன் நாயனு ரையும் அழைத்துச்செல்ல திருவுளங்கொண்டார் என்பது "துணைப்போதுக" என்ற சொல்லால் விளங்குகிறது. இவ் விடையில் நாயனுர் பிரியும்போதும் சிவபெருமான் அவரை அழைத்தபடியே நாம் அறிகிருேம். மேலும் சேக்கிழார் பெரு மான் இயற்பகை நாயனுரை வள்ளலார் என்று குறிக்கின்ருர். வரையாது வழங்குகின்றவன் வள்ளியோன் என்று கேட்டுள் ளோம். ஈதல் இயையாத நிலையில் சாதல் இனியது என்று குறிக்கின்ருர் செங்நாப் போதார். வறியோர்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம் எதிர்ப்பார்த்துக் கொடுக்கும் தன்மையுடை யது என்று வள்ளுவர் குறிக்கின்ற கருத்துக்களை எல்லாம் கருத்தில் வைத்துக்கொண்டு நாம் நாயனுர் தம் வாழ்வினை அறிய முற்பட்டால் அவர் தம் வாழ்வு பற்று நீங்கிய பெரு வாழ்வு என்பது நன்கு விளங்கும். நோன்பு அவருக்கு மிகவும் முக்கியமானதாகத் தோன்றியது. நோன்புக்கு இழுக்கு நேரு தல் ஆகாது என்பதே அவர்தம் கருத்து. நாயகர்தம் நோன்பு குறைவுபடுதல் தகாது என்னும் கருத்தினை ஆழ நினைந்து அம்மையார் ஒருப்பட்டார்கள். மெல்லியல்பு மிக்கவர் ஆதலால்

தொடக்க நிலையில் கலக்கம். உலகியலிலே ஒரு மாற்றம் அல்லது புதுமை. ஆதலால் மயக்கம். திருவருள் நிலையிலே தோய்ந்தவர் ஆதலால் விரைவில் தெளிவடைந்தார். பல நெறியிலே பின்பற்றும் கொள்கையிலே வாழும் வாழ்க்கையிலே ஒழிப்பு எத்துணை அளவு இருக்கவேண்டுமென்பதினை அறிவுறுத்துவதுபோல நமக்கு நோன்பின் திறத்தினை விளக்குவதற்கு எழுதின வரலாற்று நிகழ்ச்சி இது. திருத்தொண்டத் தொகை வரியிலே காணுகின்ற சீரிய அடைமொழி "இல்லையே என்னாத" என்பதாகும்.

நாயனார் தம் நோன்பு நாயகியார் தம் இசைவிலே அமைந்து கிடப்பதை முன்னே கண்டோம். அதனை நமக்குத் தெளிவு படுத்துவதுபோல் "திருவினும் பெரியாள்" என்று சேக்கிழார் கூறிக்கின்றார். நாயனாரை வள்ளலார் என்கின்றார். காலத்தை நினைவில் இருத்தி கருத்தினை அறியவேண்டும் என்பதனை நாம் காண்போம். அம்மையார் சிறப்புத் தோன்றவே இக்கட்டுரை அச்சிறப்புச் சொல்லினைத் தலைப்பாக ஏற்றது.



மயிலம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தெய்வத்தானம்.

அனுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம்.